## நூலாசிரியரைப் பற்றி...



**மகாலெட்சுமி நாராயணன்**

எழுத்திலே அதிக ஈடுபாடு கொண்ட ஆசிரியை மகாலட்சுமி நாராயணன் தமிழார்வம் மிக்கவர் என்பது, அவரது ஒவ்வொரு படைப்பிலும் அவர் சூட்டும் கதாபாத்திரத்தின் பெயரை வைத்தே அறியலாம்.

இந்நாவலில் ஒவ்வொரு பாத்திரத்தையும் குணவார்ப்புடன் மிக நேர்த்தியாக உருவாக்கியிருக்கும் பாங்கு, கதாசிரியைக்கு உயர்ந்த மனோபாவம் இருந்தால்தான் இத்தகைய உருவாக்கங்களை சிருஷ்டிக்க முடியும். இந்த மனோதர்மம் எழுத்தாளருக்கு நிறையவே இருக்கிறது. இவரது படைப்புகள் இப்போதைய துரித காலத்திற்கு ஈடுகொடுக்கும் கரு. அதை அழுத்தமாகக் காட்டும் நிகழ்வுகள் அதன் கதாப்பாத்திர அமைப்பிலும், இலக்கிய உரையாடல்களாக இல்லாமல், இயல்பான சாதாரண பேச்சு வழக்குகளிலும் சூழ்நிலைகளைச் சித்திரிப்பதிலும் அவற்றை நயமாகச் சொல்லும் எழுத்தாளர் நடையும் படிப்பவர்களை சோர்வடையச் செய்யாத எளிமையிலும் அழகியலிலும் அடேயப்பா!

படித்து முடிக்கும்போது நாவலில் உள்ளவர்கள் நம்மைச்சுற்றி இருக்கிறார்களா... அவர்கள் மத்தியில் நாம் இருக்கிறோமா என வியந்து போகிறேன். இலக்கியங்களைப் படித்துத் தன் எண்ணங்களைச் சொல்பவன் விமரிசகன். வாழ்க்கையைப் பயின்று படைப்பைக் காண்பவன் எழுத்தாளன். இருவரையும் கணித்து முடிவை நிலைநிறுத்துவது காலம். இனிவரும் இலக்கியக் காலங்கள் இவரின் படைப்புகளைக் கண்டுகொள்ளும்!

எழுத்தாளர் திருமதி. அபிராமி
மதுரை

இனி ஒரு வசந்தம் மகாலெட்சுமி நாராயணன்

# இனி ஒரு வசந்தம்

## நாவல்



## மகாலெட்சுமி நாராயணன்

# இனி ஒரு வசந்தம்!

## பாகம் - 1

### (இன்று)

**ப**லத்த இருமல் சத்தத்தால் சம்யுக்தாவின் உறக்கம் கலைந்தது. கண்களைத் திறந்தவள், அவசரமாக அப்பாவினருகே சென்றாள். உட்கார்ந்த நிலையில் அடிவயிற்றை அழுத்திப் பிடித்தவாறு மிக சிரமப்பட்டு அவஸ்தையோடு இருமிக் கொண்டிருக்கும் தந்தையின் மார்பை பதற்றத்தோடு நீவினாள். அப்பா படும் வேதனையைக் காண முடியாமல் விழி கலங்கினாள்.

சைகையால் தண்ணீர் கேட்க, அருகே இருந்த பிளாஸ்கை எடுத்து சுடுதண்ணீர் ஊற்றி தானே பருகவைத்தபோது மனம் அழுதது. முதுகையும், மார்பையும் மாற்றி மாற்றி நீவிக்கொண்டிருக்கும் மகளை வாஞ்சையோடு நோக்கினார் வீரசுப்புரத்தினம்.

இப்போது இருமல் சற்று குறைந்திருந்தது.

“நீ போய்த் தூங்கும்மா...” பலத்த இருமல் அவரது தொண்டையை பலகீனமாக்கியிருந்த நிலையில், பிசிறிய குரலில் கூறினார்.

"பரவாயில்லைப்பா. இன்னும் கொஞ்சநேரம் தடவி விடறேன். நீங்க தூங்குங்க."

மார்பை நீவிக்கொண்டிருக்கும் அவளது கரத்தைப் பிடித்து நிறுத்தியவர் மகளைக் கலக்கத்தோடு ஏறிட்டார்.

எதற்காகவோ ஏங்கிக் காத்திருக்கும் அவரது விழிகள், அவளுக்கு பரிதாபத்தை ஏற்படுத்தின. அவரது ஏக்கமும், தவிப்பும் எதற்கு என அவளறிந்ததே! காலமும், கோலமும் தங்களை சிதைத்துவிட்டிருந்த போதிலும் அவர் தன் உயிரைப் பாதுகாத்து வைத்துக் கொண்டிருப்பது எதற்காக என்பதை அந்த ஊரே அறிந்த ஒன்று! தனது ஆசை நிறைவேறும் முன்பே தன் சுவாசம் எக்காரணத்தினாலும் நின்றுவிடக் கூடாது என்பதில் அவர் கொண்டிருந்த உறுதியே, அவரை இதுநாள் வரையிலும் நடமாட விட்டிருந்தது!

"அம்மாடி...! ஒவ்வொரு முறை இருமும்போதும் எங்கே சட்டுனு உயிர் நின்னுடுமோனு பயமாயிருக்கும்மா. என் ஆசை நிறைவேறிடுச்சுனா அப்புறம் கவலைப்பட மாட்டேன்" என்றவர், உதடுகள் துடிக்க, சன்னமான குரலில், "உன்னை ரொம்ப கஷ்டப்படுத்தறேன்மா நான்" என்றபோது அவசரமாக இடைமறித்தவள் தானும் விழி கலங்கினாள்.

தனது கனவை நனவாக்கும் மிகப்பெரிய பொறுப்பைச் சுமந்து நிற்கும் மகள் அவருக்குத் தாயாகத் தோன்றினாள்.

ஒவ்வொருமுறையும் தான் ஞாபகப்படுத்தும்போதும், அவள் மனம் படும் தவிப்பை, அவளது விழிகள் வெளிப்படுத்தும்போது, அதைக் கண்டு நொந்துபோய் மேற்கொண்டு பேசாமல் மௌனம் காத்துவிடுவார்

சுப்புரத்தினம். நொண்டிக் குதிரையாய் வீட்டுக்குள்ளேயே முடங்கிக் கிடக்கும் தான் ஏற்கெனவே தன் மகளுக்கு பாரமாக இருக்கும் நிலையில் மேற்கொண்டு இப்படி வதைக்கிறோமே என்றெண்ணி, ஏக்கத்தினை மட்டுமே சுமந்துகொண்டு மௌனமாகவே வாழப் பழகியிருந்தார். ஆனால், அந்த ஏக்கம் இன்று பயமாக மாறியபோது தன்னையும் மீறி இவ்விதம் மகளிடம் கூறிவிட்டிருந்தாலும், மனம் அதற்காக வருந்தியது.

தந்தையின் இத்தகைய பயம் குறித்து தாங்க முடியாத வேதனைக்குள்ளாகினாள் சம்யுக்தா.

'கடவுளே! என்ன சோதனை இது? என் அப்பா இத்தகைய பயத்துடனே வாழ்ந்து கொண்டிருக்கிறாரா? பெண் பிள்ளைதானே! என்ன செய்துவிடப் போகிறாள் என்று ஊரார் நினைப்பதுபோல் தந்தையும் நினைத்து விட்டாரோ? அதனால்தான் பயம் உண்டாகி விட்டதோ?'

கண்ணீர் வழிந்து தலையணையை நனைத்தது. மெல்ல சிரம் தூக்கி விழிகளைச் சுருக்கி பார்வையைக் கூர்மையாக்கி நோக்கினாள். தந்தையிடமிருந்து மெலிதான குறட்டை ஒலி வந்தது கண்டு நிம்மதியடைந்தாள். ஆனால், அவளையோ தூக்கம் தழுவ மறுத்தது.

சரியாக இரண்டு மாதங்கள்தானே இருக்கின்றன. நான் என்ன செய்யப் போகிறேன். இதயத்தைக் கூறுபோட்ட எத்தனையோ சம்பவங்கள். ஒரு காலத்தில் கொடிகட்டிப் பறந்த நரசிம்மரின் குடும்பம், அவரது மறைவுக்குப் பின் சிதறிப் போய்விட்ட அவலம்! எதனால்? வாழ்வாங்கு வாழ்ந்த முன்னோர்களின் ஒற்றுமை, இப்போது இல்லாமல் போனதால்! யார் பெரியவன் என்ற வீண் கௌரவம் தலைதூக்கியதால்! தன் உடன்பிறந்த இரத்தம்தானே என்ற

பாசம் இல்லாததால்! நெஞ்சிலே வஞ்சம் பார்க்காமல் சமமாக எல்லோரையும் பாவித்து, உடன்பிறந்த பந்தத்திற்குள்ளும் நுழைந்து குதியாட்டம் போட்டுக் கொண்டிருக்கும் பொறாமைத்தீ பாசத்தை மறைத்துவிட்டதால்! ஏன் இதெல்லாம்? சிறு வயதிலேயே அன்னத்தோடு பாசத்தையும் சேர்த்து ஊட்டிவிடாத அன்னையின் தவறா? அப்படி ஊட்டிவிட்டாலும், தோளுக்கு மேல் வளர்ந்துவிட்ட பின்பு, வாழ்ந்தாலும் தாழ்ந்தாலும் ஏசுகின்ற இக்கேடுகெட்ட சமுதாயத்தில் அடுத்தவர் குடியைக் கெடுக்க வேண்டுமென கங்கணம் கட்டிக்கொண்டு பொழுதுபோகாமல் சுற்றித்திரியும் வீணர்களின் நயவஞ்சகத்தில் சிக்கிக்கொண்டு, அவர்களின் வார்த்தைகளுக்கு செவிசாய்த்து தானும் வீணாகி, தன் சகோதர பந்தத்தை அறுத்தெறியும் துணிச்சல் வந்துவிட்டதால்!

ஆனால் சுப்புரத்தினம் போன்ற பெருந்தன்மை குணம் படைத்தவர்களின் வாழ்க்கைப் பாதை, சோதனை நெருஞ்சிமுட்கள் பரவியதாகத்தான் இருக்கிறது. தந்திரமும், சுயநலமும் அறிந்திடாதவர், அத்தகைய குணம் படைத்த சகோதரர் முன் தோற்றுப்போனபோதும் தன் அண்ணன்தானே என்று நிறைந்த மனதோடு ஏற்றுக்கொண்டதன் விளைவு? குடும்பம் சிதைந்து மற்றவருக்கு அசைபோடத் தீனியாகிப் போனது.

போற்றிப் பாராட்டித் துதிபாடிய இம்மண்ணில், இதே கௌரவத்தோடு இறுதிவரை வாழ முடியவில்லையே என்ற ஏக்கம் தந்தையின் மார்பை அனுதினமும் அறுத்துக் கொண்டிருக்கும் அவலத்தை காணச் சகிக்காமல் வாழ்க்கையோடு போராடிக் கொண்டிருக்கும் அவள் கேவினாள். என் தந்தையின் ஆசையை நிறைவேற்ற

முடியாத பாவியாக்கி விடாதே இறைவா? எனப் புலம்பியது அவளது மனம்.

**சு**ருளும், அடர்த்தியுமான தன் தலைமயிரை கைகளால் தட்டி உச்சியில் தூக்கி செருகிவிட்டு கண்ணாடியில் தன் உருவத்தைப் பார்த்தாள் சிந்தாமணி. அவளது பெருத்த தேகம் ஆளுயரக் கண்ணாடியை நிறைத்தது. அன்னம் போட்ட பெரிய மூக்குத்தியும், ஐம்பது பைசா அகல நெற்றிக் குங்குமமும், அவள் சரீரத்துக்கு சரியாகத்தான் இருந்தது. ஆனாலும், பெண்களே அவளிடம் பேச பயப்படுவதுண்டு. சதை மடிப்புகளுடன், அவ்வளவு பெரிய சரீரத்தைச் சுமந்துகொண்டு திணறியவாறு வீதியில் நடந்து போகிறவளை புறம்பேசாத பெண்கள் கிடையாது. ஆனாலும் அவளுக்குத் தெரியாமல்தான் இதெல்லாம். நேரில் பார்த்தால், மதனி, அக்கா, அத்தை என உரிமை கொண்டாடி இனிக்கப் பேசித் தப்பிவிடுவதுண்டு. கண்டும் காணாமல் போகிறவர்களை கணீரென்ற குரலால் வழிய கூப்பிட்டு, அவர்கள் சலிப்படையும்வரை பேசித் தீர்த்துவிடுவாள். இவளைப் புறக்கணித்தால் போதும் ரகளைதான்.

“இவளைப்பற்றி எனக்குத் தெரியாதா? எங்கே பேசினால் இவ குட்டு தெரிஞ்சுடுமோனு ஓடறா...” என்று பலத்த குரலில் ஆங்காரத்தோடு பேசி ஒரு வழியாக்கி விடுவதுண்டு.

கண் மையை எடுத்து காதோர நரைமுடி மீது தடவிக்கொண்டாள். அவ்வப்போது வீட்டு வாசலில் பரப்பிக் காயவைத்திருக்கும் சோளத்தைப் பார்த்துக் கொண்டாள். கழுத்தில் மஞ்சள் கயிறு நிறமிழந்து கிடக்க,

கூடவே கிடக்கும் இரண்டு சவரன் சங்கிலி அவள் பெருத்தத் தேகத்துக்கு எடுப்பாகத் தெரியவில்லை என குறைபட்டுக் கொண்டாள்.

மீண்டும் அவளது கண்கள் வாசலை நோக்கியபோது, அனல் பொங்க வெறித்தது. பற்களைக் கடித்துக் கொண்டு, சேலையைத் தூக்கிச் செருகியவாறு, விறகுக்கட்டையை எடுத்துக் கொண்டு, மெல்ல அடி எடுத்து வைத்து வாசற்படிக்கு வந்தாள்.

திருட்டுத்தனமாக சுற்றிலும் பார்த்துக்கொண்டு, வெடுக்வெடுக்கென சோளத்தை விழுங்கிக் கொண்டிருந்தது அண்டங்காகம். சிந்தாமணியின் அங்கமெங்கும் நெருப்பு பரவியது. குறிபார்த்து தன் பலமனைத்தையும் திரட்டி ஓங்கி காகத்தின் மீது எறிய மயிரிழையில் தப்பித்துப் பறந்தோடியது அக்காகம்.

அவளது கோபம் பன்மடங்கு அதிகமானது. பறந்து சென்ற காகத்தை, அருகே உள்ள மரக்கிளைகளுள் தேடி வாயில் வந்தவற்றையெல்லாம் திட்டித் தீர்த்தாள். அவளது சத்தம் தாங்காமல் பக்கத்துவீட்டு ஜன்னல் பூட்டப்பட்டது.

அவளது கண்கள் உக்கிரமடைந்தன. அவளது பார்வை கிளைகளை விடுத்து பூட்டிய ஜன்னல் மீது பதிந்தது.

“இதுக வாழ்ந்த வாழ்க்கையெல்லாம் எனக்குத் தெரியாதா? தெரு ஓரத்தில் மாம்பழத்தை கூறுகட்டி கூவிகூவி விக்கறவளுக்கு என் சத்தம் பெரிசாத் தெரியுதா?”

“யார் கண்டா? என்ன காரணத்துக்காக ஜன்னலை அடைக்கிறாளோ, யாருக்குத் தெரியும். விடியலையில் போற புருசன் பொழுது சாய்ந்த பிறகுதானே வீட்டுக்கே

வர்றான். இடையில் என்ன கூத்து நடக்குதோ...” தன் வாயில் சத்தத்தோடு அடித்துக் கொண்டாள். “அம்மா...!”

திரும்பிப் பார்த்தபோது மகள் தாட்சாயிணி நின்று கொண்டிருந்தாள்.

“என்னடி...?” வெடுக்கென கேட்டாள்.

“இப்ப ஏன்மா இப்படி கத்தற. படிக்க முடியலை என்னால். கொஞ்சம் வாயை மூடேன்.”

“ஆமாடி... நீ படிச்சு வேலைக்குப் போய் எனக்குத்தானே கஞ்சி ஊத்தப்போற. கட்டுறவனுக்கு உழைச்சுப் போடப்போற கழுத... படிச்சா... எனக்கென்ன, படிக்காட்டி எனக்கென்ன?”

தனது கோபம் இப்போது மகள் மீது திரும்பியது. கோபம் கொப்பளிக்க தாயைப் பார்த்த தாட்சாயிணி, “கஞ்சி என்ன, ஒரு வாய் தண்ணீர்கூட கொடுக்கமாட்டேன் உனக்கு” எனக் கடிந்துவிட்டுத் திரும்பியவளை அழைத்தாள்.

“இந்த சோளத்தைப் பார்த்துக்கோ... உங்கப்பாரைக் கட்டியதுக்கு இதுதான் எனக்குக் கிடைச்சது. உக்கும்...” முகவாயைத் தோள்பட்டையில் இடித்துவிட்டு, “அடுக்களையில் வேலை இருக்கு. இங்கேயே உட்கார்ந்து படி” என்றவாறு உள்ளே சென்றாள்.

மழை பெய்து ஓய்ந்ததுபோல் உணர்ந்த மகள் முனகியவாறு திண்ணையில் அமர்ந்தாள்.

சற்று நேரத்தில் மணிரத்னம் களைப்போடு வந்தார்.

படித்துக் கொண்டிருக்கும் மகளைத் தொந்தரவு செய்யாமல், "சிந்தாமணி... தண்ணீர் கொண்டுவா" என்ற குரலோடு உள்ளே நுழைந்தார். மின்விசிறியைப் போட்டுக்கொண்டு நாற்காலியில் அமர்ந்தார்.

உள்ளத்துக்குள் ஒரு குற்ற உணர்வு குடியேறியிருந்தது. காலங்கள் பல கடந்து வந்துவிட்ட பின்பும், தனக்கென கடமைகளும், பொறுப்புகளும் வந்திருந்தாலும், மனித உள்ளங்களின் ஒரு மூலையில் ஒதுங்கியிருப்பது உறவுகளின் பாசம். அவர் கடந்து வந்த பந்தமோ அல்லது முடிந்துவிட்டதாக நினைத்துக் கொண்டிருக்கும் பந்தமோ இன்னும் உள்ளே அமைதியாக ஆட்சிபுரிந்து கொண்டுதானிருக்கிறது.

கண்களை மூடி சாய்ந்தபோது வழியில் கண்டவர்களின் குரல்கள் எதிரொலித்தன.

"ஐயா ரத்னம்! நீ செய்வது சரியில்லைய்யா? நம்முடைய வாழ்நாள் எவ்வளவுனு நமக்கே தெரியாதுய்யா. இன்னும் அதே நிலையில் இருந்தா எப்படி? கொஞ்சம் இறங்கி வாய்யா... நாளைக்கு எல்லாம் முடிஞ்சபிறகு வருத்தப்பட்டு பயனில்லை ரத்னம்..."

"ஏய்யா! மணி... உன் வயசு எத்தனை? மன்னிக்கும் வயசு அறுபது. பெண்டாட்டி, பிள்ளைகளுக்கு இந்த பந்தத்தைப் பற்றி என்னய்யா தெரியும். நேரில் பார்த்தால்தான்யா உண்மை புரியும் உனக்கு..."

உள்ளுக்குள்ளே முடங்கிக் கிடந்த உணர்வுகளை அவர்களின் வார்த்தைகள் முடுக்கி விட்டிருந்தன.

அவர் வாழ்ந்த காலத்தில் வலுப்பெற்றிருந்த பாசம், இமைக்கும் பொழுதில் மறைந்துவிட எப்படி முடிந்தது?

தான் மார்போடு சுமந்து திரிந்த அந்த அன்பு முழுவதுமா அணைந்து போனது?

மனசாட்சி எழுப்பிய கேள்விகளுக்கு அவரால் பதிலளிக்க முடியவில்லை. அவ்வப்போது இப்படி கூக்குரலிடும் மனசாட்சியை சிறையிலிட்டுவிட்டு, சுதந்திரமாக சுற்றித்திரிய அவர் பழகியிருந்த போதிலும் மற்றோரின் நியாயமான கேள்விகளால் திணறிப் போயிருந்தார்.

நீர் நிறைக்கப்பட்ட பித்தளைச் செம்பை அவர் கரத்தில் திணித்துவிட்டு, அவரை உற்று நோக்கினாள் சிந்தாமணி.

அவர் ஏதோ குழப்பத்திலிருப்பதை அவரது விழிகள் தெரிவித்தபோது கணப்பொழுதில் அவள் துப்பறியும் சிந்தாமணியானாள்.

"பெரிய வீட்டைப் பற்றி ஏதாச்சும் தகவல் கேட்டீகளோ?" - அங்கலாய்த்தவாறு கேட்டாள்.

அவரின் பதிலுக்காகக் காத்திருந்து ஏமாந்து போனாள்.

அவர் மௌனமாகவே அமர்ந்திருந்தார்.

இப்போது அவரைவிட அவளே பன்மடங்கு குழப்பத்துக்காளானாள்.

அவளைப் பொறுத்தவரையில் அவர் எதற்காக இப்படி அமர்ந்திருக்கிறாரோ, அதற்காக மட்டும் நிச்சயமாக

இருக்கக் கூடாது. அதனால்தான் அவளறிந்த விஷயத்தை எப்போதோ தானறிந்தும் வெளியிடவில்லை.

இப்போது அவளுக்கு மெல்ல சந்தேகம் எழ ஆரம்பித்தது. ஆனால் அவற்றை வெளியிட விரும்பாது அவரைத் திசை திருப்ப எண்ணியவளாய், 'ம்...' என பெரிதாய் சத்தமிட்டாள்.

அண்ணார்ந்து விட்டத்தின் மீது கண்களை சுழலவிட்டுப் பெருமூச்செறிந்தாள்.

"கல்லும், மண்ணுமா உதிர்ந்துவிழும் இந்த வீட்டைவிட்டுப் போகவும் முடியலை, இருக்கவும் முடியலை. ஒத்திக்கு வேறு வீட்டைப் பார்த்தா என்ன?"

அவர் மௌனமாகத் தலையசைத்தார் 'சரி' என்று!

"...ம்... அரண்மனை மாதிரி வீடு... கொடுத்து வைக்கலையே..." மீண்டும் பெருமூச்செறிந்தாள்.

"நமக்கு சதி செய்ததாலதான் இன்னிக்கு இந்த நிலைமை அந்த வீட்டுக்கு. நானும் பார்க்கத்தானே போறேன். என்னதான் நடக்கப் போகுதுனு. நான் என்ன? இந்த ஊரே பார்க்கப் போகுது. அப்ப தெரியும் யார் குடியை யார் கெடுத்தாங்கனு..."

சத்தமாக குரல் எழுப்பியபோது அவர் சட்டென அவ்விடத்தை விட்டு நகர்ந்துபோக அவளது கண்கள் சிவந்து அனல் கக்கின.

# பாகம் - 1

## (அன்று)

அந்த அரண்மனை வீடே நிசப்தமுற்றிருந்தது. அனைவருமே பத்தொன்பது வயது நிரம்பிய சுப்புரத்தினத்தின் வருகையை எதிர்பார்த்து கவலை தோய்ந்த முகத்தோடு நின்று கொண்டிருந்தனர். ஏனெனில் அவன் வைத்தியரை அழைக்கச் சென்றிருந்தான். வைத்தியர் வந்தபின் அவரது வார்த்தை என்னவாயிருக்குமோ என்ற பதைப்போடு சிலரும், என்னவாகத்தானிருக்கும் பார்ப்போம் என்ற அவாவினைக் கொண்டு சிலரும் அம்மரக் கட்டிலைச், சுற்றி நின்றிருந்தனர். விசிறியால் விசிறி விட்டுக் கொண்டிருந்த வீரராஜேஸ்வரியின் கண்களில் தாரை தாரையாய் கண்ணீர். அவளின் மனநிலையை நன்றாக அறிந்திருந்தும் அவளுக்கு ஆறுதல் கூற, அவளருகே நின்றுகொண்டிருக்கும் அண்ணி தலைப்படவில்லை. நிறைமாத கர்ப்பத்தோடு தான் இவ்விதம் கால்வலிக்க நின்று கொண்டிருப்பது குறித்து சுயபரிதாபம் கொண்டாள்.

சற்று நேரத்தில் சலசலப்பு. சுப்புரத்தினமும், அவரைத் தொடர்ந்து அறுபது வயது மதிக்கத்தக்க வைத்தியரும் வந்தபோது கூட்டம் ஒதுங்கி வழிவிட்டது.

விழிகளை மூடியவாறு தொண்டைக்கும், நெஞ்சுக்கும் இழுத்துக் கொண்டிருந்த நிலையில், கடினப்பட்டு மூச்சுவிட்டவாறு மிகப் பரிதாப நிலையில் படுத்திருந்த வீரநரசிம்மரருகே வைத்தியர் அமர்ந்தார். அவரின் கரத்தைப் பிடித்து நாடியைப் பரிசோதித்தார்.

பின் அவரது மூடியிருந்த இமைகளைத் திறந்து பார்த்துவிட்டு, சுப்புரத்தினத்தை கவலையோடு நோக்கினார். அவரது வார்த்தைக்காக அவனது இருதயம் அடித்துக் கொண்டது.

ஆனால், அவர் பேசவில்லை. அமைதியாக உதட்டைப் பிதுக்கி, முடியாதது போல தலையசைத்தார்.

முகத்திலறைந்துகொண்டு சத்தமேயின்றி விசும்பினான். கணக்குப் பிள்ளை ஆதரவாகப் பற்றினார்.

தந்தையின் விழிகள் சிரமப்பட்டு விழிக்க முயற்சித்துக் கொண்டிருந்தன. அந்த விழிகளிலே வழிந்த பரிதவிப்பும், துடிப்பும் இளையவனுக்காகவே என எளிதில் எல்லோராலும் புரிந்துகொள்ள முடிந்தது.

இளையவனை ஈன்றெடுத்த மறுகணமே உயிரைவிட்ட மனைவியை நினைத்துக்கொண்டே, மறுமணம் புரிந்து கொள்ளாமல் பிள்ளைகளை வளர்த்தார். அரண்மனை வீடு! பணியாட்கள்! பசியுற்றோர்களுக்கெல்லாம் அன்னதானம் வழங்குமளவுக்கான சொத்து!

ஆனால் இவ்வளவிருந்தும் அவர் தலைகனமின்றி எளிமையாய் இருந்தார். பள்ளிக்கூடம், கோயில் முதல் மக்களுக்குத் தேவைப்பட்ட அனைத்தையும் தனது சொந்த செலவால் செய்தார்.

பிரச்சினைகளைச் சுமந்து கண்ணீரோடு அரண்மனை வாசலில் நிற்கும் மக்களுக்கு மனுநீதியானார். மொத்தத்தில் அந்த ஊர் மக்களுக்கே தாயுமானவரானார் வீரநரசிம்மர். ஆனால் அனைத்துக்கும் திருட்டி விழுந்தாற்போல அவரது மூத்தமகன் மணிரத்னம் இருந்தான். தந்தையின்

குணநலன்களில் சிறிதும் இல்லாத சுயநலமிக்கவனா யிருந்தான்.

பன்னிரண்டு வயது கொண்ட தனது பெண் ராஜேஸ்வரிக்கு மணமுடித்து வைத்த மறுகணமே மணிரத்னத்திற்கு பெண் பார்க்க ஆரம்பித்தார். எட்டு வயது கொண்ட இளைய மகனை பிள்ளை போல பாவிக்கும் பெருந்தன்மை கொண்ட குலக்கொடி வேண்டுமெனத் தீர்மானித்தவர் பாதாளத்தில் வீழ்ந்தார்.

மணப்பெண்ணாய் உள்ளே நுழைந்த சிந்தாமணிக்கு கணவனின் தம்பியைக் கண்டாலே வெறுப்புதான் உண்டானது. சிறிது காலத்திலேயே சொத்தைப் பிரித்துத் தருமாறு தந்தையிடம் கேட்க, கணவனை ஏவினாள். அதிர்ந்துபோன நரசிம்மர் மறுத்துப் பார்த்துத் தோற்று, இறுதியில் குடும்ப மானம் வீதிக்கு போய்விடக் கூடாதென்று சம்மதித்தார். சொத்தைப் பிரித்துக் கொடுத்த மறுகணமே இளைய மகனைப் பற்றிய கவலை தொற்றிக் கொண்டது.

அதன்பிறகு விரைவிலேயே சொத்தையெல்லாம் பறிகொடுத்துவிட்டு அப்பாவியாக மீண்டும் தந்தை முன் வந்து நின்றான். மனம் சகிக்காத நரசிம்மரோ மீண்டும் கொடுத்தார்.

சூதாட்டத்தில் நாட்டம் கொண்டு அனைத்தையும் இழந்தான். ஊர்போற்ற வாழ்ந்த நரசிம்மரின் மூத்த மகன் ஒரு தறுதலை என்று பட்டம் சூட்டப்பட்டபோது நொந்துபோன தந்தையை இளையவன் தேற்றினான். அண்ணன், அண்ணி மீது அவன் கொண்டிருந்த பாசத்தைக் கண்டு தந்தையே வியப்படைந்தார்.

அவன் அண்ணியைத் தாயாகவே கருதினான். அதுவே தந்தையின் கவலையை அதிகப்படுத்தியது. தனக்குப் பிறகு சூதறியா இப்பிள்ளையை இவர்கள் நடுத்தெருவில் விடவும் அஞ்சமாட்டார்கள் என்ற எண்ணம் தலைதூக்க மறுகணமே அரண்மனை வீட்டை இளையவனுக்கு எழுதி வைத்தார்.

மகனைப் பற்றிய கவலை அதிகமாகி ஒரு நாள் படுக்கையில் வீழ்ந்தார். சுய வேலையைக்கூட செய்துகொள்ள முடியாத பரிதாப கோலத்திற்கு ஆளான தந்தையை இளையவன் கவனித்துக் கொண்டான். ஆறு மாதங்களாகவே இப்படி வீழ்ந்து கிடந்தவரது உடல்நிலை இந்த ஒரு வாரமாகவே கவலைக்கிடமானது.

தந்தையின் கரத்தை தன் மார்போடு பதித்து தேம்பிய மகனைக் கண்டு மங்கிய விழிகளில் கண்ணீர் வழிந்தது.

இதனைக் கண்ட சிந்தாமணிக்கோ வயிறு எரிந்தது. தன்னருகே நிற்கும் கணவனின் காதருகே கிசுகிசுத்தாள்.

"நீங்க மட்டும் என்ன தத்துப்பிள்ளையோ?"

தந்தையின் நிலை கண்டு உருகிக்கொண்டிருந்த அவனுக்கு 'சுருக்'கென்றிருந்தது.

"அப்...பா..." குரல் நடுங்க கூறிய இளையவனை அவர் கண்களுக்குத் தெரியவில்லை. மங்கிய பார்வை இப்போது சுத்தமாக பலனிழந்த நிலையில் வாய் மட்டும் நொடிக்கொரு முறை திறந்து மூடியது.

'கடவுளே! என் பிள்ளையைக் காப்பாற்று' என உள்ளம் மட்டும் கதறியது. இவனுக்கு ஒரு துணை தேடுமுன்னே என்னை அழைக்கிறாயே என்ற ஆதங்கத்தை எவ்விதத்திலும் வெளியிட முடியவில்லை.

தந்தையின் மனநிலையறிந்து மகள் ராஜேஸ்வரி அப்பாவின் காதருகே விசும்பிக்கொண்டே, "கவலைப்படாதீங்கப்பா! தம்பியை நான் பார்த்துக் கொள்கிறேன்" என்றாள்.

இந்த ஒரு வார்த்தைக்காகத்தான் ஒரு வாரமாக உயிரைப் பிடித்து வைத்திருந்தாரோ? அத்தனை உடல் அவஸ்தையிலும், மகளின் அந்த வார்த்தையால் நிம்மதி பரவியது. மறுகணமே தனது வாழ்வை முடித்துக் கொண்டார். சுப்புரத்தினம் முகத்தில் அறைந்து அழலானான்.

## பாகம் - 2

**(இன்று)**

**கோ**யில் மணியின் ஓசை கேட்டு கோபுரத்திலிருந்து பறவைகள் படபடவென பறந்தன. உச்சிக்கால பூஜைக்காக மணி அடிக்கப்பட்டது. கம்பத்தின் முன்னே, தன் பெருத்த சரீரத்தை திணறியபடி வளைத்து நமஸ்காரம் செய்ய குனிந்த சிந்தாமணியால் எழ முடியவில்லை.

கோயில் வாசலில் பைக்கில் எரிச்சலோடு மகன் ராஜா காத்திருந்தான். அவனுக்கு சாமி கும்பிடுவதெல்லாம் பிடிக்காது. தாயின் நச்சரிப்பு தாங்காமல் பைக்கில் கொண்டுவந்து இறக்கிவிட்டான்.

"போனோமா - சாமியைப் பார்த்து கன்னத்தில் போட்டோமானு வந்திடனும். புரியுதா? கீழே விழுந்து கும்பிட்டுத் தொலைச்சுடாதே. அப்புறம் உன்னைத் தூக்கிவிட நான் வர முடியாது."

கால அவகாசம் கொடுத்து அனுப்பி வைத்தது அவளுக்கு நினைவுக்கு வர புலம்ப ஆரம்பித்தாள்.

"ஷ்!... ஈஸ்வரா... மகமாயி, மாரியாத்தா... கொஞ்சம் கை குடுங்கப்பா..." கைகளை ஊன்றிக்கொண்டு எழுந்தவளுக்கு கால்கள் உதவவில்லை. கிடுகிடுவென நடுங்க பிடிமானத்திற்காக அவளது கண்களும், கைகளும் தவித்தன. மூச்சுத் திணறியது. மகனை நினைத்ததும் பயமுண்டானது.

"உன்னைத் தூக்க நான் வரமுடியாது." தாய்க்கேற்ற தனயனின் வீர வசனம் ஞாபகத்திற்கு வந்தபோது, கொஞ்சம் சத்தமாகவே கடவுள் பெயரை உச்சரித்தாள். உச்சிக்கால பூஜை நடந்து கொண்டிருந்ததால் பக்தர்கள் அனைவரும் சன்னதி முன்பு பக்தியோடு வணங்கிக் கொண்டிருந்தனர்.

நாதஸ்வரமும், மேளமுமிட்ட சப்தத்தில் இவளது குரல் யாருக்கும் கேட்கவில்லை. மூச்சுத் திணறி, வியர்த்து வழிய, கதியற்று தவித்தவளை கணப்பொழுதில் தன் பூக்கரம் தந்து தூக்கிவிட்டாள் சம்யுக்தா.

"அம்மா...!" என்று நிம்மதிப் பெருமூச்சோடு தனக்கு உதவிய புண்ணியவதியை நிமிர்ந்து நோக்கியவளின் கண்கள் சிவந்து வெறித்தன. அதுவரை நடுக்கத்தால் வியர்த்துப்போன அவளது பெருத்த தேகம் முழுவதும் கடும் உஷ்ணம் பரவியது. மணி ஓசையும், நாதஸ்வர மேளச்சத்தமும் இப்போது மிக பலமாகவே கேட்டது.

இவளது கோலத்தால் இளையவள் பயந்து போனாள். கண்களை இறுக மூடிக் கொண்டாள். 'ஓம் நமச்சிவாய...!' என்று அவளது உதடுகள் மெலிதான குரலில் உச்சரித்தன.

சில நிமிடங்களுக்குப் பிறகு மெல்ல கண்களைத் திறந்தவள் நிம்மதியடைந்தாள். அங்கு சிந்தாமணி இல்லை. ஆனாலும் அவளது நிம்மதி நிலைக்கவில்லை.

வெளியே வந்து காலணியை அணிந்து கொண்டிருக்கையில் பலத்த செருமல் சப்தம் கேட்டு அதிர்ந்து நோக்கினாள்.

"அப்பன் செய்த பாவத்துக்கு மகள் பரிகாரம் தேட நினைக்கிறாளோ?"

சிந்தாமணி, பைக் உறுமலோடு தானும் உறுமினாள்.

ஏதும் புரியாமல் தாயை நோக்கிய ராஜா, அவளது பார்வை கக்கும் நெருப்பு போகும் திசையைப் பார்த்தபோது, புரிந்துபோனது. சம்யுக்தாவின் விழிகள் பரிதவிப்போடு அவனை நோக்கியது.

அவன் வெடுக்கென பார்வையைத் திருப்பிக் கொண்டு, "வண்டியில் ஏறு" என்றான்.

நொறுங்கிய மனத்தோடு, கண்கள் கலங்க அண்ணார்ந்து கோபுரத்தைப் பார்த்தவள் மானசீகமாக கடவுளை வேண்டிக்கொண்டு வீடு திரும்பினாள்.

★ ★ ★

"**அ**ம்மா, வீர காளியம்மா... ம்..." சுப்புரத்தினம் மிக சிரமப்பட்டு படுக்கையிலிருந்து எழுந்தார். சிறுநீரின் அவஸ்தையினால் தடுமாற்றத்தோடு, ஒவ்வொரு அடிக்கும், குலதெய்வம் 'வீரகாளியம்மாளின்' பெயரை உச்சரித்தவாறு சுவரோரமாய் வைத்திருக்கும் கைத்தடி நோக்கி நடந்தார். கைத்தடியைப் பற்றியதும் முகத்தில் சற்று நிம்மதி பரவியது.

இருந்தாலும் அடுக்களையைக் கடந்து படிகளில் இறங்கி கொல்லையில் இருக்கும் கழிப்பறைக்குச் செல்ல வேண்டுமே என நினைக்கும்போதே தொண்டை வறண்டு போனது.

அறுபது வயதைக்கூட இன்னும் தொடவில்லை. அதற்குள்ளேயே தன்னை இப்படி ஒரு நிலைக்கு அந்த ஆண்டவன் தள்ளிவிட்டானே என உள்ளம் குமைந்தது.

கைத்தடியைப் பிடித்துக்கொண்டு அடுக்களையைக் கடப்பதற்குள் மூச்சே நின்றுவிடும் போல் உணர்ந்தார். நிலைக்கதவைப் பிடித்தவர் தன் கரம் பற்றியிருக்கும் கைத்தடியை ஆவேசத்தோடு ஓங்கி எறிந்தார். பெரும் சப்தத்தோடு கீழே விழுந்த அக்கைத்தடியை பார்வையால் எரித்தார். அவரது மூச்சு ஆங்காரத்துடன் பலமாக மேலும், கீழுமாக ஏறி இறங்கியது. சில நொடிகளில் ஆங்காரமெல்லாம் கண்ணீராக கரைந்து கன்னத்தில் வழிந்தது. உதடுகள் துடிக்க நிலைக்கதவின் உதவியோடு வாசற்படியைக் கடக்க எத்தனித்தார். ஐந்து படிகள்! இரண்டு படிகளை கஷ்டப்பட்டு கடந்தவரை அதற்குமேல் பொறுக்காமல் சிறுநீர் முந்திக்கொண்டு வெளியேறி விட்டது. வேட்டி நனைந்து கொண்டிருக்க ஏதும் செய்ய முடியாத நிலையில் மிகுந்த களைப்புக்காளானார்.

அந்நேரம் உள்ளே நுழைந்த சம்யுக்தா படுக்கையில் தந்தையைக் காணவில்லை என்றதும் அடுக்களையில் எட்டிப்பார்த்தவள், தந்தையின் பரிதாபநிலை கண்டு துடித்துப்போய் ஓடிவந்து அணைத்துக் கொண்டாள்.

“ம்...மா...” அவர் விம்மினார்.

“பரவாயில்லைப்பா. ஆனது ஆயிற்று. இன்னும் போகனும்னா போங்கப்பா.” பொறுமையோடு தன்னைத்

தாங்கியவாறு சொன்ன மகள் அவருக்கு குலதெய்வமாகத் தோன்ற, சப்தமின்றி விசும்பினார். தந்தையின் மனநிலையறிந்தவள், "இது ஒரு சாதாரண விஷயமப்பா" என்று வாஞ்சையோடு கூறி, அவருக்கு வேறு வேட்டிக்கு மாற உதவி அவரைக் கைத்தாங்கலாக அழைத்து படுக்கையில் அமர வைத்தாள்.

தந்தையின் நிலை மிக மோசமாகி விட்டதென எண்ணியவளின் இருதயம் பலமாக அடித்துக் கொண்டது.

அவரது கண்கள் தரையில் பதிந்திருந்தன.

"ஏன்பா... கைத்தடி எங்கேப்பா?" என்றவாறு கண்களை அலைபாயவிட்டவள், அது அடுக்களையின் மூலையில் கிடந்ததைக் கண்டு அவசரமாக எடுத்துக்கொண்டு வந்து அவர் படுக்கைக்கருகே வைத்துவிட்டு அவரை சாந்தமாக ஏறிட்டாள்.

"உங்களை கவனிக்க ஆள் ஏற்பாடு பண்ணட்டுமாப்பா? முத்தம்மாவால் எந்நேரமும் கூடவே இருந்து கவனித்துக்கொள்ள முடியாது."

"ஊகூம்..." - அவசரமாக மறுத்தார். "நீ வாங்கும் சம்பளம் வாடகைக்கும், மருந்துக்குமே சரியாப் போயிடுறது. மூன்று வருஷம் முடியப்போகுது. பணத்துக்கு என்ன பண்ணப்போறோம்னு தெரியலை. இதில் ஆள் வேறு போட்டு அதற்கு செலவழிக்க வேண்டாம்மா." களைப்பான குரலில் கஷ்டப்பட்டுப் பேசி முடித்தார்.

தந்தையின் யதார்த்தமான வார்த்தை அவளைக் குத்திப் பதம் பார்த்தது. அப்பாவின் விருப்பத்தை நிறைவேற்ற முடியாத பாவியாக்கி விடாதே கடவுளே! கண்கள் கலங்க அடுக்களைக்குள் புகுந்தாள்.

'ஐந்து லட்சங்கள்!' உதடுகள் சொல்லிப் பார்த்தன. 'இந்த மூன்று வருடங்களாக நான் சேமித்த பணத்தையெல்லாம் ஒன்று திரட்டினாலும் இரண்டைக்கூடத் தொடாதே! நினைக்கும்போதே நெஞ்சம் படபடத்தது. இன்னும் இரண்டு மாதத்திற்குள் எப்படி மீதித் தொகையைத் திரட்டுவது? யாரிடமும் கடனாகக் கூட கேட்க முடியாதே! கொடுத்தே பழக்கப்பட்ட வம்சம், பெருமைகுன்றிப் போகலாமா? அம்மா தாயே எங்களைக் காப்பாற்றம்மா...!'

பால் பொங்கி வந்தது. காப்பித்தூள் கலந்து அரை இனிப்பில் காப்பி தயாரித்து அப்பாவிடம் வந்து கொடுத்தாள்.

அவரது நினைவை திசைதிருப்பும் நோக்கத்தில், மெதுவாக ஆரம்பித்தாள்.

"இன்னிக்கு கோவிலில் அந்தம்மாவைப் பார்த்தேன்பா."

அதுவரை தாழ்ந்திருந்த அவரது விழிகள் பரிதவிப்போடு அவளை ஏறிட்டன.

தந்தையின் நிலை உணர்ந்தவள், "ஏதும் பேசலைப்பா" என்றாள்.

"நீ பேசினியா?..." பிசிறிய குரலில் கேட்டபோது, "இல்லை" என்றாள்.

காப்பியை ஒப்புக்கு உறிஞ்சிவிட்டு, "பேசியிருக்கலாமே!" என்றார்.

"அப்பா...! உங்களுக்கு இன்னுமா பாசமிருக்கிறது?" சட்டென கோவிலில் நடந்த சம்பவம் நினைவுக்கு வந்தது.

உறவுகளின் பாசத்துக்காக ஏங்கும் தந்தையின் நிலை கண்டு வருந்த மட்டுமே முடிந்தது.

ஊருக்கே தெரிந்துபோன இந்தப் பிரிவை, இணைக்க எவ்வளவோ முயற்சித்துப் பார்த்தும் தோல்வியையே தழுவியிருந்த நிலையில் இன்று நடந்த சம்பவத்தால் அம்முயற்சியையே கைவிடத் தீர்மானித்தாள். மென்மையான மனம்படைத்த அப்பாவிடம் இதைச் சொல்ல முடியுமா? வேண்டாம். தாங்கிக் கொள்ளமாட்டார். என்றைக்காவது அவர்கள் வருவார்கள் என்ற ஏக்கத்தோடே அவர் வாழட்டும்.

"ஏன்மா அமைதியா இருக்காய்..." இருமலோடு கேட்டார்.

"இனிமேல் பார்த்தால் பேசறேன்பா..." என்று காலித் தம்ளரை வாங்கிக்கொண்டு நகர்ந்தாள்.

★ ★ ★

**பு**திய பாடல் ஒன்றை முணுமுணுத்துக் கொண்டே காரைச் செலுத்தினான் பார்த்திபன்.

'அம்மாவிடம் ஓரளவு சொல்லியாயிற்று. இனி சம்யுக்தாவிடம்தான் தன் காதலை வெளிப்படுத்த வேண்டும்' என்று நினைக்கும்போதே உள்ளமெல்லாம் சிலிர்த்தது.

அவனுக்கு, அவளை முதன்முறையாக சந்தித்த வேளை இப்போது ஞாபகம் வந்தது. அவளது எளிமையான தோற்றமும், அதீத அழகும் இவனை இமை மூட விடாமல் வதைத்தது.

அலுவலகத்தில் உயர் பதவி வகிக்கும் இவனுக்கு நேர்முகத் தேர்வு நடத்தும் அதிகாரம் கொடுக்கப்பட்டது.

கணினித் துறையில் தேர்ச்சி பெற்றிருந்த அவளை, சோதித்தபோது அபாரமான அறிவை அறிந்தவன் உடனே தேர்வு செய்தான்.

அதன்பின் அவளிடம் பணி சம்பந்தமாக ஏதாவது ஒரு காரணத்தை வைத்துப் பேச ஆரம்பித்தவன், தன் குடும்ப விஷயத்தைப் பற்றி பேசுமளவுக்குத் தேர்ச்சி பெற்றான். நாளடைவில் அவளது தந்தையோடும் பழக ஆரம்பித்தான்.

அவளது ஊரிலிருந்து இரண்டு மணி நேர பயணத்திற்குப் பின் நகரத்தில் உள்ள அலுவலகத்திற்கு வாடிய முகத்தோடு அவசர அவசரமாக வந்தபோதெல்லாம், அவள் களைப்பாக இருப்பதாகவே நினைத்தான். ஆனால், அவ்ள் மிகப்பெரிய பொறுப்பைச் சுமந்திருக்கிறாள் என்பதை அறிந்தவர்கள் சிலர் வாயிலாகத் தெரிந்து கொண்டபின் காதலோடு இரக்கம் சுரந்தது. ஆனால் அதைப்பற்றி தன்னிடம் ஒரு வார்த்தைகூட கூறாமலிருந்ததை எண்ணியபோது மதிப்பும் பிறந்தது.

அவளது பொறுப்பை இறக்கிவைக்கத் தன்னால் சுலபமாக உதவமுடியும் என்றாலும், அதுபற்றி தன்னிடம் ஒரு வார்த்தைகூட கூறாதவளிடம், தானே வழிய வந்து உதவிவிட்டு அதன்பின் தன் காதலை வெளிப்படுத்தினால் அவள் என்ன நினைப்பாள். அவளது காதலை விலை கொடுத்து வாங்குவதாக நினைத்து, உதவியையும், காதலையும் தூக்கி எறிந்துவிடலாம் அல்லது அவளுக்கு உதவிய என் மனம் வாடக்கூடாதென, அவள் காதலுக்கு சம்மதம் சொல்லலாம். தலையை பலமாக குலுக்கிக் கொண்டான்.

வேண்டாம். அவள் மனம் என் காதலை மறுக்காமல் ஏற்றுக் கொண்டபின் ஒரு காதலனாய் அவள் எதற்காக பாடுபடுகிறாளோ அதையே அவளுக்கு காதல் பரிசாக அளிக்க வேண்டுமெனத் தீர்மானித்தவாறு நிம்மதிப் பெருமூச்சோடு காரைச் செலுத்தினான்.

கலைந்த கேசமும், வாடிய முகமுமாக வீட்டிற்குள் நுழைந்த சம்யுக்தா, மின் விசிறியைச் சுழலவிட்டு, நாற்காலியில் அமர்ந்து ஆழ மூச்சிழுத்து வெளியிட்டாள். அவளது இதயம் மிக வேகமாக துடித்துக் கொண்டிருந்தது. அவளது விழிகள் நிமிடத்திற்கொருமுறை கட்டிலில் அயர்ந்து உறங்கிக் கொண்டிருக்கும் தந்தை மீது பதிந்து விலகின. சத்தமின்றி விம்மினாள்.

சற்று முன்பு நடந்த நிகழ்ச்சி அவளை உலுக்கி விட்டிருந்தது.

அவனது தோற்றமும், மீசையும், தொந்தியும்... ச்ச்...மனிதனா அவன்! மிருகம்...! கட்டியவளைத் தவிர மற்ற பெண்களைத் தாயாகவும், சகோதரியாகவும் நினைப்பவன்தானே பண்புள்ள ஆடவன்! இவன் காட்டு மிருகம். நரை கிளம்பிவிட்டிருந்த போதிலும் சாயம் பூசி, புலி நகம் பதித்த இருபது சவரன் சங்கிலியும், கட்டை விரலைத் தவிர மற்ற விரல்களனைத்திலும் கல் பதித்த மோதிரங்களும், சில்க் துணியில் ஜிப்பா, வேட்டியும் ஜொலிக்க பைக்கில் வீதியில் வலம் வரும்போதே பெண்கள் குனிந்த தலை நிமிராமல் ஓடி விடுவார்கள். ஊர் இரண்டுபட்டால் கூத்தாடிக்குக் கொண்டாட்டம் என்பதுபோல் அவனது ஆட்சியே இப்போது நடக்கிறது. பெரிய குடும்பத்தின் வீழ்ச்சிக்குப் பின் இவனது அதிகாரமே கொடிகட்டிப் பறந்தது. அதிக வட்டி

வாங்குவதும், குறிப்பிட்ட நாட்களுக்குள் மீட்கத் தவறினால், அவ்வீட்டுப் பெண்கள் வேதனைப்படுமாறு இழிவாகப் பேசுவதுமே அவனது வழக்கமாயிருந்தது. ஆனால், அவசரமேற்படும்போது வேறு வழியின்றி அவனையே நாட வேண்டியுள்ளது. 'புல்லட் சேகர்' என்றே அவனை அழைப்பார்கள். அதில் அவனுக்குப் பெருமை உண்டு. புல்லட்டில் ஊரை வலம் வருவது அவனது பொழுதுபோக்கு.

இன்று அப்படித்தான். சம்யுக்தா பேருந்திலிருந்து இறங்கி வந்து கொண்டிருக்கும்போது புல்லட்டின் பலத்த ஓசையோடு அவள் முன்னே நிறுத்தினான். புல்லட் உறுமிக்கொண்டே, பெருமளவு புகையைக் கக்க, இவனைப் பார்த்தோ, அல்லது நாற்றம் தாங்காமலோ அங்கு படுத்திருந்த தெருநாய் ஒன்று பயத்தால் குரைத்துக் கொண்டே ஓடியது. அதுவரை மண் மீதே கண் பதித்து நடந்து வந்தவள் மெல்ல நிமிர்ந்தாள்.

மிக நீளமான அடர்த்தியான மீசைக்குள்ளே அவனது உதடுகள் மறைந்து போயிருந்தன. ஒரு கணம் அதிர்ந்து போனாள்.

“என்ன... பாப்பா... அப்பா நல்லாயிருக்காரா?” - தொண்டையை செருமிக் கொண்டே கேட்டான்.

“ம்...” எனத் தலையசைத்தாள்.

“இன்னும் இரண்டு மாதங்கள்தான் இருக்கு...” கர்ஜனையோடு கூறினான்.

மௌனமாகத் தலையசைத்தாள்.

"முடிஞ்சா பாரு பாப்பா... இல்லைன்னாலும் பரவாயில்லை..." என்று கேவலமான முறையில் சிரித்தான். அவளது தலையிலிருந்து பாதம் வரை ஏற இறங்க அவன் பார்த்தபோது அங்கமெங்கும் கூசிப்போய் கையிலிருந்த கோப்பை தன் மார்பின் மீது வைத்துக் கொண்டாள். அவளது அழகு அவனை சீண்டிவிட்டிருந்தது.

"ஆபீஸ் போய்ட்டு வர்ரயா பாப்பா..." குரலைத் தாழ்த்தி கேட்டான் அவளது கடைக்கண் பார்வைக்காக ஏங்கியவனாய்!

"ம்... எனத் தலையவைத்துவிட்டு அவ்விடம் விட்டு வேகமாக நடந்தாள். அவளது பின்னழகை புல்லட் கண்ணாடியில் பார்த்து ரசித்தான். அவசரமாக நடந்தவள் தனது முந்தானையை இழுத்து பின்புறம் மறைத்துப் போர்த்திக் கொண்டாள்.

ஏமாந்து போனவனாய் வண்டியைச் செலுத்தினான்.

**மி**ன்விசிறி சுழன்றும் அவளுக்கு வியர்த்துக் கொட்டியது. இன்னும் இதயத்துடிப்பு சீராகவில்லை. அவனது பார்வையும், பேச்சும் அவளை வேதனைக்குத் தள்ளியிருந்தன.

அயர்ந்து உறங்கிக் கொண்டிருக்கும் தந்தையைப் பார்த்தாள். காலத்தின் சுழற்சியால் பெருமளவு சுழற்றப்பட்டு, ஏதும் செய்ய முடியாமல் கரையில் தத்தளிக்கும் மீனைப்போல் தன் தந்தை படும் அவஸ்தையை எண்ணி விசும்பினாள்.

மெல்ல எழுந்து சுவரில் மாட்டப்பட்டிருக்கும் அம்மாவின் படத்திற்கருகே சென்றவள், சன்னமான குரலில் அழைத்தாள் "அம்மா...!" என்று.

உன்னைக் காப்பாற்ற எடுத்த முயற்சியிலிருந்து எதிலுமே வெற்றிபெற முடியவில்லையேம்மா. எனக்கு நம்பிக்கை குறைந்துகொண்டே போகிறதே. எனக்கே இப்படியென்றால் அப்பாவுக்கு? மெல்ல தலை உயர்த்தி அப்பாவை உற்று நோக்கினாள். மெலிதான குறட்டை வந்தது அவரிடமிருந்து. கடவுளே! உறக்கத்திலாவது நிம்மதி கிடைக்கிறதே!

தன்னையுமறந்து இவ்வாறு அயர்ந்திருந்தால் உண்டு. இல்லையென்றால், என்னால் எதுவும் முடியாதென்ற தீர்மானத்திற்கு வந்தபின் தன்னைத்தானே தேற்றிக் கொள்ளப் பழகிவிட்டாரோ என்று நினைத்த மறுகணமே கலவரமானாள்.

இந்த இரண்டு வருட காலங்களாக அம்மா இல்லாமல் எந்த அளவு அவர் வேதனையடைந்திருப்பாரென யூகிக்க மட்டுமே அவளால் முடிந்தது. அவர் எப்போது உறங்குகிறார், எப்போது சாப்பிடுகிறார், எவ்வாறு இயற்கையின் அவஸ்தைகளைப் போக்கிக்கொள்கிறார்? இவை எதுவுமே அவளால் அறிந்துகொள்ள முடியாத நிலை அவளுக்கு.

பொழுதும் புலப்படாத நேரத்தில் கண்விழித்து, அவசரமாக சமைத்து முடித்து மேஜையில் எடுத்து வைத்துவிட்டு பிளாஸ்கில் காப்பி ஊற்றிவிட்டு, தானும் குளித்து முடித்து கிளம்பும்போது தந்தை எழுந்தமர்வார். அப்போது பெரிதாக என்ன பேசிவிட முடியும்?

“முத்தம்மாளிடம் சொல்லிவிட்டு வர்றேன்பா” என்றவாறு கைப்பையைச் சுமந்துகொண்டு மனமில்லாமல் விடைபெற்று ஓட்டமும், நடையுமாக பேருந்துக்குள் புகுந்துகொள்வாள். அலுவலகத்துக்குள் சென்ற பிறகு,

உடலும், மனமும் போட்டி போட்டுக்கொண்டு வெவ்வேறு திசைகளில் செயல்பட்டுக் கொண்டிருக்கும். மாலை ஏழு மணிக்கு மீண்டும் வீட்டுக்குள் நுழைந்த மறுகணமே பரிதவிப்போடு அவளது கண்கள் தேடிப்பிடிப்பது அவரைத்தான். அப்போதுதான் சுவாசமே சீராக இயங்கும்.

ஆனால் இன்று அந்த சேகரைக் கண்டதிலிருந்து இதயம் சீரற்று இயங்கிக் கொண்டிருந்தது. பலவிதமான யோசனையோடு அடுக்களைக்குள் புகுந்து கொண்டாள்.

## பாகம் - 2

**(அன்று)**

தந்தையின் மறைவுக்குப் பிறகு இளைய மகன் வீரசுப்புரத்தினம் தனி மரமானான், அல்லது தனி மரமாக்கப்பட்டான். யாரால்? பெற்றோருக்குப் பின் பெற்றோராகத் தான் பாவிக்கும் அண்ணன், அண்ணியால்! வெறும் நடிப்புக்காகத் தேனாகப் பேசிய அவளது உதடுகள் இப்போது வெறுப்பை உமிழ்ந்தன. தான் பிறந்த வீட்டில், தனது மூத்த சகோதரன் எங்கோ ஓடிப்போன பிறகு, தாயும் மகளுமாய் ஏதோ வேலை பார்த்து அரை வயிற்றுக் கஞ்சியை மட்டுமே குடித்து ஏழ்மையில் வாழ்ந்து பழகிய அவளுக்கு, சுவர் பெயர்ந்து களிமண் பளிச்சிடும் ஓட்டைக் குடிசையில் வாழ்ந்த அவளுக்கு அந்த அரண்மனை வீடு சொர்க்கமாகத் தெரிய, அதைத் தன் வசப்படுத்திக்கொள்ள எண்ணியவள், ஏமாந்து போனதால் வில்லியாக மாறிப் போனாள்.

"தந்தை கட்டிய அம் மிகப்பெரிய வீடு, இரண்டு பிள்ளைகளுக்கும்தானே சொந்தம். ஆனால், முழுதாய் இளையவனுக்கே எப்படி அந்தக் கிழவன் கொடுக்கலாம்" என ஊர்ப் பெரியவர்களிடம் முறையிட்டாள். வீரநரசிம்மர் இருந்த வரையில் அவரே ஊர் நீதிபதியாக விளங்கினார். அவர் பேச்சுக்கு மறுபேச்சு கிடையாது. இன்று அவருக்குப்பின் அவரது குடும்பத்துப் பிரச்சினை இப்படி வீதிக்கு வந்தது குறித்து அனைவருக்குமே வருத்தம்தான். தந்தையைப் பறிகொடுத்த பின், அவரது நினைவாலேயே சுருண்டு மூலைக்குள் கிடக்கும் இளையவன், வீதியில் நடப்பதை அறிந்திடவில்லை. அண்ணியின் பொறாமை எதனால் எனத் தெரிந்திருந்தால் முன்வந்து அவற்றைக் கொடுத்திருப்பான். ஆனால் அதைப் பெறுவது மட்டுமே அவளது குறிக்கோளாக இருந்திருந்தால் நான்கு சுவருக்குள்ளேயே பேசியிருப்பாள். மாமனாரின் மீதிருக்கும் வஞ்சத்தை தீர்த்துக்கொள்ள அவர் மறைந்த பின்பும் அவரது பெயரைக் கேவலப்படுத்தி வீதியில் வீசினாள். தலையாட்டி பொம்மையாய் கணவன் நின்று கொண்டிருந்தான்.

"இதெல்லாம் பெரிய இடத்து சமாச்சாரம்பா. இதிலெல்லாம் தலையிடாதீங்க. இதைப்பற்றி பேசுமளவுக்கு நாம் ஒன்றும் பெரியவர்க்கு ஈடில்லை" என்று சிலரும், பெரியவர் வாழ்ந்த காலத்திலேயே அவர் மீது பொறாமை கொண்ட சிலர் அண்ணிக்காக வாதாடவும் செய்தனர். இறுதியில் பெரியவர் செய்தது சரியெனத் தீர்ப்பளிக்கப்பட்டது.

"பெரியவனுக்கு எவ்வளவோ கொடுத்தாச்சுப்பா. சொத்தைப் பிரிச்சுக் கொடுத்தும் அதை காப்பாத்திக்க முடியாம, மறுபடியும் கேட்டும் மறுப்பு சொல்லாமல்

கொடுத்தாச்சு. இளசுக்கு எதுவும் கொடுக்கலையய்யா. பாவம் கல்யாணம் வேறு ஆகலை. இந்த வீடு பெரியவரோட சுய சம்பாத்தியம் வேறு. அதனால அதை மீற முடியாது. அதனால ஞாயப்படி இளசுக்குத்தான் அந்த வீடு" எனத் தீர்ப்பு வழங்கப்பட்டது.

அண்ணி கத்தினாள். தீர்ப்பு வழங்கியவர்களைச் சாடிப் பேசினாள்.

நண்பர்களின் மூலம் விஷயமறிந்த இளையவன் ஓடி வந்தான். அண்ணியின் கரத்தைப் பிடித்து 'வீட்டுக்குள் பேசிக்கொள்வோம்' எனக் கெஞ்சினான்.

பலமாக அவனது பிடியை உதறினாள். 'தந்தையைப் பறிகொடுத்த வேதனையோடு இந்த வேதனை வேறா?' அவன் குமைந்தான்.

"அண்ணி, என்னை உங்க பிள்ளையா நினைச்சுக்கங்க அண்ணி..." கலங்கிப்போய் ஆதரவற்றவனாய் பேசினான்.

குதிரைவண்டி சலங்கைச் சத்தத்தோடு வீட்டின் முன் நின்றது.

வேலைக்காரியின் உதவியோடு தனது உடமைகளை எடுத்துக்கொண்டு வண்டியில் ஏற்றினான்.

வேடிக்கை பார்த்துக் கொண்டிருக்கும் ஊர் மக்கள் வாயடைத்துப் போய் நின்றனர்.

அண்ணியின் கால்களை இறுகப் பிடித்துக்கொண்டு கதறினான். வெடுக்கென முகத்தைத் திருப்பிக் கொண்டாள்.

"பெத்த தகப்பனே என் புருசனை மகனா நினைக்கலை. நீ யார் எனக்கு? போ... போ..." கால்களை உதறினாள்.

அவன் அண்ணியிடமிருந்து அண்ணனிடம் தாவினான்.

"அண்ணே!... உள்ளே வாண்ணே. நீதானேண்ணே எனக்கு இனி எல்லாமே. இப்படி பாதியிலேயே விட்டுட்டு போறயேண்ணே!" - குரல் நடுங்க குழந்தைபோல அவன் அழுவதைக் கண்டு ஊரே கலங்கிப் போனது. அவனது தொண்டை வறண்டு போக பெரியவனின் இதயமும் வறண்டு போனது.

"சொத்தே வேணாம்ணே. நீதானேண்ணே என் சொத்து. நாம பிரிஞ்சுடக்கூடாதுண்ணே. இந்த சொத்துதான் நம்மை பிரிக்குதுன்னா, இதை நீயே எடுத்துக்கோண்ணே."

"இந்தா, நீ என்ன பிச்சையா போடற..." நெருப்பை உமிழ்ந்த அண்ணி, வண்டியை நோக்கி நடந்தாள். செய்வதறியாது தன் பின்னே வராமல் தம்பியின் பிடிக்குள் சிலையாய் நிற்கும் கணவன் பக்கம் திரும்பினாள்.

அவளது மூளை பலவாறாக யோசித்தது. எங்கே தம்பியோடு சேர்ந்துவிடுவாரோ என்ற பதைப்பில் கத்தினாள்.

"என்ன நிக்கறீங்க. இன்னிக்கு உள்ளே கூப்பிடுவான். நாளைக்கு பொண்டாட்டி பேச்சைக் கேட்டு விரட்டிவிடுவான். இது தேவைதானா நமக்கு?"

தம்பியின் கூக்குரலில் இளகிக் கொண்டிருக்கும் கணவனின் மனதை சுருக்கென குத்திவிட்டாள்.

மௌனமாக தம்பியின் பிடியை விலக்கிவிட்டான். அவன் வீதியே நடுங்க தன்னையுமறந்து துடித்துக் கத்தும் காட்சியைக் கண்டவர்களின் நெஞ்சமெல்லாம் உருகிப்போயின.

பணமே வாழ்க்கையாய் வாழ்ந்த பெரியவனுக்கு, அந்த சொத்து கிடைக்காதது குறித்து வருத்தமேயிருந்ததால் மனைவியின் பேச்சு ஞாயமாகப்பட சகோதரப் பாசம் தோற்றுப்போய் மனைவியின் பின்னே நடந்தான்.

அவளோ அதோடு மட்டும் செல்லவில்லை. 'நிறைமாத கர்ப்பிணியை ஏமாற்றிய பாவம் சும்மா விடாது' என மண்ணை வாரி அந்த வீட்டின் முன்பு இறைத்து வண்டியில் ஏறியமர்ந்தாள்.

அண்ணியின் செயலால் துடித்துப்போய் சிலையாய் நின்றான் இளையவன்.

## பாகம் - 3

**(இன்று)**

**ப**லத்த சிரிப்புச் சத்தம் கேட்டு கண்விழித்தார் சுப்புரத்தினம். சிரமப்பட்டு எழுந்தமர்ந்தவர் தனக்கு நேரெதிரே அடுக்களையினுள்ளிருந்து மகளின் சிரிப்புச் சத்தம் கேட்டபோது, தன் செவிகளைத் தீட்டியவாறு யாரிடம் பேசுகிறாளென ஆராய்ந்தார். அடுத்தடுத்து அவளது உரையாடலைக் கேட்டபோது, அவள் போனில் பேசுவது புலப்பட்டது. ஆனால் யாரிடம்? அவர் புருவங்கள் சுழித்து யோசிக்கலானார். அதற்கு அவசியமே இல்லாததுபோல் அவளே 'சார்' என

அழைத்ததும் 'பார்த்திபன்' எனத் தீர்மானித்தார். தன் மகளை இப்படி பேசிச் சிரித்தவாறு தான் கண்ட காலமெல்லாம் மலையேறி விட்டதோ எனக் கண்ணீர் வடித்திருக்கிறார்.

'அம்மா! தாயே! என் மகளா சிரித்துப் பேசுகிறாள்?' - மகிழ்ந்தார்.

சுருக்கென முள்ளாய்க் குத்தியது ஒரு ஓரத்தில். தான் சுயநலக்காரனாய் மாறிவிட்டதாய் எண்ணி மனம் நொந்தார். கண்ணுக்கு முன்னே நெடுநெடுவென வளர்ந்து நிற்கும் பெண்ணுக்கு வழி காணாமல் தன் சுயகௌரவமோ, ஆசையோ அல்லது சுயநலமோதான் தனக்கு இப்போதெல்லாம் பெரிதாகிவிட்டதோ என நினைத்தபோது அக்குற்றவுணர்வால் உதடுகள் துடிக்க தலைகவிழ்ந்தார். தன் மகளுக்காக ஒரு தகப்பனாய் தான் எவ்விதத்திலும் அவளை கரைசேர்க்கவோ, அவள் வாழ்க்கைக்கு வழிகாட்டவோ முடியாத முடவனாய் மூலையில் முடங்கிக் கிடக்கும் தன் நிலையை எண்ணி கண் கலங்கினார்.

சற்று நேரத்தில் அடுக்களையினுளிருந்து பேசி முடித்து அறைக்குள் வந்தவள், அமர்ந்திருக்கும் தந்தையைப் பார்த்து, "என்னப்பா, எழுந்திட்டீங்களா?" என்றாள். அவள் மகிழ்ந்து பேசியதன் தாக்கம் அவள் முகத்திலே இன்னும் தெரிந்தது.

"காப்பி தரட்டுமாப்பா?"

வேண்டாமென்றார் யோசனையோடு. அவள் யாரிடம் பேசினாளென்று தெரியும். என்ன பேசினாள்? எதற்கு சிரித்தாள்? என்று ஆராய்ந்தவாறு அமர்ந்திருந்தார்.

சொல்லக்கூடிய விஷயமாக இருந்தால் சொல்லி யிருப்பாளே! அப்படியென்றால் சொல்லக்கூடாத விஷயமென்று உள்ளதா?

தந்தையின் முகத்தில் வினாக்குறி தெரிந்ததை எப்படியோ கண்டுணர்ந்தவள், மேற்கொண்டு அவரை யோசிக்கவிடாமல், "பார்த்திபன் சார் பேசினார்பா" என்றாள் அவரை தீர்க்கமாக நோக்கியவாறு.

என்ன? தன் மனவோட்டத்தைப் புரிந்து கொண்டாளா?...

மெல்ல தலையசைத்தார் 'ம்' என்று!

அவருக்கு பெண் பார்க்கும் படலம் நடந்து கொண்டிருக்கிறதாம். அதன் பொருட்டு அவருக்கும், அவர் அம்மாவுக்கும் நடந்த பேச்சுவார்த்தைகளை வேடிக்கையாகச் சொன்னார்.

தந்தை மகளை உற்று நோக்கினார். களங்கமற்ற அம்முகத்தை மௌனமாகவே சில நொடிகள் பார்த்த பிறகு மெல்ல விழிகளைத் தாழ்த்தினார்.

"அப்பா...! நான் சந்தைக்கு போய்ட்டு வர்றேன்பா."

"வேண்டாமேமா. இருப்பதை வெச்சு ஏதாவது சமைத்தால் போதுமே."

"உங்க உடல் ரொம்ப பலவீனமா இருக்கு. நான் வேலைக்கு போயிடறதால நீங்க சரியாக சாப்பிடுவதில்லை. காய்கறி சூப் குடிக்கணும் நீங்க!" சொல்லிக்கொண்டே தொலைக்காட்சிப் பெட்டிக்கு உயிர் கொடுத்தாள். "நீங்க பாத்துட்டிருங்கப்பா. நான் சீக்கிரம் வந்துடறேன்." சொல்லிக்கொண்டே கிளம்பினாள்.

ஓட்டமும் நடையுமாகவே தனது வாழ்க்கையை கடந்து கொண்டிருக்கும் அருமை மகளுக்காக மனம் அழுதது. அவள் யாரிடமாவது சிரித்துப் பேசி மகிழட்டுமென்று தான் எத்தனையோ முறை நினைத்ததுண்டு. அப்படியிருக்க அவள் இன்று இவ்விதம் பேசியது கேட்டு மகிழாமல் ஏன் மனம் அல்லாடியது என்று அவருக்கே புரியவில்லை. மனைவி கலைவாணி இருந்தவரையிலும், தன் மகளுக்காக ஏதேனும் செய்ய வேண்டுமென புலம்பித் தவித்துக் கொண்டேயிருப்பாள். ஆனால் இப்போது, பருவம் கடந்து கொண்டிருக்கும் மகளை அடிக்கடி தன்னால் ஞாபகத்தில் வைத்துக்கொள்ள முடிவதில்லை. தானே ஒரு இலட்சியத்தை எதிர்நோக்கி காத்திருக்கும் இவ்வேளையில் தன் மகளின் கடமை பெரிதாக கண்ணுக்குத் தெரியாமலே போய்விட்டதோ. 'அம்மா...!' மனம் புலம்ப ஆரம்பித்தது.

'பெண் பார்க்கும் படலம் நடந்து கொண்டிருக்கிறதாம்' என்று யதார்த்தமாக அவள் சொன்னவிதம்தான் அவர் மனதை நோகடித்தது. அதைச் சொல்லும்போது அவளுக்குள் எந்த உணர்வுமே இல்லையா? அல்லது வெளிக்காட்டாமல் உள்ளுக்குள்ளே அடைத்து வைத்து மனம் நொந்து கொண்டிருக்கிறாளா? அல்லது தன் வாழ்க்கையில் இனி எந்த சுவாரஸ்யமுமே இருக்காதென தீர்மானித்து விரக்தியடைந்து விட்டாளோ?

மனம் சோர்வடைய மீண்டும் படுத்துக் கொண்டார்.

'என்னை மன்னித்துவிடம்மா. உன் வாழ்க்கையை நான் பாழாக்கி விட்டேனம்மா...' கண்ணீர் தலையணையை நனைத்தது.

கணப்பொழுதில், 'பெண் பார்க்கும் படலம்' என்ற வார்த்தை செவியில் மீண்டும் எதிரொலித்தது.

பார்த்திபனைப் பற்றி அவள் நிறைய சொல்லியிருக்கிறாள். மனம் ஒரு கணம் பார்த்திபனோடு தன் மகளை முடிச்சிட்டுப் பார்த்தது.

ஒருமுறை வீட்டிற்கு வந்திருக்கிறான். அப்போது அவர் மனத்தில் நீங்காத இடத்தைப் பிடித்திருந்தான். மரியாதையோடு பேசிய விதமும், தான் ஓர் உயர்ந்த பதவியில் இருப்பது குறித்தோ, அல்லது தனது வசதி குறித்தோ கர்வமில்லாதவன் என்பதை ,அவனது ஒவ்வொரு வார்த்தையிலும் கண்டுணர்ந்தார். அன்றிலிருந்து தன் மகள் அவனோடு தொலைபேசியில் பேசும்போதும், அலுவலகத்தில் அவனோடு நடந்த சுவாரஸ்யமான சம்பவத்தை தன்னிடம் மகள் சொல்லும்போதும் சிறியதாய் ஓர் எதிர்பார்ப்பு குடிகொண்டிருந்தது. அதிலும் அவருக்கு பெண் பார்க்கும் படலம் என்றபோது அது ஆசையாக மாறியிருந்தது.

இவள் வயதுப் பெண்களெல்லாம் இடையிலும், வயிற்றிலும் குழந்தையை சுமந்துகொண்டு தன் வீட்டைக் கடந்து செல்வதைக் காணும்போதெல்லாம் மனம் நொந்து போவார். ஆனால் சம்யுக்தாவோ தன் தந்தைக்காக மட்டுமே மனம் நொந்தாள்.

ஒரு வழியாக மனத்தை ஒருநிலைப்படுத்திக் கொண்டு, தொலைக்காட்சியில் விழிகளைப் பதிக்கலானார்.

★ ★ ★

**சி**ந்தாமணி துணிகளைக் காயவைத்துக் கொண்டிருந்தாள். என்றைக்குமே தன் தாயின் முகத்தில் இவ்வளவு சந்தோஷத்தைக் கண்டதில்லை தாட்சாயிணி. சிடுசிடுவென்ற முகமும், கடுகடுவென்ற வார்த்தையுமாய்

கொட்டித் தீர்ப்பாள் தாய். அதிகமான எதிர்பார்ப்பு. அதனால் ஏமாற்றம். அதைத் தாங்க முடியாமல் எந்நேரமும் புலம்பல், வயிற்றெரிச்சல். தனக்கு விவரம் தெரிந்ததிலிருந்தே சிந்தாமணி இப்படித்தான். ஆனால் இன்று என்ன ஆயிற்று அம்மாவுக்கு! என யோசித்தவாறு கல்லூரிக்குப் புறப்படலானாள். அண்ணன் ராஜாவோ சிடுசிடுவென முகத்தை வைத்திருந்தான்.

பொதுவாக அவனது வேலை தங்கையை, பத்து மைல் தொலைவிலுள்ள கல்லூரியில் கொண்டுபோய் விடுவதும், அழைத்து வருவதும்தான். படிப்பு ஏறாமல் போனதால் தந்தையோடு சேர்ந்து விவசாயத்தைக் கவனித்துக் கொள்வதுண்டு. தங்கையை அழைத்துக் கொண்டு போய் விடுவதென்றால் அவனுக்குக் கோபம்தான் வரும். அவளை அதிகாலையிலிருந்தே வசைபாட ஆரம்பிப்பான். தன் தூக்கம் கலைகிறதாம். அவளது ஒவ்வொரு அசைவினையும் வஞ்சிப்பான். ஆனால் இன்று தன் தாய் மீது திரும்பியிருந்தான்

இப்படி ஒரு பைத்தியம் எனக்கு அம்மாவா பொறந்திருக்கு... அனலாய் பார்வை கொதித்தது.

சிந்தாமணி எதையுமே காதில் போட்டுக் கொள்ளவில்லை. துணிகளை காயப்போட்டுவிட்டு, மகனது கோபத்தைக் கண்டுகொள்ளாமல் மகளுக்கு இட்லி எடுத்து வைத்தாள்.

“இத்தனை காலம் கழித்து இப்ப திடீர்னு அண்ணன் மகன் எங்கிருந்து முளைத்து வந்தான். எவனோ உன்னை நல்லா ஏமாத்தறான். அது தெரியாம நீ ஆனந்தத்தில் மிதக்கிறாய்!” - தொண்டை கிழிய கத்தினான்.

"உன் அண்ணனே பொறுப்புக்கு பயந்து ஓடிப்போன மனுசன். அந்தாளுக்கு பொறந்தது எப்படியிருக்கும். என்ன நோக்கமாயிருக்கும்?"

"மண்ணாங்கட்டி!" - இடியாய் வார்த்தையை இறக்கினாள். "என்னிடம் ஏக்கர் கணக்கில் சொத்து இருக்கு பாரு. அதை ஏமாத்தி வாங்க வர்றான். காரை உதிரும் வீடு. அதுகூட சொந்தமில்லை உன் அப்பனுக்கு."

"இராத்திரியோட ராத்திரியா வந்து எவனோ விசாரிக்கிறான். நீ என்னடான்னா ஒப்பாரி பாடற."

"எங்கேயோ என் அண்ணன் இருக்கார்னு நினைச்சுக்கிட்டிருந்தேன். ஆனால் அவர் உயிரோட இல்லைனு தெரிஞ்சபின் வேதனை இருக்காதா? அவரோட பையனையாவது பாக்கறோமேனு கொஞ்சம் சந்தோசப்பட்டேன். அது பொறுக்கலையா உனக்கு."

"நீ மகன்னுதானே சொல்ற. இதே மகள்னு சொல்லியிருந்தாய்னா இப்படியா அண்ணன் பேசும்?" - அண்ணனைப் பார்த்து கண்களைச் சிமிட்டிக் கொண்டே இவ்விதம் சொல்ல அவள் தலையில் குட்டினான்.

பதிலுக்கு அவனைக் குட்ட எழுந்தபோது கண்களிலே ஒருவித பயத்தோடு, "அப்புறம் இவளை கூட்டிட்டு போகமாட்டேன் ஆமா..." விரல் காட்டி எச்சரித்துவிட்டு பைக் நோக்கி விரைந்தான்.

"அந்த பயம் இருக்கட்டும் தம்பி" - கர்வத்தோடு புத்தகங்களை எடுத்துக்கொண்டு, பைக்கில் ஏறியமர்ந்தவள் கையிலிருந்த புத்தகங்களை ஒன்றுசேர்த்து அவனது பின் தலையில் அடித்துவிட்டு, தான் பழிவாங்கிய திருப்தியோடு தாயிடம் விடைபெற்றாள்.

தாட்சாயிணியின் செயலால் கரைப்பற்கள் தெரிய சிரித்தவள், மகளை கண் மறையும்வரை பார்த்துக் கொண்டிருந்தபோது யோசனை உருவானது.

வெளிநாட்டிலிருந்து அண்ணன் மகன் வரப்போகிறான். நிச்சயமாக அவன் வசதி படைத்தவனாகத்தான் இருப்பான். தாயோடு சண்டையிட்டு ஓடிப்போன அண்ணன் எங்கே எனத் தெரியாமல் அல்லாடியபோது ஐந்தாறு வருடங்கள் கழித்து, உறவினர் ஒருவர் மூலம் சிங்கப்பூருக்குச் சென்றவன் அங்கேயே ஒரு பெண்ணை மணமுடித்துக் கொண்டதாக அறிந்தபோது எல்லோருமே திடுக்கிட்டனர்.

அப்போது இவளுக்கும் திருமணமாகியிருந்ததால், எங்கேயோ அண்ணன் நல்லாயிருக்கட்டும் என்று நினைத்ததுதான் உண்மை. ஆனால், இத்தனை காலங்களுக்குப் பிறகு நேற்று வீடு தேடி வந்து விசாரித்து, தான் அண்ணன் மகனின் நண்பன் என்றும், சொந்த வேலைக்காக இந்தியா வந்ததாகவும், அவளது அண்ணன் இரண்டு மூன்று மாதங்களுக்கு முன்புதான் இயற்கை எய்தியதாகவும் சொன்னபோது நம்ப முடியாமல் சிலையானாள். எனினும் சம்பந்தமே இல்லாமல் போன அண்ணன் உறவுக்காக அவள் வருந்தவுமில்லை, ஏங்கவுமில்லை. மாறாக, பணம் படைத்த அண்ணன் மகன் வரவுக்காகவே ஏங்கினாள். அடிப்படையிலேயே பணத்தாசை குணம் கொண்டவள் மேலும், தீவிரமாக அவ்வாசையை வளர்க்கலானாள். தன் உடன்பிறந்த சகோதரன் மகன் என்ற பாசம் அவளுக்கு இரண்டாம் பட்சமாகவே இருந்தது. அவன் வசதியற்றவனாக இருந்திருந்தால் இந்த அளவிற்கு அவன் வருகையில் ஆர்வம் இருந்திருக்காது என்பதே உண்மை.

தன் குடும்பத்தை விட்டுப் பிரிந்து சென்ற அண்ணனுக்காக, ஒரு நாளும் வருந்தியதில்லை அவள். மாறாக தான் மணமுடிக்கத் தயாராகியிருக்கும் இவ்வேளையில் தலைமகன் பொறுப்பின்றி பிரிந்து சென்றதற்காக கோபப்பட்டாள். தான் சீமந்தருக்கு வாழ்க்கைப்பட வேண்டுமென கனவு கண்டதாலோ என்னவோ, அவ்வாறே நிகழ்ந்தும்கூட பொறுப்பற்ற கணவனால், தான் பேராசை கொண்ட சொத்து தனக்கு கிடைக்காமல் போனதை தாங்கிக்கொள்ள முடியாமல் ஆதங்கப்பட்டாள். அவ்வாதங்கமே நாளடைவில் அவளை ஒரு வில்லியாக வளர்த்தது. இந்தச் சூழ்நிலையில்தான் அண்ணன் மகனென செல்வச்சீமான் - உறவு ஒட்டி வருவதை எண்ணி ஆனந்தம் கொண்டாள். பைக்கில் அமர்ந்து செல்லும் மகளை நினைத்த மறுகணமே அவளை கோடீஸ்வரியாகக் கற்பனையில் வடித்துப் பார்த்து கற்பனையிலேயே மகளை வழித்து நெட்டி முறித்தாள்.

தன் கறைப்பற்கள் தெரிய சிரித்தாள். அவளது விழிகள் அத்தனை ஆனந்தத்திலும், எதற்காகவோ வில்லத்தனமாக வெறித்தன. யாரையோ எண்ணி அக்கணம் கறுவிக்கொண்டபோது அவள் ஒரு கைதேர்ந்த வில்லியாகக் காட்சியளித்தாள். நிமிடத்தில், ஆசையும், கோபமும் மாறி மாறி அவளது விழிகளில் தெரிந்தபோது அத்தோற்றத்தைக் காணச் சகிக்காமல், அதுவரை அங்கமர்ந்திருந்த மணிரத்னம் அமைதியாய் வீட்டை விட்டு வெளியேறினார்.

★ ★ ★

சுப்புரத்தினத்தின் கரம் திருமண அழைப்பிதழை ஏக்கத்தோடு தடவிப் பார்த்தது. நிமிடத்துக்கொருமுறை ஏக்கப் பெருமூச்சு வெளிவந்தது. வீடு பெருக்கிக்

கொண்டிருந்த முத்தம்மாளின் விழிகள் அவ்வப்போது அவரை நோக்கி மீண்டன.

"ஏங்கய்யா, மேசை மேலிருந்த சாப்பாடு அப்படியே இருக்கு. சாப்பிடலையா?"

பதிலில்லை.

சத்தமான பெருமூச்சோடு, "அந்தப் பாப்பா இன்னும் கொஞ்ச நேரத்தில் போன் போட்டு கேட்கப்போவுது. எனக்கு ஒன்றும் தெரியாதுப்பா..." - ஒரு சக்தியற்ற மிரட்டல்!

அவளது வார்த்தைகள் அவரது செவிகளுக்குள் நுழையவில்லையா? அல்லது பொருட்படுத்தவில்லையா என்று தெரியவில்லை. மீண்டுமொரு ஏக்கப் பெருமூச்சு வெளிவந்தது. அடிவயிற்றிலிருந்து கொதித்தெழுந்த குமுறல்களை அடக்கி முத்தம்மாளின் செவிகளுக்கெட்டா வண்ணம் சன்னமான குரலில் - 'நான் ஒரு பாவி...' என்று அழுத்தி உச்சரித்து உதடுகளின் நடுக்கத்தோடு கண்ணீரை வெளியிட்டார்.

குப்பையை வெளியே கொட்டிவிட்டு நுழைந்த முத்தம்மாள் புரிந்தும், புரியாமலும் குழப்பத்தோடு அவரை நோக்கினாள்.

தனது சிறு வயதிலிருந்தே இவரது குடும்பத்தில் வேலைக்காரியாக நுழைந்தவள். இவர் பரம்பரை யறிந்தவள். அவள் அக்குடும்பத்தின் நலம் விரும்பியாக இருந்ததால்தானோ என்னவோ இன்று தன் மகன் சுயமாக சம்பாத்தியம் செய்யும்போதும் உட்கார்ந்து அனுபவிக்காமல், இவரின் நிலை கண்டு, இன்னும் முடிந்த அளவு வேலைகளைச் செய்து கொண்டிருக்கிறாள்.

இத்தனை காலங்களில் சுப்புரத்தினம் வாழ்க்கையில் நடந்த நிகழ்வுகள் அத்தனையும், உடனிருந்து கண்டவள், அவருக்கும், அவர் மனைவிக்கும் தக்க ஆறுதலாக இருந்தாள். இன்று அவரின் நிலையை உணர்ந்தவள், எதற்காக என்று எளிதாகத் தீர்மானிக்க முடிந்ததால், அந்நிலையிலிருந்து அவரை இயல்பு நிலைக்கு மாற்ற முயற்சித்தாள்.

"பாப்பா போன் பண்ணிடும்யா. சாப்பிடுங்க." தொலைக்காட்சிப் பெட்டிக்கு உயிர் கொடுத்தவள் அவர் கையிலிருந்த சம்யுக்தாவின் தோழியின் திருமணப் பத்திரிகையை வாங்கிக்கொண்டு சிறிய சாப்பாட்டு நாற்காலியை அவர் கட்டிலுக்கருகே இழுத்து சாப்பிட வசதியாக அமர்த்தினாள்.

★ ★ ★

***சீ***ங்கப்பூர் விமானம் இன்னும் சற்று நேரத்தில் சென்னை நோக்கி பயணப்பட ஆயத்தமாகிக் கொண்டிருக்கிறது. தனது இருக்கையில் அமர்ந்த பிறகு விழிகளைச் சுழலவிட்டான் ஸ்ரீராம். அவனது உதடுகள் புன்னகைத்தன. விமானத்திற்குள்ளே இருக்கும் அனைவருமே இந்தியர்கள். புது அனுபவம். தன் வாழ்க்கையில் எதற்கு இனி இடமில்லை என நினைத்தானோ அது நடந்துவிட்டது. என்ன ஒரு வருத்தம் தரும் விஷயமென்றால் - தன் பெற்றோரோடு இந்தியா சென்று தன் தந்தை தனது பந்துக்களை அறிமுகப்படுத்தி அவரும் மகிழ்ந்து, எல்லோரும் மகிழ்ந்து... ஊம்... அடிவயிற்றிலிருந்து நீண்டதான ஏக்கப் பெருமூச்சு வெளிவந்தது அவனிடமிருந்து.

தன் தந்தை தன் வாழ்க்கையின் அத்தியாயத்தை நிறைவு செய்து விடாமலேயே சென்றுவிட்டதாகக் கருதினான்.

மிகப்பெரிய தொழிலதிபர் தன் தந்தை. நான்கு, ஐந்து கப்பல்களுக்குச் சொந்தக்காரர். மில்லியன் டாலர் மதிப்புள்ள மூன்று, நான்கு வீடுகள் என வளர்ந்துவிட்ட தொழிலதிபரின் ஒரே மகனாக இருந்தும், பெற்றோரின் அன்பு அளவாகவேதான் கிடைத்தது. இவ்வளவு அந்தஸ்திற்கும் ஒரே காரணம் தாய் சகுந்தலாதேவியே! தனது தந்தைக்கு ஒரே மகள் அவள். இவர் மீது காதல் வயப்பட்டு, தனது கணவர் என்ற கௌரவமும், சொத்துக்கு பாதுகாப்பாளர் என்ற பதவியும் கொடுத்தார். கல்வித்தகுதி அதிகமாக இல்லாத அவர், தன் மனைவியோடு சேர்ந்து தொழில் நுணுக்கங்களைக் கற்றுத் தேர்ந்தார். அதன் பிறகு இருவருமே சேர்ந்து தொழிலைப் பெருக்கினர். ஏதோ ஒரு சூழலில், யார் மூலமோ வந்து சேர்ந்து கூலிக்கு வேலைபார்த்த அவருக்கு, மிகப்பெரிய எதிர்காலம் உண்டென கனவில்கூட நினைத்ததில்லை. தனது எடுப்பான தோற்றத்தால் மட்டுமே சகுந்தலாவைக் கவர்ந்தவருக்கு பணத்தாசை ஒன்றும் இல்லாமல் இல்லை. பெற்றோர் மீதும், உடன்பிறந்தவள் மீதும் பாசம் கொண்டிருந்தால் எளிதில் விட்டுப் பிரிந்திருக்க முடியுமா? அடிப்படையிலேயே குடும்பப் பாசம் இல்லாதவர். தாய்க்கும் தனக்கும் ஏற்பட்ட மனஸ்தாபத்தால் அவர்களை மறந்தே போனார். அதிலும் இப்படி ஒரு வாழ்க்கை கிடைத்ததில் அவர் பிறந்த நாட்டையே மறந்தார்.

அவரின் மணவாழ்க்கை தித்தித்ததின் பலனாக அழகான ஆண் குழந்தை பிறந்தது. காலங்கள் மாறும்போது மனிதனின் விருப்பங்களும் மாறுவது இயற்கைதானே. தன்

மனைவியும் ஒரே மகளாயிருந்ததால் அந்த வழியிலும் உறவுகளின் பாலம் அமையவில்லை. மனைவியின் பிரிவுக்குப் பிறகு மெல்ல உறவுகளின் ஏக்கம் ஏற்பட்டது. நாளடைவில் தன் உடல் ஒத்துழைக்காது போகவே ஏற்பட்ட பயம் மகனுக்கு உறவுகளைப் புரியவைத்தது. உறவுகள் எத்தனை முக்கியத்துவம் வாய்ந்தவை. கீழே விழுமுன் தாங்கிப் பிடிக்கும் உறவுகளைத் தான் நினையாததால் உன்னை அநாதையாக விட்டு விட்டேனேடா என்று மகனின் கரம்பிடித்து கதறிய காட்சி இன்னும் கண்களைவிட்டு அகலவில்லை. அவரின் கடைசி வார்த்தை, எனக்கு ஒரு தங்கை இருக்கிறாள். உனக்கு அவள் தாயாக இருப்பாள் எனக் கூறிச் சென்றார்.

★ ★ ★

**ப**லத்த செருமலோடு அவனது சிந்தனையைக் கலைக்கும் விதமாக பெரியவர் ஒருவர் தனதிருக்கையைக் கண்டுகொண்ட வெற்றிக் களிப்போடு அமர்ந்து கொண்டார். அருகிலிருக்கும் ஸ்ரீராமைப் பார்த்து சிநேகமாக ஒரு புன்னகையை வீசினார். அவனது கம்பீரமான தோற்றமும், வசீகரமான அழகும் அவன் ஒரு சாதாரணமானவனாக இருக்க முடியாது என்ற வலுவான தீர்மானத்துக்குப்பின், அவர் வழியத் தானே தன்னை அறிமுகப்படுத்திக் கொண்டார். பதிலுக்கு இறுக்கமான புன்னகை மட்டுமே அவனிடமிருந்து கிடைக்க இவருக்கு ஏமாற்றம்தான். இருப்பினும் அவன் மீதான மதிப்பு இப்போதுதான் மேலும் அதிகமானது.

விமானம் பறக்க ஆரம்பித்திருந்தது. மிகத் தீவிரமான சிந்தனையுடன் ஜன்னலில் பார்வையைப் பதித்திருந்த வனைக் கலைக்க மனமில்லாமல் அமர்ந்திருந்தார்

பெரியவர். நல்லவேளையாக பணிப்பெண் குளிர் பானத்தோடு வந்தாள். தான் ஒன்றை எடுத்துக்கொண்டு "தம்பி..." என்றழைத்தார். சட்டெனத் திரும்பியவன், புன்னகையோடு நின்றுகொண்டிருந்த அப்பெண்ணிடம் வேண்டாமென ஆங்கிலத்தில் கூறிவிட்டுத் திரும்ப முயற்சித்தபோது, "தம்பீ... தமிழ் பேசுவீங்களா?" என்றார்.

"ம்..." என்றான்.

"சென்னையா?"

"ஆமாம்..."

"சிங்கப்பூர்லே வேலை பார்க்கறீங்களா?"

"இல்லை. நான் பிறந்து வளர்ந்தது சிங்கப்பூர். இப்பதான் முதல்முறையா சென்னை போறேன்."

"விசேஷமா?"

மறுகணமே சிரித்தவன் 'உறவுகளைத் தேடி...!' என்று சொல்ல வாயெடுத்தவன், "பிஸினஸ் சம்பந்தமா... போறேன்" என்றான்.

அவர் அமைதியானார்.

'நீங்க...?' முதன்முறையாக அவனிடமிருந்து கேள்வி வர வெகு விருப்பத்தோடு தன்னைப்பற்றிக் கூறினார். சிங்கப்பூரிலிருக்கும் தனது மகன் வீட்டுக்கு வந்துவிட்டு மீண்டும் சென்னை திரும்புகிறாராம்.

"தம்பிக்கு கல்யாணம் ஆயிடுச்சா?"

இல்லை என்றபோது சற்றே நிம்மதி பரவியது அவரது முகத்தில். அதன் பிறகு பட்டமேற்படிப்பை முடித்து விட்டுத் திருமணத்திற்காகக் காத்திருக்கும் தனது மகளைப் பற்றிக் கூறலானார்.

ஆரம்பத்தில் யதார்த்தமாகக் கேட்டுக் கொண்டிருந்த வனுக்கு பிறகுதான் மெல்லப் புரிந்தது.

"சிங்கப்பூரில் என் பையனும் இருப்பதால், என் பொண்ணையும் இங்கேயே கொடுத்துவிடலாம்னு வரன் பார்க்கிறேன். உங்க வீட்ல பெரியவங்க இருந்தா சொல்லுங்க, நான் கலந்து பேசறேன்."

"எனக்கு இந்த சாதி சம்பிரதாயத்துல நம்பிக்கை யில்லை." சிரிக்க முயன்றார்.

மிகப்பெரிய பொறுப்பை சுமந்து கொண்டிருக்கும் அப்பெரியவர் மீது அவனுக்கு அனுதாபம் ஏற்பட்டது. அவர்மீது அழுத்தமாக விழிகளைப் பதித்து, "மன்னிக்கணும் சார். கல்யாணத்தைப்பற்றி நான் இன்னும் யோசிக்கலை" என்று புன்னகைத்தவாறு இருக்கையில் சாய்ந்து கொண்டான்.

பெரியவர் சற்று ஏமாற்றத்தோடு, தானும் இருக்கையில் சாய்ந்து விழிகளை மூடிக்கொண்டார்.

★ ★ ★

**ப**ரணிலிருந்து வெகு சிரமப்பட்டு மகன் இறக்கிய டிரங்கு பெட்டியைத் தானும் கைத்தாங்கலாக பிடித்திறக்கினாள் சிந்தாமணி. பெட்டியை கீழே வைத்துவிட்டு மேல்மூச்சு, கீழ்மூச்சு வாங்கலானாள்.

“அவ்வளவுதானே?” கோபமும், எரிச்சலுமாக கேட்டான் ராஜா. தாட்சாயிணி தன் தமயனைப் பார்த்து சிரித்தவாறு, நாற்காலியில் அமர்ந்திருந்தாள்.

“ஏணியைவிட்டு இறங்கிடாதே... பொறு இதிலாவது இருக்கான்னு பார்த்திடறேன்.”

ஏற்கனவே இறக்கப்பட்டிருந்த இரண்டு பெட்டிகளை அவன் எரிச்சலோடு பார்த்தான்.

அவள் பெட்டியிலிருந்த தூசியைத் தட்டிவிட்டு ஆவலோடு திறந்தாள். துருஏறியிருந்த பெட்டி ஓசை யெழுப்பியது. நறநறவென பற்களைக் கடித்துக்கொண்டு வேறுபுறம் திரும்பிக்கொண்ட அண்ணனைப் பார்த்து பலமாக சிரித்தாள் தங்கை.

திடீரென தாயின் குரலொலியில் ஏணியிலிருந்து தடுமாறினான். வியர்த்துப் போயிருந்த அவளது முகத்தில் வெற்றிக் களிப்பு. கரத்திலிருக்கும் பரிசுக் கோப்பையை உயர்த்திக்காட்டி ஆனந்தப்படும் வெற்றியாளன்போல, தனது கையிலிருந்த கரையானரித்துப்போன புகைப் படத்தைக் காட்டியவாறு குதூகலித்தாள் சிந்தாமணி.

“ஆத்தா மகமாயி என்னைக் காப்பாத்திட்டா.”

தொல்லை விட்டதென ஏணியிலிருந்து வேகமாக இறங்கினான் சிந்தாமணி அப்புகைப்படத்தைப் பார்த்து கண்கலங்க முயற்சித்தாள்.

“இந்தா..! சும்மா அழற வேலையெல்லாம் வெச்சுக்கிட்ட தூக்கி எறிஞ்சிடுவேன் ஆமா...” மடக்கிக் கட்டியிருந்த லுங்கியை இறக்கி விட்டவாறு ஏணியை அப்புறப்படுத்தினான்.

அவளது விழிகள் கலங்கவே செய்தன. பாசமலர்களாய், தானும், தன் தமையனும் வீற்றிருக்கும் அத்தருணத்தை நினைவு கூர்ந்தபோது விழிகள் கலங்கின. தாயின் கலங்கிய விழிகளைக் கண்ட தாட்சாயிணி விரைந்துவந்து அப்படத்தைப் பிடுங்கிப் பார்த்தவள் கண்களை அகல விரித்து ஆச்சரியப்பட்டாள். பத்து வயது சிறுமியாய் தாயும், பதினேழு வயதையொட்டிய அவளது தமயனும் ஒரே சாயலில் இருந்தது கண்டு பிரமித்தாள்.

''அட! பரவாயில்லையே, இதுதான் உன் அண்ணனாம்மா? அண்ணே! வந்து பாரேன்'' - ஆர்வத்தோடு அழைத்தவளைப் பார்வையால் எரித்து விட்டு, "அதை நீயே பார்" என்றான்.

''அம்மா நீயாம்மா இது. என்னால நம்பவே முடியலை. இவ்வளவு ஒல்லியா அதுவும் இந்த சின்ன வயசிலேயே தாவணி போட்டிருக்கியேம்மா. ரொம்ப அழகுதான் போ." அண்ணனைப் பார்த்து கண்சிமிட்டிய வாறு கூற, சிந்தாமணியின் குரூர முகத்தில் சட்டென வெட்கமும் கூட வந்து போனதை கவனிக்கத் தவறவில்லை மகன். சட்டெனத் தலையில் அடித்துக்கொண்டு தொலைக்காட்சிக்கு உயிர் கொடுத்தான்.

"எனக்கு பத்து வயது அப்ப. எங்காத்தாவுக்கெல்லாம் அந்த வயசிலேயே கல்யாணம் நடந்துச்சாம். எனக்கு பதிமூன்று வயசுல கல்யாணம்.'' அவள் விட்டத்தை வெறித்தவண்ணம் இவ்வாறு கூற, உன் அண்ணன் எப்ப ஓடிப்போனார்மா.. என்று தாட்சாயிணி கேட்க நீண்ட பெருமூச்சோடு "ம்... இந்த படம்பிடிச்ச மறுநாள்தான் எங்கம்மாகிட்ட அடி வாங்கிட்டு ஓடிப்போச்சு. இந்த படத்தைக்கூட அது பார்க்கலையே...'' முந்தானையால் மூக்கை சிந்தினாள்.

"அய்யோ பாவம்..." என உச் சொட்டினாள் மகள்.

"எனக்கு ஒரு சந்தேகம். எனக்கு விவரம் தெரிஞ்ச நாளிலிருந்து உன் அண்ணனைத் திட்டிதான் பார்த்திருக்கேன். இப்ப இவ்வளவு அழறியேம்மா. அவ்வளவு பாசமும் மனசுக்குள்ளேயே இருந்துச்சோ..." கிண்டலாகக் கேட்டவளிடமிருந்து அப்படத்தைப் பிடுங்கினாள். "போடி போய் வேலையிருந்தா பாரு போ." அப்படத்தை மீண்டுமொருமுறை நோக்கினாள். கரையான் அரித்திருந்த கறுப்பு, வெள்ளை நிறப் புகைப்படத்தில், அரும்பு மீசையில் புன்சிரிப்போடு நிற்கும் தமையனையும், அருகே தோழியிடம் இரவல் வாங்கி அணிந்த பூப் போட்ட தாவணியும், மடக்கிக் கட்டியிருந்த இரட்டை சடையுமாய் தானும் நிற்பதை மாறி, மாறி நோக்கியவள் மங்கிப் போயிருந்த நினைவுகளைப் புதுப்பித்துக் கொண்டிருந்தாள்.

தீவிரமான சிந்தனைக்குப்பின் தன் முந்தானையை எடுத்து அழுத்தித் துடைத்தாள் அப்படத்தை!

"இதப் பாருங்க, இனிமேல் உன் அண்ணன்னு சொல்லாம மாமான்னு சொல்லணும் புரியுதா!" அவளது சுபாவம் இப்போது சட்டென வந்தமர்ந்து கொண்டது.

"எங்களுக்குத் தாய்மாமன் சீர் செஞ்சாரா என்ன? மாமானு கூப்பிடணுமாமே?" வெடுக்கென கேட்ட மகனிடம், "அவர் செஞ்சா என்ன? அவர் மகன் செஞ்சா என்ன? எல்லாம் ஒண்ணுதான்" சொல்லிக்கொண்டே ஈரத்துணியால் துடைத்து ஆணி அறைந்து மாட்டப் போனவள், உள்ளே நுழைந்த கணவரைப் பார்த்து சற்றே தயங்கினாள்.

அவரது மனம் எழுப்பிய கேள்வியை வெளியிடத் தயங்கினாலும், முகத்தைப் பார்த்து உணர்ந்தவள் - பார்வையால் அவரை சுட்டெரித்தாள்.

"என்னை எந்தக் கேள்வி கேட்கவும் யாருக்கும் தகுதியில்லை."

தன் கணவன் என்ன நினைப்பார் என யூகத்தின் அடிப்படையிலே இவ்விதம் கூறி வைத்தாள்.

வேகமாக ஆணியில் மாட்டிவிட்டு "இதபாருடா சீக்கிரம் கிளம்பற வழியைப் பாரு. பத்து மணிக்கெல்லாம் விமான நிலையத்தில் இருக்கணும்னு சொன்னேனே மறந்து போச்சா. போ.. நீ என்னடி வேடிக்கை பாக்கற. அட்டையில் ஆங்கிலத்தில் பேரெழுதிக் கொடுடி..." சொல்லிக்கொண்டே, அக்கம்பக்கத்தினரிடம் சிங்கப்பூரி லிருந்து அண்ணன் மகன் வரும் விஷயத்தைச் சொல்லக் கிளம்பினாள்.

மணிரத்னம் உள்ளத்தால் உருகிப் போனார். ஏனோ தெரியவில்லை. அவர் உள்ளத்திலே உறைந்து போயிருந்த பாசப்பனிக்கட்டி, மெல்ல உருக ஆரம்பித்தது.

★ ★ ★

ஒருவாறாக தனது நீண்ட கூந்தலை சிந்தனையோடு பின்னலிட்டு முடித்திருந்தாள் சம்யுக்தா. இன்று அதிகாலை எழுந்ததிலிருந்தே அவளது சிந்தனையும், செயல்களும் வெவ்வேறு திசைகளிலேயே திரிந்தன. காலை டிபனும், மதிய சாப்பாடும் செய்து மேஜை மீது வைத்துவிட்டு, தனக்கு மதிய சாப்பாடு டப்பாவில் எடுத்துக்கொண்டு தந்தையின் அருகே வந்தாள்.

ஆழ்ந்து உறங்குகிறார். அவர் முகத்தில் ஏதோ ஒரு நிம்மதி. உதடுகள் கூட புன்னகை காட்டுகிறதே ஓ! கனவேதும் காண்கிறாரோ! எழுப்ப மனமின்றி கிளம்பத் தயாரான நேரம் வாரிச்சுருட்டி எழுந்தமர்ந்தவர் மகளை அழைத்தார்.

அவரது முகத்தில் தூக்கத்தின் சுவடேதுமில்லை. எத்தனை ஒரு புத்துணர்வு! "கனவேதும் கண்டீங்களா அப்பா?"

"ஆமாம்மா..." அவ்ரது முகம் ஆனந்தத்தில் நிறைந் திருந்தது. வழக்கமாக அவர் காணும் கனவுகளிலிருந்து எழுந்தமர்ந்த காட்சி, அவள் பழகிப்போன ஒன்று. இம்முறை முற்றிலும் மாறுபட்ட கோலத்தைக் கண்டு இன்புற்றவளாய், "என்னப்பா கனவு?" என்றாள்.

அவரது விழிகள் எங்கோ பதிந்தன. உதடுகள் ஆனந்த நடுக்கத்திற்குள்ளாயின.

"வாழை மரமும், தோரணமுமாய் நம்ம வீடம்மா, மேளதாளமும், சீர்வரிசையும் அடேயப்பா. ஆனந்தம் சம்யு ஆனந்தம்!"

அக்காட்சியில் லயித்துப்போய் பேசிய தந்தையை கூர்ந்து நோக்கி, "கல்யாணமாப்பா?" என்றாள்.

தாழ்ந்த குரலில் அவள் கேட்ட விதம் அவரை அக்காட்சியிலிருந்து பிரித்தெடுத்தது. அவர் மகளை நோக்கி "உனக்குதானம்மா" என்றார்.

"எனக்கா?" புருவம் உயர்த்தி பரிதாபத்தோடு கேட்ட மகளிடம், ஏன் இருக்கக்கூடாதா? என மனம் எழுப்பிய கேள்வியை வெளியிடவில்லை. அவள் மெல்ல எழுந்து "நான் வர்றேன்பா" என்று நடக்கலானாள்.

அவரது கனவுக்காட்சிகள் யாவும் உருக்குலைந்து சிதறிப் போயின. அவளது வார்த்தைக்கு பதில் பேசத் துணிவற்றவனாகி விட்டேனே. இந்தக் கோழைத்தனத்திற்கு நான்தானே காரணம். கோடிட்டு வழிகாட்டுவதாக எண்ணி பள்ளம் தோண்டிய பாவியம்மா நான். அதுமட்டுமா? என் சுமைகளையெல்லாம் உன் தோளில் இறக்கிவிட்டு, உன்னை சுமைதாங்கியாக்கிவிட்ட கோழை நான். 'எனக்கா?' எனக் கேட்ட உன் விழிகளில்தான் எத்தனை பரிதாபம். கடவுளே! மங்கிய இந்த விழிகள் முழுவதுமாக சக்தியை இழந்து விட்டாலும் நிம்மதியடைவேன். அவளது பரிதாபக்கோலம் காட்டும் அம்முகத்தைக் காணாமலேயே இருந்து விடுவேன்.

உள்ளம் பொசுங்கியது. விழிகள் ஈரமாயின. கட்டிலை விட்டு எழ மனமில்லை. மீண்டும் படுத்துக் கொண்டார். இன்னும் கொஞ்ச நேரம்வரை அக்கனவு நீடித்திருக்கக் கூடாதா...? மனம் புலம்பியது. சிரமப்பட்டு விழிகளை மூடிக்கொண்டார்.

★ ★ ★

**பா**ர்த்திபனுக்கு மனம் ஒரு நிலையிலில்லை. ஒரே தவிப்பு. அத்தவிப்பும் அவனுக்கு சுகமாயிருந்தது. அலுவலகத்தில் கட்டுப்பாடான மேலாளரானாலும், தன் காதலை வெளிப்படுத்தும் தருணத்தில் சராசரியான வனாகிப் போன நிலை குறித்துத் தானே சிரித்துக் கொண்டான்.

சம்யுக்தா! நீ என் வாழ்வைப் பங்கிட்டுக் கொண்டா யானால் நான் பாக்கியவானாவேன்.

அறைக்கதவு அவசரமாகத் தட்டப்பட்டது. அலுவலக வேலைக்கு இன்னும் ஒரு மணிநேரம் உள்ள நிலையில்

இவ்வளவு சீக்கிரம் போன் செய்து வரச்சொன்னதற்கான காரணத்தை யோசித்து, யோசித்தே களைப்பாகிப்போய் வந்தாள் சம்யுக்தா.

"வாங்க சம்யு. உட்காருங்க." நா குழறாமல் பேச வேண்டும் என்பதில் அதிக கவனம் மேற்கொண்டான்.

அவளோ ஆச்சரியம் மேலோங்க, 'இப்படி சாதாரணமாக பேசுவதானால் இவ்வளவு அவசரமாக வரச்சொல்ல அவசியமேன்?' என யோசித்தவாறே அமர்ந்தாள்.

"அப்பா நல்லாயிருக்காங்களா சம்யு?" இவ்விதமாக ஆரம்பித்தபோது, அவள் மேலும் குழப்பமடைந்தாள். அவளது நிலை உணர்ந்தவன், "உங்களை அவசரமா வரச்சொன்னது அலுவலக சம்பந்தமா இல்லை. என் குடும்ப விஷயத்தை உன்னிடம் பகிர்ந்துக்கலாம்னு."

"...?"

அவன் நாற்காலியிலிருந்து எழுந்து சன்னலோரமாக நின்றான்.

உதடுகளை ஈரப்படுத்திக்கொண்டு, விட்டத்தை ஒரு முறை பார்த்தவன், நீண்டதான மூச்சுக்காற்றை வெளியிட்டபின் ஆரம்பித்தான்.

"சுற்றி வளைத்துப் பேச விரும்பலை சம்யு. உன்னை எனக்கு பிடிச்சிருக்கு. உன்னை கல்யாணம் பண்ணிக்க ஆசைப்படறேன். உன் சம்மதம் கிடைத்தபின் அம்மாவை உன் அப்பாவிடம் கலந்து பேசச் சொல்லலாம்னு..."

"சா... ர்..." அதிர்ச்சியோடு எழுந்தவள் பதில் பேசமுடியாமல் திணறினாள்.

"உடனே முடிவு சொல்ல அவசியமில்லை. யோசித்து ஆனால் நல்ல முடிவா சொன்னால் சந்தோசப்படுவேன்."

"அவசியமில்லை சார். யோசிக்க அவசியமில்லை." அவளது உறுதியான பதிலால் உடைந்து போனான்.

அவள் தீர்மானமான குரலோடு, "என்னை மன்னிச்சிடுங்க சார். எனக்கு கல்யாணம் பண்ணும் எண்ணம் சிறிதுமில்லை" என்றவள், "இதுதான் விஷயம்னா இதுபற்றி பேச இனி ஒன்றுமில்லை சார். நான் என் இருப்பிடத்துக்கு போறேன் சார்."

திரும்ப முயற்சித்தவளைத் தடுத்தான்.

"இவ்வளவு தீர்மானமா பேசுகிறாயானால் வலுவான காரணம் நிச்சயமா இருக்கணும். தெரிஞ்சுக்கலாமா?"

அவள் மௌனம் சாதித்தாள்.

"எந்த உரிமையில் எனது குடும்ப விஷயங்களை உன்னிடம் பகிர்ந்து கொண்டேனோ அதே உரிமையில் கேட்கிறேன்."

கண்களை மூடிக்கொண்டு சட்டெனத் திரும்பியவள் பலத்த குரலில் "வேண்டாம் சார் வேண்டாம்..." அவசரமாக மறுத்தாள். "சில விஷயங்களை வெளியிடாததே நல்லது. இனி உங்களது விஷயங்களை என்னிடம் பகிர்ந்து கொள்ளவும் வேண்டாம்."

"சம்யு தயவுசெய்து அப்படி சொல்லாதே. உன் குடும்பச் சூழலே இதற்குக் காரணமென்பது உண்மை யானால் அதுபற்றி நீ கவலைப்பட வேண்டாம்."

"சார் தயவு செய்து இனி இதுபற்றி பேச வேண்டாம். உங்களைப் பற்றி எனக்குத் தெரியும். உங்க குணத்துக்கு நிச்சயம் தகுந்த பெண் கிடைப்பாள். என்னை மன்னிச்சிடுங்க சார்."

மேற்கொண்டு அவன் பேசுவதற்குள் அவ்விடம் விட்டு நகர்ந்தாள்.

'பார்த்திபன் கனவு' மெய்யாகுமா? பொய்யாகுமா? எனத் தெரியாமல் அங்கேயே சிலைபோல் நின்றான்.

★ ★ ★

சிந்தாமணி சிறகுகளை விரித்துப் பறக்கத் தொடங்கினாள். அவளது கடுகடுப்பான முகம், அதிகமாக மகிழ்வைத் தாங்கியிருந்தது. கையில் பித்தளைத் தட்டுடன் ஆரத்தி கரைத்து எடுத்து வந்தாள். ஆறடிக்கும் மேலே நிற்கும், கம்பீரமான தோற்றம் கொண்ட அண்ணன் மகனை இமைகொட்டாமல் பார்த்தாள். தன் பாசத்தைக் காட்டும் விதமாக அப்படி நடந்து கொண்டாலும், உண்மையில் தனது அண்ணனின் சாயலை மறைமுகமாக அவள் தேடவே செய்தாள்.

அவளுக்கு அளவிடமுடியாத ஆனந்தம் தொற்றிக் கொண்டது. தன் அண்ணன் சாயலைக் கொண்டிருந்த ஸ்ரீராமை, கரைப்பற்கள் தெரிய ஆரத்தியெடுத்து வரவேற்றாள். ஆரத்தியை வெகு மிடுக்காக நடைநடந்து வாசலில் எறிந்துவிட்டு சுற்றிலும் தன் விழிகளைச் சுழலவிட்டாள். மனம் குளுகுளுவென்றிருந்தது. ஆங்காங்கே வேடிக்கை பார்த்துக் கொண்டிருக்கும் கும்பலை காணாததுபோல் உள்ளே நுழைந்தாள்.

"பாருடி அவளுக்கு வந்த வாழ்வை. இனி இதைப் பிடிக்க முடியாது. போ..."

"ஆமாமா. சிங்கப்பூர் காசுல... பிடிக்கத்தான் முடியாது... தரையில் கால் படாது போ..." வேடிக்கை காணவந்த கூட்டம் அவளை இவ்விதமாக மனம் பொசுங்கி பாராட்டியது.

உள்ளே நுழைந்த ஸ்ரீராமின் விழிகள் எதிரே மாட்டப்பட்டுள்ள புகைப்படத்தை நோக்கியது. படத்தில் இருப்பது தன் தந்தைதான் என்பது துல்லியமாகத் தெரிந்தது. அவனது விழிகள் சிவந்து கலங்கின.

இதோ நீங்கள் காட்டிய உறவு! சந்தோசமாக இருக்கிறதப்பா. இத்தனை அன்புள்ளம் கொண்டவர்களை யாப்பா பிரிந்து போனீர்கள்.

"தம்பீ...!"

அத்தையின் அன்பான அழைப்பில் சுயநினைவுக்கு வந்தான். தன் கலங்கிய விழிகளால் அவனை எதிர்நோக்கி, "என் அண்ணனைப் பார்த்தாற்போலவே இருக்கப்பா..." குரல் தழுக்க கூறிய அத்தையைப் பாசத்தோடு பார்த்தான். அவன் அத்தையின் கணவரைத் தேடினான். அவன் யாரைத் தேடுகிறான் என்று புரியாமல் விழித்தாள்.

"மாமா எங்கே அத்தே?"

ராஜா தந்தையை அழைத்தான்.

"இல்லே பரவாயில்லை. மாமா எங்கே இருக்காங்கணு சொல்லுங்க, நாம போவோம்" என்று மரியாதையோடு கூறியவிதம், ஒரு கணம் தாயையும், மகனையும் பிரமிக்க வைத்தது.

இந்நாடகத்தைக் காண மனமில்லாமல் அறைக்குள்ளே ஒடுங்கிக் கிடக்கும் மணிரத்னம், இதைக் கேட்டு தானே வெளியே வந்தார்.

இரு கரங்களைக் கூப்பி, “வணக்கம் மாமா!” என்றபோது மணிரத்னம் ஆச்சரியமும், தடுமாற்றமும் சேர பதில் வணக்கம் கூறினார்.

தன் மனைவியின் குணத்தை வைத்து, அவளது அண்ணனின் குணத்தையும் ஒருவாறாகத் தீர்மானித்து வைத்திருந்தவருக்கு அவரது மகன் மட்டும் எப்படியிருப்பான் என்ற உதாசீனம், அவனது மரியாதைக்கு முன் மறைந்து போனது.

ஒருவேளை அவனது அம்மாவின் குணமாக இருக்குமோ?

“உட்காருங்க மாமா.” தனக்காக அமர்த்தப்பட்ட நாற்காலியைச் சுட்டிக் காட்டினான்.

“இருக்கட்டும். நீங்க உட்காருங்க.” மனமுவந்து அவரால் பேச முடியவில்லை.

“நீ உட்காரப்பா” - எங்கே கணவர் உட்கார்ந்து விடுவாரோ என்ற பதற்றத்தில் கூறினாள் அத்தை.

“அப்போ மாமா!...” அவன் விடுவதாயில்லை.

ராஜா உள் அறையிலிருந்து ஒரு நாற்காலியை எடுத்துவந்து தந்தைக்கு அமர்த்தினான். இருவரும் அமர்ந்தனர். அந்நேரம் உள்ளே நுழைந்த தாட்சாயிணி ஸ்ரீராமைப் பார்த்து சற்றே தயங்கியவளாய் அம்மாவினருகே வந்து நின்றாள். அவ்வளவேதான். மகளை சந்தோசத்தோடு அறிமுகப்படுத்தினாள்.

அவன் ஹலோ சொல்ல, இவளும் பதிலுக்கு ஹலோ சொன்னாள்.

"கம்ப்யூட்டர் பள்ளிக்கூடம் போயிட்டு வர்றா. இங்கிருந்து டவுனுக்குப் போய் படிச்சுட்டு வர்றா." மகளின் பெருமையை நீட்டிக் கொண்டு போனாள். அவ்வப்போது அவன் கொண்டு வந்திருக்கும் பெட்டிகளையும் அவளது விழிகள் நோக்கி மீண்டன.

அதன் பிறகு அவனது பெற்றோரைப் பற்றிய விசாரிப்பும், பிறகு விருந்து உபசாரமும், தடபுடலாக நடந்தேறியது. பிறகு தான் ஒவ்வொருவருக்கும் அன்பும், ஆசையுமாய் வாங்கிவந்த பொருட்களையெல்லாம் அன்போடு வழங்கினான். அனைவரது மகிழ்ச்சியையும் கண்டு உளமகிழ்ந்தான்.

நடப்பதெல்லாம் உண்மைதானா? எல்லாமே இந்த குறுகிய நாட்களில் மனதுக்கு குளுமையை ஏற்படுத்தி யிருந்த, இன்பமான நிகழ்வுகள் இவை. வானத்தைத் தொடும் கட்டடங்களையும், வண்ண மின்விளக்குகளையும் பார்த்துப் பழகியவனுக்கு எளிமையான மண்வீடுகளும், வயல்களின் பசுமையும், அவனை பிரமிக்க வைத்தன. அப்பாவின் வடிவத்தை அத்தையிடம் கண்டபோது தந்தையைத் தான் இழந்துவிடவில்லை என நிறைவோடு மனம் கூறிக்கொண்டது. ஓடி ஓடி பணம் சம்பாதித்து பாதிக் காலத்தையும், அவற்றை எப்படி பாதுகாப்பது என யோசித்தே மீதிக் காலத்தையும் முடித்துவிட்ட தந்தையை தான் எவ்வகையிலும் முன்னுதாரணமாக்கி விடக் கூடாதென்பதில் உறுதியாயிருந்தான்.

என்னதான் தொலைபேசியில் அத்தையிடம் பேசிக்கொண்டாலும், வாழ்க்கையில் முதன்முறையாய்

இந்திய மண்ணில் கால் பதித்ததுமே மெல்லிய நடுக்கமும், ஒரு விறுவிறுப்பும், பதைபதைப்பும் அவனை ஆக்கிரமித்துக் கொண்டன. தனது உடமைகளைத் தள்ளுவண்டியில் அடுக்கித் தள்ளியவாறு வெளியே வந்தவன், பலத்த எதிர்பார்ப்போடு கூட்டங்களில் கண்பதித்தான். ஆரவாரத்தோடும், அன்போடும் வரவேற்கும் அக்கூட்டத்தினுள் தான் இதற்குமுன் கண்டிடாத தன் உறவைக் கண்டறிய சிரமப்படக்கூடாதென, தன் பெயர் எழுதிய அட்டையைக் காட்டுமாறு அத்தையிடம் கூறி வைத்ததும் நல்லதுதான். இல்லையென்றால் இது போன்ற பழக்கமில்லாதவர்களுக்கு எப்படித் தெரியும்?

அம்மாவின் தூண்டுதலில் அதிகப்படியான அலங்காரத்தோடு வண்ண மையால் பளிச்சிடும் தாட்சாயிணியின் கையெழுத்து அவனை ரசனையோடு கண்டுகொள்ளச் செய்தது. ராஜாவைப் பார்த்து கை குலுக்கியபோது அவனே வாயடைத்துப் போனான். அம்மாவிடம் தான் சண்டையிட்டது தவறென நிமிடத்தில் புரிந்துகொண்டான். பணமும், பண்பும், அழகும் ஒன்று சேர்ந்த இளைஞனை பிரமிப்போடு பார்த்தான்.

அன்று முழுவதுமே கலகலப்பான பொழுதாகக் கரைந்தது. அவன் தன் வாழ்வில் மறக்கமுடியாத சிறந்த நாளாக அன்றைய தினத்தை டைரியில் குறித்து வைத்துக் கொண்டான்.

# பாகம் - 3

## (அன்று)

சுப்புரத்தினத்தின் விழிகள் தாழ்ந்திருந்தன. தமக்கை ராஜேஸ்வரியின் கண்கள் அவர் மீது பதிந்திருந்தன.

"என்னதான் நான் உன் அக்காவா இருந்தாலும், இந்த விஷயத்தில் நீ தானேப்பா முடிவெடுக்கணும். அவள் உன் பெண்ணல்லவா? நான் அடுத்தவதானே!" - சுருக்கென அம்பு வைத்தாள்.

"அக்கா எனக்கு அக்கா மட்டும்தானா நீ? என் அம்மாவும்தானே!" - விழிகள் கலங்கி ஏறிட்டான்.

அரண்மனை வீட்டு வேலைக்காரர்களின் கவனம் வேலையிலில்லை. முடிவு என்ன என்பதில் ஆர்வமாயிருந்தனர். பத்து வயதுப் பச்சிளங்குழந்தையாய் சம்யுக்தா அம்மாவின் முந்தானையில் பதுங்கினாள். அவளுக்கு அத்தையைப் பிடிக்கும். அவள் விதவிதமாக பூத்தைத்து ஜடை அலங்காரம் செய்வாள். சட்டைக்கு ஏற்ற வளையல்கள் வாங்கித் தருவாள். மைதீட்டி நெட்டி முறிப்பாள். இப்படி பாசத்தை வழங்கும் அத்தை மட்டும்தான் தெரியும். இன்று, எதுவுமே புரியவில்லை. ஆனால் அத்தை வித்தியாசமாகப் பட்டாள்.

"அவ உன் மருமகள்தானேக்கா என்றைக்குமே!"

"பிறகென்ன?"

'ஆனால்... இப்ப எப்படி.... அவ குழந்தை. பெரிய மனுசியான உடனேயே வெச்சுக்கலாமே." தம்பி தயங்கித்

தயங்கி கூறிய விதம் ராஜேஸ்வரிக்கு பரிதாபத்தை ஏற்படுத்தியது.

"தம்பி! என்னை இதே வயசிலதான் நம்ம அப்பாவும் கட்டிக் கொடுத்தாங்க. நம்ம அம்மாவுக்கும் ஏறக்குறைய இதே வயசுதான். அந்நியம்னா யோசிக்கலாம். என் மாமியாருக்கு பயம் வந்திடுச்சு. அதுக்குள்ள பேரன் கல்யாணத்தைக் காணத் துடிக்குது. உன் தம்பி பெண்ணை தரலைனா வேறு பெண்ணா கிடைக்காதுங்கறார், உன் மாமா. அவருக்கு அவரது அம்மா ஆசை பெரிசா தெரியுது. வேறு எவளும் எனக்கு மருமகளா வரக்கூடாது. நம்ம சொந்தம் விட்டுப் போயிடக் கூடாதுடா!" - கலக்கத்தோடு கூறினாள்.

"நம்ம காலம் முடிஞ்சிடுச்சு அண்ணி. அதையே நாமும் பின்பற்றணுமா? குழந்தையாட்டம் இருக்காளே அண்ணி" கணவனுக்கு பயந்து, தயங்கியவாறு இவ்விதம் பேசினாள் கலைவாணி.

"என் சூழ்நிலை அப்படி இருக்கே வாணி. அவளை என் மகளா நான் பார்த்துக்க மாட்டேனா? இன்னும் இரண்டு வருடம் கழித்து நடக்கப் போவதை இப்ப நடத்தக் கேட்கறேன். அவ்வளவுதானே! பெரிய கஷ்டத்துல இருக்கேன் நான்." பரிதவிப்போடு பேசினாள்.

தமக்கையின் பரிதாபமான கோலம் சுப்புரத்தினத்தின் மனதை இளக வைத்தது. பெண் குழந்தைக்கு கள்ளிப்பால் கொடுப்பதும், குழந்தைத் திருமணமும் சுற்றுவட்டார கிராமங்களிலே ஆங்காங்கே ஆட்சி புரிந்துகொண்டிருந்தது. வலுவான வேறு காரணமேதும் கிடைக்காமல் தர்மசங்கடமான சூழ்நிலைக்குத் தள்ளப்பட்டார் சுப்புரத்தினம். தமக்கை சிறிது கால அவகாசம் கொடுத்து

அவ்விடம் விட்டு நகர்ந்தாள். தந்தையின் மீது பயத்தோடு விழிகளைப் பதித்திருக்கும் குழந்தையை அணைத்துக் கொண்ட அவர், மனைவியை தீர்க்கமாக ஏறிட்டார்.

கணவனை அதிர்ந்து பேசாத குலக்கொடி கலைவாணி, அவரின் பதிலுக்காகக் காத்திருந்தாள். அவரது விழிகள் மனைவியை விடுத்து, கம்பீரத் தோற்றத்தோடு வீற்றிருக்கும் தந்தை வீரநரசிம்மரின் ஆளுயர வரைபடத்தில் பதிந்தன.

மண்ணை விட்டு நீங்கும் தறுவாயிலும் இவ்வரண்மனை வீட்டை இவர் கையில் ஒப்படைத்த நிம்மதியோடு, "மகனே! இந்த அரண்மனை வீட்டை ஆளும் உரிமை நம் வம்சத்துக்கு மட்டுமே இருக்கணும்டா" என்று தீர்மானமாக கூறிவிட்டுச் சென்றார்.

'என்ன அர்த்தம் அதற்கு? - இதுதான் அந்த அர்த்தமோ!' அமைதியாக மனைவியை ஏறிட்டார்.

"நம்ம பெண்ணை இப்ப கொடுக்கலைனா, எல்லாமே மாறிடும். ஏற்கெனவே அண்ணனுக்குப் பகையாகிப் போய்விட்ட நிலையில் அக்காவையும் பகைத்துக்கொள்ள விரும்பலை. அவளுக்கு வேறு மருமகள் வந்துவிட்டால் நம்ம பெண்ணுக்கு வேற பையன்தான் பார்க்கணும். இந்த சொத்து அடுத்தவன் ஆள இல்லை. அக்கா மகனே இதுக்கு வாரிசாகணும். நம் பேரப்பிள்ளைகள் அனுபவிக்கணும் வாணி. நீ என்னம்மா சொல்றே?"

அடுத்தவர் கஷ்டத்தை தன் தோளில் சுமக்கத் துடிக்கும் கணவரின் குணம் தெரியாதா அவளுக்கு? குணசீலவதி கொண்டவனுக்குத் துணை நின்றாள். மறுமுகூர்த்தத்திலேயே தேதி குறிக்கப்பட்டது. அரண்மனை அலங்கரிக்கப்பட்டது. புதுத்துணிமணிகளும், வகையான

உணவுகளும் அத்தை ஏற்று நடத்தினாள். வண்ண நிறத்தில் வளையல் பூட்டிய மருமகளுக்கு வைர வளையல்களைப் போட்டு அழகு பார்த்தாள். குழந்தை மிக மகிழ்ந்தாள். தனக்கு நடக்கவிருக்கும் விழா அவளுக்கு விளையாட்டாகவே தெரிந்தது. முந்தானைக்குள் விளையாட்டாய் வளையவந்த மகளை மார்போடு அள்ளி அணைத்துக் கொண்டாள் கலைவாணி. "பால்மணம் இன்னும் தெரிந்ததோ அந்த அன்னைக்கு?" மெலிதாக விம்மினாள். கவலையை மறைத்து, கரைபுரண்ட கண்ணீரை உள்வாங்கிக் கொண்டு, மணவறைக்கு அழைத்து வந்து அமரவைத்தாள். அந்தக் குழந்தைதான் துள்ளி ஓடி விளையாடும் பதினாறு வயது அத்தானைப் பார்த்து சிரித்துக் கொண்டது. கெட்டி மேளம் முழங்கியது.

★ ★ ★

**சி**ந்தாமணியின் வயிறு கொழுந்துவிட்டு எரிந்தது. தங்களைத் தேடி வந்து அழைத்த தம்பியை, மனைவியின் சொல் கேட்டு அவமானப்படுத்தி அனுப்பிவைத்த பிறகு, தங்கை அழைப்பிதழோடு அண்ணனைக் காண வந்து நின்றாள். "வாம்மா இளையராணி. இவ்வளவுக்கும் காரணம் நீதானே. எங்களை துரத்தி விட்டுட்டு, ஒட்டவே விடாத அளவுக்கு பெரிய முடிவா எடுத்திட்டயே." - நாத்தனாரிடம் கத்தினாள் சிந்தாமணி.

"நீங்கதானே ஒட்டமாட்டேங்கறீங்க. தம்பி வந்து கூப்பிட்டானாமே!"

"நான் உன்னை மட்டும்தான் சொன்னேன். நீ எல்லாருக்கும் பொதுவாதானே இருக்கணும். நீ கேட்டிருந்தால் என் பெண்ணைக் கொடுத்திருக்க மாட்டேனா?" ஏழு வயது பெண்ணை இழுத்துக் காட்டி

இவ்விதம் கூறினாள். "அது சரி, நாங்க ஒன்னுமில்லாத வங்கதானே. எங்ககிட்ட ஏதும் அரண்மனை வீடு இல்லையே. பணம் காசுதான் பெரிசு. அந்த வீடு மேலே உனக்கும் ஒரு கண்ணுதான் போல. மகனை ஆள அனுப்புறியாக்கும்."

அனல் கக்கிய வார்த்தையில் சுருண்டு போனாள் ராஜேஸ்வரி. மனைவியைப் பேசவிட்டு பார்த்துக் கொண்டிருக்கும் அண்ணனைப் பார்வையால் எரித்து விட்டு, அழுதுகொண்டே திரும்பினாள். இவ்வளவையும் மீறி ஊரே பாராட்ட நடந்தேறி முடிந்த கல்யாணத்தை எண்ணி வெகுண்டாள் சிந்தாமணி. சாபமிட்டாள். பச்சிளங்குழந்தைகளைத் தன் நச்சுப் பற்களால் திட்டித் தீர்த்தாள்.

★ ★ ★

குழந்தை சம்யுக்தாவை அத்தை தங்கத் தட்டில் வைத்து பாதபூஜையே செய்தாள். அவளைத் தரையில் நடக்க விடுவதில்லை. பதினேழு வயது பையனும், பக்குவமின்றி குழந்தையாகவே இருந்தான். பகலில் அத்தானோடு விளையாடவும், இரவிலே அத்தையைக் கட்டி அணைத்து உறங்குவதிலும் மாதங்கள் உருண்டன.

வணிக சம்பந்தமாக ஒரு வாரம் தந்தையும், மகனும் வெளியூர் சென்றிருந்தபோது வெள்ளத்தால் அடித்துச் செல்லப்பட்ட கொடுமையை என்னவென்று சொல்ல? ஊரே கலங்கிப் போனது. தம்பியைக் கட்டிக்கொண்டு கத்தினாள் ராஜேஸ்வரி. அத்தையும், பெற்றோரும் கதறும் நிலை கண்டு ஏதோ புரிந்தவளாய் தானும் அழுதாள் சம்யுக்தா.

வைர வளையலிட்டு அலங்கரித்த மருமகளுக்கு அடுத்து நடக்கவிருக்கும் சம்பிரதாயம்? அறுபதில்கூட நிகழக்கூடாத நிலை பத்திலேயே நடந்துவிட்ட கொடுமையை எண்ணி துடித்துப் போனார் சுப்புரத்தினம்.

நாத்தனாரின் வீடு தேடிவந்து விசாரித்தாள் அண்ணி. வந்திருந்தேன் எனக்காட்ட வந்திருந்தாள். அதுவரையிலும் யாருக்குமே தோன்றாத விஷயத்தை இடியாய் முழக்கினாள். "என் பெண்ணை எடுத்திருந்தா, மகனையும், புருசனையும் இழந்திருக்கமாட்டே. உன் விதி, இந்த ராசி கெட்டவளை எடுத்திட்டாய்." பிஞ்சுக் குழந்தையை ஏறிட்டு, "இது அப்பன் செய்த பாவம்... இது தலையில் விழுந்திடுச்சு. அடுத்து நடக்க வேண்டியதை பாருங்க!" - சொல்லிவிட்டு "மாமியாருக்கும் மருமகளுக்கும் ஒரே நேரத்தில் நடக்கற கொடுமையை என்னன்னு சொல்ல..." சொல்லிவிட்டு நகர்ந்தாள்.

மருமகளைக் கட்டிக்கொண்டு கதறினாள். எல்லாமே கணப்பொழுதில் நடந்தேறியது. மறுநாள் அத்தையிடம், "அத்தே! நீ வாங்கிக் கொடுத்த வளையல்களையெல்லாம் உடைச்சுட்டாங்களே ஏன்?" - அப்பாவித்தனமாய் கேட்டது கண்டு துடித்துப் போனாள். தங்கக் குத்துவிளக்காய் தகதகக்க வேண்டிய அவள், கைதவறி விழுந்த களிமண் விளக்காய் சிதறிக் கிடக்கும் இந்நிலைக்கு நான்தானே காரணம். தன் தலையிலே அடித்து அழுதாள். அவளைத் தன் மார்போடு இழுத்துக் கதறினாள். அத்தையின் கதறலைக் காணச் சகிக்காமல் "போனா போகுது விடு அத்தை. வேற வளையல் வாங்கிக்கொடு. அழுகாதே. நான் ஒன்றும் கவலைப்படலே..." என்றது.

"என் கண்ணே ராஜாத்தி, ஒன்றும் தெரியாமல் பேசுகிறாயேடி. மொட்டே! நீ மலர்ந்து மணம் வீசும்

முன்பே பிடுங்கி எறியப்பட்டு விட்டாயேடி..." - கலங்கிய நிலையில் உறங்கிப் போனார்கள். மறுநாள் அவளுக்குள் உத்வேகம்! மருமகளை அழைத்துக் கொண்டு பள்ளிக்கூடத்தில் சேர்த்தாள். விட்ட கல்வியைத் தொடரவைத்தாள். அவளுக்காகவே அவள் வாழ்ந்தாள். குழந்தை நன்கு படிக்கத் தொடங்கினாள். எதிலும் பகுத்தாராயும் திறம் படைத்தவளாக மிளிர்ந்தாள். இரண்டு வருடங்களில் அறிவுச்சுடராய்த் திகழ்ந்தாள். ஏன்? எதற்கு? எப்படி? எனக் கேள்வி கேட்டறிந்தாள். பாடங்களைப் படித்து அத்தையிடம் சொல்லும் வழக்கத்தைக் கொண்டவள் அன்றும் அப்படித்தான், "அத்தே! குழந்தைத் திருமணத்தை எதிர்த்தல், விதவைத் திருமணத்தை ஆதரித்தல் என்றால் என்ன அத்தே?" - புரியாமல் கேட்ட மருமகளைப் புதிராகப் பார்த்தாள். மழுங்கிக்கிடந்த புத்தியை சீவி கூர்மையாக்கிவிட்ட குருவாகத் தோன்றினாள் மருமகள். புதிய ஆற்றலைப் பெற்றவள்போல் எழுந்தவள் அவளை அழைத்துச் சென்று, வண்ண வளையல்களிட்டு சரமாக மல்லிகைப்பூவை சிரசில் ஏற்றி, திலகமிட்டு, தம்பி வீட்டுக்கு அழைத்து வந்தாள்.

"இனி இவ என் மருமகளில்லை. உன் பொண்ணு மட்டும்தான். நடந்ததைக் கனவா நினைத்து மறந்திடு. அவ வாழ்க்கை இனிமேல்தான் தொடங்கப் போகிறது. என்னை மன்னிச்சிடப்பா." கையெடுத்துக் கும்பிட்டுவிட்டு தேசாந்திரம் சென்றுவிட்டாள்.

மகளைப் பழைய கோலத்தில் பார்த்த பெற்றோர் திருப்தியடைந்தனர்.

## பாகம் - 4

### (இன்று)

முத்தம்மாள் வாசல் பெருக்கிக் கொண்டிருந்தாள்.

"என்ன பாப்பா சீக்கிரமா வந்துட்டியே..." அலுவலகத்திலிருந்து சோர்வோடு வந்து கொண்டிருந்த சம்யுக்தாவைப் பார்த்துக் கேட்டாள்.

"ம்..." தெம்பின்றி பதில் வர, குனிந்து பெருக்கிய முத்தம்மாள் நிமிர்ந்து அவள் முகத்தை ஏறிட்டாள். அந்நேரம் அவளது மகன் உரக்கக் குரல் கொடுத்தான்.

"நீ போ முத்தம்மா. நான்தான் வந்துட்டேன்ல. நான் பார்த்துக்கறேன்."

அவள் காதில் போட்டுக் கொள்ளாமல் பெருக்கி முடித்துவிட்டே சென்றாள். மகனோ குறைபட்டுக் கொண்டான். சுய சம்பாத்தியமாம்! தாயை உட்கார வைத்து சம்பாதித்துப் போடுவது கடமைதான். அதற்கும் மேலே, சுய சம்பாத்தியத்தோடு சுயகௌரவமும் சேர்ந்து கொண்டதல்லவா? அவனது பழைய கால வாழ்வை கெட்ட கனவாக எண்ணி மறக்கத் துடித்தான். அதையே தாயையும் பின்பற்றச் செய்து தோற்றுப்போனான். எனினும் இப்படி சம்யுக்தாவின் காதில் விழும்படி, இப்படி மொட்டை சவுடால் பேசுவதுண்டு. சம்யுக்தா எத்தனையோ முறை சொல்லியிருக்கிறாள். 'இனியும் நீ இங்கு வேலைபார்ப்பது சரியல்ல. தவிர என்னால் சம்பளம் கொடுக்க முடியாது' கறாரெனப் பேசினால் கவிழ்ந்த தலையோடு போய்விடுவாள் என்பது அவளது எண்ணப்

"நீ ஆக்குற சோறுல எனக்கு கொஞ்சம் கொடு. யார் மனசையும் நோகடிக்காத குணம் படைச்சவரு உன் அப்பா. நீ என் மனசை நோகடிக்காதே. நீ எனக்கு வேலை கொடுக்கவாணாம். ஆனா நான் பாக்கற வேலையைத் தடுக்காதே."

நிதானமாகப் பேசிவிட்டுத் தன் வேலையை ஆரம்பித்தாள். அதன் பின் சம்யுக்தா தடுப்பதில்லை. அவள் அல்லும்பகலுமாக பாடுபட்டபோதெல்லாம் அப்பாவுக்கு மாத்திரை கொடுத்து, சாப்பாடு கொடுத்து கவனித்துக் கொள்வதில் சற்றே நிம்மதியடைந்தாள்.

சம்யுக்தா வாசற்படியிலேயே களைப்பாக அமர்ந்தாள். உடலோடு சேர்ந்து மனமும் சோர்வாகியிருந்தது. 'காலாவதி'யாகிவிட்ட தனது வாழ்க்கையைப் பங்கிட்டுக் கொள்ளத் துடிக்கும் பார்த்திபனை நினைத்தால் பரிதாபம்தான் வந்தது. புறத்தோற்றத்தை வைத்து மட்டுமே எடை போட்டுவிட்டார் போலும்.

முத்தம்மாள் சிறிது நேரத்திலேயே வந்துவிட்டாள். ஆனால், அவள் தயங்கித் தயங்கி நிற்கும் கோலம் இளையவளுக்குப் புரியாமலிருந்தது. கேள்விக்குறியோடு நோக்கினாள்.

"பாப்பா... தயவு செய்து ஐயாவைக் கோபிச்சுக்காதே..." - இவ்விதம் ஆரம்பிக்க புருவம் சுளித்து அவளை ஏறிட்டாள்.

"அந்த வீட்டைப் பார்க்கணும்னு ஒரே பிடிவாதம். கூட்டிட்டுப்போ. இல்லைனா நானே போறேன்னு குழந்தையாட்டம் அடம்பிடிச்சாரு..."

கோபத்தால் சிவந்த தனது விழிகளால் உள்ளே உறங்கிக் கொண்டிருக்கும் தந்தையை முறைத்தாள். அவளது தோற்றத்தைக் கண்ட முத்தம்மாள், அவளது கரத்தைப் பிடித்துக் கொண்டு, "பாப்பா நீ இதைக் கேட்டுடாதே. நான் உன்னிடம் சொல்லிடுவேன்னு சொன்ன பிறகு அமைதியாயிட்டாரு. நல்ல வேளையா அந்நேரம் உங்க மானேஜர் வந்துட்டாரு." சட்டென நாக்கைக் கடித்துக் கொண்டாள். பதுக்கி வைத்திருந்த விஷயம் நாவிலிருந்து வழுக்கிக்கொண்டு வெளிவந்தபோது தன்னைத்தானே திட்டிக்கொண்டாள். இளையவளின் சிவந்த விழிகளில் ஆச்சரியமிகுந்த மறுவினாடியே அவளது முகம் கலவரமானது.

முத்தம்மாளின் தோரணை அவளுக்கு சந்தேகத்தை ஏற்படுத்தியது.

முத்தம்மாளின் மனம் இப்போது தனது மகனைத் திட்டியது. 'சும்மா சும்மா உரக்க கூப்பிடுறவன் இப்போ கூப்பிடக்கூடாதா?' அவள் நெளிந்தாள். மகனுக்கு சாப்பாடு போடப் போவதாகச் சொல்லித் தப்பிக்க முயன்றவளைத் தடுத்தாள்.

"மகன் கூப்பிட்டாலும் அவசரமில்லாமல் போகும் நீ சாப்பாடு போடப்போறியா? தவிர இப்போதானே அங்கிருந்து வந்தாய்?" அவளது கேள்வியில் திணறியவள், தப்பிக்கத் திராணியின்றி தலைகவிழ்ந்து மௌனமானாள்.

"என்ன விஷயமா வந்திருந்தாரு." ஓரளவு தானே ஊகிக்கவும் செய்தாள்.

உறங்கிக் கொண்டிருக்கும் சுப்புரத்தினத்தை எட்டிப் பார்த்தவள், "அது வந்து பாப்பா..." எனத் தயக்கத்தோடு

ஆரம்பித்தாள். இளையவளின் விழிகள் மிகத் தீவிரமாக அவள் மீது பதிந்திருந்தது.

அவளது விழிகளை ஏறிட்டவளின் மனம், பதைப்போடு அடித்துக் கொண்டது. எச்சிலை விழுங்கியவள் குரலைச் செறுமியவாறு, "உ... உன்னை கல்யாணம் கட்டிக்க ஐயாகிட்ட கேட்க வந்தார்..." தயக்கத்தோடு ஒரு வழியாக சொல்லி முடித்தாள். மறுவினாடியே எரிமலையாய் பொங்கி எழுந்தாள். அவளது முகம் சிவந்து போனது.

முத்தம்மாளை விடுத்து அவளது விழிகள் எங்கோ வெறித்தன. அவளது அங்கமெங்கும் உஷ்ணம் பரவியது. ஒன்றிரண்டு வினாடிகள் விழிகளை மூடி தனது கோபத்தைக் கட்டுக்குக் கொண்டு வந்தவளாய், "அப்பா என்ன சொன்னார்..." என அடிக்குரலில் கேட்டாள்.

அவளது கோலத்தைக் கண்டு ஏற்கெனவே திணறிப்போயிருந்த மூத்தவள், அவளது அடுத்த கேள்வியில் மயங்கி சரியாத குறையாய் பரிதாபமாக நின்றாள். தொண்டை வறண்டு போனது. உலர்ந்த உதடுகளை ஈரப்படுத்திக் கொண்டு, "ச... சரின்னுட்டார்." தலைகவிழ்ந்து சொல்லிவிட்டு அவளது முகத்தை ஏறிட்டவளுக்கு நொடியில் பரிதாபமே ஏற்பட்டது. அங்கே இளையவளின் அத்தனை கோபமும் கண்ணீராய்த் திரண்டு வெளிவந்தன. உதடுகள் துடிக்க, "நீ போ" என்றாள்.

"பாப்பா..." தயங்கியவாறு நின்றவளை "நீ போ முத்தம்மா" என பாவமாக கூறிவிட்டு வீட்டுக்குள்ளே நுழைந்தாள்.

தந்தையைக் கூர்ந்து நோக்கினாள். அவர் இன்னும் உறங்கிக் கொண்டிருந்தார். இன்று இவ்வளவு நேரம்

தூங்குகிறாரே என யோசித்தவளாய் கொல்லைப்புற படிகளில் அமர்ந்தாள்.

அவளுக்கு எரிச்சல் கிளம்பியிருந்தது. பார்த்திபன் மீது வைத்திருந்த அளவுகடந்த மரியாதை மங்கிப் போனது. 'தான் அவ்வளவு சொல்லியும் மீறி தந்தையை சந்தித்துப் பேசியிருக்கிறார் என்றால் என்ன அர்த்தம்? சரி, நான் சம்மதம் சொல்லாமல் என்னை மணந்துகொள்வாரா? இதெல்லாம் யோசித்தாரா?' - முகம் சுழித்து அந்திவானத்தை வெறித்தாள்.

அப்பா சம்மதம் சொல்லிவிட்டாராம். எப்படி? உன் வாழ்வை பாழாக்கிவிட்ட பாவியம்மா நான் என்று மனம் வெம்பிக் கண்ணீர் விடுவாரே? இதற்கு என்ன அர்த்தமாம்?

சென்ற மாதம் அலுவலகத்தில் உடன் பணிபுரியும் பெண் கவிதாவின் திருமணம் ஞாபகம் வந்தது. பட்டிமன்ற பேச்சாளரும், கவிஞரும் என எத்தனையோ அறிஞர்கள் வந்திருந்தனர். இருவரின் மனமொத்த வாழ்க்கைக்காக, இல்லறத்தின் அருமையை புரியவைத்து, வாழ்வாங்கு வாழ்த்த பெரியோர்களும் கூடிநின்று அட்சதை தூவி, வையகமே பாராட்டுமளவுக்கு நடந்த திருமணம் அது.

அவளது தோழி தனது காதலை தயக்கமின்றி கம்பீரமாக பெற்றோரிடம் வெளியிட்டு, ஒருவேளை நிராகரிக்கப்பட்டாலும் தன் முடிவில் மாற்றமில்லை என பகிரங்கமாக தன் உறுதியை வெளியிட்டு, அவர்களது சம்மதத்தைப் பெற்று மணமேடையில் மாலையும் கழுத்துமாய் தன் காதலனுடன் (மணமகனுடன்) வெற்றிக் களிப்போடு நின்றுகொண்டிருந்தாள்.

அவளது தைரியத்தை சக ஊழியர்களும் பாராட்டினர். "பரவாயில்லை! காதலித்தவனையே மணந்துவிட்டாயே" என்ற ஆச்சரியப் பாராட்டுக்கள்!

சம்யுக்தாவுக்கு வேடிக்கையாய் இருந்தது. தன் பெற்றோரின் மனநிலை பிள்ளைகளுக்குத் தெரியாதா என்ன? காதல் ஏற்றுக்கொள்ளப்படுமா என்ற சந்தேகம் உண்டெனில் அப்படி ஏன் அந்த மாய வலையில் சிக்க வேண்டும்? தங்கள் பசு கட்டவிழ்ந்து ஓடிவிடுமோ என்ற பயத்தால் தந்த சம்மதம் என புரியாமலோ அல்லது புரிந்தும் அலட்சியத்துடனோ மேடையில் மணவாளனோடு சிரித்துக் கொண்டு துள்ளலோடு நிற்கும் கவிதா அவளுக்கு ஆச்சரியத்தை ஏற்படுத்தினாள். அடுத்து அவளது பார்வை உறவினர்களுடன் உரையாடிக் கொண்டிருக்கும் கவிதாவின் தந்தை மீது பதிந்தது.

"நம்ம சாதிப் பையனில்லையா?"

"காதலுக்கு சாதி மதமில்லயாம்!" - காதலுக்குத் தடை சொல்லாத பெருந்தன்மை குணம் படைத்தவராக தன்னைக் காட்டிக்கொள்ள முயற்சித்தார். ஆனாலும் அகத்திற்கு முன் புறம் தோற்றுப்போனது. மனம் நிறைய வருத்தங்கள்!

பெற்றோர்களால் நிச்சயிக்கப்படும் திருமணத்திற்கு மண் பார்த்து 'உம்' போட்ட காலங்கள் மாறி, பிள்ளைகளால் நிச்சயிக்கப்படும் திருமணத்திற்கு வேறு வழியின்றி 'உம்' போடும் பெற்றோர்கள் மிகுந்து கொண்டிருக்கிறார்களோ!

★ ★ ★

இதழ்கள் வெறுமையாக புன்னகைத்தன.

இங்கே! மண் பார்த்து 'உம்' போட வாய்ப்பே அளிக்கவில்லையே. விழிகள் கசிந்தன. அப்பாவின் இருமல் சத்தம் அவளைக் கலைத்தது.

அப்பாவினருகே சென்றமர்ந்தாள். தனது மங்கிய விழிகளால் ஏறிட்டவர், "சீக்கிரமே வந்துவிட்டாயாம்மா" என்றார்.

"ம்..." என்று பதிலளித்தாள்.

அவர் அடுத்து மனவலியோடு ஆரம்பித்தார்.

"மனசு பாரமாயிருக்கும்மா...!"

இதென்ன? பாரமாயிருக்கா? தான் சம்மந்தம் பேசிவிட்ட சந்தோசத்தின் சுவடேயின்றி பேசுகிறாரே! இந்நேரம் தனது முடிவைப் பற்றி மகிழ்ச்சியாக அல்லவா சொல்லியிருக்க வேண்டும்.

அவள் தந்தை மீது அழுத்தமாக பார்வையைப் பதித்தாள்.

மகளின் மௌனம் எதனால் என்பதைப் புரிந்துகொள்ளாமலேயே அவர் தொடர்ந்தார்.

"உறவுக்கு மதிப்பு கொடுத்து உயிரா வளர்த்த உன்னை தாராளமா தூக்கிக் கொடுத்துட்டேன். இளங்கன்றா அப்படியே திரும்பி வந்தப்போ இடியா இறங்கிடுச்சம்மா. உன் வாழ்க்கைக்கு என்ன முடிவுன்னு நாலு சுவத்துக்குள்ளே அந்த கடவுளைத்தான் கேட்டிருக்கேன். பதில் வரலையேனு விரக்தியில் கல்தானே உனக்கெப்படி

கேட்கும்னு ஏசியே காலமும் போயிடுச்சு. அப்பவும் என் பாரத்தை உன் மேல் ஏத்திதான் பார்த்தேனே தவிர நான் முயற்சியெடுக்கலை. என் முயற்சி பழையபடி தோத்துடுமோனு பயம். ஒதுங்கி நின்றேன். ஆனால், கடவுள் இளகிய மனம் படைச்சவரும்மா. கொஞ்சமும் தயக்கமே இல்லாம நடக்கலாம்னு மனசு சொல்லுச்சு. இதுதான் கடவுள் போட்ட முடிச்சோனு தோணுது.

"நீயும், பார்த்திபன் தம்பியும் பழகும் விதம் வெறும் நட்புதான்னு எனக்குத் தெரியும். ஆனாலும், அந்தத் தம்பியின் குணம் எனக்கு ஒரு மரியாதையை ஏற்படுத்தியது. மனசுக்குள்ளேயே ஒரு கணமேனும் உங்க ரெண்டுபேரையும் முடிச்சிட்டு பார்த்ததென்னவோ உண்மைதான். ஆனா இதெல்லாம் சாத்தியம்தானானு அமைதியாயிட்டேன். காரணம் உன்னிடம் பேச தைரியமில்லைம்மா.'' அவரது உலர்ந்த உதடுகள் நடுங்கியபோது சம்யுக்தா ஒருவித பதைப்போடு நோக்கினாள்.

அப்பா என்ன சொல்ல வருகிறார்? சம்மந்தமே இல்லாமல் பேசுகிறாரே? - மனத்திற்குள்ளே அரை மணி நேரமாக ஒத்திகை பார்த்து வைத்த வசனமெல்லாம் காற்றிலே பறந்துபோய்க் கொண்டிருந்தன.

தந்தை சிறிதே இடைவெளிவிட்டு ஆரம்பித்தார். ''அந்த தம்பியே நேரா வந்து உன்னை பெண் கேட்டபோது இன்ப அதிர்ச்சியில் ஏற்பட்ட பதைபதைப்பில் தலையாட்டி ஒப்புக்கொண்டேனம்மா... ஆனால்...''

- ஆனால்? அவள் அழுத்தமாக அவர் மீது பார்வை பதித்தாள்.

உள்ளப்பதைப்பு சற்றே அதிகமானது.

மங்கிய மாலைப்பொழுதில் அவரது பார்வை இன்னும் மங்கிப் போயிருந்த நிலையில், அவளது கரத்தை தடவிப் பார்த்து தனது இரு கரங்களுக்குள் அழுத்தி படாரென சத்தமாக விம்மினார்.

அப்பாவின் கதறலைக் கண்டு புரியாமல் அதிர்ச்சியுற்றவள் தானும் அழுகையோடு சமாதானப்படுத்தினாள்.

"நான்... நான் அதுக்கு தகுதியில்லாதவன்தானேம்மா..."

"அப்பா!" அதிர்ந்து போனவள் அழலானாள். அப்பாவின் மனதைப் புரிந்துகொள்ளாமல் கோபப்பட்டு விட்டதற்காக மனம் கதறியது.

"உன்னை இந்தக் கதிக்கு ஆளாக்கிய பாவிதானேம்மா நான்..." விம்மலோடும், இருமலோடும் வந்த வார்த்தையைக் கேட்டுத் துடித்துப்போய் அழுதாள்.

"தயவு செய்து இனி ஒருமுறை அப்படி சொல்லாதீங்கப்பா..."

"உறவு விட்டுப் போயிடக்கூடாதுனு உன் வாழ்க்கையைச் சீரழிச்சுட்டேனேம்மா." அவரது குரலும், உடலும் நடுங்க சம்யுக்தா விழிநீரைத் துடைத்துக் கொண்டு, "இல்லேப்பா, தயவு செய்து அழாதீங்க."

முதுகைப் பதமாக நீவினாள்.

"அப்பா அவர் ரொம்ப நல்லவர். அவரைப் பற்றி எனது எண்ணமெல்லாம் மதிப்பு வாய்ந்தவை. அவ்வளவுதான். நான் மறுத்தும் அவர் உங்களைத் தனிமையில் சந்தித்து கேட்டது குறித்து வருத்தம்தான்பா."

"இல்லேம்மா... அப்படிச் சொல்லாதே!" அவசரமாய் மறுத்தவர், தன்னை ஆசுவாசப்படுத்திக் கொண்டவராய், "ரொம்ப நல்ல குணம்மா அந்த தம்பிக்கு..." என்றார்.

"அதனால்தான் சொல்றேன். அவருக்கு நான் தகுதியானவளில்லைனு. அப்பா என்னைப் பற்றிய விவரம் தெரியாமல் பேசுகிறார்."

அவளது வார்த்தையால் அவரது மனம் அனலாய் கொதித்தது.

தானிழைத்த தவறால், வலைக்குள்ளே மாட்டிக் கொண்ட மீன்போல் மீள வழி தெரியாமல் தவிக்கும் மகளைப் பார்த்தபோது மனம் அழுதது. திருமணத்தைப் பிடிக்காமலா மறுக்கிறாள்? என்னைப் பற்றி விவரம் தெரியாமல் பேசுகிறார் என்றல்லவா கூறுகிறாள். தன் வாழ்க்கையைப் பற்றிய கனவும், கற்பனையும், தன் இலட்சியத்தை ஜெயித்துவிடுமோ என்ற பயத்தால் அவள் பொசுங்கிவிட்டிருந்த போதிலும், அதன் வடுக்கள் அடையாளம் காட்டிவிட்டதே!

அவளது உள்ளுணர்வுகளை இதுகாலம்வரை புரிந்துகொள்ளாத முட்டாள் மட்டுமல்ல, பொதி சுமக்கும் கழுதையாகவும் மாற்றிவிட்ட பாவிதானே நான். மனம் துடித்தது.

மகளின் முகத்தை மௌனமாக நோக்கினார். மணமாலையும், புது மஞ்சள் கயிற்றின் வாசனையும் கலந்து புன்னகையோடு வலம்வரும் காட்சி கண்முன்னே தோன்றியது.

"நான் பெற்ற மகளே!..." உதடுகள் துடித்து முணுமுணுத்தன.

"அம்மா சம்யு... அவருக்கு நீதான் தகுதியானவள்னு அவரே சொல்லிட்டார்மா. உன்னைப் பற்றிய விவரம் தெரிந்த பிறகே இதைச் சொன்னாரம்மா."

"என்ன?..." இதயத்திலே ஒருவித பதைபதைப்பு.

"என்னப்பா சொல்றீங்க?"

"நான் எல்லாமே சொல்லிட்டேன்மா. அறியாத வயதில் நடந்த சம்பவத்தை கனவு போல் மறந்துடச் சொன்ன பெருந்தன்மை குணம் கொண்டவர்மா அந்த தம்பி!"

அழுத்தமாக செவிகளில் விழுந்த அந்த வார்த்தையை நம்ப சற்று சிரமப்பட்டாள். மெல்ல அவளது உறுதி கலைந்து போக ஆரம்பித்த மறுகணமே சட்டெனப் பிடித்து நிறுத்தி தாழிட்டாள்.

நீண்ட பெருமூச்சு வெளிவந்தது அவளிடமிருந்து.

இறுகிய முகத்தோடு, "மன்னிக்கணும்பா. அவர் பெருந்தன்மை குணம் கொண்டவராக இருக்கலாம். ஆனால், எனக்கு இதில் உடன்பாடில்லை."

"ஏன்?" பிசிறிய குரலில் சற்று வேகமாகவே கேட்டார்.

"ஏனோ பிடிக்கலை எனக்கு."

மகளின் விழிகளில் வழியும் உண்மையைக் காண முடியாத பரிதாப நிலை அவரது மனத்தைப் பிழிந்தது.

இவள் எதற்காக இப்படிச் சொல்கிறாள்? பொய்விடை அளிக்கும் உதடுகளும், உண்மை பேசும் விழிகளும் வெவ்வேறு திசைகளில் பயணிக்கின்றனவோ. திருமணமே

வேண்டாமெனில் அந்த உறுதி இடையில் தடுமாறியதேன்? எது தடுக்கிறது? நான் சுமத்திய பாரம்தானோ? - அவர் குரல் உடைந்து குலுங்கினார்.

எங்கோ வெறித்துக் கொண்டிருந்த மகள் பதறிப்போய் தந்தையைப் பற்றினாள்.

"அப்பா ஏன்பா அழறீங்க?"

"எதற்காகம்மா அந்த ஆண்டவன் என்னை இன்னும் விட்டு வெச்சிருக்கான். எந்த சந்தோசமுமே இல்லாத வாழ்க்கை தேவைதானா எனக்கு" என்று அவர் வாழ்ந்த காலங்களை வெறுத்துப் பேசினார். "நான் உனக்கு செய்த கொடுமைக்கு எனக்கு நீ தரும் தண்டனை இதுதான்னா, அதை நான் மனப்பூர்வமாக ஏத்துக்கறேன் சம்யு...!"

"அப்பா..." நொறுங்கிப்போய் கதறினாள்.

பேசுவதற்கே திராணியற்றுக் கிடந்தவரது குரலில் இவ்வளவு வேகமும் பலமுமா?

"கொடூரமான வார்த்தைகளால் என்னைக் குத்திப் பேசாதீங்கப்பா. எனக்கு எல்லாமே நீங்கதானேப்பா..."

"அதனால்தான்மா எனக்கு பயமாயிருக்கு. எனக்குப் பிறகு உன் நிலை என்ன? நானும் கொஞ்சம் சுயநலவாதியா இருந்திட்டேன் சம்யு."

"இல்லேப்பா. நம்ம குடும்ப கௌரவம் முழுதுமாய் தாழ்ந்துடக் கூடாதுப்பா. நான் உங்க பொண்ணுப்பா. எனக்கு அந்தக் கடமை இல்லையா? அதில் உங்க சுயநலமேது?"

"அந்தக் கடமையைச் செய்ய திருமணம் தடையாயிருக்கும்னு நீ நினைத்து வேண்டாம்னு சொன்னால், என்னை மேலும் பாவியாக்க நினைக்கிறாய் சம்யு!"

"அப்பா..." - அப்பாவின் கால்களைப் பிடித்து மண்டியிட்டாள்.

"இல்லேப்பா. எதிரிக்கும் தீங்கு நினைக்காத தெய்வம்பா நீங்க. என்றைக்குமே எந்த பாவத்தையும் நீங்க செய்யலைப்பா. உங்களைப் பாவின்னு சொல்லி என் மனசை வேதனைப்படுத்தாதீங்கப்பா! உங்க இஷ்டப்படியே எல்லாம் நடக்கட்டும்பா..."

கண்ணீர் பெருக்குடன் அவள் கொடுத்த உறுதிமொழியால் அவர் இன்பக்கடலில் நீந்தினார். தன் கால்களைப் பிடித்துக் கொண்டு குழந்தைபோல அமர்ந்திருக்கும் மகளின் தலையை வருடினார்.

"ரொம்ப நன்றிம்மா..." அவரது குரலில் சூறாவளி அடங்கி தென்றல் தவழ்ந்தது.

★ ★ ★

புழுக்கம் தாங்காமல் மாடியறையின் ஜன்னலைத் திறந்து வைத்தான் ஸ்ரீராம். அந்த அடர்த்தியான இருளிலும் உயரமாகத் தெரியும் கோவில் கோபுரம் மெல்லிய வெளிச்சத்துடன் வீற்றிருந்த காட்சி அவனை ரசிக்க வைத்தது. எத்தனை சுவாரஸ்யமான மனத்திலே அமைதி வழியும் தருணமிது. நள்ளிரவில் தனது ஊர்மக்களை கடமையோடு காவல்காக்கிறதோ - சிரித்துக் கொண்டான். அவனிடமிருந்து நிறைவானதொரு நீண்ட பெருமூச்சு வெளிவந்தது.

பணம் சம்பாதிப்பதற்கு மட்டுமே முக்கியத்துவமளித்த பெற்றோரைப் போன்றில்லாமல், உறவுகளும் முக்கியமென உணர்ந்திருந்தான். அப்படியொரு உணர்வு அவனுக்குள் புகுந்ததற்கு காரணமே அவனது தனிமைதான்.

மனைவியோடு சேர்ந்து, ஐந்தாறு கப்பல்களும் சீதனமாக கிடைத்ததில் பெருமளவு உற்சாகம் சேர்ந்து, அதைப் பன்மடங்கு பெருக்கிக் காட்ட அவர் அரும்பாடு பட்டதென்னமோ உண்மை. அதற்கு மற்றுமொரு காரணமுமுண்டு. தனது கணக்கற்ற சொத்தின் ஒரே வாரிசான மகள் அதற்குச் சற்றும் தகுதியற்ற ஒருவனைக் காதலிப்பதை எந்தத் தகப்பனால் ஏற்றுக்கொள்ள முடியும்? ஆனால் காதலுக்கு கண்ணில்லை என்பதை இங்கு நம்பிதானாக வேண்டும்.

தன்னிடம் கைநீட்டி சம்பளம் வாங்கும் அவன் தோற்றத்தில் எடுப்பாக இருக்க, அதில்தான் விழுந்து விட்டார் சகுந்தலா. அவர் தந்தையைச் சுற்றியுள்ளவர்களுக்கு தனது சொத்து மட்டுமே கண்ணிற்குப்பட, இனி தனக்குப்பிறகு இவ்வளவு சொத்தையும், தனது மகளையும் பாதுகாக்க கடமை பொருந்திய ஒருவனே தேவை. மகள் காதல் வயப்பட்டிருப்பவன், பணத்தில் கறாரான பேர்வழி என்பதாலும், அவனுக்கென்று குடும்பம் இல்லாததாலும், மேலும் தான் மறுத்தாலும் மகள் தன்னை மீறி அவனை மணந்துகொள்வாள் என்பதாலும் வேறு வழியின்றி சம்மதித்தார். அதனாலேயே மாமனாரின் அன்புக்குப் பாத்திரமாகும் பொருட்டு, இவ்விதமாக பாடுபட்டு கணவனும், மனைவியும் சேர்ந்து உழைத்தனர். அப்போது பிறந்த ஒரே மகன் மீது அவர்களால் பாசத்தை அளவாகவே கொடுக்க முடிந்தது. சில சமயங்களில் அதையும் கொடுக்க முடியாமல் போயிருக்கிறது. அப்போது

சக நண்பர்களைப் போல பாட்டி, தாத்தா, அத்தை, மாமா என சொல்லிக்கொள்ள யாருமில்லாத ஏக்கம் அவன் தனிமைப்படுத்தப்படும்போது தோன்றி வலுப்பெற்றது. தன் தாத்தாவோ, தான் பிறந்த ஒரு வருடத்திலேயே போய்ச் சேர்ந்துவிட்டார். அம்மாவும், அப்பாவும் ஆளுக்கொரு நாடு சென்று தொழில் வளர்ச்சிக்காக பாடுபட்டுக் கொண்டிருந்தனர்.

பெற்றோரைவிட, தன்னை கண்ணும் கருத்துமாக கவனித்துக் கொள்ளும் தன் வீட்டுப் பணிப்பெண்ணுடன் வளர்ந்ததே அதிகம். காலப்போக்கில் அது பழகியும் போய்விட்டது. தனது இருபது வயதில் தாய் தன்னைவிட்டு முழுதாகப் பிரிந்தபிறகு தவித்தான். பிறகு அதிலிருந்து மீள தான் படிப்போடு தந்தையின் அறிவுரைப்படி தொழிலையும் கற்றுக்கொண்டான். அதன் பிறகு தந்தையின் உடல்நிலை பலகீனமாகிப் போகவே, படிப்பு முடிந்த கையோடு, முதலாளியாக முழுமையாகப் பொறுப்பேற்றான். தன் மகனை எண்ணி கவலைகொண்ட தந்தை, தனது இறுதி மூச்சில் மகனை அழைத்து தன் மனைவிக்கு மட்டுமே தெரிந்த கடந்த கால வாழ்க்கையைப் பற்றி கூறினார்.

இப்போது தந்தையை நினைத்து மனதார நன்றி கூறினான். அவன் ஒருபுறம் உறவுகளுக்காக ஏங்கும் சராசரி குணம் படைத்திருந்தாலும், மறுபுறம் பரம்பரை அனுபவமும், மேலான கல்வியும் சேர்ந்து இளம் வயதிலேயே தொழிலில் சாதிக்கத் துடித்துக் கொண்டிருக்கும் தொழிலதிபராகவும், எல்லோராலும் பாராட்டக்கூடிய வகையிலே சிறப்புப் பெற்றவனாகவும் இருந்தான். அவனுடைய இலட்சியமெல்லாம், விரல்விட்டு

எண்ணக்கூடிய தொழிலதிபர்களில் ஒருவராக இருக்கும் தான், முதலாவதாக வர வேண்டுமென்பதே!

இருந்தாலும் அவன் பெற்றோரைப் போன்றில்லாமல் ஏழை, எளியோர் என்ற பாகுபாடின்றி எல்லோரிடமும் சாதாரணமாக பழகக் கற்றிருந்தான். தொழில் சம்மந்தமாக பல்வேறு நாடுகளுக்குச் சென்றுவந்தவன், இனி இந்தியாவிலும் ஆரம்பிக்கத் தீர்மானித்தான். முதல் இரண்டு, மூன்று நாட்கள் அத்தையின் ஊரை மனதாரச் சுற்றிப் பார்த்து மகிழ்ந்தான். நல்ல தோழியாக தாட்சாயிணி, தாயாக அத்தை, சகோதரன் போல ராஜா என எல்லோரும் கிடைத்ததில் பெருமளவு மகிழ்ந்தான். அதன் பிறகு பட்டணம் சென்று அலுவலகம் ஆரம்பிக்கும் வேலையில் ஈடுபட்டான்.

அதற்கு முதல்படியாக விலையுயர்ந்த கார் வாங்கினான். அதற்கு மாலை போட்டு, திருட்டி கழித்து மருமகனோடு, மகளையும் அமரவைத்து அழகுபார்த்தாள் அத்தை. அக்கம் பக்கத்தினர் வாய்திறந்து பார்க்க சிந்தாமணி பெருமைபொங்க அதை ரசித்தாள். தன் மகளை அவனுக்கு உதவியாக இருக்குமாறு கூறினாள். படிப்பறிவில்லாத தனது மகனை எந்த விதத்திலாவது அவனோடு ஒட்டவைக்க எண்ணி, தாட்சாயிணிக்கு பைக் டிரைவராக இருந்த அவனை, கார் டிரைவர் பதவிக்கு உயர்த்தினாள். ஸ்ரீராம் அத்தைக்கு பட்டணத்தில் பெரிய வீடு வாங்கத் தீர்மானித்தான்.

"வேண்டாம்ப்பா. உன் மாமா இந்த ஊரைவிட்டு வரமாட்டார். தவிர இந்த ஊரிலேயே ஒரு வீடு விலைக்கு வருது. அதை வாங்கினால் உன் மாமாவுக்கு கௌரவமாகவும் இருக்கும்" என்றாள்.

அத்தையின் விருப்பத்தை உடனே நிறைவேற்றினான்.

கணவரை இதற்கு முன்பு மதித்ததில்லை. இனி தன் அண்ணன் மகனால் தன் வாழ்க்கை ஏற்றம் காணும் சந்தோசத்தால் கணவர் கண்ணுக்கே தெரியாமல் போனார். இவ்வளவு குறுகிய காலத்தில் இப்படி ஒரு வீட்டுக்கு சொந்தக்காரியாகிவிட்ட பிரமிப்பில் மேலும் பெருத்துப்போனாள். பணமிருந்தால் எல்லாமே எளிதுதான் என்று கர்வம் பொங்கக் கூறிக்கொண்டாள்.

மணிரத்தினமோ மனைவியின், பிள்ளைகளின் ஆட்டத்திற்கு பலிகிடாவானார்.

★ ★ ★

**கோ**வில் வளாகத்தில் தீவிர சிந்தனையோடு அமர்ந்திருந்தான் ஸ்ரீராம். கர ஓசை எழுப்பி அவனது சிந்தனையைக் கலைத்தாள் தாட்சாயிணி.

"என்ன பகல் கனவா?"

அவன் சிரித்தான்.

"தொந்தரவுக்கு மன்னிக்கணும். ஏதாவது பேசலாமே அத்தான்."

"ஓ! பேசலாமே."

"எங்கே உதடுதான் சொல்லுது. உள்ளம் எங்கேயோ இருக்கே. எதைப்பற்றிய சிந்தனைனு தெரிஞ்சுக்கலாமா."

"அலுவலகத்தைப் பற்றி - அதற்கு அடுத்து மேற்கொள்ள வேண்டிய வேலைகளைப் பற்றி தான். வேறொன்றுமில்லை."

என்னதான் எல்லோரிடமும் சகஜமாக பேசிப் பழகினாலும், தொழிலைப் பற்றிய தீவிர சிந்தனையிலும் அவ்வப்போது மூழ்கிவிடும் அவன் மீது மதிப்பு உருவானது. அவனது கம்பீரமான தோற்றமும், இந்த வயதிலேயே தொழில் நுணுக்கமும், பக்குவப்பட்ட பேச்சும் ஒன்று சேர்ந்து காதல் அம்பாக அவள் மனதுக்குள் ஊடுருவின. நிமிடத்திற்கொருமுறை தாட்சாயிணியின் பெயரை ஏதாவதொரு காரணத்திற்காக அவன் அழைக்கும்போதெல்லாம் மருகினாள். என்னதான் அவன் மாமா மகனானாலும், சிறுவயது முதலே ஒட்டிப்பழகிடாத அந்த உறவு மீது ஆரம்பத்தில் தயக்கமிருந்ததென்னவோ உண்மைதான். நாளடைவில் மெல்ல மாறத் தொடங்கினாலும், அவன் தகுதிக்கு தாங்கள் சற்றும் பொருத்தமானவர்களல்ல என்ற எண்ணமே வேலி போட்டு வைத்திருந்தது.

இப்போது அவன் கர ஓசை எழுப்பி அவளது சிந்தனையைக் கலைத்தான்.

“இப்போ நீங்க ஏதோ சிந்தனையில் இருக்கீங்க போலிருக்கு...” அவன் கேலியாகப் பேசினான்.

“இ... இல்ல. அதெல்லாம் ஒன்னுமில்லை...” அவள் யதார்த்த நிலைக்குத் திரும்பினாள்.

“அப்புறம் அத்தான்! உங்ககிட்ட ஒன்னு சொல்லணும். இந்த கோவிலைக் கட்டியது எங்க தாத்தா வீரநரசிம்மர் தெரியுமா?”

“அப்படியா?” - அவன் இன்னும் நன்றாக கோவில் கோபுரத்தை நோக்கினான்.

"ஆமா... எங்க தாத்தாதான் இந்த ஊருக்கே தலைவர் தெரியுமா? - விழியகலக் கூறியவளைப் பார்த்து புன்னகைத்தவன், "ஓ! தமிழ் சினிமாவுல காட்டுவாங்களே அப்படியா?... அதென்ன... நாட்டாமை... சரிதானா?"

"அடேயப்பா... பரவாயில்லையே இவ்வளவு தெரியுதே. ஆனால், எங்க தாத்தா அதுக்கும் மேலே தெரியுமா?"

பெரியவர்கள் சொல்லி மனத்தில் பதிந்த வார்த்தைகளை வஞ்சகமின்றி ஒப்புவிக்கும் அவளை அவனுக்குப் பிடிக்கவே செய்தது.

திடீரென அவள் வார்த்தைகளின் வேகம் குறைந்து சோகநடை போட்டன.

"எல்லாமே அவரோடு முடிஞ்சுபோயிருச்சு."

"ஏன் அப்படி? உன் அப்பா அவரைப் பின்பற்றலையா?"

"என் அப்பா ஓர் ஏமாளி. பிழைக்கத் தெரியாதவர். சூதறியாதவர். அதனாலதான் இந்தக் கோலம் அவருக்கு." - அன்னை பாலோடு ஊட்டிவிட்ட பகைமை உணர்வு, இந்த ஏதுமறியாப் பதுமையை இங்ஙனம் பேசவைத்தது.

அவனுக்கோ ஏதும் புரியவில்லை.

அவனது நிலை உணர்ந்து அவளும் மேலே தொடராமல், வேறு பேசலானாள். "அது சரி... தமிழ்ப் படத்தைப் பற்றி பேசறீங்களே. சிங்கப்பூரில் நிறையத் தமிழ்ப்படம் பார்ப்பீர்களா?"

"தமிழ்ப்படம் ஒரு... நான்கைந்து பார்த்திருக்கேன். அதுவும் அப்பாவுக்குத் தெரியாம நண்பர்களோடு பார்த்த படம்."

★ ★ ★

கணீரென்ற கோவில் மணி ஓசை எழுப்ப நாதஸ்வர மேளத்தோடு நண்பகல் பூசை ஆரம்பிக்கப்பட்டது. பேச்சை நிறுத்திவிட்டு இருவரும் உள்ளே சென்று பூசையில் கலந்து கொண்டனர். செல்போன் சிணுங்க, கைநிறைய குங்குமத்தோடு வெளி வளாகத்திற்கு வந்தவன், சிற்பத் தூணின் ஓரத்தில் கொட்டிவிட்டுப் பேசினான்.

"தாட்சாயிணி, நாம உடனே கிளம்பணும். எனக்கு ஒரு வேலை இருக்கு. போகலாமா..." என்று விரைந்தவனைப் பின்தொடர்ந்தாள் தாட்சாயிணி. செருப்பை அகற்றிவிட்டு அவசரமாக உள்ளே நுழைந்த சம்யுக்தா தன்னைக் கடந்து அவசரமாக செல்லும் தாட்சாயிணியைப் பார்த்தவள், அவளது பார்வைக்காக ஏங்கியவளாய் ஒரு கணம் சிலையாக நின்றாள். அவளுக்கு முன் செல்லும் ஆடவனையும் அவள் கவனிக்கத் தவறவில்லை.

'யாரவன்? அவனோடு இவள் செல்கிறாள்? இவ்வளவு நெருக்கமாக...' புருவம் சுழித்து யோசித்தவள், பலமாக குலுக்கிக் கொண்டு தான் ஏன் இதைப்பற்றி யோசிக்கனும். தானாடாவிட்டாலும் தன் தசையாடும் என்பார்களே! இதுதானா? மனத்திற்குள் சிரித்துக் கொண்டவள், அவசரமாக உள்ளே சென்றாள். கோவில் நடைக்கதவு அடைக்கப்பட்டு விட்டது.

மனம் நிறைய கேள்விகளைச் சுமந்துகொண்டு விடை வேண்டி கடவுளிடம் பிரார்த்திக்க வந்தவள் துவண்டு

போனாள். அதுவும், திருமணத்திற்காக தான் சம்மதம் தெரிவித்த பிறகு கடவுளிடம் ஆசீர்வாதம் வாங்குமாறு தந்தை அனுப்பி வைத்தார்.

“என்னம்மா சம்யுக்தா, இத்தனை நாழி கழிச்சு வர்றியே. சீக்கிரம் வந்திருக்கப்படாதா!” குறைபட்டுக் கொண்டே குருக்கள் சென்றார்.

‘ஓம் நமச்சிவாய!’ உதடுகள் முணுமுணுக்க திரும்பியவளது விழிகளில் சிற்பத்தூண் ஓரத்தில் கொட்டப்பட்டிருக்கும் குங்குமம் பளிச்சென பட்டது.

அவள் ஏமாறவில்லை. நிம்மதி படர்ந்தது. கடவுளின் நாமத்தை உச்சரித்தவாறு அந்த குங்குமத்தை எடுத்து தனது நெற்றியில் இட்டுக் கொண்டாள். ஏனோ அவளது இதயம் படபடத்தது. எதனால்? கடவுள் அவளுக்கு இப்போது விடையளிப்பது போலவே உணர்ந்தாள். அது என்ன? ஓ! தனது திருமணத்திற்கு கடவுள் தரும் ஆசீர்வாதமா? அப்படி எடுத்துக் கொண்டாலும் வேறொரு புதிரும் மறைந்திருப்பதாகவே உள்ளம் உணர்த்தியது. எது எப்படியோ, யோசிக்க நேரமில்லை. மனத்திலே ஒத்திகை பார்த்து வைத்திருக்கும் கேள்விகளை பார்த்திபனிடம் கேட்டுவிட வேண்டும் எனத் தீர்மானித்துக் கொண்டாள்.

பார்த்திபன் மிகவும் யதார்த்தமான மனிதர். தான் மதிக்கத்தக்க ஒரு பதவியிலிருந்தும் கொஞ்சம்கூட பகட்டில்லாத மனிதர். மற்றவரின் உணர்வுக்கு மதிப்பு கொடுக்கும் பண்பாளர். இவையெல்லாம் ஒன்றாகி ஒருவித மதிப்பே உருவானது அவளுக்கு. இன்றளவும் அம்மதிப்பில் துளிகூட மாற்றமில்லை. ஆனால், அவரே தனக்கு கணவராவார் என்று சிறு கற்பனையும் செய்ததில்லை.

அப்பா, தனது திருமணத்தைப் பற்றி பேசிய போதெல்லாம் திருமணத்தின் மீது வெறுப்பில்லை. தனக்கு மட்டும் நேர்ந்த அச்சம்பவத்தால் பாதிக்கப்பட்டவளென்ற தாழ்வு மனப்பான்மை மட்டுமே தீவிர ஆட்சிபுரிந்து கொண்டிருந்தது. இன்றளவும் அவனை கற்பனையில்கூட கணவனாக வடித்துப் பார்க்கத் தோன்றவில்லை. ஏன் இப்படி? ஒருவேளை பலவித பொறுப்புகளும், கடமைகளும் கோடிட்டுக் காட்டியிருக்கும் வழியிலே பயணிப்பதால் இதுபோன்ற எண்ணங்கள் குறுக்கிடவில்லையோ?

'கீச்'சென்ற சத்தத்தோடு மைனா ஒன்று அவள் பார்வைக்கு நேரெதிரே வந்தமர்ந்தது. இரு விநாடிகளில் அதன் ஜோடி மைனாவும் பறந்துவந்து உடனமர்ந்தது. அவை தங்கள் அன்பை அவற்றுக்கே உரிய தன்மையில் வெளிப்படுத்திக் கொண்டன.

தனது காதருகே தனது ஜோடி ஏதோ கிசுகிசுக்க நாணத்தால் அவ்விடம் விட்டு சற்றுத் தள்ளி பறந்தமர்ந்தது. அதைப் பின்தொடர்ந்த மைனாவை ரசனையோடு பார்த்துக் கொண்டிருந்தவளது முகம் மாறியது. தனித்து வாழ முடியாத உயிரினம் ஏதுமில்லையோ? துணையில்லாத உயிரேது? வாழ்க்கைத் துணை முக்கியம் வாய்ந்தது என்பதை உணர்ந்ததால்தான் முன்னோர்கள் குழந்தைகளுக்குக் கூட துணை தேடி வைத்தார்களோ? குறுநகை பூத்துக் குலுங்கும் சூதறியா குழந்தைகளை கட்டுக்குள் அடக்கி கசக்கிப்பிழிய எப்படித்தான் அவர்களுக்கு மனம் வந்தது.

கண்ணீர்த் துளி அவள் கரங்கள் மீது பொட்டுக்களாய் உதிர்ந்தன.

பார்த்திபன்! எவ்வளவு மேலான குணம் படைத்தவர். ஒவ்வொருமுறையும் தனது மனதில் ஒழித்து வைத்திருக்கும் காதலை நாகரிகமாக மறைத்துக் கொண்டு, யதார்த்தமாகப் பேச எத்தனை சிரமப்பட்டிருப்பார். அவரை மணக்க எனக்குத்தான் தகுதியிருக்கிறதா? பிடிவாதமாய் என்னை மணக்க நினைக்கும் அவருக்கு சற்றும் பொருத்தமே இல்லாதவள் நான்.

"ரொம்ப நேரமா காத்திருக்கியா சம்யுக்தா?"

தனக்கு பின்புறமிருந்து வந்த அந்தக் குரலுக்கு சொந்தக்காரர் பார்த்திபன் என்பது எளிதாகத் தெரிந்தது.

எழ முற்பட்டவளை அமரச் சொன்னான்.

"வாங்க சார். நான் சிரமம் கொடுத்துட்டேன். மன்னிக்கனும்."

புன்னகைத்தவாறு அவளுக்கெதிரே அமர்ந்தான்.

"முதல்லே சார்ங்கற மரியாதை தேவைதானா? அப்புறம் இதில் சிரமப்பட என்ன இருக்கு?"

"இல்ல சார் உங்ககூட பேசணும்னு நான் சொன்னேன் இல்லையா?"

"ரொம்ப சந்தோசமா இருக்கு சம்யுக்தா. நான் உனக்கு நன்றி சொல்லணும்."

"வேணாம் சார். நான்தான் உங்களுக்கு நன்றி சொல்லணும் சார். என்னுடைய கடந்த கால வாழ்க்கையைப் பற்றி தெரிஞ்சும் கொஞ்சமும் தயங்காம எங்கப்பாவிடம் பேசிய உங்களுக்கு உண்மையிலேயே பெரிய மனசுதான் சார்."

அவள் இன்னும் சாரென்றே அழைத்ததை அவன் கவனிக்கத் தவறவில்லை.

"அறியாத வயதில் நடந்த விஷயத்தை இப்ப கிளற வேண்டாம் சம்யுக்தா! நீ கல்யாணத்துக்கு சம்மதித்ததுக்கு நன்றி. உன் பேச்சையும் மீறி உன் அப்பாவிடம் இதுபற்றி பேசியது குறித்து உனக்கு வருத்தம் இருக்கலாம். என்னை மன்னிப்பாயா?"

"அய்யோ என்ன சார் நீங்க. இப்படியே ரெண்டு பேரும் தொடர்ந்து, நன்றி, மன்னிப்புனு கேட்டுக்கிட்டே இருக்கறதுக்காகவா தனியா பேசணும்."

அவளின் குறும்புப் பேச்சு அவனுக்கு பிடிக்க, சிரித்தவாறு, "நான் உன்னிடம் ஒன்று பேசணும் சம்யுக்தா! முதல்ல நீ சொல்ல வேண்டியதை சொல்லு."

'ஒரு விஷயமாக இருந்தால் எளிதில் சொல்லிவிடலாம். மலை மலையாய் குவிந்திருக்கும் கடமைகளைப் புரியவைத்து அதற்கு எவ்வித இடையூறும் விளைவிக்கக் கூடாதென்ற கோரிக்கை வேறு. சம்மதிப்பாரா? அப்படி யோசித்தால்தான் என்ன நஷ்டமாகிவிடப் போகிறது? நானாகவா திருமணத்திற்கு சம்மதித்தேன்?'

"ஹலோ!" அழுத்தமாக உச்சரித்தபோது சிந்தனை கலைந்தவள் நீண்டதானதொரு பெருமூச்சை வெளியிட்டாள். அம்மூச்சில் பொதிந்திருந்த அர்த்தங்கள்தான் எத்தனை? கடவுள் மட்டுமே அறிந்த அவ்வர்த்தங்களை அவனும் அறிந்திருந்தான்.

"சம்யுக்தா, நீ சிரமப்பட வேண்டிய அவசியமே இல்லை. எல்லாம் எனக்குத் தெரியும்." புன்னகையோடு அவன் கூறிய விதம் அவளுக்கு வியப்பை உண்டாக்க... "நீங்க எதைப்பற்றி..."

“அப்பா சொன்னார். எல்லா விவரமும் எனக்குத் தெரியும். இதைப்பற்றி நீ யோசிக்கவே தேவையில்லை. இதுவே திருமணமாகியிருந்தால் கணவன்ங்கற உரிமையோடு அதிகமாகவே பேசியிருப்பேன்.”

“ரொம்ப நன்றி சார். அப்புறம்...”

“ரொம்ப யோசிக்காதே. இதுக்கு மேல் அப்பா ஏதும் சொல்லலை. நானே சொல்றேன். அப்பாவை நம்மோடு வெச்சுக்கணும், அதானே!”

அழுத்தமாக ஏறிட்டவாறு சொன்னபோது வாயடைத்துப் போனாள்.

“சார். இது எப்படி உங்களுக்குத் தெரியும்?”

“சாதாரண விஷயம். என் அம்மாவுக்கு எல்லாமே நான்தான். அது மாதிரிதான் உங்கப்பாவுக்கு நீயும்! இல்லையா. எனக்கும், உனக்கும் கடமையில் மட்டும் வித்தியாசப்படுமா என்ன?” - வெறும் உதட்டாலல்லாமல் உள்ளார்த்தமாய் சொன்ன அவன் மீது ஒருவித மதிப்பே உருவானது. நன்றியோடு பார்த்தாள்.

“ரொம்ப நன்றி சார்...” உருக்கத்தோடு சொன்ன வார்த்தைகளில் அவன் மனம் குளிர்ந்தது.

“அப்புறம் நான் ஒன்று சொல்லணும் சம்யுக்தா.” எழுந்தவன் மிகப்பெரிய தயக்கத்திற்குப் பிறகு, “எங்கம்மாவுக்கு உன் கடந்த காலத்தைப்பற்றி தெரிய வேண்டாம்.”

அதிர்ச்சியோடு நிமிர்ந்தவள் வித்தியாசமாய்ப் பார்த்தாள் அவனை.

★ ★ ★

மணிரத்தினம் தரையில் விழிகளைப் பதித்திருந்தார். உள்ளத்தின் உஷ்ணம் வியர்வைத் துளிகளாய் வெளியேறியது. கட்டிலினருகே நின்று கொண்டிருந்த வாத்தியார் கணபதியின் உதடுகள் ஓயவில்லை. அவர் கேள்விப்பட்ட விஷயத்தை ஒப்புவித்துக் கொண்டிருக்க, மணிரத்தினத்தின் நெஞ்சம் படபடத்தது.

'இதையெல்லாம் நான் கேட்கணுமா? ஆத்தா ஒரு வழி விடும்மா...' மனம் புலம்பியது.

கணபதி அவரருகே அமர்ந்தார். "ஐயா...! கஷ்டம்னு வந்து வாசலில் நின்றபோதெல்லாம் வீட்டுக்குள்ளே கூப்பிட்டு வயிறையும், மனசையும் நிரப்பி அனுப்புவார் உங்க அப்பா. அவர் செய்த உதவியாலேதான் நான் படிச்சு இன்னிக்கு வாத்தியாரா உலாவிட்டிருக்கேன். விஷயம் காதுக்கு வந்ததும் மனசு பொறுக்கலை. பேறுகாலத்துக்கு வந்த மூத்த மக, கல்யாணத்துக்கு காத்திருக்கும் அடுத்தவ இதுகளுக்கு செலவு செய்து அனுப்புவதே பெரிய கடமை. என்னால எந்த வகையிலும் உங்களுக்கு உதவமுடியலைனு வேதனையாயிருக்கு. என்னை மன்னிச்சிடுங்கையா. நாலுபேரு நாலுவிதமா பேசற அளவுக்கு விட்டுடாதீங்கய்யா. தம்பி பாவம். ரொம்ப வேதனைப்படறார். உடலும், மனமும் பலகீனமாயிருக்கார். ஊரு ரெண்டுபட்டா கூத்தாடிக்கு கொண்டாட்டம், அடுத்தவனுக்கு இடம் கொடுத்துடாதீங்கய்யா. வெளிநாட்டுத் தம்பியிடம் சொல்லி எப்படியாவது வீட்டை மீட்டிடுங்கய்யா."

அடுக்களையினுள் பாத்திரங்களின் ஓசை மிக பலமாகவே கேட்க, அடுத்து சிந்தாமணி குரலொலியில் திடுக்கிட்டுப் போனார் கணபதி.

'அவசரப்பட்டுட்டோமோ, உள்ளே இந்த ராட்சசி இருப்பது தெரியாமல் சொல்லிட்டோமே' - அவரது விழிகள் கலவரமானது.

"யாரோட மானத்தைக் காப்பாத்த யார் உதவணும்? உன் வேலையைப் பார்த்திட்டுப் போய்யா. உன் மகளை கரையேத்துற வழியைப் பாரு போ. ஊருக்கு மட்டும் உபதேசம். பேறுகாலத்துக்கு வந்தாளா? இல்லை புருஷன் துரத்திவிட்டுட்டானு ஊரே பேசுது. முதலில் அதை சரி செய்து அனுப்பும் வழியைப்பாரு. போ... இன்னொருமுறை இதைப்பற்றி யாராவது பேசிட்டு வந்தா, மானம், மரியாதை கெட்டுப்போயிடும்."

கணபதி உக்கிப்போனார். மணிரத்தினம் தலைகவிழ்ந்தார். அவர் அமைதி காப்பதை மனைவிக்கு அடக்கம் என்றும், சாது என்றும் பலரும் நினைத்தனர். இன்னும் சிலர் மிகக் கேவலமான முறையில் விமர்சித்தனர். அவர் ஒரு பணச்சத்தற்ற நோயாளி என்பதை அவ்வப்போது அவருக்கு சுருக்கென குத்தியதால் ஏற்பட்ட காயமே அதற்குக் காரணம்.

ஏதும் பேசாமல் கவிழ்ந்த தலையோடு வெளியேறிய அதே நேரம் ஸ்ரீராமோடு தாட்சாயிணி உள்ளே நுழைந்தாள்.

அம்மா ஏதேதோ பேசிக் கொண்டிருப்பதையும், அப்பாவின் மௌனத்தையும் கண்டவள், "ஏன்மா இப்படி கத்தற? என்ன விஷயம்?" என்றாள்.

ஸ்ரீராம் அவ்விடம் விட்டு நகர்ந்ததும், கணபதி சொன்ன விஷயத்தைக் கூறி மகிழ்ந்தாள். அவளது நெடுநாள் கனவு நனவானதாகவும், தனக்குச் செய்த பாவத்துக்கு அந்நிலை ஏற்பட்டதாகவும் கூச்சலிட்டாள்.

சிறு வயதிலிருந்தே கேட்டு வந்த கதை கட்டுக்கதை என்பதையறிந்திடாத பிள்ளை, தாயைத்தவிர அனைவரும் குற்றவாளிகள் என்று நினைக்கத்தானே செய்வாள். அம்மாவின் புலம்பலை நியாயமெனக் கருதி அமைதியானாள்.

ஆனால் அம்மா விடுவதாயில்லை. தனது நல்ல மனம்தான் மண் குடிசையிலிருந்த தங்களை மாளிகைக்கு குடியேற்றியது என்று கூவிப் பெருமை கொண்டாள். இடையிடையே தன் கணவரின் முகத்தை நோட்டம் விட்டுக் கொண்டாள். அவரது தளர்ந்த முகம் இறுகிக் கிடந்தது. அவளது வாய் ஓயவில்லை. இவரை மணந்ததால், கேவலம், அவமானம் ஏற்பட்டு விட்டதாகவும், நலிந்துபோன தனது குடும்பத்தை சீர்தூக்கி நிறுத்த அவர் எந்தவகையிலும் உதவாத கையாலாகாதவன் என ஏற்கெனவே முத்திரைக் குத்தப்பட்டதன் விளைவால், அவருக்கென உரிய கோபதாபம், வேதனை, சந்தோசம் எல்லாமே மழுங்கிப்போய் விட்டிருந்தன. இவற்றையும் கடந்து அவ்வப்போது மற்றவர்களின் மனச்சாட்சியைத் துளைக்கும் வார்த்தைகளால் தன்னையுமறந்து எட்டிப்பார்க்கும் பாச உணர்வையும், அனல் கக்கும் வார்த்தைகளைக்கொண்டு பொசுக்கிவிடுவாள் சிந்தாமணி. இப்போதும் அப்படித்தான் ஆரம்பித்தாள். என்னதான் மனைவியை எதிர்க்கத் தைரியமில்லாவிட்டாலும் அதைக் கேட்டு அமர்ந்திருக்குமளவுக்கு முழுவதுமாய் மழுங்கிவிடவில்லை. நாற்காலியை விட்டு எழுந்தவர் விரைந்து வெளியேறினார். சிந்தாமணி சுவரைப் பார்த்துப் புலம்பத் தொடங்கினாள்.

★ ★ ★

**வீ**தியில் உள்ள அனைவரும் அக்காட்சியைக் கண்டு ஆச்சரியமுற்றனர். கால்கள் தேய ஓடி ஆடித் திரிந்த வீதி இது. பசியுற்றோரெல்லாம் பசியாற்றிக் கொள்ள ஓடிவந்த வீதி. தங்களுக்கு எந்தக் கஷ்டம் ஏற்பட்டாலும், உதவி நாடி, ஓடிவரும் அரண்மனை வீதி. அவ்வூரில் பாதி வரையிலும் ஆக்கிரமித்திருக்கும் அரண்மனை வீதி, அமைதியும், நீதியும், நேர்மையும், மகிழ்ச்சியும் கொண்டு மிடுக்கோடு தணித்துக் காணப்படும். அந்த மக்களிடையே பொறாமையில்லை, போட்டியில்லை. அதனால் யாருக்கும் எந்த சண்டையுமில்லை, எதிரியுமில்லை.

புயல், காற்று, மழையால் அடைக்கலமின்றி தவித்தபோது தாயாக அரவணைத்த அரண்மனை வீடு இதோ! பஞ்சம் பிழைக்க வந்த ஊருக்குள் நுழைந்த எவரும் முதலில் நாடிச் செல்வது இதே அரண்மனைதான். வாழ்வாங்கு வாழ்ந்த 'வீரநரசிம்மர்' அரும்பாடுபட்டுக் கட்டிய அரண்மனை வீடு!

சகோதரப் பகையால் கேட்பாரின்றி அநாதையாய் நிற்கும் காட்சி... "இதைக் காணவா மூன்று வருடங்கள் தவமிருந்தேன். என் குல கௌரவத்தையே புதைத்துவிட்ட பாவியாகி நிற்கிறேனே. என் தாயே!..." தளர்ந்த உடல் நடுங்க குலுங்கி, குலுங்கி கரைந்தார் சுப்புரத்தினம்!

கணபதி ஆதரவாய்த் தாங்கிப் பிடித்துக் கொண்டார்.

"ஐயா! இதுக்குதான்யா இங்கு வரவேண்டாம்னு சொன்னேன். வாங்கய்யா போகலாம்." தன் மணிக்கட்டைப் பிடித்த கணபதியின் கரத்தை மறுகையால் ஆவேசத்தோடு அகற்றிவிட்டு அவரைப் பார்வையால் எரித்தார். மங்கிப்போன விழிகளாலும், வார்த்தைகளாலும் தனது கோபத்தைக் காட்ட முடியாவிட்டாலும், உடலின்

அதிகபட்ச அளவு நடுக்கம் அவரது கடுங்கோபத்தை வெளியிட்டன.

'சாதுவான இம்மனுசனிடம் இத்தனை ஆவேசமா?' கணபதி மிரண்டவாறு நின்றார்.

அரண்மனை வீட்டு வாசலில் ஒய்யாரமாய் நின்று கொண்டிருந்த புல்லட்டை நோக்கி தன் பிரம்பைக் கொண்டு ஓங்கி வீச, அது சத்தம் எழுப்பி கீழே விழுந்தது.

உள்ளேயிருந்து பதைப்போடு ஓடிவந்தார் புல்லட் சேகர். அவரைத் தொடர்ந்து சினிமா படத் துணை இயக்குநர் கதிரேசன்.

புல்லட் சேகர் வியப்போடு பார்த்தார் சுப்புரத்தினத்தை. அவரின் பின்புறம் கலவரத்தோடு நிற்கும் கணபதியை கேள்விக்குறியோடு நோக்க, "அ... அதுவந்து... ஐயா ஏதோ பேசணுமாம்..." பிசிறிய குரலில் கூறினார்.

வீதி மக்கள் ஒன்றுகூடி நின்று வேடிக்கை பார்த்தனர்.

தனது மங்கிய விழிகளால் சேகரை நோக்கி, "நான் கேள்விப்பட்டது உண்மையா?" என்றார் சுப்புரத்தினம். தளர்ந்துபோன குரலில்தான் எத்தனை ஒரு அழுத்தம். மறந்துபோன, மங்கிப்போன அவரது குரல் தாய்மண்ணை மிதித்ததும், புத்துயிர் பெற்றது போலும்!

சேகர் எச்சில் விழுங்கினார்.

என்னதான் பணபலம் கொண்டவராய் இப்போது உலாவினாலும், தங்க இடமின்றி நாடோடிகளாய் அன்றைய காலத்தில் உலாவியபோது நரசிம்மரின் உதவி நாடி வந்த குடும்பம்தானே! அது மறைந்து போகுமா

என்ன? அந்த தயக்கம் அவருக்கு இருந்தாலும், சகோதரப் பகையை பயன்படுத்தி அரண்மனையைத் தன் வசமாக்க சூழ்நிலையை பயன்படுத்திக் கொண்ட தந்திரக்காரன்.

தன் மனைவியின் உயிரைக் காப்பாற்ற கௌரவம் பார்க்காமல், உதவி கேட்டு மகளோடு படியேறி வந்து நின்றபோது அவள் கூனிக் குறுகி நிற்குமாறு அவளை விழிகளால் துளைத்துவிட்டு அரண்மனை வீட்டை மூன்று வருடங்களுக்கு அடமானமாய் எழுதி வாங்கிவிட்டு ஐந்து லட்சங்களைத் தூக்கிக் கொடுத்தார்.

துளிகூட இதில் உடன்பாடில்லாவிட்டாலும் மனைவியின் உயிரா, கௌரவமா எனும்போது கௌரவம் பின்தங்கிவிட்டது.

பணத்தோடு மனைவியின் உயிரும் கரைந்துபோனது. எல்லாமே கனவுபோல் நடந்துவிட்ட மாயம்.

“என்னய்யா இவ்வளவு தூரம்? வீட்டைப் பார்க்கணுமா?” உரக்கக் குரல் கொடுத்துக் கேட்டார் சேகர்.

“சேகர்... நான் கேள்விப்பட்டது உண்மையா?” அதிகாரமான குரல் ஒலி கேட்டு, கேலிப் புன்னகையோடு, “நீங்க கேள்விப்பட்டது என்னதுனு எனக்குத் தெரியாதே...” என்றார்.

“ஐயா அது வந்து...” கணபதி குறுக்கே புகுந்து பேச முற்பட, “யோவ்! நீ யாரு? உனக்கும், எனக்கும் என்ன இருக்கு... உன் வேலையைப் பார்த்துட்டுப் போ. உன் மூத்தப் பொண்ணு கல்யாணத்துக்கு வாங்கிய தொகையை பைசா பாக்கியில்லாம உடனே கொடுக்க முடியும்னா பேசு!”



ஆணவப் பேச்சு அவரைக் கோழையாக்கி பின்தள்ளியது.

துணை இயக்குநர் கதிரேசன் சற்றுத் தயக்கத்தோடு "யார் சார் இவங்க?" என்றார்.

"இந்த அரண்மனைக்குச் சொந்தக்காரர்..." கேலிச்சிரிப்போடு கூறினார் சேகர்.

சுப்புரத்தினத்தின் உடலில் உஷ்ணம் பரவியது.

"இந்த வீடு இப்ப அடமானத்தில் இருக்கு. இதை பயன்படுத்திக்கொள்ள உரிமை இருக்கு." இவரும் உரக்கக் குரல் கொடுத்தார்.

"சினிமா எடுக்க பொருத்தமாயிருக்கும்னு சார் கேட்டு வந்தார். நான் சரின்னுட்டேன். இதுல என்ன குற்றத்தைக் கண்டுபிடிச்சு இப்படி வாசலில் நின்னு கூவுறீங்க."

"அரண்மனை எங்க சொத்து. சினிமாவுக்கு விட நீ யார்?" உதடுகள் துடிக்க செய்வதறியாது கேட்டவரிடம், "இதென்னடா பெரிசுக்கு எப்படி புரிய வெக்கிறதுனு தெரியலையே. தெரிஞ்சுதான் பேசுறாரா... ம்..." தாடையைத் தடவியவாறு முணுமுணுத்தார்.

"நான் வேணும்னா அந்த பெரியய்யாவிடம் கேட்கட்டுமா சார்?" கதிரேசன் கேட்டார்.

"அட நீங்க வேற சார். அவசியமில்லை. நீங்க அடுத்த மாதம் தாராளமா எடுக்கலாம் சார்" என்றவர், சுப்புரத்தினத்தை நோக்கி உரக்க கூறினார்.

"இவ்வளவு பேசறீங்களேய்யா... அடுத்த மாதம் சூட்டிங் ஆரம்பிக்கப்போறாங்க. அதுக்குள் முடிஞ்சா உங்க

வீட்டைத் திருப்பப் பாருங்க... நீங்க வாங்க சார்... நாம சுத்திப் பார்க்கலாம்" என்றவர்... "அப்ப... கவர்ச்சி நடிகை மாயா கண்டிப்பா வருவாங்கதானே சார்..." கரைப்பற்கள் பளிச்சிட கேட்டுக்கொண்டே உள்ளே சென்றார்.

எதுவும் செய்ய முடியாத தன் நிலைகுறித்து உள்ளுக்குள்ளே குலுங்கினார். 'பசியுற்ற மக்களுக்கு பசியாற்றிய கோவில் இது. நிச்சயம் இது எங்களுக்கே திரும்பக் கிடைத்துவிட வேண்டுமம்மா... வீரகாளியம்மா...' கண்ணீர் முத்துக்களாய் மண்ணில் உதிர்ந்தன.

"ஐயா, வாங்கய்யா வீட்டுக்குப் போகலாம். இப்படி நீங்க வருவீங்கன்னு தெரிஞ்சிருந்தா உங்களிடம் விஷயத்தைச் சொல்லியிருக்கவே மாட்டேன். பாப்பாவுக்கு தெரிஞ்சா நான் கூட்டிட்டு வந்ததுக்காக என்னை கோவிச்சுக்கும்..."

"வேண்டாம் கணபதி. என் பொண்ணால இதைத் தாங்கிக்கொள்ள முடியாது. தெரியவேண்டாம்..." சற்று முன்பிருந்த வேகம் பண்மடங்கு குறைந்து கால்களிலும் வலு குறைந்துபோய் குரலும் சோர்ந்து போயிருந்தது.

வீதி மக்கள் பரிதாபமாக பார்த்தவாறு அவர்களுக்கு வழிவிட்டனர்.

"எப்படியெல்லாம் வாழ்ந்த மனுசன்... ம்..." பெருமூச்சை வெளியிட்டவாறு கூட்டம் கலைந்தது.

## பாகம் - 4

**(அன்று)**

ராஜேஸ்வரி சம்யுக்தாவுக்கு மாமியாராக மாறாமல் அத்தையாகவே இருந்ததால் அவளது வாழ்க்கை ஒளிவீசத் தொடங்கியது. ஆனால், தமக்கை சென்றபின்பு சுப்புரத்தினம் உள்ளுக்குள்ளே வேதனைக்காளானார். பத்தொன்பது வயதிலிருந்தே தாயாக இருந்து வளர்த்து ஆளாக்கியவள் எப்போதாவது வருவாள் என எண்ணி ஏமாந்து போனார். அவர் மனம் சகோதர பாசத்திற்கு ஏங்கியது. இத்தனை வருட காலங்களில் அவர் மனமாற்றத்திற்கு ஆளாகியிருப்பாரென எண்ணியவருக்கு அன்று பதில் கிடைத்தது. சம்யுக்தாவுடன் கோவில் சென்றபோது அண்ணன் மணிரத்தினத்தைக் கண்டு உருகினார். அவர் காலில் விழுந்து எப்படியாவது அவர் மனத்தைக் கரைய வைக்க எண்ணி, அவரருகே பாசத்தோடு நின்றார். தம்பியை எதிர்பார்த்திடாதவர் அவரது அருகாமையில் கொஞ்சம் மனம் இளகவே செய்தார்.

மிகச் சரியாக அந்நேரம் சிந்தாமணி கோவில் வளாகத்தை சுற்றிமுடித்து வந்தபோது இருவரின் கோலம் கண்டு கொதித்தாள். அதைவிட கணவனின் விழிகளில் வழிந்த பாசத்தைக் கண்டவளால் தாங்க முடியவில்லை.

"இன்னும் எங்களை விடமாட்டாயா? பாவ மன்னிப்பு கேட்க வந்தாயாக்கும். நீ செய்த பாவத்துக்குத்தான் அனுபவிச்சுட்டியே!" என்றாள் சம்யுக்தாவை சுட்டிக்காட்டி. அவள் தந்தையின் பின்னே பதுங்கினாள்.

"யாரையும் நம்பி இன்னும் ஏமாற வேண்டாம். வாங்க" - உரக்கக் குரலெழுப்பிச் சொல்லிவிட்டு நடந்தாள் மௌனமாக. மணிரத்தினம் பின்தொடர்ந்தார்.

சுப்புரத்தினம் மகளைக் கட்டிக்கொண்டு கலங்கிப் போனார்.

அந்த ஏக்கத்தோடும், மனச்சுமையோடும் காலங்கள் கரைந்தன. அதன் பிறகு அண்ணனை நேரே சந்திக்கும் வாய்ப்பு கிடைக்கவேயில்லை.

ஒருவேளை எங்காவது அண்ணன் இவரைக் கண்டாலும் இவரறியாமல் நகர்ந்துவிடுவார்.

வீரநரசிம்மரின் உதவியால் படித்து வாத்தியாராகி அவ்வூரில் பணிபுரியும் கணபதி சம்யுக்தா பட்டப்படிப்பு படிக்க உதவினார். படிப்பதற்கு பட்டணம் சென்றுவர சுப்புரத்தினம் தயங்கினார். கணபதியின் தூண்டுதலாலும், ஏற்கெனவே மகள் வாழ்க்கை தன்னால் பாதிக்கப்பட்ட குற்ற உணர்வு இருந்ததாலும், சகோதரியின் விருப்பத்தையும் நினைவில் கூர்ந்து சம்மதித்தார். அவளும் படித்து முடித்தாள். ஆனால் அப்போது கொஞ்சம் கொஞ்சமாக உடல்நல பாதிப்பிற்கு ஆளாகிக் கொண்டிருந்த அவளது அம்மா முழுவதுமாக படுக்கையில் வீழ்ந்தாள். வைத்தியரின் கைவைத்தியம் பலிக்கவில்லை. பட்டணம் சென்று வைத்தியம் பார்த்தனர்.

ஏதேதோ சொன்னார்கள் மருத்துவர்கள். பணம் நீராகக் கரைந்தது. அப்போதுதான் அறுவை சிகிச்சைக்காக அதிகமாக பணம் தேவைப்பட புல்லட் சேகரின் உதவியை நாட வேண்டிய நிலைக்குத் தள்ளப்பட்டார். ஆனால், பயனில்லாமல் போனது. அதன் பிறகு இந்த மூன்று வருடங்களில் தந்தை மிகவும் பலகீனமானார்.

தன்னை நம்பி ஒப்படைத்த வீட்டை அடமானம் வைத்துவிட்டமைக்காக வேதனைப்பட்டே அவர் படுக்கையில் வீழ்ந்தார். அவர் தன் மகளை மட்டுமே நம்பியிருந்தார். அவளும் அவருக்கு தாயாகவே மாறினாள்.

## பாகம் - 5

**(இன்று)**

**நி**லைக் கண்ணாடியின் முன்பு நீண்ட நேரமாக தன்னையும் மறந்து நின்ற சம்யுக்தா நினைவுக்கு வந்தபிறகு நாணி தலைகவிழ்ந்தாள். அதிக ஒப்பனை ஏதும் செய்துகொள்ளவில்லை. மனம் முழுக்க சந்தோசம் மட்டுமே குடியிருந்தால்தான் இதெல்லாம் தோன்றுமோ? முதலில் திருமணத்தை அவள் கனவில்கூட நினைக்கவில்லை. அதிலும் பார்த்திபன் மீது அவள் வைத்திருந்த மரியாதையால் இப்போதும் அவளை கணவனாக நினைக்க முடியவில்லை. எல்லாவற்றையும்விட அன்று அவன் கோவிலில் அவன் கூறிய வார்த்தை அவளை குழம்ப வைத்தது. கடந்தகால வாழ்க்கை பற்றி அவனது தாயிடம் மறைக்க வேண்டுமாம். அம்மா அக்காலம். இதை எளிதாக எடுத்துக்கொள்ள முடியாதாம். அப்படி மறைத்தாவது தன்னையே மணக்க வேண்டுமென்பதில் கொண்ட உறுதி தன் மீது அவன் வைத்துள்ள காதலை வெளிப்படுத்துவதாகவே இருக்கலாம்.

ஆனால், அக்காதலையே முழுமனத்தோடு தன்னால் ஏற்றுக்கொள்ள முடியாத நிலையில், அப்படி மறைத்து ஏன் அவருக்கு மனைவியாக வேண்டும்? அதனால் தனக்கென்ன லாபம்? என்று இரவும், பகலுமாய் யோசித்து, தூக்கமின்றி

தவித்து இறுதியில் அப்பாவுக்காக மட்டுமே அரைமனத்தோடு சம்மதிக்கலானாள்.

அப்பா தனது வாழ்வில் எந்த சந்தோசத்தையும் அனுபவிக்காதவர். பிறந்தது முதல் தாய்ப்பாசத்தையும், விவரமறியும் வயதில் தந்தையையும், அதன் பிறகு சகோதர ஆதரவையும், தன் வாழ்வில் இறுதிவரை துணைநிற்கும் மனைவியையும், இறுதியில் தன் உன்னதமான சொத்தையும் இழந்தவர். இதையெல்லாம்விட தன்னால் தன் சுயநலத்துக்காக, தன் மகளின் வாழ்வையே பாழாக்கிவிட்ட பாவியாக தன்னைப் பாவித்து தன் மனத்தைக் கசக்கிப் பிழிந்து கொண்டிருக்கிறார். இத்திருமணத்திற்காக சம்மதிப்பது அவரை சந்தோசமடையச் செய்யுமானால் அவருக்காக சம்மதிப்பதே எனது கடமை!

இன்னும் சற்று நேரத்தில் பார்த்திபனின் தாயார் வந்து சம்பந்தம் பேசி வளையல் போடப்போகிறார். அதிகாலையிலேயே அப்பா விழித்து விட்டார். எத்தனையோ வருடங்களுக்குப் பிறகு தன்னிலை மறந்து தேவாரமும், திருவாசகமும் உருகி பாடக்கேட்ட சம்யுக்தா, உறக்கத்திலிருந்து முற்றிலும் கலைந்து விழிநீர் சுரக்க, மங்கிய வெளிச்சத்தில் தந்தையைக் கண்டு அதிர்ச்சியும், ஆனந்தமும் கொண்டாள்.

காலத்தின் சூழ்ச்சியால் தாக்கப்பட்டு, விதியின் சதியால் படுக்கையிலே வீழ்த்தப்பட்டு, பாசத்திற்காக ஏக்கப்பட்டே துவண்டுபோய்க் கிடக்கும் அவருக்குள்ளே இப்படி ஒரு மாற்றமா? அரண்மனை வீட்டின் முற்றத்திலே நின்றுகொண்டு, கரங்களை உயர்த்தி கதிரவனைக் கண்டு தன்னை மறந்து சத்தமாக பாடும்போது கேட்பவரும் பக்தியால் நனைந்து போவர். அத்தனை ஒரு வீரியம்

அவரது குரலில்! அது கொஞ்சமும் மாறாமல் அப்படியே இத்தனை காலத்திற்குப் பிறகும்! கடவுளே! இத்தனை பிரகாசமும் எதனால்? அவரது குரலில் ஒருவித நிம்மதி! ஒரு வீரம்.

"இறைவா! என் மீது ஏதேனும் குற்றமிருந்தாலும் மன்னித்து, என் மகளின் திருமணத்தை நல்ல முறையில் நடத்தி அருள்புரிய வேண்டுமய்யா!"

கணீர் குரலில் அவர் பிரார்த்தனை செய்தபோது, அவளது கேள்விக்கு விடை கிடைத்தது. அப்பாவின் இத்தனை நிம்மதியும் தனது திருமணத்தாலா?

தந்தைக்காக அவரது வேண்டுதல் பலித்து அவருக்கு நிம்மதி கிடைக்க வேண்டுமென அவளும் மனமுருகி வேண்டினாள். அதன் பிறகு அவர் சுறுசுறுப்பாகவே இருந்தார். மங்கிய பார்வையைக் கொண்டவரானாலும், உட்கார்ந்த நிலையிலேயே முத்தம்மாளை வேலை ஏவினார். அவளும் அவரது மனநிலை கண்டு சந்தோசமடைந்தவளாய், இறைவனை வேண்டிக்கொண்டு பலகாரங்கள் தயாரித்தாள்.

காரின் ஓசை கேட்டதும் சம்யுக்தா ஓடிச்சென்று வணங்கி வரவேற்றாள். கூடவே முத்தம்மாளும்.

பார்த்திபனும், தாயார் லட்சுமியும் புன்னகையோடு உள்ளே நுழைந்தனர். லட்சுமியின் மனம் நிறைந்துபோனது. சம்யுக்தாவின் பணிவும், அழகும் அவளைக் கவர்ந்தன. ஆனால், சம்யுக்தாவுக்கு நடப்பதெல்லாம் கற்பனையாகவும், கனவாகவுமே தோன்றியது. கடவுள் என்ன நினைக்கிறாரோ அதை நடத்தட்டும் என்ற விரக்தியுடன் நின்றிருந்தாள்.

லெட்சுமியம்மாளும், சுப்புரத்தினமும் தங்கள் அறிமுகத்தோடு பேச்சைத் தொடர்ந்தனர். சம்யுக்தாவைப் பற்றிய உண்மையை தானே சமயம் பார்த்து அம்மாவிடம் சொல்லிவிடுவதாகவும், இதுபற்றி எதுவும் பேச வேண்டாமென்றும் ஏற்கெனவே பார்த்திபன் சொல்லியிருந்ததை அவர் மறக்கவில்லை.

"என் ஒரே பையனைப் பற்றிய கவலை இனி இல்லை. திருமணமே வேண்டாம் என்று சொன்னவன், உன்னைப் பார்த்ததும் சம்மதித்தபோது, ஆச்சரியம்தான். உன்னை நேரே பார்த்ததும்தானே தெரிகிறது, உன் அழகுதான் இதற்கெல்லாம் காரணம்னு! உட்காரம்மா..." என்றாள்.

"பரவாயில்லைமா..." தலைகுனிந்து சொன்னபோது, அவளது அம்மா என்ற வார்த்தையால் குளிர்ந்துபோனாள். உடனே தன் கைப்பையிலிருந்து நகைப்பெட்டியை எடுத்து அவளிடம் நீட்டினாள்.

சற்றே தயக்கமும், குழப்பமுமாக முத்தம்மாளை நோக்கினாள்.

"கூட யாராவது சுமங்கலியா கூட்டிட்டு வரலாம்னு இருந்தேன். என் பையன்தான் திருமணத்தின்போது கூப்பிட்டுக்கலாம்னுட்டான். தவிர எங்களுக்கும் பெரிய சொந்தம்னு ஒன்றும் இல்லை. அதில் எங்க பரம்பரை வளையல் இருக்கும்மா. எடுத்துப் போட்டுக்கோ. இதைப் போட்டால் பாதி கல்யாணமே முடிஞ்சிட்ட மாதிரினு எங்களின் வழக்கம்."

"பெரியவங்க நீங்களே பாப்பாவுக்கு போட்டு விடலாமே..." முத்தம்மாள் தயங்கியவாறு சொன்னாள்.

"நான் போட்டுவிடக்கூடாதும்மா... சம்யுக்தாவே போட்டுக்கட்டுமே..."

அதிர்ந்துபோன சம்யுக்தா கலவரத்தோடு பார்த்திபனை ஏறிட்டாள். அவளது விழிகளிலே தென்பட்ட பல கேள்விகளையும், குழப்பங்களையும் கண்டு தவித்துப் போனான் அவன்.

"அ... அம்மா... இதெல்லாம் என்ன சம்பிரதாயம். என் தாய் நீதானேம்மா. நீயே போட்டுவிடேன்."

"சும்மாயிருடா... உனக்குத் தெரியாது. இந்த பரம்பரை வளையலைப் போடப்போகிற நான்காவது மருமகள்மா நீ. எங்க காலத்தில் இந்த வளையலைப் போடும் நிகழ்ச்சியையே பெரிய விழாவா கொண்டாடுவோம். அப்ப இருந்த மக்கள் வேறு. பொறாமையில்லாத மனம் அவங்களுக்கு. இப்ப அப்படியா இருக்காங்க. அதான் இவ்வளவு எளிமையா செய்யறோம். உனக்கு வளையல் போட்டு பூ வெச்சுவிடும் தகுதி எனக்கு இல்லையேம்மா. முன்னோர் சொல்லி வைத்த சம்பிரதாயத்தில் உண்மை இல்லாமலா இருக்கும்? போட்டுக்கோம்மா..."

லெட்சுமியின் ஒவ்வொரு வார்த்தையிலும் சாட்டையடி வாங்கியவளாய் சுருண்டுபோய் நின்றாள் சம்யுக்தா. எந்தத் தகுதி இல்லாததால் தான் வளையல் போட்டுவிடும் தகுதியற்றவள் என்கிறாரோ அந்தத் தகுதி தனக்கு மட்டும் இருக்கிறதா என்ன? - ஆடிப்போனாள்.

பார்த்திபனும் இதை எதிர்பார்க்கவில்லை. அம்மாவோ விடவில்லை.

உலர்ந்த உதடுகளை ஈரப்படுத்தியவாறு முத்தம்மாளை நோக்கினாள். இளையவளைப் பற்றி அனைத்துமறிந்த

முத்தம்மாள் அவளின் நிலை உணர்ந்தவளாய்... "பெரியவங்க மன்னிக்கணும். குறுக்கே நான் பேசறேனு தப்பா நினைக்காதீங்க. தானே வளையல் போட்டுக்கச் சொல்றதால பாப்பா தயங்குது. பரம்பரையாய் ஒருத்தருக்கு, மற்றொருவர் விழா எழுப்பி போட்ட வளையல் இல்லையா...? அதனால் கல்யாணத்தன்று யாராவது வாழ்வரசியா பார்த்துப் போடச் சொல்லலாமேமா? எல்லோருக்கும் நிம்மதியாயிருக்கும்..." தயங்கியவாறு சொல்லி முடித்துவிட்டாலும் தான் இவ்வாறு பேசியதை ஐயா எப்படி எடுத்துக் கொண்டாரோ எனப் பயந்தாள். ஆனால் அவரும் இதை ஆமோதிக்க வேறு வழியின்றி லெட்சுமி சம்மதித்தாள்.

"உங்க பெண்ணை ரொம்பப் பிடிச்சிருக்கு. அவளுடைய தயக்கத்திலிருந்தே உங்க வளர்ப்பு தெரியுது. சந்தோசம். நீங்க சொல்ற மாதிரியே செய்துடலாம். ஆனால், வளையல் கொடுத்ததாகவே இருக்கட்டும். நீயே வைத்திரும்மா. நான் குடும்ப ஜோசியரிடம் கலந்துபேசி அடுத்த மாதமே முகூர்த்தத்தேதி குறித்து சொல்லிடறேன். உங்க சௌகரியம் சொல்லிட்டால் உடனே கல்யாணம் வெச்சுக்கலாம்." பொறுமையாகவும், பக்குவமாகவும் சொல்லிவிட்டு இருவரும் விடைபெற்றனர்.

★ ★ ★

**கோ**வில் வாசலில் நின்றுகொண்டிருக்கும் வழவழப்பான காரைப் பார்த்துக்கொண்டே கோவிலுக்குள் நுழைந்தாள் சிந்தாமணி. நுழைந்த வுடனேயே அந்தக் கூட்டத்துக்குள் காரின் சொந்தக்காரர் யாராக இருக்கும் எனத் தேடினாள். மிக எளிதில் அவர்களை அடையாளம் கண்டுகொள்ள முடிந்தது. பட்டுப்புடவையும், நகையுமாய் உயர்ந்த இடத்தைச் சேர்ந்த அந்தம்மா அருகே ஓர்

இளைஞன். நிச்சயமாக தாய், மகனாகத்தானிருக்க முடியுமென முகச்சாயல் தெரியப்படுத்தியது. பூஜைக் கூடையோடு தான் எதற்காக கோவிலுக்குள் வந்தோமென்பதையே மறந்து வாயைப்பிளந்து பார்த்துக் கொண்டிருந்தாள். அவள் மனம் பலவாறு பிராண்டிக் கொண்டிருந்தது. குருக்களிடமிருந்து அர்ச்சனைக் கூடையைப் பெற்றவாறு விடைபெற்றுக் கொண்டு தன்னைக் கடந்து சென்ற அவ்விருவரையும் கண்ணிமைக்காமல் பார்த்துவிட்டு குருக்களருகே வந்தாள். இன்னும் அவள் யோசித்துக் கொண்டிருந்தாள்.

"அடடே.... வாங்கம்மா..." நலம் விசாரித்தார்.

"அந்தம்மாவும், பையனும் யாருங்கையா. வெளியூர் மாதிரி தெரியுதே."

"வெளியூரேதான்! நம்ம சம்யுக்தாவை பெண் பார்த்துட்டு போறாங்க. நல்ல மனுஷாளாத் தெரியறா. நம் பொண்ணு அதிர்ஷ்டசாலி போங்கோ." சொல்லிக் கொண்டே கூடையை வாங்கிக் கொண்டு போனார்.

சுருங்கி கருத்த முகத்தோடு கையெடுத்து வணங்கவும் மனமின்றி வெறித்து நின்றாள்.

★ ★ ★

**அ**வளுக்கு அன்று முழுவதுமே உறக்கம் வரவில்லை. என்ன இது புதுக் குழப்பம். அவளுக்கு கல்யாணமாமே. அதிலும் அப்படி ஒரு இடத்தில் வரனா? - சிந்தாமணிக்கு உடல் சூடேறியது.

இனி தாமதித்துப் பயனில்லை. காரின் சத்தம் கேட்டு சிந்தாமணி கலைந்தாள்.

தாட்சாயிணி சினிமாப் பாடலின் முணுமுணுப்போடு உள்ளே நுழைந்தாள். நிலைக்கண்ணாடியில் தன்னை முன்னும் பின்னுமாக அசைத்து தன்னழகை ரசித்தாள்.

"ஸ்ரீராம் வரலை?"

"இல்லம்மா. அலுவலகம் சம்பந்தமான வேலைகளை சீக்கிரமா முடிச்சாகணும். அதனால் அங்கேயே நண்பனின் காலி வீட்டில் தங்கி வேலையை கவனிச்சுக்குவாராம். ஓய்வு நேரம் கிடைக்கும்போது வீட்டுக்கு வருவதாகச் சொல்லி என்னை அனுப்பிட்டார்.

"நான் நம்ம டிரைவரோடு வீடு வந்துட்டேன்." குறும்பாகச் சொல்லிச் சிரிக்க, ராஜா அவள் தலையில் குட்டு வைத்தான்.

"நானா டிரைவர்? இது என்னுடைய கார்..." சொல்லிய அண்ணனைப் பார்த்து பழிப்புக் காட்டினாள்.

சிந்தாமணி ராஜாவை உற்று நோக்கினாள்.

"ஸ்ரீராம் அங்கே தனியா இருக்கக்கூடாது. தாட்சாயிணி கூடவே இருக்கணும்."

"என்னம்மா சொல்ற?" மகன் குழம்பிப் போய்க் கேட்டான்.

"தாட்சாயிணிக்கும், ஸ்ரீராமுக்கும் கல்யாணத்தை சீக்கிரமே நடத்திடணும். நீ என்ன சொல்கிறாய்?"

"உருப்படியான யோசனை."

தாட்சாயிணியின் செவியில் தேன் பாய்ந்தது. நாணத்தோடு மெல்ல அவ்விடம் விட்டு நகர்ந்தாள்.

"ஸ்ரீராமைப் பார்த்து சீக்கிரமே பேசிடு. நானே இதைப்பற்றி உன்னிடம் பேசணும்னு இருந்தேன். அதோடு எனக்கும் ஒரு வசதியான பெண்ணாப் பார்த்திடு." சொல்லிவிட்டு அவ்விடம் விட்டு நகர்ந்தான்.

சிந்தாமணி அதோடு விட்டுவிடவில்லை. சம்யுக்தா திருமணத்திற்கு முன்பாகவே தன் மகளுக்கு திருமணம் நடத்திவிட வேண்டுமென உறுதியாய் இருந்தாள். ஸ்ரீராமுக்கு யாருமே இல்லை. எப்படியோ தன் அண்ணனிடம் பெற முடியாத சொத்தை அவர் மகனிடம் பெற எண்ணினாள். அதற்குத் தகுந்தாற்போல் இருவரும் சிரித்துப் பேசுவதும், ஒன்றாகவே வெளியே செல்வதுமாக இருக்க நிச்சயம் அவனுக்குள்ளும் இதே எண்ணம் இருக்குமென்ற தீர்மானத்தோடு ஒருநாள் அவனிடம் இதுபற்றிப் பேசினாள்.

"என் அண்ணனோட சொந்தம் விட்டுப் போகக்கூடாதுன்னு நினைக்கிறேன்பா. தாட்சாயிணியும் படிச்ச பொண்ணுதான். உனக்கு எல்லாவிதத்திலும் பொருத்தமான பொண்ணு. நீங்க இரண்டு பேரும் வாழ்க்கையில் ஒன்று சேர்ந்தால் என் அண்ணன் ஆத்மா சந்தோசப்படும்..." - சொல்லிவிட்டு அவனைப் பார்த்தாள்.

பேரதிர்ச்சியோடு அவன் அமர்ந்திருந்தான். அவனது மூளை பலவாறு யோசிக்கத் தொடங்கியது. அப்பாவும் உயிரோடு இருந்திருந்தால் ஒருவேளை இதைத்தான் சொல்லியிருப்பாரோ எனத் தோன்றினாலும் தாட்சாயிணியை கற்பனையில்கூட அப்படி நினைத்த தில்லை. தாட்சாயிணி 'அத்தான்' என அழைக்கும் போதுகூட அவனுக்குள்ளே அவள் முறைப்பெண் எனத் தோன்றியதேயில்லை. அவனைப் பொறுத்தவரை அவள் ஒரு நல்ல தோழி, அவ்வளவுதான்!

"என்னப்பா பேசாம இருக்கியே என்ன சிந்தனை?"

அவன் தர்மசங்கடத்தோடு எழுந்து தலைகுனிந்து நின்றான்.

"மன்னிச்சிடுங்க அத்தை. அப்பா சொல்லித்தான் நான் இந்தியா வந்தேன். இப்படி ஒரு சொந்தம் தெரியாமலே இருந்ததை நினைத்து நான் எத்தனையோ நாட்கள் வேதனைப்பட்டிருக்கேன். உறவு எவ்வளவு முக்கிய மென்பதை நான் நிறையவே அனுபவிச்சிருக்கேன். என் அப்பாவும் கடைசிக் காலத்தில் அதை உணர்ந்ததை நான் பார்த்தேன். ஆனால்... மறுபடியும் மன்னிக்கனும் அத்தை. தாட்சாயிணியை கல்யாணம் செய்துகொள்ள ஒருபோதும் நான் நினைத்ததில்லை. அவளை எனக்கு ரொம்பப் பிடிக்கும். ஆனால், ஒரு துணையா நான் கற்பனையில்கூட நினைத்ததில்லை."

"இனிமேல் வேண்டுமானால்..." அவள் இடைபுகுந்த மறுநொடியே,

"நினைக்கவும் முடியாது." அவன் தீர்மானமாகக் கூற வாயடைத்துப் போனாள்.

அவள் அடுத்து ஏதோ பேச விழைந்தாள். அவன் அவளை நேரே பார்த்து கரம் கூப்பினான்.

"மன்னிச்சிடுங்க அத்தை. நீங்க கேட்டு கொடுக்க முடியலைனு வேதனையா இருக்கு. மேற்கொண்டு பேசி என்னை மேலும் கஷ்டப்படுத்தாதீங்க. தாட்சாயிணிக்கு வேறு ஒரு நல்ல வரன் பாருங்க. எவ்வளவு செலவானாலும் நான் முன்னேயிருந்து நடத்திவைக்கிறேன்" - சொல்லி விட்டு அவ்விடம் விட்டு நகர்ந்தான்.

சிந்தாமணி சிலையாய் வெறித்திருந்தாள். தா கட்டியிருந்த கோட்டை சிதறிப்போனதா விழிகளிரண்டும் சிவப்பேறியிருந்தன. இப்போது அவளுக் அந்தக் கோவில் குருக்கள் கூறியது நினைவிற்கு வந்தது "அதிர்ஷ்டக்காரப் பொண்ணு" - அந்த வார்த்தை மட்டும மீண்டும் மீண்டும் ஒலித்தது. அதிகபட்ச அளவு ஏறியிருந்த உஷ்ணத்தால் நெஞ்சம் மேலும், கீழும் பலமாக ஏறியிறங்கியது. வயிறு பெருமளவு புகைந்தது.

இப்படி இவன் காலைவாரிவிட்டானே என ஆதங்கப்பட்டாலும், சம்யுக்தாவுக்குத் திருமணம் என்பதை நினைக்கும்போதே உள்ளம் குமுறியது. விழிகள் பொங்கின. ஸ்ரீராமின் உறுதியான வார்த்தையிலிருந்து மீண்டும் இதுபற்றி பேசி சம்மதிக்க வைக்க முடியாது எனத் தீர்மானமாகத் தெரிந்தது. ஆனால்...

அவளது விழிகள் அகல விரிந்து வெறித்தன. அவள் மூளை பலவாறு யோசிக்க ஆரம்பித்தது. சம்யுக்தாவை சம்பந்தம் பேசியவள் அவளது முன் வாழ்க்கை இரகசியமும், ராசியும் தெரிந்துதான் சம்மதித்தாளா? அல்லது தெரியாமல்கூட இருக்குமோ? நெஞ்சம் அடித்துக் கொண்டது. தெரியாமல் இருந்தால்...?

கொஞ்சகாலம் மறைந்து கிடந்த வில்லத்தனம் தன் வேலையை ஆரம்பித்தது.

ஒருபுறம் சிந்தாமணியின் வில்லத்தனம் தொடங்கியிருக்க, தாட்சாயிணியின் ஏமாற்றமும், சம்யுக்தாவின் குழப்பமும், பார்த்திபனின் கனவும், சுப்புரத்தினத்தின் பிரார்த்தனையுமாய் நாட்கள் நகர்ந்தன.

அதுவரை கார்த்திருந்த சிந்தாமணியின் வில்லத் தனத்திற்கு வேலை வந்தது.

கோவில் வளாகத்தில் யோசனையோடு அமர்ந்திருந்தவளின் கண்களில் லெட்சுமி தென்பட்டாள். பழம் நழுவி பாலில் விழுந்தாற்போல் உணர்ந்தாள். அவளறியாமல் பின்தொடர்ந்தாள்.

"குருக்களே! இந்தத் தங்கத்தை சாமி பாதத்தில் வைத்து கொடுங்களேன்!" நகைப்பெட்டியை நீட்டினாள் லெட்சுமி.

அவரும் "வாங்கோ!" என்ற வரவேற்புடன், "பையன் வரலை?" என்றார்.

"முக்கியமான வேலை அவனுக்கு. அதான் வரலை."

"என்ன இது மோதிரமா? மருமகளுக்கா?" சிரித்தவாறு வாங்கினார்.

"ஆமாங்கையா, மருமகளுக்குத்தான். தங்கக்காசு தாலி செய்யணும். இந்த ஊர் பொண்ணுக்கு இந்த ஊர் சாமியிடமே ஆசீர்வாதம் வாங்கலாம்னு வந்தேன்."

"ரொம்ப சந்தோசம்மா. சக்திவாய்ந்த தெய்வம்மா. உங்களைப்போல் எத்தனையோ பேர் பட்டணத் திலிருந்துகூட வருவதுண்டு. நம்ம சம்யுக்தாவுக்கு இப்படி ஒரு சம்பந்தத்தை அமைத்துக் கொடுத்ததே இந்தக் கடவுள்தானேம்மா... இருங்கோ அர்ச்சனை செய்து எடுத்துண்டு வர்றேன்..."

அவர் சன்னதிக்குள் சென்று அர்ச்சித்தார். சிந்தாமணி பொறாமையில் உள்ளுக்குள்ளே அடித்துக் கொண்டாள்.

பூஜை முடிந்து வளாகத்தைச் சுற்றி முடித்து அமரும்வரை காத்திருந்த சிந்தாமணி அக்கம் பக்கம்

யாருமறியாமல் நோட்டம் விட்டவாறு அவளருகே வந்தமர்ந்தாள்.

தன்னருகே 'நல்லாயிருக்கீங்களா?' என சிரித்தவாறு அமர்ந்த சிந்தாமணியை இதுவரை அறிந்திடாத லெட்சுமி துணுக்குற்றாள். அதே சமயம் அவளும் பதிலுக்கு புன்னகைத்தவாறு கேட்டாள்.

"நீங்க?"

"நான் சம்யுக்தாவுக்கு சொந்தம். உங்களைப்பற்றி கேள்விப்பட்டேன். சந்தோசமாயிருக்கு."

"ஓ... அப்படியா! உங்களை நான் பார்க்காததால் தெரியவில்லை."

"கல்யாணம் எப்ப முடிவு பண்ணியிருக்கீங்க?"

"அடுத்த மாதம். முகூர்த்தத் தேதி சொல்லி கலந்து பேசிட்டு போகலாம்னு வந்தேன். இனிமேல்தான் சம்யுக்தா வீட்டுக்குப் போகணும்..." புன்னகையோடு சொன்னபோது பொறாமையில் புகைந்தாள்.

வராத கண்ணீரை வம்பாகத் திரட்டி அவள் முன்னே காட்டினாள்.

அவளது கலங்கிய விழிகளால் லெட்சுமி குழப்பமடைந்தாள்.

"என்னமோங்க! உங்களை மாதிரி நல்லவங்க இருப்பதால்தான் இன்னும் நாட்டில் மழை பெய்யுது..." - இழுத்தாள்.

அவள் புரியாமல் விழித்தாள்.

"இல்லையென்றால் சம்யுக்தா மாதிரி பெண்ணுக்கு இப்படி ஒரு வாழ்க்கைக் கிடைக்குமா? அதுவும் மறுவாழ்க்கையில்லையா?"

லெட்சுமி புருவங்கள் சுழித்தாள்.

"இவளை தன் மகனுக்கு கட்டியதாலதான் என் நாத்தனார் குடும்பமே ஒன்றுமில்லாமல் போனதுனு ஊரே அவளை ராசி கெட்டவள்னு ஒதுக்கி வைத்திருந்தது. ஆனாலும் அதையெல்லாம் பெரிதா நினைக்காம அவளுக்கு மறுவாழ்க்கை கொடுக்க வந்த உங்களை கையெடுத்துக் கும்பிடனும்..."

இடி விழுந்தாற்போல் நிமிர்ந்தாள் லெட்சுமி. அவளது முகமாற்றம் சிந்தாமணிக்கு மகிழ்ச்சியைத் தந்தது. மேற்கொண்டு அங்கு அமர்ந்திருப்பது தனக்கு ஆபத்தென்றெண்ணி, "நான் வர்றேன்மா... கல்யாணத்தில் பார்ப்போம்..." என்று சுருக்கென குத்தியவாறு எழுந்து சென்றவளை குருக்கள் இடைமறித்தார்.

அனைத்தையும் கேட்டிருந்த அவரது விழிகள் கொதித்திருந்தன.

சிந்தாமணி எச்சில் விழுங்கினாள்.

"பகவான் தலத்தில் இருந்து இப்படி ஒரு காரியத்தைச் செய்யறேளே. இது நியாயமா?"

"நான் என்ன செய்தேன்?" தடுமாறினாள்.

"அந்தக் குழந்தையைப் பற்றி ஏன் இப்ப அவாகிட்டச் சொன்னேள்?"

“அய்யய்யோ இது தெரியாதா அவங்களுக்கு? தெரியும்னு நினைத்து பேசிட்டேனே.” வருந்துவது போன்ற முக பாவத்தோடு, மனநிம்மதியுடன் அவ்விடம்விட்டு நகர்ந்தாள்.

அவளை வெறித்துவிட்டுத் திரும்பிய குருக்கள் அதிர்ந்தார்.

லெட்சுமி குருக்கள் பேசியதைக் கேட்டிருந்தாள்.

“என்னய்யா அந்தம்மா சொன்னது உண்மையா?” - கோபமாக கேட்டபோது தயக்கத்துடன் “ஆம்” எனத் தலை கவிழ்ந்தார்.

“அந்தம்மாவைச் சொல்றீங்களே. நீங்க செய்தது நியாயமா?” - கோபத்தோடு உரக்கக் கேட்டபோது பயந்து போனார்.

“அம்மா... மன்னிச்சிடுங்கம்மா. அது ஒரு குழந்தைத் திருமணம்மா. அதுக்கு நடந்தது ஒரு விளையாட்டுக் கல்யாணம், தவிர இது எனக்குத் தோன்றவேயில்லைம்மா. அந்தம்மா உங்களிடம் சொன்னபோது உங்க அதிர்ச்சியைப் பார்த்துத்தான் உங்களுக்குத் தெரியாதுன்னே புரிந்துகொண்டேன். அந்தப் பெண் மருமகளா கிடைக்க கொடுத்து வெச்சிருக்கனும்மா...!”

அவள் செவிகளில் எதுவும் விழவில்லை. அதற்குமேல் அவராலும் பேச முடியவில்லை. பக்தர்கள் அர்ச்சனைக் கூடையோடு இவருக்காகக் காத்திருந்தனர். உண்மையாக கடவுளிடம் வேண்டிக்கொண்டு நடந்தார்.

லெட்சுமி, தன்னைக் காப்பாற்றியதற்காக கடவுளிடம் நன்றி தெரிவித்துவிட்டு சுப்புரத்தினத்தின் மீது ஆத்திரத்தோடு அவர் வீடு நோக்கி விரைந்தாள்.

# பாகம் - 6

**பா**ர்த்திபன் காரை மிக வேகமாக செலுத்தினான். மனம் முழுக்க ஆக்கிரமித்திருந்த சிந்தனைக் கூட்டம் பலவாறாகப் பிரிந்தன.

தாலி செய்யக் கொடுப்பது பற்றியோ? ஒருவேளை அழைப்பிதழ் பற்றி கலந்து பேசவா? அல்லது சம்யுக்தாவுக்கு நகையெடுக்க வேண்டுமென சொன்னாளே, நகை வாங்கவா? சரி... இவற்றுக்கெல்லாம் அவசரம் தேவையா என்ன?

அம்மாவின் குரலே சரியில்லையே. முக்கியமான வேலை இருப்பது தெரிந்தும், உடனே கிளம்பிவா என்று ஏன் சொல்லவேண்டும்? என்ன வேலையிருந்தாலும் தூக்கிப் போட்டுவிட்டு இப்பவே கிளம்பிவா என்ற கட்டளைக்கான காரணம்?

மனம் சற்று பதைப்புடனே இருந்தது. இருந்தாலும் மறுபுறம் திருமண விஷயமாக இருக்குமென நினைத்தபோது மனம் சற்று நிம்மதியடைந்தது.

இன்னும் வேகமாக காரைச் செலுத்தி வீட்டிற்கு வந்து சேர்ந்தான். நாற்காலியில் அமர்ந்திருந்த அம்மாவைப் பார்த்ததும் குழம்பினான்.

அவள் கடுங்கோபத்தில் இருப்பது தெரிந்தது. மகன் வந்தது தெரிந்தும் அவள் அசையவில்லை.

"அம்மா... என்னம்மா விஷயம்? ஏன் இப்படி இருக்கே?" தயக்கத்தோடு கேட்டான்.

படாரென எழுந்தவள் அவனை பார்வையால் எரித்தாள். "சம்யுக்தாவின் பழைய வாழ்க்கை பற்றி உனக்குத் தெரியுமா?"

தூக்கிவாரிப்போட்டது அவனுக்கு.

"சொல்லுடா...!"

"அ... அது வந்தும்மா... அது ஒரு பெரிய விஷயமில்லைனு நினைத்தேன்மா."

"எதுடா பெரிய விஷயமில்லை?" - சீறினாள்.

"அம்மா... அறியாத வயதில் தெரியாம நடந்த கொடுமைமா அது. நீ படித்திருக்கே. உன்னால கூடவா புரிந்துகொள்ள முடியாது? நானே இதை சமயம் பார்த்து உன்னிடம் சொல்லிடலாம்னு இருந்தேன்" - தயங்கியவாறு இழுத்தான்.

"அவளுக்கு கல்யாணம் மட்டுமா ஆச்சு? அந்த வயசிலேயே கணவனை, மாமனாரை ஒரே நேரத்தில் இழந்த அதிர்ஷ்டகாரியாச்சே. ஊரே அவளை ராசிகெட்டவள்னு சொல்லும்போது உனக்கு மட்டும் எப்படிடா புத்திகெட்டு போனது?" - பலத்த குரலில் கத்தினாள்.

"அம்மா...! எதை எதோடு முடிச்சு போடுறேம்மா? தயவு செய்து நான் சொல்வதைக் கேளும்மா..." தாயின் கரத்தைப் பற்றினான். அவள் உதறிவிட்டுத் திரும்பிக் கொண்டாள்.

"நல்லவேளை யாரோ ஒரு புண்ணியவதி கோவிலில் வந்து சொன்னாள். என் நல்ல நேரம்! ஆனால்

இதெல்லாம்விட இந்த விஷயத்தை மறைச்சிருக்காரே அந்த பெரிய மனுசன்... ச்சீ... அது ஒரு குடும்பம்..."

"அவர் மீது எந்தத் தவறும் இல்லை. நான்தான் சொல்ல வேண்டாம்னு சொன்னேன். அப்பவும் அவர் சம்மதிக்கவேயில்லை. சமயம் பார்த்து நானே கல்யாணத்துக்கு முன்பு சொல்லிடறேன்னு சொல்லி அவரைச் சம்மதிக்கவைத்தேன்."

"நீ சொன்னால் அவருக்கு எங்கே போனது புத்தி? அவரெல்லாம் பெரிய மனுசன். வசதியில்லையென்றாலும் பரவாயில்லை; அவரும் நம்ம கூடவே இருந்தாலும் பரவாயில்லைனு எவ்வளவு பெருந்தன்மையா நடந்திட்டேன். அவர் காட்டும் நன்றி இதுதானா? நல்லா நாலு வார்த்தை அறையறா மாதிரி கேட்டுவிட்டுத்தான் வந்தேன். இன்னும் ஆத்திரம் அடங்கவேயில்லை எனக்கு..."

"என்ன...?" பார்த்திபன் பதைப்போடு அம்மாவைக் கூர்ந்து நோக்கினான்.

"அவர் வீட்டுக்குப் போனியா?"

"ஆமாம்! போனேன்! நல்லா நாலு வார்த்தை கேட்டுட்டும் வந்தேன்."

தன் தலையிலே ஓங்கி அறைந்து கொண்டான். விழிகளை இறுக மூடியவன் செய்வதறியாது நாற்காலியில் படாரென அமர்ந்தான்.

மகனின் செயல்கண்டு பயந்து போனாள்.

"உனக்கு கொஞ்சமாவது மூளையிருக்கா? என்னிடம் கேட்காமல் அவரிடம் ஏன் கேட்டாய். நீ இப்படி

நடந்துகொள்வாய்னு நான் நினைக்கவேயில்லை'' - கத்தினான்.

“நிறுத்துடா. என்னமோ பெரிய குற்றம் செய்த மாதிரி பேசறியே. நான் ஒரே ஒரு பையனைப் பெத்து வெச்சிருக்கேன்டா. அந்த ராசி கெட்டவளுக்கு உன்னை... நினைத்துப் பார்க்க முடியலை. பார்த்திபா...” - கண்ணீர் வழிய அவனைப் பார்த்தாள்.

“உங்கப்பா நீ மூன்று வயதா இருக்கும்போது போய்ச் சேர்ந்தார். யார் தயவுமில்லாம, என் அரைகுறை படிப்பை வைத்து அரும்பாடுபட்டு இந்த நிலைக்கு கொண்டு வந்தது நீ நல்லாயிருக்கணும், உன் வாழ்க்கை சிறக்கணும், இந்த வம்சம் தழைக்கணுமேனுதான்டா.” உண்மையாய் அவள் வடித்த கண்ணீரில் உருகிப்போனான் அவன். அம்மா பட்ட பாடு தெரிந்திருந்தாலும் அவள் நினைவூட்டியபோது தவித்துப் போனான்.

உதடுகள் துடிக்க கலங்கிய விழிகளோடு அம்மாவின் முன்பு வந்து நின்றான். கரம் கூப்பி ஏறிட்டான். “இதெல்லாம் எனக்குத் தெரியாதாம்மா. நீ தெய்வம்மா... ஆனால், தேவையில்லாம பயப்படறேம்மா” - குரல் கம்ம சொன்னான்.

“தேவையா, தேவையில்லையானு ஆராய விரும்பலை. எந்த தாயுமே இதைத்தான் சொல்வாள்.”

“ஏன்மா நீ ஒரு விதிவிலக்கான தாயா இருக்கக்கூடாது?”

“தைரியம் இல்லை பார்த்திபா!” - கண்ணீரோடு அவன் கரம் பற்றிக்கொண்டாள். “என் உயிர் நீ! உன்னைப் பணயம் வைக்க என்னால் முடியாதுப்பா...”



அவனது கரங்களில் முகம் புதைத்து விசும்பினாள். அவனது விழிகளும் கசிந்தன.

சட்டென தன் பிடியிலிருந்து அவன் கரங்களை விடுவித்தவள் முகத்தை இறுக்கமாக வைத்துக் கொண்டாள்.

"இனிமேல் இது விஷயமா பேசி என்னை சம்மதிக்க வைக்க முயற்சி செய்யாதே. இது நடக்காது. ஒருவேளை என்னை மீறி நடந்தால்... என் உடம்பில் உயிர் இருக்காது..." - தீர்மானமாக சொல்லிவிட்டு நகர்ந்தாள்.

★ ★ ★

காலச் சுழற்சி எல்லோருக்கும் சாதகமாகவே அமைந்துவிட்டால்? பகையில்லை, போட்டியில்லை, பொறாமையில்லை, ஏமாற்றமுமில்லை!

எதை நோக்கிப் போகிறது இந்தப் பயணம்? எதற்காக இத்தனை மாற்றங்கள்? அதனால் ஏமாற்றங்கள், ஏன் கொடுத்துப் பறிக்க வேண்டும்?

சுப்புரத்தினத்தின் கண்ணீர் வழிந்து தலையணையை நனைத்தது. அவரது தலைமாட்டில் அமர்ந்திருந்த சம்யுக்தா அவரது கண்ணீரைத் துடைத்துவிட்டுத் தலையை வருடினாள்.

'இந்தக் குழந்தை இதை அனுபவிக்கவா எனக்கு மகளாய்ப் பிறந்தாள். எனக்குப் பிறந்ததால்தான் இவளுக்கு இந்தக் கதியா?' - சத்தமேதுமின்றி உதடுகள் மட்டும் நடுங்கின.

சம்யுக்தா அவரது கரத்தை இறுகப் பற்றிக் கொண்டாள். அவளுமே உடைந்துதான் போயிருந்தாள்

அப்பா நிலையை எண்ணி. நேற்று நடந்த சம்பவத்தை முத்தம்மாள் மூலமாகத் தெரிந்ததிலிருந்து பார்த்திபன் மீது கடுங்கோபத்துடன் இருந்தாள்.

'நீங்களா பெரிய மனுஷன்? உம் மகள் நல்லாயிருக்க யார் வாழ்க்கை கெட்டாலும் பரவாயில்லையா?'

தன்னை திட்டம் போட்டு ஏமாற்றிவிட்டதாக நினைத்துக்கொண்டு ஆங்காரத்தில் அவள் அடுக்கிக் கொண்டே போனாள். ஒவ்வொரு வார்த்தையையும் இடியாய் இறக்கினாள். அதைவிட இறுதியாக, 'இப்படி ஏமாற்றி உம்ம பொண்ணை வாழ வைக்கணும்னு நினைக்காதீர். அவள் நல்லா வாழ முடியாது. இனியும் இப்படி யாரையும் ஏமாத்தி மேலும் பாவத்தைச் சேர்க்காதீங்க...'

"கடவுளே!..." கண்ணீர் தாரைதாரையாய் வழிந்துகொண்டே இருந்தது.

"அப்பா...! தயவு செய்து அழாதீங்கப்பா. ஜுரம் அதிகமாயிடும்..." கண்ணீரைத் துடைத்து விட்டாள்.

"இனி இருந்து என்ன சாதிக்கப் போகிறேன்" உளறலாய் வார்த்தைகள் வெளிவந்தன.

அதற்குள் முத்தம்மாள் மருத்துவருடன் வந்து விட்டாள். மருத்துவர் அவரது நாடியைப் பரிசோதித்தார். எல்லாவித சோதனைக்குப் பிறகு ஒரு ஊசி போட்டுவிட்டு அறையைவிட்டு வெளியே வந்தார். அவரைப் பின்தொடர்ந்து வந்த சம்யுக்தா... "சார்..." என்றாள் பதைப்புடன்.

"ரொம்ப பலகீனமாயிருக்கார். ஜுரத்துக்கு ஊசி போட்டாச்சு. சில மாத்திரைகள் எழுதித் தர்றேன். ஆனால்,

மாத்திரைகளைவிட அவருக்கு நிம்மதிதான் தேவை. அவர் மனத்தில் ஏதோ ஓர் எதிர்பார்ப்பு இருக்கு. அதைக் கேட்டு நிறைவேத்தி வையுங்க. மனம் திடமானால், நோய் குணமாயிடும். என் நம்பர் தர்றேன். தேவை ஏற்பட்டால் போனில் கூப்பிடுங்க.'' - சொல்லிவிட்டு எழுதிக் கொடுத்துவிட்டுக் கிளம்பினார்.

சம்யுக்தா அப்பா அருகே வந்தமர்ந்தாள். மனபாரத்தை இறக்கி வைக்க முடியாமல் தவித்தாள். அப்பாவின் கரத்தைப் பற்றியவாறே அமர்ந்திருந்தாள். முத்தம்மாள் மௌனமாக அவளருகே வந்து நின்றாள். சத்தமின்றி அவள் மீது சாய்ந்து விம்மினாள். முத்தம்மாளும் கண்ணீரோடு அவளைத் தேற்றினாள்.

அவளை அங்கிருந்து அழைத்துக்கொண்டு முற்றத்திற்கு வந்தாள்.

"பாப்பா, ஐயாவுக்கு ஒன்றுமில்லை. சாதாரண ஜுரம், அவ்வளவுதான். இந்த மாதிரி சமயத்தில் நீ தைரியமா இருக்கனும்."

"டாக்டர் சொன்னதைக் கேட்டாயா முத்தம்மா. நான் எப்படி... எதிர்பார்ப்பை நிறைவேத்துவேன்...'' கண்ணீரோடு பேசியது கேட்டு முத்தம்மாள் கலங்கிப் போனாள்.

திடீரென பைக் சத்தம் கேட்க இருவரும் கண்ணீரைத் துடைத்துக் கொண்டனர். பார்த்திபன் வந்தான். முத்தம்மாள் முகத்தைத் திருப்பிக் கொண்டாள்.

"வாங்க!'' - பிசிறிய குரலில் கூறிவிட்டு தரையிலே விழி பதித்தாள் சம்யுக்தா.

அவளது சிவந்து வீங்கிய விழிகள் அவள் அழுதிருப்பதைக் காட்டியபோது சொல்ல முடியாத வேதனையால் துவண்டுபோய் நின்றான் பார்த்திபன்.

"நேத்து இரவு எத்தனை முறை போன் செய்வது. போனை அணைத்து வெச்சிருக்கியா சம்யுக்தா?" - பாவமாய்க் கேட்டான்.

"ம்...!" ஒற்றையாய் பதில் வந்தது.

அந்த இறுக்கமான சூழல், அதைவிட உள்ளே கூப்பிடாமல் முற்றத்தில் நிற்க வைத்து பேசும் முறை எல்லாமே மேலும் வேதனையைத் தூண்டியது.

சில விநாடிகள் மௌனத்திற்குப் பிறகு, "அம்மா நேத்து உன் அப்பாவிடம் எப்படி பேசியிருப்பாங்கனு என்னால தீர்மானிக்க முடியுது. அதே சமயம் உன் அப்பா எவ்வளவு வேதனைப்பட்டிருப்பாங்கன்னும் எனக்குத் தெரியும். உன் அப்பாவைப் பார்த்து மன்னிப்பு கேட்கணும். உன்னிடமும்தான் சம்யுக்தா. அன்றைக்கே நான் சொல்லியிருந்தேனா இவ்வளவு தூரம் வந்திருக்காது. என்னை மன்னிச்சிடு."

சட்டென அவனைப் பார்வையால் எரித்தாள்.

"வாய்மை தவறாத என் அப்பாவுக்கு உங்களால எத்தனை பெரிய அவமானம் தெரியுமா?" - கண்ணீரோடு அவள் கேட்டபோது நிலைகுலைந்து போனான்.

"ஏன் சார்? ஏற்கெனவே நிம்மதியில்லாம இருந்த எங்களைத் தேடிவந்து தொல்லை கொடுத்து இப்படி நோகடிக்கறீங்களே... உங்க மன்னிப்பு எங்க அப்பாவின் வேதனையை சரிசெய்திடுமா? உங்க அம்மா பேசியதுதான் மறைந்து போயிடுமா?"

அவளது கண்ணீரில் துடித்துப்போய் நின்றான்.

"தயவு செய்து அழாதே சம்யுக்தா. எல்லாம் கொஞ்ச நாளில் சரியாயிடும். அம்மாவுடைய கோபமும் தணிந்திடும்."

"என்ன?..." விலுக்கென நிமிர்ந்தாள். கண்ணீரைத் துடைத்துவிட்டு அவனைப் பார்த்தாள்.

"எப்படி சார்? எல்லாம் சரியாயிடுமா? உங்கம்மாவுடைய கோபம் வேறு தணிந்திடுமா? பரவாயில்லையே!"

அவளது வார்த்தையில் புரியாமல் பார்த்தான்.

"எல்லாம் சரியான பிறகு?" - அவள் கேட்ட கேள்வியில் வார்த்தை வராமல் திணறினான்.

"இன்னும் உங்களுக்கு அப்படி ஒரு நினைவிருக்கா?" - படாரென கரங்களைக் கூப்பினாள். "நன்றி சார். இவ்வளவு நடந்த பிறகு எல்லாம் முடிந்து போயிடுச்சு. உங்கம்மா கோபம் தணியனும்னு எனக்கு அவசியமில்லை. இதோடு முடிச்சிக்கலாம் சார்."

அவன் மௌனமானான், முகம் இறுகிப் போனது.

"நான் அப்பாவைப் பார்க்கணும்..." தயங்கியவாறு கேட்டான்.

"வேண்டாம் சார். உங்களை எங்கப்பா பார்க்கக்கூடாது. இப்பதான் டாக்டர் வந்து தூக்கத்திற்கு ஊசி போட்டிருக்கார். தூக்கத்திலாவது நிம்மதி கிடைக்கட்டும் அவருக்கு. அதையும் கெடுத்திடாதீங்க."

சம்யுக்தாவின் வேதனை அவனுக்குப் புரிந்தது. எல்லாமே முடிந்தது என்றும் தீர்மானமாகத் தெரிந்தது. கவிழ்ந்த தலையுடன் வாசலை நோக்கித் திரும்பினான்.

"சார் ஒரு நிமிஷம் - இனி உங்களுக்கும், எங்களுக்கும் எந்த சம்மந்தமும் இல்லை." அழுத்தி உச்சரித்து அவனது கனவுக் கோட்டையைத் தகர்த்தெறிந்தாள்.

★ ★ ★

ஏதோ ஓர் எதிர்பார்ப்பு எப்போதுமே எல்லோர்க்கும் இருக்கத்தானே செய்கிறது. அது தீர்ந்துவிட்டால் இன்னொன்று. இவையெதுவுமே இல்லையென்றால் அவன் மனிதனாகவே இருக்க முடியாதே! பகை, பொறாமை, போட்டி, பழிவாங்குதல் எல்லாமே சங்கிலித் தொடர் போல் இயங்கும் மாயை. எல்லாமே கடவுளின் பிடியில்!

எல்லாமே விதிப்படி என்றால் அந்த விதியை நியமிப்பது கடவுள்தானே! விதிவசப்படி கஷ்டத்தை சந்திக்கும் மனிதன் கடவுளைக் கூப்பிடும்போது காப்பாற்றப்படுகிறானே. கடவுளுக்கு நல்லவரும், தீயவரும் ஒன்றா? காலத்தால் மட்டுமே பதில் கூற முடியும்!

'தர்மத்தின் வாழ்வுதனை சூது கவ்வும்; தர்மம் மறுபடியும் வெல்லும்!'

ஏமாற்றத்தைத் தாங்க முடியாத சுப்புரத்தினம், கடமையைக் கையிலேந்தி நிற்கும் சம்யுக்தா, காதலில் தோற்றுப்போன பார்த்திபன், இன்னும் பல திட்டங்களுடன் சிந்தாமணி, நிறைவேறா ஆசையுடன் தாட்சாயிணி, தர்மசங்கடத்தில் ஸ்ரீராம். எல்லோருமே அவர்களுக்கே உரிய குணங்களுடன் காலச் சுழற்சியின் கருவிகளாய் நின்றனர்.

சுப்புரத்தினத்தின் நாடித்துடிப்பு வலுவிழந்து கொண்டிருந்தது. மூன்றாவது முறையாக வந்து சோதித்துப் பார்த்த மருத்துவர் சொன்னார், "பேச்சு குறைந்து போயிட்டது, பட்டணத்தில் பெரிய மருத்துவமனை கொண்டுபோய்ப் பார்க்கலாம்."

"ஊகூம்... ஏற்கெனவே கடனைச் சுமத்தியிருப்பது போதாதா. மறுபடியுமா?" சுப்புரத்தினத்தின் மனம் தவித்தது. பேச முடியவில்லை. இடைவெளியிட்டு உளறலாக வெளிவரும் கோர்வையற்ற வார்த்தை புரியவில்லை. மருத்துவம் பார்க்கலாம், உடலில் நோய் இருந்தால்! மனநோய்க்கு என்ன மருந்தளிக்க முடியும்? அந்த மருத்துவரும் சிறந்த முறையில் சிகிச்சையளிக்கும் பெருமை வாய்ந்தவர்தான். என்ன செய்ய? சில விஷயங்கள் கையை மீறிப் போய்விட்டால்? மருத்துவர் போய்விட்டார்.

மூன்று நாட்களில் முக்கால் பங்கு சக்தியை இழந்திருந்தார். ஊரிலுள்ள பலரும் கேள்விப்பட்டு வந்து பார்த்தனர். சம்யுக்தா கண்ணீரும், கேவலுமாய்ப் பேச்சுக் கொடுத்துப் பார்த்தாள். 'ம்...' என்ற வார்த்தைக்குமேல் எதுவும் வரவில்லை.

"பாவம்மா... பொம்பளைப்புள்ள தனியா கஷ்டப்படணும்னு தலையில் எழுதியிருக்கு..." - அக்கம் பக்கம் பேசிக்கொண்டனர்.

"இனி அவ்வளவுதான்யா! நிதானம் இல்லை!"

"அவருக்கு அந்த அரண்மனை வீட்டுக் கவலைதான்யா."

"பொண்ணு கல்யாணம் நின்னுபோன அதிர்ச்சிதான்." ஆளாளுக்குத் தோன்றியதைச் சொன்னார்கள்.

மருத்துவரிடம் கைகூப்பி கதறினாள் சம்யுக்தா.

"எப்படியாவது எங்கப்பாவை காப்பாத்திடுங்க சார்... வேறு பெரிய மருத்துவமனை போகணும்னாலும் எழுதிக்கொடுங்க சார். அழைச்சிட்டுப் போறேன்."

சம்யுக்தாவின் நிலைகண்டு பரிதாபமுற்றார்.

"இப்ப ஊசி போடறேன்மா. நாளை காலை பார்த்திட்டு பட்டணம் கூட்டிட்டுப் போங்க..." குரல் கம்ம சொல்லிவிட்டுப் போனார்.

இரவு நேரம் ஒருவர் மாற்றி ஒருவராக வந்து பார்த்தனர்.

"ஏன்யா கணபதி! மணிரத்தினம் வந்து பார்த்தாரா?" குரலைத் தாழ்த்தி ஒருவர் கேட்டார்.

"இல்லை!"

"ஒருவேளை அண்ணனைப் பார்க்க நினைக்கிறாரோ..." மறுவினாடியே

"அண்ணே...!" அழுத்தமாக சுப்புரத்தினம் உச்சரித்தபோது அனைவருமே திகைப்புற்றனர்.

"அப்பா... அப்பா..." - பதைப்போடு அவர் கன்னத்தைத் தட்டி அழைத்தாள் சம்யுக்தா.

"ம்..."

"என்னப்பா வேணும்?" கணபதி, முத்தம்மாள் உள்பட நான்கைந்து முக்கியமானவர்கள் அவரைச் சுற்றி நின்றனர்.

"அண்ணே..." - தெளிவற்ற வார்த்தையிலும் நன்றாகப் புரிந்தது.

"யோவ் கணபதி! போய் சொல்லி அவரைக் கூட்டிட்டு வாய்யா."

நிமிடத்தில் கணபதி ஓடினார். சிந்தாமணி கதவு திறந்தாள். கதவு தட்டிய ஓசைகேட்டு எல்லோருமே அவள் பின்னே வந்தனர்.

வியர்த்துப் போய், மூச்சுத் திணற மணிரத்தினத்தைப் பார்த்தார் கணபதி.

புரியாதபோதிலும் ஏதோ ஒரு பதைப்பு அவருக்குள்ளும் இருந்தது. தானாடாவிட்டாலும் சதை ஆடத்தான் செய்தது.

"தம்பிக்கு ரொம்ப முடியலைங்க. நாடித்துடிப்பு சரியா இல்லை... அண்ணேனு மட்டும்தான் சொல்றார்..."

மணிரத்தினம் உருகிப்போனார்.

"வாங்கய்யா நீங்க வந்தால் பிழைச்சிடுவார்யா." அழுத்தமாக உச்சரித்த அந்த வார்த்தையால் கண்கள் சிவக்க கணபதியைப் பார்வையால் வெறித்தாள் சிந்தாமணி.

ஏற்கெனவே வாங்கிய சூடு அவருக்கு நினைவுக்கு வர எச்சில் விழுங்கினார்.

"இந்தா...! இவரென்ன மருத்துவரா வந்ததும் பிழைப்பதற்கு... சொல்லிட்டேல்ல போ...!" பலமாகக் கத்தினாள்.

"ஐயா! யார் பேச்சையும் கேட்காதீங்கையா!" அவளைப் பார்த்தவாறு கூறினார் கணபதி.

"யோவ்! என்ன தைரியம் இருந்தால் என் வீட்டுக்கே வந்து இப்படி பேசுவாய். நான் அவருக்கு பொண்டாட்டி. அவருக்குத் தெரியாதா யாருக்கு முக்கியத்துவம் கொடுக்கணும்னு." - ஓரக்கண்ணால் கணவரைப் பார்த்தவாறு உரக்கக் கூறினாள்.

கணபதி இன்னும் போகவில்லை.

"சொல்ல வேண்டியதற்கு சொல்லியாச்சு. நீ போ. வருவதும் வராததும் எங்க இஷ்டம்."

"அம்மா அப்படி சொல்லாதீங்கம்மா... ஒரு தாய் வயித்துல பிறந்தவங்க." சொன்னவர் மணிரத்தினத்தைப் பார்த்து, "இனி எப்பய்யா அவரைப் பார்க்கப் போறீங்க." உதடுகள் துடிக்கச் சொன்னபோது மணிரத்தினம் கலங்கித்தான் போனார். கணவரை ஓரக்கண்ணால் பார்த்த சிந்தாமணி, கடுங்கோபத்துக்கு ஆளானாள்.

அவர் மறந்துபோன பழைய நினைவுகளை, தாங்கள் எப்படி கேவலப்படுத்தப் பட்டோம், யாருமில்லாத அநாதைகளானோம் என வரிசையாக அடுக்கி, இளகிய அவர் மனத்தை இறுக்கிவிட்டாள். அதோடு விடவில்லை. மகனை உசுப்பேற்றினாள். அம்மா ஊட்டிய பகை உணர்வு அவனுக்குள்ளே பொங்கியது.

"அப்பா...! அவங்கவங்க செய்த பாவத்துக்கு அனுபவிக்கறாங்க. அதை மாற்ற நாம கடவுளில்லை. உங்களால எங்கம்மா, ஏன் நாங்க பட்ட கஷ்டம், தெரியாததில்லை. நாங்க வேணும்னா உள்ளே வாங்க. அங்கே போனீங்கனா எங்களை மறந்திடுங்க... நீ வாம்மா... ஏய்வா..." அம்மாவையும், தங்கையையும் அழைத்துக் கொண்டு உள்ளே போனான்.

"ஆண்மகன்! தோளுக்கு மேலே வளர்ந்தவன், தனது வாரிசு!"

அவனது தீர்மானமான பேச்சு அவரைக் கட்டிப் போட்டது. தனது இறுதிக் காலத்தில் பார்க்கப்போகும் தலைமகனல்லவா? ஏதோ ஒரு பயம்! சூழ்நிலைக் கைதியாய் மனைவி, மக்கள் பிடிக்குள்ளே தைரியமின்றி சிக்கிக் கிடந்தார்.

ஏற்கெனவே மனைவியிடம் கணவன் என்கிற ஸ்தானம் சத்தற்றுக் கிடக்கும் நிலையில், தகப்பன் ஸ்தானமும் அவ்வாறே போய்விட்டால்... என்ன செய்வது? சூழ்நிலை அவரைக் கோழையாக்கியது.

மனததைக் கல்லாக்கிக் கொண்டு கவிழ்ந்த தலையோடு மௌனமாக வீட்டுக்குள்ளே சென்றார்.

இதற்குமேல் நின்று பயனில்லை... கணபதி திரும்பினார்.

நள்ளிரவு பொழுதானபோதும் சுப்புரத்தினம் மீது கொண்ட மரியாதையால் அங்கேயே சிலர் தங்கியிருந்தனர். சகோதரப் பகை அனைவரும் அறிந்ததே. இளையவர் மீது பிழையேதுமில்லை என்பதும் அறிந்த ஒன்று. எப்படியும் இத்தனை வருடங்கள் கழிந்தாலும் இந்த சமயத்திலாவது

அண்ணன் பார்க்க வருவாரென்றுதான் எல்லோருமே நினைத்தார்கள். ஆனால், தனியே வந்த கணபதியைக் கண்டதும் சற்று அதிர்ச்சிதான்.

"மாமா... என்ன மாமா ஆச்சு..." சம்யுக்தா பதைப்புடன் கேட்டாள். அவர் மௌனமாகத் தலைகுனிந்தார்.

எல்லோருமே அந்த மௌனத்தின் அர்த்தத்தைப் புரிந்து கொண்டனர்.

"என்ன மனுசனோ... இப்படி நிலைமையில்கூட பகைமை உணர்வு இருக்குமாய்யா..."

"அட, தனக்கு பாசமேயில்லாவிட்டாலும் மற்றவர்களின் ஏச்சுக்கும், பேச்சுக்கும் பயந்தாவது வந்திருக்கலாம்ல..."

"ஏன்யா கணபதி! நீ விஷயத்தைத் தெளிவா எடுத்துச் சொன்னியா..." கூட்டத்தில் பெரியவர் ஒருவர் கேட்டார்.

"அதெல்லாம் சொன்னேன். அந்தப் பொம்பளை வரவிடலை. பிள்ளைகளையும் கெடுத்து வெச்சிருக்கு..."

"என்னதான் அடுத்தவங்க சொன்னாலும் இவருக்கு எங்கே போச்சு புத்தி." ஒவ்வொருவரும் தங்களது கருத்துகளை உரக்கத் தெரிவித்துக் கொண்டிருந்தனர்.

சம்யுக்தா என்ன நினைத்தாளோ திடீரென கரங்களுக்குள் முகம் புதைத்து சத்தமாக அழுதாள். அவள் நிலைகண்டு எல்லோருமே கலங்கினர்.

அப்பாவினருகே அமர்ந்து அழைத்துப் பார்த்தாள். விழிகள் மூடியிருந்தன. திறக்கவில்லை. "ம்..." என்ற சத்தற்ற வார்த்தை அவளது இதயத்தையே பிளந்தது.

"கண்ணைத் திறந்து என்னைப் பாருங்கப்பா..." கண்ணீரோடு கூறியது கேட்டும் அவரால் முடியவில்லை. சம்யுக்தாவின் உடல் முழுதும் பயத்தால் நடுங்கியது. வியர்த்துவழிய புரியாமல் அழுதாள்.

கணபதி அவரருகே வந்தார். "ஐயா, அண்ணன் வர்றார்." செவிகளுக்கருகே உரக்கக் குரலெழுப்பினார்.

"மணிரத்தினம் அண்ணன் வந்திட்டிருக்கார், முழுச்சு பாருங்க..."

"ம்..." என்றபோது குரல் இன்னும் பலகீனமாயிருந்தது.

நிமிர்ந்தவர் விழி கலங்க சம்யுக்தாவை நோக்கினார். இதயம் நடுங்கி அவரை பயத்துடன் பார்த்தாள்.

"மாமா... நான் போய் அவரைக் கூட்டிட்டு வரட்டுமா?"

"என்ன பாப்பா பேசற?" முத்தம்மாள் அதிர்வோடு இடைபுகுந்தாள்.

"ஆமாம்மா... நீ போக வேண்டாம்மா. என்னதான் பேசினாலும் வரப்போவதில்லை. அந்தம்மா விடாதும்மா... தவிர நீ அப்பாவோடு இருக்கணும், போயிடாதே... நான் டாக்டரை கூட்டிட்டு வர்றேன்."

"என்ன மாமா? ஏன்?" பயமும், நடுக்கமுமாய்க் கேட்டாள்.

"நீ இரு, வந்திடறேன்." கணபதி விரைந்தார்.

அங்கிருந்த எல்லோரையும் ஒருவித நடுக்கம் ஆக்கிரமித்திருந்தது.

அடுத்த அரை மணி நேரத்தில் எல்லாமே முடிந்து போனது.

அன்று இரவு முழுதும் மணிரத்தினம் உறங்கவில்லை. இதயம் முழுதும் எந்த உணர்ச்சிகளுமற்றுக் கிடந்தது. இத்தனை காலங்களாக தான் பொறுப்பற்றவனாக இருந்ததால் மனைவி, மக்களிடையேகூட மதிப்பில்லை. அதனாலேயே அடங்கிப்போக வேண்டிய கேவலம். அவரைப் பொறுத்தவரையில் எந்த விஷயத்துக்காகவும் இன்புற்றதுமில்லை, வருந்தியதுமில்லை. அடங்காத மனைவியாலேயே அவர் அழுத்தமாக மௌனமானார். மௌனமே அவரது தாய்மொழியாகிப் போனது.

இதனாலேயே பிறந்த பாசத்திற்காக வாதாடும் திராணியற்றவரானார். இப்போது உணர்ச்சியற்ற வறண்ட இதயத்தில் பாச ஊற்று கிளம்பியிருந்தது. ஆனால், தகுதியற்ற நிலையில் தன்னால் எதற்காகவும் வாதாட முடியாதே.

அடித்து, பிடித்து சண்டையிடும் வயது வித்தியாசமா? பத்து வருடங்கள்! பிறந்த பச்சிளங்குழந்தையாய் கிடந்த தம்பியை ஆசையோடு தூக்கிக் கொடுத்த முதல் முத்தத்தின் ஓசை இன்றும் உயிரோடு ஒலித்தது. அம்மாவின் முகமறியா தம்பியைத் தாயாக இருந்து வளர்த்த தருணங்கள் உயிர்பெற்று நினைவில் எழுந்தன.

அன்னம் பிசைந்து ஊட்டும்போது தன் விரலைக் கடித்ததற்காக ஒருபோதும் கோபப்படாது தாங்கிக் கொண்ட சகோதரப் பாசம் மறைந்தே போனதா?

மடியிலே கழித்த மலத்தை தாயுமானவனாய் முகம் சுளிக்காது சுத்தம் செய்த அப்பழுக்கற்ற பாசம் எப்படி மறைந்தது?

வீதியிலே கைபிடித்து, வேண்டியதை வாங்கித் தரும்போது ஏற்பட்ட மட்டற்ற மகிழ்ச்சி மறைந்து விட்டதா?

பாசத்தோடு 'தம்பி தம்பி' என்றழைத்த உதடுகள், பங்கு போட ஒருத்தி வந்தபின்பு இறுகியே போகுமா?

எல்லாம் எதனால்? எங்கிருந்து வந்தது இந்த பொறாமை உணர்வு. 'அண்ணே! நீதானேண்ணே எனக்கு எல்லாமே!' காலைப் பிடித்துக் கதறிய நிகழ்வு கண்முன்னே தோன்றியபோது கண்ணீர் வழிந்தது.

"இனி எப்பய்யா அவரைப் பார்க்கப் போறீங்க?" - கணபதியின் நடுங்கிய குரல் காதில் எதிரொலித்தது.

சத்தமின்றி விம்மினார்.

"த...ம்...பீ...!"

எல்லாவற்றையும்விட, 'நாங்க வேணும்னா உள்ளே வாங்க, அங்கே போனீங்கனா எங்களை மறந்திடுங்க' என்ற மகனின் குரல் பலமாக மீண்டும் ஒலித்தபோது விழிகளை இறுக மூடிக்கொண்டார். இளகிய மனத்தை இறுக்கிக் கொண்டார்.

முடிந்தது. கடவுள் கொடுத்த கால அவகாசம் சுப்புரத்தினத்திற்கு முடிந்து மூன்று தினங்களாகிப் போனது. உயிரோடு நடமாடிக் கொண்டிருந்த அவர் புகைப்பட சட்டத்திற்குள் அடக்கமாகிப் போனார். கருணை விழிகளும், புன்சிரிப்பும், அமைதி தவழும் முகமுமாய்...

முத்தம்மாளின் மடியில் படுத்திருந்தவாறே தந்தையின் புகைப்படத்தில் விழி பதித்திருந்தாள், உலர்ந்துபோன

விழிகளையும், உதடுகளையும் கொண்டு சலனமற்றுக் கிடந்தாள்.

இனி அப்பாவைப் பார்க்க முடியாது. எதிரிகளும் பணிந்து போகுமளவு அழுத்தமான அன்பு விழிகளும், அவரது வார்த்தைகளும் அவரோடு மறைந்துவிட்டன என்று நினைத்தபோது உலர்ந்து கிடந்த விழிகளில் ஈரம் சுரந்து வழிந்தது. உறவுகளுக்காக ஏங்கி உறக்கமற்றுக் கிடந்த விழிகள் ஒரேயடியாக உறங்கிப்போயின. ஏக்கத்தினையும், வேதனையையும் மட்டுமே சுமந்து கொண்டு துடித்துக் கொண்டிருந்த இருதயம் ஒரேயடியாய் நின்றுவிட்டது.

★ ★ ★

**ப**தைப்புடன் உள்ளே நுழைந்த பார்த்திபன் சுப்புரத்தினத்தின் படத்தைப் பார்த்து கண்கலங்கித் துடித்துப் போனான். அதைவிட இந்த விஷயத்தைத் தனக்குத் தெரியப்படுத்தக்கூட இல்லையே என நினைத்தபோது சம்யுக்தாவின் மீது சற்றுக் கோபம் உண்டானது. படத்தின் முன் கரம்கூப்பி கண்ணீர் வடித்தான். அவரது அன்பு தவழும் முகத்தை இறுதியாகப் பார்க்கக்கூட கொடுத்து வைக்கவில்லையே. அதைவிட சம்யுக்தாவின் நிலை கண்டு துடித்தே போனான்.

எல்லாமே நிமிடத்தில் நடந்துவிட்டதை அவனால் எளிதில் உணரக்கூட முடியவில்லை. இறுக்கமான சூழல் அங்கே பலத்த ஆட்சிபுரிந்து கொண்டிருந்தது. இவன் வந்தது தெரிந்தும் அவள் இன்னும் எழவில்லை. முத்தம்மாள் ஏதும் பேசவில்லை.

அவளருகே சென்றான். முத்தம்மாள் சம்யுக்தாவின் தோளைத் தொட்டாள். மெல்ல எழுந்து எங்கோ வெறித்தவாறு அமர்ந்தாள்.

"எனக்கு ஒரு வார்த்தை சொல்லியிருக்கக் கூடாதா? அலுவலகத்தில் சொல்லித்தான் எனக்கே தெரிந்தது" - பிசிறிய குரலில் அவன் அவளிடம் கேட்டான்.

அடுத்து என்ன பேசுவதென்று தெரியவில்லை. ஏனென்றால் அவனுக்கு அவரது இழப்பு மிகப்பெரிய இடி. குற்றவுணர்வில் துடித்துக் கொண்டிருந்த நிலையில் மேலும் ஏதும் பேசி சம்யுக்தாவின் கோபத்துக்கு ஆளாகி விடுவோமோ என்றெண்ணியவன் ஒரு சில நிமிடங்களுக்குப் பிறகு குனிந்த தலையோடு அங்கிருந்து புறப்பட்டான்.

அவள் இன்னும் அதே நிலையில் இருந்தாள்.

★ ★ ★

ஆவி பறக்க இரண்டு இட்லிகளை எடுத்து தட்டில் வைத்தாள் லெட்சுமி. மகனுக்குப் பிடித்த தேங்காய் சட்னியும், கூடவே காரச் சட்னியும் தட்டை நிறைத்தன. மகனின் அறை நோக்கி அவன் வரவுக்காக காத்திருந்தாள். நொடிக்கொருமுறை சுவர்க்கடிகாரத்தைப் பார்த்துக் கொண்டாள். வழக்கமாக எட்டு மணிக்கெல்லாம் பரபரப்புடன் வந்தமரும் மகனுக்காக விதவிதமாக காலை உணவு தயாரித்து ஆசையோடு பரிமாறுவதும், அவன் அவ்வுணவைப் புகழ்வதும், குறையாக சாப்பிடும்போது இவள் கொஞ்சம் கடுமையாகப் பேசுவதும் பிறகு அவசரமாக காரில் அமர்ந்துகொண்டு வர்றேன்மா என்று உரக்கக் குரல்கொடுத்துக் கொண்டு அலுவலகத்துக்குச் செல்வதும்... அடேயப்பா லெட்சுமி அவன் கிளம்பியதும் மனத்திற்குள் பெருமைப்பட்டுக் கொள்வாள்.

ஆனால் இந்த சில தினங்களாக அவன் போக்கிலே பலத்த மாற்றங்கள். அதிலும் இன்று! அவன் ஒன்பது

மணியாகியும் வெளியே வரவில்லை. அவன் நேற்று இரவு சம்யுக்தாவின் தந்தை இறந்த விஷயத்தைக் கூறினான். அதிர்ச்சியில் உறைந்து போனாள். அதைவிட அவரின் மரணத்திற்குத் தான்தான் காரணம் என்று தன் மகன் நினைத்துவிடுவானோ என்ற பயத்தால் இரவு முழுவதும் உறக்கம் வராமல் புரண்டு கொண்டிருந்தாள். இப்போது சந்தேகமேயின்றி தெரிந்தது. அவன் நிச்சயமாகக் கோபமாகத்தான் இருக்கிறான்.

கதவைத் தட்டவும் தயக்கமாக இருந்தது. என்ன செய்வது? குழம்பிப் போய் நின்று கொண்டிருந்தாள்.

சிறிது நேரத்தில் வெளியே வந்தவன் சாப்பாட்டு மேஜையைக் கடந்து சென்றபோது ஏமாற்றமடைந்தாள்.

"பார்த்திபா... சாப்பிடலை?"

"பசியில்லை... நான் கிளம்பறேன்" - திரும்பாமல் பதிலளித்தான்.

"இதென்ன புதுசாயிருக்கு. நீ பசி பொறுக்க மாட்டாய். வந்து சாப்பிட்டுப் போ..." சொல்லிக் கொண்டே இன்னும் சட்னி எடுத்து வைத்தாள்.

அவன் திரும்பி தாயை நோக்கினான். எதுவுமே புரியாததுபோல் நடிக்கும் தாய் மீது கோபமும், எரிச்சலும் கிளம்பியது.

நேற்று இருந்த கோபத்தில் அம்மாவை கடுமையாகப் பேசிவிடுவோமோ என்று பயம்கூட இருந்தது. ஆனால் அம்மா தனக்காகப் பட்ட கஷ்டங்களை நினைத்தபோது திரண்ட கோபத்தையெல்லாம் உள்ளேயே பூட்டித் தாளிட்டான்.

"என்னப்பா என்ன யோசனை? வா வந்து சாப்பிடு. இந்த மூன்று, நான்கு நாட்களா சரியாவே சாப்பிடுவதில்லை. இளைச்சுப் போயிட்டாய் பார்." தண்ணீரை டம்ளரில் ஊற்றினாள்.

அவளருகே வந்து நின்றவன் அவளை நேராகப் பார்த்தான்.

"எப்படிம்மா எதுவுமே நடக்காதது போலவே இப்படி நடந்துகொள்ள முடியுது உன்னால்?"

"என்ன நடந்தது?" அவளும் பேசிவிட வேண்டுமென உறுதியாகத்தான் இருந்தாள்.

"உனக்கு வருத்தமா இல்லையா?"

"நான் ஏன் வருத்தப்படணும்?"

"நீ பேசியது அவரை எந்த அளவு புண்படுத்தி யிருக்கும்னு யோசிக்கவே இல்லையா?"

"என்னமோ அவங்கப்பாவுடைய மரணத்துக்கு நான்தான் காரணங்கற மாதிரி பேசுறியேடா. அவர் ஏற்கெனவே முடியாம இருந்த மனுஷன். காக்கா உட்கார பனம்பழம் விழுந்த கதையா ஆயிடுச்சு. அவர் செய்தது தப்புதானே!"

"தூங்கறவங்களை எழுப்பிடலாம். நடிக்கறவங்களை எழுப்ப முடியாது. பரவாயில்லை. நீ சொன்னபடியே இருக்கட்டும். ஆனால், உன்னை மாதிரி என்னால இருக்க முடியாது. என்னை தயவு செய்து என் போக்கில் விட்டுடு. எனக்கு பசிக்கும்போது நானே சாப்பிடுவேன். நீ என்னைத் தொந்தரவு பண்ண வேண்டாம்."

அவனது ஒவ்வொரு வார்த்தைக்கும் கண்ணீர் மேலும் மேலும் பெருகியது.

“என் மேல் உனக்கு அவ்வளவு வெறுப்பாடா?” கண்கள் கலங்கிக் கேட்டாள்.

“இல்லைம்மா. உன்னை எப்படி நான் வெறுக்க முடியும். ஆனால் நடந்ததை எப்படி மறக்க முடியும்? உன்னை நான் குறை சொல்லவும் மாட்டேன். எல்லாமே என் தவறுதான். ஆரம்பத்திலேயே எல்லா விஷயத்தையும் உன்னிடம் சொல்லியிருக்கணும். சம்யுக்தாவை நேரில் பார்த்தால் பிடிச்சிடும். பிறகு மெதுவா உனக்கு எடுத்துச் சொல்லலாம்னு நினைத்தேன். ஆனால் ஒரு வருத்தம்! என்னிடம் ஒரு வார்த்தைகூட கேட்காமல் பெரிய மனிதர் - அதுவும் எப்படி வாழ்ந்த மனிதர் - அவரிடம் போய் எப்படித்தான் பேச முடிந்தது? இப்ப அந்தப் பொண்ணு யாருமேயில்லாத அனாதையா இருக்கா தெரியுமா?”

கண் கலங்கி கூறிய மகனைக் கண்டு அதிர்ந்து போனாள். மகனின் நிதானமான ஒவ்வொரு வார்த்தையிலும் பதில் பேச முடியாமல் நின்றாள்.

“மன்னிச்சிடும்மா. இதுபற்றி உன்னிடம் பேச வேண்டாம்னுதான் நினைத்தேன். முடியலை. உன் உணர்வுகளை என்னால் புரிஞ்சுக்க முடியும்! நீ மாற வேண்டாம். ஆனால், நான் உன் எண்ணத்துக்கு மாறிடுவேனு நினைக்காதே. அது நடக்காது. இப்ப என் மனத்தில் சம்யுக்தா இல்லை. ஆனால், என் வாழ்க்கையில் இனி எந்தப் பொண்ணுக்கும் இடம் இல்லை. என்றைக்காவது என் மனம் மாறும்னு நினைக்காதே. கண்டிப்பா உன்னை தண்டிக்க எடுத்த முடிவில்லை. இதையும் மீறி எனக்குக் கல்யாணத்தைப் பற்றி பேசினால் என் உடம்பில் உயிர் இருக்காது!”

- இடியாய் வார்த்தைகளை இறக்கிவிட்டுப் புறப்பட்டான். ஸ்தம்பித்துப் போய் நின்றாள் லெட்சுமி.

**வீ**ட்டுக்குள்ளே அடைந்து கிடந்த சம்யுக்தா அன்று மனம்போன போக்கிலே நடந்து கொண்டிருந்தாள். வீதியில் மக்களின் பரிதாபத்துக்காளாகிப் போனாள். தெரிந்தவர்கள், அக்கம் பக்கத்தினர் எல்லோருமே இரண்டு, மூன்று நாட்கள் ஆறுதல் சொல்லிவிட்டு அவரது வேலைகளில் ஈடுபடத் தொடங்கியிருந்தனர். வாரங்கள் மூன்றினைக் கடந்த பிறகும், புழுங்கிக் கொண்டிருந்தாள் சம்யுக்தா. இவளைப் போன்றே பார்த்திபனும் ஒருபுறம் தவித்துக் கொண்டிருந்தான். நேற்று பார்த்திபன் பேசியது மனத்தின் ஓரத்தில் தேங்கியிருந்தது. அதைப்பற்றி யோசிக்கவே தேவையில்லை எனத் தீர்மானமாக முடிவெடுத்தபின் கணபதியின் வார்த்தை குழப்பத்தை ஏற்படுத்தியிருந்தது.

"பார்த்திபன் தம்பி சொல்வது உண்மைதான். அந்தத் தம்பி மீது இருக்கும் கோபத்தில் யோசிக்காமல் முடிவெடுத்துவிடாதே!"

இது என்ன புதுக் குழப்பம்! இதுவரை தெரியாத விஷயம்? சம்யுக்தா பலவாறு குழம்பிப் போயிருந்தாள். அதைவிடப் பார்த்திபன் பேசிய ஒவ்வொரு வார்த்தையும் அவளைத் துளைத்தெடுத்தன.

'இத பார் சம்யுக்தா. என்னை நோகடிப்பதா நினைத்து உன்னை நீயே ஏமாத்திக்கொள்வது மட்டுமில்லாம அப்பாவின் கனவையும் உடைச்சுடாதே.'

'அப்பாவே போயாச்சு. கனவு மட்டும் வாழ்ந்து என்ன ஆகிவிடப்போகிறது.'

"சார் என்மேல் எவ்வளவு நம்பிக்கை வெச்சிருந்தால் என்னையும் குடும்பத்தில் ஒரு ஆளா நினைத்து இதை சொல்லியிருப்பார். உங்கப்பா கைபிடித்து நிச்சயமா அந்த வீட்டை திருப்பிடலாம், கவலையை விடுங்கனு நான் உறுதி கொடுத்திருக்கேன்."

"இது ஏதோ பாவத்துக்கு பரிகாரம் மாதிரி இருக்கு சார். தயவு செய்து இதுபற்றி பேசாதீங்க."

"ஏன் சம்யு? நீ புரிஞ்சுக்கவே மாட்டாயா. தன்னைவிட மற்றவர்களின் உணர்வுக்கு மதிப்பு கொடுக்கும் நீயா இப்படி பேசுறே... அந்த வீடு உன் அப்பாவின் இலட்சியம், கனவு. உனக்குத் தெரியாதா? அதில்தான் கௌரவமே இருக்குனு சொல்வாரே மறந்துட்டாயா? எது உன்னைத் தடுக்கிறது? பிடிவாதமா? இல்லை என்னை பழிவாங்க நினைக்கிறாயா?"

"என் அப்பாவே போன பிறகு அந்த வீட்டை வைத்து என்ன செய்யப் போகிறேன். யாருமேயில்லாத அநாதை நான். எனக்குத் தேவையில்லை."

பார்த்திபன் முதன்முறையாய் இவள் மீது கோபம் கொண்டான். "எனக்குத் தண்டனை கொடுப்பதாக நினைத்து ஏமாத்திக்காதே. எவனோ அநியாயமா வாழறவனிடம் கவுரவம் பார்க்காமல் என்னிடம் கௌரவம் பார்க்கிறாயே. வா சம்யு, பணத்தைக் கொடுத்திட்டு வீட்டை மீட்டுடலாம்."

அவள் அசையவில்லை. அவன் கெஞ்சினான். முத்தம்மாள்கூட மனமிளகினாள்.

"நீங்க ஏன் சார் எனக்கு உதவணும்?"

இந்தக் கேள்வி அவன் எதிர்பார்த்ததுதான்., அவன் இறுக்கமாக அவளை நோக்கினான். "உன்னை என் மனத்திலிருந்து என்றைக்கோ எடுத்துவிட்டேன். உன் அப்பா மீது நான் வெச்சிருந்த மரியாதை, அவர் என்னிடம் காட்டிய அன்பு மறக்க முடியலை சம்யுக்தா..." கலங்கிய விழிகளை மூடிக்கொண்டான். "என்னிடம் கௌரவம் பார்த்து யாரிடமோ தோற்றுப்போயிடாதே... என் மனத்தில் எந்தக் களங்கமும் இல்லை. நீ மனம் மாறினால் என்னிடம் சொல்..." - சொல்லிவிட்டு விரைந்தவனை இமைக்காமல் பார்த்துக் கொண்டிருந்தாள். அதன் பிறகு கணபதி ஆரம்பித்தார்.

அன்று அரண்மனை வீட்டில் தங்களுக்கும், புல்லட் சேகருக்கும் நடந்த விஷயத்தைச் சொன்னபோது அதிர்ந்தாள்.

இரவு முழுதும் உறக்கம் வராமல் புரண்டாள். உண்மையில் பார்த்திபன் மனம் களங்கமற்றது எனத் தெரிந்தது. ஆனால், அப்பாவின் இழப்பை எவற்றால் ஈடுசெய்ய முடியும்?

மனம்போன போக்கு, அவளை சிந்தனையில் ஆட்டிக் கொண்டிருக்கும் அரண்மனை வீட்டு வாசலில் கொண்டுவந்து நிறுத்தியது. அவளே எதிர்பார்க்கவில்லை. தன்னிச்சையாகவே கால்கள் நடந்துவந்தது குறித்து வியந்து நின்றாள்.

மூன்று வருடங்களுக்குப் பிறகு! இதே ஊரில் இருந்தாலும் இந்தப் பக்கம் வந்ததுமில்லை, தந்தையையும் வர அனுமதித்ததில்லை. ஆனால் இன்று! நினைத்துப் பார்க்கவில்லை இங்கு வருவாளென்று. கம்பீரம் குறையாமல் தோற்றமளிக்கும் அரண்மனையை

அண்ணார்ந்து பார்த்தாள். கிட்டத்தட்ட நீயும், நானும் ஒன்றுதான். அனாதை! துள்ளி ஓடியாடிய வீடு, உள்ளங்களை உருகவைக்கும் உணர்வுகளையெல்லாம் உள்ளடக்கி நிற்கிறது. அதுவும் சோகமாக! பிள்ளைகளையெல்லாம் பறிகொடுத்துவிட்டு, உயிரற்ற செங்கல்லும் மண்ணும் மட்டுமே தாங்கிய வெற்று மாளிகையாய்! பூட்டப்பட்டிருக்கும் மிகப்பெரிய கம்பிக் கதவுக்குள்ளே மௌனமாக நின்றுகொண்டிருந்தது.

மௌனமாகத் திரும்பியவள் மீண்டுமொருமுறை திரும்பிப் பார்த்தாள். மனம் என்னவோ செய்தது. பார்த்திபன், கணபதியின் குரல்கள் மாறிமாறி ஒலித்தன. தந்தையின் ஏக்கம் நிறைந்த விழிகளும் நினைவுக்கு வந்தபோது விம்மினாள்.

‘கடவுளே! ஏன் எங்கள் வாழ்க்கையில் மட்டும் இந்தக் கொடுமை? விடை தெரியாமலே போய்விட்டது ஓர் உயிர். அடுத்து?’ கொப்பளித்துக் கொண்டுவந்த கோபத்தோடு அங்கிருந்து கோவிலை நோக்கிப் புறப்பட்டாள். வாசலில் நின்றுகொண்டு கோபுரத்தைப் பார்த்து உள்ளுக்குள்ளே குமுறினாள். தன் ‘வாழாத வாழ்க்கையைத் தந்தது நீதானே. அவ்வளவு கருணையா என்மீது? கனவிலும் தீங்கிழைக்க எண்ணிடாத எங்களுக்கு இப்படி ஒரு கதியா? இப்படி அநாதையாக நிற்க வைத்து ரசிக்கிறாயே? வேண்டாம்! உன் கருணை எனக்கு வேண்டாம். பிறந்ததிலிருந்து உன்னிடம் நான் கண்டிடாத கருணை, தந்தையே போன பிறகு தேவையில்லை ஒருபோதும்!’ கண்ணீர் சொட்டுக்கள் மண்ணில் உதிர்ந்தன.

“சம்யு...!” - குருக்கள் கலங்கிய விழிகளோடு நின்றிருந்தார்.

சம்யுக்தா அவரைப் பார்த்து சத்தமாகக் குலுங்கினாள்.

"உன்னை இந்தக் கோலத்தில் பார்க்கணுமா குழந்தை. பாவி.. அவா மட்டும் அன்று சொல்லாம இருந்திருந்தால் இன்று நீ நின்றிருக்கும் கோலமே வேறு..." - கலக்கத்தோடு கூறியது கேட்டு புரியாமல் பார்த்தாள்.

அவர் அன்று சிந்தாமணி, லெட்சுமியிடம் கூறிய விஷயத்தைக் கூறி வருந்தினார். சிலைபோல நின்றிருந்தாள். அதைவிட மனச்சோர்வோடு வீடு திரும்பியபோது அவள் சந்தித்த நிகழ்வு அவளை பலமாகத் தாக்கியிருந்தது.

## பாகம் - 7

**கா**லச்சூழல் மனிதனின் குணத்தையும் மாற்றிவிடுமா? பாசத்தை இரத்த பந்தத்தை மறக்கச் செய்யுமா? அப்படியென்றால் எத்தனையோ சூழலுக்குள் சுழன்றும் இத்தனை வருடங்களாக என் அப்பா மட்டும் அதே குணத்தோடு எப்படி இருக்க முடிந்தது? யாருக்கோ நடந்த விஷயமானாலும்கூட சிறிய அளவாவது மனதைப் பாதிக்காதா? அதுகூட இல்லாமல் போகுமா?

சம்யுக்தா அப்பாவின் படத்துக்குக் கீழே அமர்ந்திருந்தாள்.

"இப்படியே சாப்பிடாமல் உடம்பைக் கெடுத்துக்காதே பாப்பா. சாப்பிடு..." -

தன் வீட்டிலிருந்து சாப்பாடு கொண்டு வந்திருந்தாள் முத்தம்மாள்.

சம்யுக்தா அசையாமல் அமர்ந்திருப்பது கண்டு அவளும் அவளருகே அமர்ந்துகொண்டாள். மூடியிருக்கும் தட்டைத் திறந்து, அவளைத் தட்டி சிந்தனையைக் கலைக்க முற்பட்டாள்.

“பாப்பா... சாப்பிடு பாப்பா. இப்படியே இருந்து உன் உடம்பைக் கெடுத்துக்காதே. அவருக்கு அவ்வளவுதான் விதின்னு மனத்தைத் தேத்திக்கோ.” - எந்த சலனமுமின்றி இருந்தவளை பலமாக உலுக்கினாள்.

அதிர்ந்து சிந்தனையிலிருந்து மீண்டாள். அப்போதுதான் முத்தம்மாள் பேசிக் கொண்டிருப்பதே தெரிந்தது அவளுக்கு. “நீ எப்ப வந்தாய் முத்தம்மா?”

‘‘ஆங்...’’ வாயிலே கைவைத்து வியந்து போய் பார்த்தாள்.

“உன்னை நினைத்தால் எனக்கு பயமாயிருக்கு பாப்பா. நீ முதலில் சாப்பிடு...”

“நீ போ முத்தம்மா. நான் அப்புறம் சாப்பிடறேன்.”

‘‘முடியாது பாப்பா, நீ சாப்பிடாம நான் போகமாட்டேன்.”

“யம்மா... கொஞ்சம் வாயேன்...” முத்தம்மாள் மகன் வாசலில் நின்று கத்தினான்.

“ஏன்டா?...” பதிலுக்குக் கூவினாள்.

“வரமுடியாதாக்கும்...” வாசலில் நின்று கர்ஜித்தான்.

“நீ போ முத்தம்மா... நான் சாப்பிடறேன்.”

“உண்மையிலே சாப்பிடணும் பாப்பா. இந்தா வந்துடறேன். இல்லைனா தொண்டை கிழிய கத்தும்...” சொல்லிக்கொண்டு கைகளை ஊன்றி எழுந்து நடந்தாள்.

“மகன்னு ஒருத்தன் இருப்பதையே மறந்துட்டா யாக்கும்.” அம்மா வெளியே வந்ததும் கடித்துவிட்டுச் சென்றான். அவள் காதில் போட்டுக்கொள்ளாமல் பின் தொடர்ந்தாள்.

நீண்ட பெருமூச்சை வெளியிட்டவள் அண்ணார்ந்து அப்பாவின் படத்தைப் பார்த்தாள். பூ மாலையில் மணம் வீசிக் கொண்டிருந்தார். எவ்வளவு பெருந்தன்மை. எத்தனை பாசம் கொண்டவர். அதில் பாதிகூட அவர் அண்ணனுக்கு இல்லையா?

கோவிலிலிருந்து நடந்து வரும்போது எதிரே நடந்துவந்தார் மணிரத்தினம். இருவருமே நேருக்கு நேராக எதிர்பாராமல் பார்த்தாயிற்று. தாங்கிப் பிடிக்க ஆளில்லாத அநாதையாய் தள்ளாடி நடந்துவந்த மகளைக் கண்டபோதும் சட்டென விழிகளைத் தாழ்த்தி நடந்துபோனபோது ஒரு கணம் ஸ்தம்பித்து நின்றாள்.

“அ...ப்...பா...” - கண்ணீர் வடித்தாள். “இவ்வளவு காலம் ஈரமில்லாத மரக்கட்டைக்காக ஏங்கியேங்கிப் போய்ச் சேர்ந்தீர்களேப்பா” கதறினாள். ஆனால், அதைவிட அன்று நடந்த சம்பவம் ஊர் மக்களையே கலங்க வைத்திருந்தது.

“ஆண் பிள்ளையில்லாதவர் இறுதிச் சடங்கு யார் செய்வது?”

“அண்ணன் இருக்காரில்லையா.”

"அட போங்கையா, கடைசி நேரத்துலகூட வந்து பார்க்காதவர் இங்கு வந்துடுவாராக்கும்."

"என்னதான் பகையாயிருந்தாலும் இப்படியா?" எல்லோரும் தீவிரமாகப் பேசிக் கொண்டிருந்தனர்.

"என்னதான் அவர் பிடிவாதமாயிருந்தாலும், இந்த விஷயத்தைச் சொல்லணுமில்லையா... நாளைக்கு சொல்லலைனு சொல்லப்படாது..."

"விஷயத்தைச் சொல்லி தம்பிக்கு எல்லா காரியமும் முன்னே இருந்து செய்யணும்னு சொல்லி கூட்டிட்டு வாங்கய்யா."

கூட்டத்தில் முக்கியமானவர் பக்குவமாய் பேசினார். கணபதிதான் சென்றார். மறுபடியும் அதே மாற்றமில்லா பதிலுடன் திரும்பி வந்தார். "ஒரு சாதாரண விஷயத்தில் உருவான போட்டி வளர்ந்து இந்தளவுக்குக் கூட பகையாய் வந்து நிற்குமா?"

திரண்டிருந்த கூட்டமே சலசலத்தது.

இறுதியில் சம்யுக்தா தானே எல்லாவற்றையும் செய்வதாகக் கூறி அதிர்ச்சியடைந்த கூட்டத்தை சம்மதிக்க வைத்தாள்.

கண்ணீரை அழுத்தித் துடைத்தாள், இவ்வளவும் எதனால்? தனக்கென வாழ ஆரம்பித்ததால்! தம்பி மீது கொண்ட பாசம் போட்டி, பொறாமையால் காணாமலேயே போய்விட்டதே! எல்லாவற்றுக்கும் காரணம் அந்த வீடுதானே!

படாரென எழுந்து, போனை எடுத்து பார்த்திபனின் எண்களை அழுத்தினாள்.

★ ★ ★

தனது கப்பல் சார்ந்த வேலைகளுக்கென இந்தியாவில் அலுவலகம் ஆரம்பிக்க வேண்டுமென்பது ஸ்ரீராமின் நெடுநாளைய எண்ணமாக இருந்தது. தனக்கென ஒரு சொந்தம் தமிழ்நாட்டில் இருப்பது குறித்து மகிழ்ந்த அவன் தனது கனவை நனவாக்க எண்ணி அதற்கான வேலைகளிலும் ஈடுபட்டான். தாட்சாயிணியும், இந்தியாவில் வசிக்கும் சிங்கப்பூர் நண்பனின் சகோதரன் செல்வமும் ஸ்ரீராமுக்கு பக்கபலமாக இருந்தனர். அதன்படியே சென்னையில் அலுவலகமும் ஆரம்பித்து, பணியாட்களும் நியமித்து தொழிலும் தொடங்கியிருந்தது. ஏற்கெனவே சில நாடுகளில் அலுவலகம் உள்ள நிலையில் சென்னையிலும் தொடங்கியிருப்பது குறித்து அவன் சந்தோசமடைந்தான். தான் சிங்கப்பூர் சென்றபிறகு இந்த அலுவலகத்தை பொறுப்புடன் பார்த்துக்கொள்ள தாட்சாயிணி பொருத்தமானவள் என்று எத்தனையோ முறை நினைத்ததுண்டு. ஆனால்... அத்தை அன்று தன்னிடம் பேசிய பிறகு அவள் ஏதேதோ காரணங்கள் கூறி தன்னை தவிர்த்து ஒதுக்குகிறாள் என்று அவனுக்குப் புரிந்ததிலிருந்து அவன் சொல்லொணா வகை வேதனைக்கு ஆளானான்.

அன்று அப்படித்தான் அவளுக்கு போன் செய்தபோது தனக்கு உடல்நிலை சரியில்லை என்று கூறி போனை வைத்தாள்.

அவனும் அலுவலக நெருக்கடியில் அவள் வீட்டிற்குச் செல்ல முடியவில்லை. அவள் அலுவலகம் வரவில்லை என வருத்தப்படவில்லை. தன்னிடம் பேசுவதைக்கூட தவிர்த்து ஒதுக்குகிறாளே, அப்படியென்றால் அவளுக்குள்ளும் அத்தை சொன்னதில் உடன்பாடு இருக்கிறதா என நினைத்தபோது மனம் பாரமாகிப் போனது.

என்ன ஆனாலும், இன்று இதைப்பற்றி பேசிவிட வேண்டுமெனத் தீர்மானித்தான். காரை எடுத்துக்கொண்டு சென்றான்.

வீட்டின் முன் கார் நிறுத்தப்பட்டு ராஜா சுத்தம் செய்து கொண்டிருந்தான். அது தாட்சாயிணிக்கு ஸ்ரீராம் அளித்த பரிசு.

ஸ்ரீராம் காரிலிருந்து இறங்கியதும் ராஜா வரவேற்றான். அத்தையும்தான்! ஆனால் அவள் விழிகளில் ஒருவித ஏமாற்றமும், சோகமும் தெரிந்ததை அவனால் உணர முடிந்தது.

"தாட்சாயிணி எங்கே அத்தே?"

''மாடியில் அவளது அறையில் இருக்காள்...'' மறுவினாடியே படிகளை நோக்கி விரைந்தாள்.

கதவு திறந்தேயிருந்தது. ஆனால் அவள் கட்டிலில் படுத்திருந்தாள்.

சிறிய செருமலுக்குப் பிறகு, ''எப்படி இருக்கே தாட்சாயிணி" என்றான்.

இவனது திடீர் வரவை அவள் எதிர்பார்க்கவில்லை. திடுக்கிட்டு எழுந்து, "வா... வாங்கத்தான்" என்றாள்.

''எப்படி இருக்கேனு கேட்டேன்.'' அவன் மீண்டுமொருமுறை அழுத்திக் கேட்டபோது அதன் அர்த்தத்தை உணர்ந்த அவள், ''ம்...'' என்றவாறு தலைகுனிந்தாள்.

அவனது விழிகளில் கோபம் வழிந்தது.

"உன் போக்கில் மாற்றம் தெரியுது தாட்சாயிணி. எனக்கு அதிர்ச்சியாயிருக்கு. நேராகவே பேசிடறேன். அத்தை என்னிடம் பேசியது உனக்கு தெரிந்திருக்கும்னு நினைக்கிறேன்."

அவள் மௌனமாக இருந்தாள்.

"உன்னை நான் முதன்முதலில் பார்த்தபோது சந்தோசப்பட்டேன். ஏன் தெரியுமா? உடன்பிறந்தவங்க, தெரிந்தவங்க, யாருமே இல்லாம வளர்ந்தவன் நான். அப்பா, அம்மா பாசம்கூட அளவாத்தான் கிடைச்சது. எனக்கு இருக்கும் ஒருசில நண்பர்கள்கூட அவ்வளவு நெருக்கம் கிடையாது. இப்படியிருந்த எனக்கு உன்னுடைய சொந்தம் கிடைச்சது, ரொம்ப சந்தோசமாயிருந்தது. என்னிடம் நீ பேசும்போது உன் பேச்சை நான் விரும்பியிருக்கிறேன். ஊரைச் சுற்றிக் காட்டும்போதும், ஒவ்வொரு கதைகளையும் நீ சொல்லும்போதும், நீ பேசும் விதம் எனக்கு ரொம்பப் பிடிக்கும். உண்மையில் ஒரு தோழியாத்தான் உன்னை இன்னும் பார்க்கிறேன் தாட்சாயிணி."

அதிர்ந்து நிமிர்ந்தவள் ஒரு கணம் உறைந்து போனாள்.

"உன்னை எனக்குப் பிடிக்கும். ஒரு தோழியா பார்த்த உன்னை ஒருபோதும் மனைவியா பார்க்க முடியாது."

கண்கலங்கி தலைகவிழ்ந்தாள்.

"பெரியவங்க ஏதாவது பேசும்போது நம்மையறியாமல் நமக்கு ஏற்படும் அன்பு என்னைப் பொறுத்தவரை காதல் கிடையாது. ஒருவேளை அப்பா இருந்திருந்தால் உன் அம்மா பேசியதுபோல் பேசியிருக்கலாம். அப்பவும் நான்

சம்மதிச்சிருப்பேனானு தெரியாது. இதுவரைக்கும் எனக்குக் கல்யாணத்தின் மீது எண்ணமே வரலை.

"படித்த புத்திசாலிப் பெண் நீ. அம்மா அப்படியில்லை. அவங்களுக்கு சில விஷயம் புரியாது. அவங்களுக்கு நீதான் புரியவைக்கணும். நம் நட்பு என்றைக்கும் இதேமாதிரி இருக்கணும் தாட்சாயிணி."

சிவந்த விழிகளில் அவள் ஏறிட்டாள்.

நிதானமாக, அன்பு குறையாமல் அவன் பேசிய விதம் அவளுக்கு குற்ற உணர்வோடு புரியவைத்தது. அவன்மீது அவளுக்கு இப்போது ஒருவித மதிப்பு உருவானது.

"நீ என்னைத் தவிர்த்து ஒதுக்கும்போது கஷ்டமாயிருக்கு தாட்சாயிணி." சொல்லிவிட்டு, அவன் அமைதியாய் வெளியேறினான்.

அவனது ஒவ்வொரு வார்த்தையிலும் அதிர்ந்துபோய் சிலையாய் நின்றாள்.

★ ★ ★

**கோ**டானுகோடி இன்பங்களையும், விட்டுப்போன சந்தோசங்களையும், கடவுளின் ஆசீர்வாதங்களையும் கையிலே பெற்றுவிட்டதுபோல் உணர்ந்தாள் சம்யுக்தா. மூன்று வருட தவம், இலட்சியம், கனவு - கரங்களிலே கிடைக்கப் பெறாமலேயே போய்விடுமோ என்ற ஏக்கமும், பயமும் இன்று காணாமலேயே போயிருந்தது. என்னதான் மனிதன் கனவுக்கோட்டை கட்டினாலும், கடவுளின் தீர்மானப்படிதானே எல்லாம் நடக்கிறது. மனிதனுக்குத் தோன்றும் தேவையும், கனவும், விருப்பமும்கூட கடவுள் போடும் கணக்குதானே! எல்லாமே கிடைக்கும்போது

அதை அனுபவிப்பதற்கும் அதிர்ஷ்டம் வேண்டும். காலம் அவர்களுக்குச் சாதகமாக இருக்க வேண்டுமே.

சுப்புரத்தினத்திற்கு அது இல்லாமல் போனது. வெறும் ஏக்கங்களுக்கும், சோகங்களுக்கும், கனவுகளுக்கும் மட்டுமே கால அவகாசம் பெற்றிருந்தார். இதோ இன்று... அவரது தவத்திற்கு பலன் கிடைத்துவிட்டது.

அரண்மனை வீட்டுப் பத்திரம் சம்யுக்தா கரங்களிலே தவழ்ந்தது. இவ்வளவுக்கும் காரணமான பார்த்திபன் அவளுக்கு தெய்வமாகவே தோன்றினான். அவன் மட்டும் குறித்த காலத்தில் உதவவில்லையானால் அதற்காகவே காத்திருக்கும் நரி விழுங்கியிருக்கும்.

புல்லட் சேகர் கனவில்கூட நினைக்கவில்லை. அதிலும் சுப்புரத்தினம் இறந்தபிறகு, அந்த அரண்மனையே தனக்குத்தான் என மனத்திற்குள் எழுதிவைத்தது, நிமிடத்திலேயே அழிக்கப்படுமென நினைக்கவேயில்லை. அவன் ஏதேதோ தந்திரமாய் பேசிப்பார்த்தான். வட்டிக்கும்கூட வட்டி போட்டான். தவறான கணக்கும் காண்பித்தான்.

எதுவுமே பார்த்திபன் முன் எடுபடவில்லை. சம்யுக்தா எல்லாம் அறிந்தவளென்றாலும் "யாருமில்லாத பெண்தானே, வயதான கிழவன் இவர்களால் என்ன சாதித்துவிட முடியும்? ஏதாவது சொல்லி மடக்கிவிடலாம் என நினைத்தவன் பார்த்திபனைக் கண்டதும் தடுமாறிப் போனான். முறைப்படி ஊரில் படித்த பெரியோர்களையும் வைத்து பேசி கையெழுத்திட்டு, பத்திரத்தை மீட்டபோது சம்யுக்தா நன்றியோடு பார்த்திபனைப் பார்த்தாள்.

பார்த்திபன் உண்மையில் சந்தோசமடைந்தான். திடீரென மனம் மாறி இதற்குச் சம்மதிப்பாளென

கற்பனையிலும் நினைக்கவில்லை. ஆனால் அவளும் இந்தப் பணத்தைத் திரும்பத் தந்துவிடுவேன் எனக் கண்டிப்பாக கூறியபோது உள்ளுக்குள்ளே அவளை நினைத்துப் பெருமிதம் கொண்டான்.

எத்தனை வைராக்கியம்? உறுதி? சம்யுக்தா அவன் மனத்திலும் மரியாதைக்குரியவளானாள்.

"நன்றி சம்யுக்தா! உன் பேச்சுக்கு ஒத்துக்கொள்கிறேன். அவசரமில்லை. உன்னால் எப்ப முடியுமோ அப்ப திருப்பிக்கொடு. தயவு செய்து இதைக் கடனாக மட்டும் நினைத்துவிடாதே. உன் அப்பாவுக்கு ஏற்கெனவே நான் கடன்பட்டிருக்கேன். என்றைக்கு நீ உனக்கென ஒரு துணை தேடிக்கொள்கிறாயோ அன்றைக்குத்தான் நான் நிம்மதியா இருப்பேன். வேறு எந்த உதவி உனக்குத் தேவைப்பட்டாலும் என்னைக் கூப்பிடு. ஒரு நண்பனா உதவ காத்திருக்கிறேன்."

கண்ணியத்தோடு கூறி விடைபெற்றபோது திருப்தியும், நன்றியும் கலந்தவளாய் கண்ணீர் வடித்தாள்.

அப்பாவின் முன்னே பத்திரத்தை வைத்து கண்ணீர் வடித்தாள். அவரின் அன்பு தவழும் விழிகளில் நிம்மதியை உணர முடிந்தது அவளால்!

"அப்பா..." சத்தமின்றி அழைத்தாள். 'நான் இப்ப எடுத்திருக்கும் முடிவுக்கு, உங்களுக்கு நிச்சயமா ஆட்சேபணை இருக்காதுனு எனக்குத் தெரியும். இதனால் நீங்க சந்தோசப்படுவீங்கனு எனக்குத் தெரியும். என்னை ஆசீர்வாதம் பண்ணுங்கப்பா...'

வணங்கினாள். அவரது ஆசீர்வாதம் மெல்ல காற்றிலே தவழ்ந்து அவள் கேசத்தை வருடுவதுபோ. உணர்ந்தாள்.

பத்திரத்தை எடுத்துக்கொண்டு ஒருவித உறுதியோடு கிளம்பினாள்.

அப்போதுதான் காரைத் துடைத்து முடித்திருந்தான் ராஜா.

தாட்சாயிணி அறை நோக்கிச் சென்ற ஸ்ரீராம் என்ன பேசுகிறானோ என்ற சிந்தனையோடு கீழே காத்திருந்தாள் சிந்தாமணி. மணிரத்தினம் அதே வித்தியாசமில்லா மௌனத்தோடு வெளியே புறப்படத் தயாரானார்.

எல்லோருக்குமே பலத்த அதிர்ச்சி தரும் விதமாக கம்பிக்கதவின் 'கிரீச்' சத்தத்தோடு சம்யுக்தா வந்தாள். எதிர்பாராத இந்நிகழ்வால் எல்லோருமே பெரும் அதிர்வுக்குள்ளாகியிருந்தனர். அதைவிட சம்யுக்தா எவ்வித தயக்கமோ அல்லது பயமோ இன்றி அனுமதியு மின்றி வீட்டுக்குள்ளே நுழைந்தபோது மயக்கமே வந்துவிடும்போல் உணர்ந்தனர்.

அந்த மிகப்பெரிய கூடத்தில் அவள் ராஜாவையும், சிந்தாமணியையும் கடந்து மணிரத்தினத்தை நோக்கிச் சென்றபோது சிந்தாமணி வாயடைத்துப் போய் நின்றாள். ஒருவேளை இதை எதிர்பார்த்திருந்தால் ஏதாவது பேசி அவளைக் கிளப்பியிருப்பாளோ, அதிலும் இப்படி திடீர் அதிர்ச்சி தரும் வருகை எதற்காக? என குழம்பிப்போய் இருந்ததால் எவ்வித யோசனையும் தோன்றாமல் வாயடைத்து நின்றாள்.

எத்தனை வருடங்கள்! இத்தனை காலம் கழித்து அதிலும் அப்பா போனபிறகு வருவதற்கான காரணம்?

ஒருவேளை தான் யாருமில்லாத அநாதையென ஆதரவு கேட்டு வந்திருக்கிறாளோ? சிந்தாமணியின்

விழிகள் யோசனையில் பலவாறு உருண்டன. உஷ்ணம் மேலிட மகனை நோக்கினாள். கிட்டத்தட்ட அவனும் அதே நிலையில்தான் இருந்தான்.

ஆனால் மணிரத்தினம் மட்டும் மாறுபட்ட உணர்வுகளோடு யோசிக்கவும் திராணியற்று, உள்ள உருக்கத்தோடு பார்த்தார். அவளது முகத்தை நன்றாக இன்றுதான் பார்க்கிறார். தம்பியின் சாயல் அப்படியே இருந்தது. அவளது விழிகளிலே தெரிந்த சோகம் அவரை நிலைகுலைய வைத்தது. என்ன காரணமோ என்ற குழப்பத்தைவிட, மனைவி, மகன் என்ன செய்யப் போகிறார்களோ என்ற பயத்தைவிட, குற்ற உணர்வே அவரிடம் அதிகமிருந்தது.

அவள் அவரருகே வந்துநின்று நேரே நோக்கினாள்.

“நான் இங்கே வந்தது உங்க எல்லோருக்கும் அதிர்ச்சியாயிருக்கும்னு தெரியும். தயவு செய்து கோபப்பட வேண்டாம். நான் பேசிட்டு போயிடறேன்.”

அமைதியாக, நிதானமாக கூறியது கேட்டு எல்லோருமே மௌனமாக நின்றனர்.

“இந்த உலகத்தில் யாருமே கெட்டவங்க இல்ல. ஏதோ ஓர் இடத்தில் பிடிவாதம் இருக்கு. அது மாதிரி சில அர்ப்ப உணர்வுக்கு மதிப்பு கொடுப்பதால்தான் எல்லாத்தையும் இழந்திடுறோம். எல்லாருமே நல்லவங்கதான். சூழ்நிலையால் குணங்கள் மாறும்போது கெட்டவர்களா தெரியறாங்க.

“எங்கப்பா உங்களுக்கு எந்தவிதத்திலோ கெட்டவங்களாகியிருக்காங்க. ஆனால், நீங்க எல்லாருமே எப்போதுமே எங்களுக்கு நல்லவங்கதான்.”

உண்மையாய் கூறிய வார்த்தையால் எல்லோருமே வாயடைத்துப் போனார்கள்.

"பிறந்ததிலிருந்து எனக்கு எந்தச் சொந்தமும் தெரியாது. வீதியில் நீங்க போகும்போது அதோ அவர்தான் உன் பெரியப்பானு சொல்லுவாங்க. இது உங்க பெரியப்பா பையன், பொண்ணுனு சொல்லும்போதுகூட நான் அண்ணன், தங்கையாதான் பார்த்திருக்கேன். ஏன் எல்லோரும் பேசுவதில்லைனு புரியாத வயது. எங்கேயோ பிழை இருக்குனு தெரியும். அதை எப்படி சரிசெய்யறதுனுதான் தெரியலை. என் கண் முன்னே அப்பா எத்தனையோ முறை கெஞ்சியிருக்காங்க. ஆனால், நீங்க கோபமாகவே இருந்திருக்கீங்க. எப்போதாவது நீங்க வரமாட்டீங்களானு அப்பா ஏக்கத்தோடே இருந்திருக்காங்க. தனியா பிறந்து வளர்ந்து சகோதரப் பாசத்தை அனுபவிக்காத நான் அண்ணனைப் பார்க்கும் போதெல்லாம் அந்தப் பாசத்துக்காக ஏங்கியிருக்கேன்."

- மெல்ல நிமிர்ந்து பார்த்தான் ராஜா. அவன் குணத்திற்கு மாறாக நல்ல உணர்வுகளை உணர முடிந்தது.

சம்யுக்தா அதே நிதானத்தோடு தொடர்ந்தாள்.

"எல்லாருமே கோபத்தோடும், வெறுப்போடும் பார்க்கும்போது பயம்தான் வரும். அதனாலேயே கோபத்தோடே காலங்கள் போயிடுச்சு" என நிறுத்தியவள், மணிரத்தினத்தின் விழிகளை அழுத்தமாக நோக்கினாள்.

"ஆனால் அந்தக் கோபமும், வெறுப்பும் எந்த அளவு இருந்ததுனு என் அப்பா இறந்தபோதுகூட வராதபோதுதான் புரிந்தது." - கண்ணீர் சுரக்க அவள் கூறியபோது, சாட்டையடி வாங்கியவராய், உதடுகள் விம்ம கண்ணீர் சிந்தினார் மணிரத்தினம்.

"தாத்தா வாழ்ந்த காலத்தில் நம்ம குடும்பத்துக்கென்று ஒரு கௌரவம், மரியாதை இருந்தது. ஆனால் நம் பிரிவால் ஊரே குடும்பத்தைப் பற்றி வீதியில் பேசுவதற்கு இடம் கொடுத்திட்டோம். அப்பா... கடைசிவரை உங்களையே நினைத்து உயிரையும் விட்டுட்டாங்க."

கண்ணீரோடு அவள் கூறியபோது கூனிக் குறுகி தலைகவிழ்ந்து கண்ணீர் வடித்தார்.

அவள் கண்களை அழுத்தித் துடைத்துவிட்டு நிமிர்ந்தாள்.

"நமக்கிடையே இருக்கும் பிரிவினைக்குக் காரணம் அந்த வீடுதானே. இதோ அதன் பத்திரம், அடமானமாயிருந்த வீட்டை மீட்டுட்டேன்."

அவள் சொன்னது கேட்டு எல்லோருமே பலத்த அதிர்ச்சிக்காளாகியிருந்தனர்.

"அந்த வீட்டை நான் வெச்சுக்கறதைவிட நீங்க வெச்சிக்கங்க பெரியப்பா..."

உதடுகள் துடிக்க கண்கலங்கி அவளை நேரே பார்த்தார். இறுகிக் கிடந்த பாச உணர்வுகள் அவள் உச்சரித்த "பெரியப்பா" என்ற வார்த்தையால் உருகி கண்ணீர் பெருகி கன்னத்தில் புரண்டது. இவற்றைப் பார்த்துக் கொண்டிருந்த தாட்சாயிணி கண்கள் கலங்க அதிர்ச்சியோடு படியிறங்கி வந்தாள். ராஜா உறைந்தே போனான்.

"தயவு செய்து நான் ஏதோ தானமா தர்றேனு நினைத்து மறுத்து என் அன்பை கொச்சைப்படுத்திடாதீங்க. இது நம்ம வீடு. இதை ஆளும் உரிமை அண்ணனுக்குத்தான் இருக்கு."

அழுத்தி உச்சரித்த அவளது வார்த்தைகளால் அண்ணன், தங்கை இருவருமே விழிகள் சிவக்க ஒருவரையொருவர் பார்த்துக் கொண்டனர். மணிரத்தினம் விழிகளை இறுக மூடிக்கொண்டு உள்ளேயே குமுறினார்.

"எனக்கும், இதுக்கும் எந்த சம்மந்தமுமில்லைனு கையெழுத்துப் போட்டுட்டேன். தயவு செய்து வேண்டாம்னு சொல்லி என்னை நோகடிக்காதீங்க பெரியப்பா..." கண்ணீரோடு கைகூப்பி கெஞ்சிய அவளை தன் தம்பியாகவே நினைத்து விசும்பினார்.

அத்தனை வருட காலங்களின் இறுக்கம் தளர்ந்து சத்தமாக உடல்குலுங்கி அழுதபோது எல்லோருமே கண்ணீரோடு அவரைப் பார்த்தனர்.

பத்திரத்தை அவர் முன்னேயிருக்கும் மேஜை மீது வைத்துவிட்டு சிவந்து வீங்கியிருக்கும் விழிகளால் அவரை நோக்கினாள்.

"இந்த வீட்டில்தான் நம்ம கௌரவமே இருக்கு. நல்லா வாழ்ந்தவங்க என்றைக்குமே சரியக்கூடாது. அந்தக் கௌரவத்தை உங்களிடம் ஒப்படைத்துவிட்ட திருப்தியோடு இந்த ஊரைவிட்டே நான் போறேன்."

எல்லோருமே அதிர்ந்தனர். அடுத்து என்ன செய்வதென்று யோசிக்க முடியாது விக்கித்து நின்றனர்.

அவள் சிந்தாமணியருகே வந்தாள். அவள் எவ்வித உணர்ச்சியுமற்று மௌனமாக நின்றாள். சம்யுக்தாவின் அருகாமை என்னவோ செய்தது. ஆனாலும் வராத வீம்பை வரவழைத்துக் கொண்டு எங்கோ வெறித்தாள். சம்யுக்தா அவளை நேரே பார்த்தாள்.

"இதுவரையிலும் யாரிடம் பேசினாலும் உங்களை என் அம்மானுதான் சொல்லியிருக்கேன்."

எதிர்பாராத அந்த வார்த்தையால் உள்ளுக்குள்ளே சுருண்டு போனாள். எங்கே அவளை நேரே பார்த்தால் தோற்றுவிடுவோமோ என பயந்து இன்னும் அதே நிலையில் இருந்தாள்.

"உங்க மனம் எந்தவிதத்திலாவது கஷ்டப்படும்படி நாங்க நடந்திருந்தால் எங்களை மன்னிச்சிடுங்க. உங்களை என் அம்மாவாதான் நினைக்கிறேன்."

கரம் கூப்பி வணங்கிவிட்டு கலங்கிய விழிகளோடு புறப்பட்டாள்.

எல்லோரும் பதில் பேச சக்தியின்றி, மனக் கலக்கத்தோடு நின்றனர்.

அதைவிட நடந்த எல்லாவற்றையும் மாடியிலிருந்து பார்த்துக் கொண்டிருந்த ஸ்ரீராம் திகைத்துப் போனவனாய், சம்யுக்தா மறையும்வரை பார்த்துக் கொண்டிருந்தான்.

## பாகம் - 8

காலத்தோடு கரைந்துபோன தருணங்கள், சம்யுக்தாவின் கண்ணிலே வந்து மீண்டன. வரிசை வரிசையாய் மரங்களையும், கட்டடங்களையும், பேருந்து கடந்து கொண்டிருந்தது. அதோடு தன்னுடைய சோகம் நிறைந்த காலங்களையும் கடந்து கொண்டிருந்தாள்.

எதிர்பாராமல் நடந்த எல்லா சம்பவங்களும் நினைவில் எழுந்தன. அப்பாவிற்குப் பிறகு அரண்மனை வீடு எதிர்பாராமல் கிடைத்தது. எல்லாமே அவளுக்குப் புரியாமல் இருந்தது. ஒன்றை இழந்து ஒன்றை பெற்றால் எங்ஙனம் சந்தோசப்பட முடியும்? ஆனால், மனமுழுக்க திருப்தி இருந்தது. தான் திரும்பப் பெற்ற சொத்தை அவர்களிடம் ஒப்படைத்தபோது மனம் நிம்மதியா யிருந்தது. அதோடு இதை வாங்க மறுத்து தன்னை அவமானப்படுத்தி சிந்தாமணி அனுப்புவாளென நினைத்தது நடக்காது போனது ஆச்சரியமாயிருந்தது. என்ன ஆனாலும் பேசியே தீரவேண்டுமென்று தைரியத்தோடு சென்றவளுக்கு, எல்லோருமே வாயடைத்துப் போனது குறித்து அதிசயமாக இருந்தது.

முத்தம்மாள், கணபதி உட்பட எல்லோருக்குமே வருத்தம்கூட இருந்தது. சம்யுக்தா அந்த வீட்டையே தூக்கிக்கொடுத்தது பலராலும் பலவாறு விமர்சிக்கப் பட்டது. பாராட்டியது, வியந்தது, பிழைக்கத் தெரியாதவள் என முத்திரை குத்தப்பட்டது, இன்னும் சிலருக்கு எளிதில் முடிவுக்கு வந்துவிட்டது குறித்து பொறாமையாகக்கூட இருந்தது. எதற்காகவும், யாருக்கும் பதில் கூறவேண்டிய அவசியமில்லாதது போலவே அவள் இருந்தாள்.

தன்னோடு அலுவலகத்தில் பணிபுரிந்த பாத்திமா மூலம், 'கருணை இல்லம்' என்ற குழந்தைகள் காப்பகத்தில் தங்க அனுமதி கிடைத்தது.

முத்தம்மாள் அழுதாள்.

"யாருமில்லைனு போறியா பாப்பா. நான் இல்லையா?" - கண்ணீரோடு கூறியது கேட்டு உருகிப்போனாள்.

“நான் இங்கிருந்து வேலைக்குப் போக கஷ்டமாயிருக்கு முத்தம்மா. அப்பாவுக்காக இங்கே இருந்தேன். எல்லாமே முடிந்து போயாச்சே. நான் அங்கே போய் இருந்தால் எனக்கும் கொஞ்சம் மனமாற்றம் கிடைக்கும்” என்று சொன்னபோது கண்ணீரோடு விடையளித்தாள்.

இனி இந்த ஊருக்கும், தனக்கும் எந்த சம்பந்தமும் இல்லை என நினைத்தபோது கண்ணீர் பெருகியது.

“எப்படி இருக்கு பட்டண வாழ்க்கை?” - உற்சாகத்தோடு கேட்டுக்கொண்டே உள்ளே நுழைந்தாள் பாத்திமா.

“புதிதாயிருக்கு...” சொன்னவள் நன்றியோடு அவளைப் பார்த்தாள் சம்யுக்தா.

மரியம்மையும் உடனிருந்தார். அவரே அந்தக் காப்பகத்திற்கு முக்கிய பொறுப்பாளர். சம்யுக்தாவின் கதையைக் கேட்டவர், தன் அறையிலேயே தங்க இடம் கொடுத்தார்.

“நீங்க ரெண்டுபேரும் எனக்கு உதவலைனா நான் என்ன செய்திருப்பேன்னு நினைக்கவே பயமாயிருக்கு. என்னைப் போன்ற அநாதைக்கு உங்க துணை ஆறுதலாயிருக்கு.”

புன்னகைத்த மரியம்மை, “இறைவன் படைப்பில் யாருமே அநாதையில்லை” என அழுத்தமாகச் சொன்னார்.

பாத்திமா கைப்பையிலிருந்து ஒரு விளம்பரப் பத்திரிகையை எடுத்து நீட்டினாள். “ஸ்ரீராம் அலுவலகத்தில் பணியாட்கள் தேவைனு விளம்பரம் பார்த்தேன்.

அனுபவமும், திறமையுமிக்க உனக்கு பொருத்தமான வேலை நிச்சயம் உனக்குக் கிடைக்கும். முயற்சி செய்து பார்" என்றவள் "சரி எனக்கு அலுவலகத்துக்கு நேரமாச்சு கிளம்பறேன்" என்று புறப்பட்டாள்.

சம்யுக்தா அந்தப் பத்திரிகையைப் பிரித்தாள்.

அந்த முப்பது மாடிக் கட்டடத்தின் முன் வழவழப்பான விலையுயர்ந்த கார் நின்றது. ஸ்ரீராமும், செல்வமும் இறங்கினர்.

ஸ்ரீராமுக்கு முன்பே இரண்டடி சென்றவன் அவசரமாக மின்தூக்கியின் பொத்தானை அழுத்திவிட்டு நின்றான். ஸ்ரீராம் பரபரப்போடு காணப்பட்டான். இருபதாவது மாடியில் இருக்கும் தங்கள் அலுவலகத்துக்குச் செல்ல வேண்டும்.

"நேர்முகத் தேர்வுக்கு எத்தனை பேர் வந்திருக்காங்க செல்வம்?" கேட்டுக்கொண்டே அலுவலகத்துக்குள் நுழைந்தவனுக்கு, அவனைப் பின்தொடர்ந்து பதிலளித்தான் செல்வம்.

வணக்கம் சொன்ன பணியாட்களுக்கு பதில் வணக்கம் சொன்னவாறு நேர்முகத் தேர்வுக்காக காத்திருக்கும் கூட்டத்தை ஒருமுறை நோக்கியவாறு தன் அறை நோக்கிச் சென்றான்.

"இவர்தான் முதலாளி! சிங்கப்பூராம். ஆள் பார்க்க என்னமா இருக்கார் பார்? ம்... கல்யாணம் ஆயிடுச்சோ இல்லையோ..." பெருமூச்சோடு தன் தோழி காதருகே கிசுகிசுத்தவளை ஒருமுறை நோக்கிய சம்யுக்தா மீண்டும் திரும்பிக்கொண்டாள்.

அவர்களின் பளபளக்கும் உதட்டு சாயமும், நவீன உடைகளுமே அவளுக்கு மெலிதான பயத்தை தந்தன. நிச்சயம் இந்த வேலை தனக்குக் கிடைக்காது எனத் தீர்மானித்துக் கொண்டாள்.

"ஷ்... ஷாலினி!" - கூப்பிட்ட தோழி சம்யுக்தாவை கண்காட்டி பார்க்குமாறு சாடை செய்தாள்.

அவளும் ஏற இறங்க பார்த்துவிட்டு, புருவம் தூக்கி 'பிரமாதம்' என பதிலுக்கு சாடை செய்தாள்.

"சும்மா குத்து விளக்கா ஜொலிக்கிறா..." பொறாமையோடு கிசுகிசுத்தாள்.

அவளது அடக்கமான உடையில் தெரிந்த அதிக அழகை அங்கிருந்த ஆண்களில் சிலரும் நோட்டமிட்டுக் கொண்டிருந்தனர்.

சிறிது நேரத்திற்கெல்லாம் சம்யுக்தா அழைக்கப்பட்டாள்.

இவளின் வருகை ஸ்ரீராமிற்கு பேரதிர்ச்சியைத் தந்தது. சற்றே தடுமாறியவன் தன்னிலை உணர்ந்தவனாய், புன்னகைத்தவாறு அவளை அமரச் சொன்னான்.

இதுவரை எந்தப் பெண்ணையும் நோக்காதவன் முதல்முறையாய் மீண்டுமொருமுறை அவளைப் பார்த்தான். எளிய தோற்றமும், அதிக அழகும், அவனை ஒருகணம் ஈர்க்கவே செய்தன. அதற்குக் காரணம் அன்று நடந்த சம்பவமும்கூட!

சம்யுக்தாவுக்கோ இவனை எங்கோ பார்த்ததுபோல தோன்ற ஞாபகப்படுத்திப் பார்த்து தோற்றுப்போனாள்.

ஒருமுறை பலமாக செருமிக்கொண்டான். அவள் நீட்டிய கோப்பைப் பெற்றவனது விழிகள் முதலில் தேடிப்பிடித்தது அவள் பெயரை!

'சம்யுக்தா...' மனம் அழுத்தி உச்சரித்தது.

சம்யுக்தா ஒருவிதப் பதைப்போடு அமர்ந்திருந்தாள். அவன் கோப்பை மூடிவைத்தது குறித்து குழம்பிப் போனாள்.

ஒருவேளை தகுதியற்றவள் எனத் தீர்மானித்தாரோ.

அவன் புன்னகைத்தவாறு அவளை நோக்கினான்.

"உங்களை நான் இதுக்குமுன்பு பார்த்திருக்கேன்" என்றதும் அவள் வியப்படைந்தாள்.

மௌனமாக சிரித்தவன், "எங்கேனு கேட்பீங்கனு எதிர்பார்த்தேன்" என்றான். அவனது யதார்த்தமான பேச்சில் அவள் வார்த்தை வராமல் சற்றுத் தடுமாறினாள்.

"சிந்தாமணி அத்தை வீட்டில் உங்களைப் பார்த்தேன்." அதிர்ந்து நிமிர்ந்தவள் - "நீங்க?..." புரியாமல் கேட்டாள்.

"என்னை உங்களுக்குத் தெரியாது. நான் அவங்க அண்ணன் பையன்."

பேரதிர்ச்சியில் உறைந்து போனாள். ஓ! ஊரே சொல்லும் வெளிநாட்டுப் பையன் இவர்தானா?

கோவிலில் தாட்சாயிணியுடன் பார்த்தது இப்போது ஞாபகம் வந்தது. அங்கிருந்த கோப்பை கையிலெடுத்தவள் கிளம்பத் தயாரானாள்.

உண்மையில் அவன் குழம்பிப் போனான்.

“மன்னிக்கணும் சார். நான் கிளம்பறேன்.” தலைகுனிந்தவாறு சொல்லக் கேட்டு அதிர்ந்தான்.

“நான் அப்படி சொல்லலையே.”

“நீங்க சொல்ல மாட்டீங்கனு தெரியும். அதான் போறேன்.”

“காரணம் தெரிஞ்சுக்கலாமா?”

“என் அறிவுக்கும், திறமைக்கும் கிடைக்கும் வேலையைத்தான் விரும்பறேன். சொந்தத்தாலோ, அல்லது பரிதாபத்தாலோ கிடைப்பதை நான் விரும்பலை” என்றாள்.

அவளது வார்த்தையில் பிரமித்தவன், “நான் வேலை உண்டுனு சொல்லவேயில்லையே.” கிண்டலாய் சொல்லக்கேட்டு நிமிர்ந்து பார்த்தாள்.

“எனக்கே தெரியும். கண்டிப்பா நீங்க போயிடுவீங்கன்னு.” அவனது கேலிப் பார்வையில் முகம் சிவந்தது.

“எங்க அத்தைக்கு பயந்துதானே ஊரைவிட்டு போனீங்க. பிறகு எப்படி இங்கே வேலை பார்ப்பீங்க?” வேண்டுமென்றே கோபத்தைத் தூண்டினான்.

விழிகள் சிவந்து போனவளாய், “நான் ஏன் யாருக்கும் பயப்படணும்? எனக்கென்று யாருமில்லை. அதனால் ஊரைவிட்டு கிளம்பிட்டேன்.”

“அப்போ இப்ப கிளம்புவதற்குக் காரணம்?”

“ஒதுங்கியிருக்கணும்னு நினைக்கிறேன். என்னால பிரச்சினை வேண்டாம்.”

"ஆனால் எனக்கு நீங்க வேண்டுமே!"

சட்டென நிமிர்ந்தாள்.

"மன்னிக்கணும். இந்த அலுவலகத்துக்கு நீங்க வேணும்னு சொல்லவந்தேன்." - அவள் அமைதியானாள்.

அவனும் எழுந்து நின்று அவளை நோக்கியவாறு, "உங்க குணம் தெரியும். சொந்தமெல்லாம் அலுவலகத்துக்கு வெளியேதான். வேலைனு வந்துட்டால் என் அப்பாகூட என்னை மகனா பார்த்ததில்லை. பக்குவமா பேசும் உங்க குணம் பிடிக்கும். நீங்க இந்த அலுவலகத்துக்கு கிடைத்தால் நான் சந்தோசப்படுவேன். இந்த அலுவலகத்தின் முன்னேற்றத்தை மட்டுமே மனத்தில் வைத்து கேட்கிறேன். தயவு செய்து இந்த வேலையில் சேர முடியுமா? இந்த அலுவலகத்துக்கு நீங்க தேவை!"

அவள் இதை எதிர்பார்க்கவில்லை. சற்றே குழப்பத்தோடு நின்றாள். அவளின் குழப்பத்தை ரசித்தவன், மேலும் அதற்கு நேரமளிக்காமல், சம்மதம்னா உட்காருங்க, இல்லைனா போகலாம் என்றான். சில வினாடிகள் யோசித்தபிறகு அவள் நாற்காலியில் அமர்ந்தாள். அவனும் நிம்மதியோடு அமர்ந்து நன்றி சொன்னான்.

★ ★ ★

சில்லென்ற வேப்பமரக் காற்றில், சந்தன முல்லையின் மணம், ஜன்னல் தாண்டி அறைக்குள்ளே வந்தது. படுக்கையில் படுக்க மனமில்லாமல் அமர்ந்திருக்கும் சம்யுக்தாவின் முகத்திலே தவழ்ந்தது. ஒருமுறை அதன் வாசத்தை ஆழ சுகித்தவள், எழுந்து ஜன்னலருகே வந்தாள். குழந்தைகள் அமைத்திருக்கும் அழகிய பூந்தோட்டம்

மங்கிய வெளிச்சத்திலும் கவர்ந்திழுத்தது. மரியம்மை உறங்கிக் கொண்டிருந்தார்.

எத்தனை இரக்கக் குணம்! இவர் மட்டும் தனக்கு இடம் கொடுத்திருக்கவில்லையென்றால்... தன்னிலையை நினைத்துப் பார்க்கவும் சக்தியின்றி விழிகளை மூடிக்கொண்டாள். பரந்து கிடக்கும் உலகத்தில் பரந்த மனம் கொண்டவர்களும் ஆங்காங்கே இருக்கத்தான் செய்கிறார்கள்.

இதோ இன்று நல்ல வேலையும், எதிர்பாராத சம்பளமும் கிடைத்தாயிற்று என நினைத்தவள் நிறுத்திவிட்டு ஒருமுறை காலையில் நடந்த சம்பவத்தை நினைத்துப் பார்த்தாள்.

எவ்வளவு வசதி கொண்டவன் எவ்வளவு எளிமையாக பேசினான் என நினைத்தாலும், அவ்வாறு பேசி தன்னை ஜெயித்துவிட்டானோ எனத் தோன்றியது.

சரி... அப்படி ஏன் தனக்கு உதவ வேண்டும்?

அலுவலகத்தின் முன்னேற்றத்திற்காகவாம்! நான் என்ன அவ்வளவு திறமைசாலியா? அதைவிட இந்த விஷயம் சிந்தாமணிக்குத் தெரிந்தால்... - வாடிய முகத்தோடு கட்டிலை நோக்கி நடந்தாள்.

★ ★ ★

"நான் நினைத்தது எதுதான் நடந்திருக்கு. ஊரெல்லாம் பெருமையா சொல்லி வெச்சிருந்தேன். இப்ப எந்த முகத்தை வெச்சுட்டு முழிப்பேன்."

பகுமானமாக பஞ்சு நாற்காலியில் அமர்ந்துகொண்டு ஒப்பாரி பாடினாள் சிந்தாமணி.

''இதே முகத்தை வெச்சுதான் முழிக்கணும்'' - தாட்சாயிணி படியிலிருந்து இறங்கி வந்தாள்.

மகளை உற்று நோக்கினாள். அவள் விழிகளை மாறிமாறி பார்த்தாள். அவள் நினைத்ததுபோன்று இல்லை. மகள் தெளிவான முகத்தோடு இருப்பது கண்டு வியப்படைந்தாள்.

"என்ன? இதற்குமுன் என்னைப் பார்த்ததேயில்லையா? இப்படி பார்க்கிறாயே!"

"ஏன்டி அந்த பையன் சொன்னது கேட்டு எனக்கே வயிறு எரியுதே, உனக்கு வருத்தமாயில்லையா?"

"வருத்தம் இருந்தது. உன்னை மாதிரி வயிறு எரியலை. ஏன்னா நீ பணத்தை விரும்பினாய்... நான் அத்தான் குணத்தை விரும்பினேன்."

''ஆங்... அய்யோ... இப்படி காதல் தோல்வியில் சினிமா வசனமெல்லாம் பேசுறியேடி...'' மீண்டும் ராகம் பாடினாள்.

''நிறுத்தும்மா உன் ராகத்தை. நான் ஏன் அப்படி நடந்து கொண்டேனு இப்ப நினைத்தாலும் அசிங்கமாயிருக்கு. நமக்கெல்லாம் என்ன தகுதியிருக்கு. அவர் போட்ட பிச்சையிலதான் இன்று இந்த வாழ்க்கையே வாழறோம். இதோ இப்படி பகுமானமா விலையுயர்ந்த நாற்காலியில் உட்கார்ந்திருக்கியே, எல்லாம் அத்தானால. மறந்துடாதே. நீ என்னை அவரோடு இணைத்துப் பேசிபேசியே என் மனசையும் கெடுத்திட்டாய்."

சத்தமாகப் பேசியவள், நிதானமானாள். அம்மாவினருகே வந்து நின்றவள், ''பணம் எப்ப

வேண்டுமானாலும் வரும், போகும். நல்ல மனிதர்கள் தேடினாலும் கிடைக்காத காலம் இது" என்றபோது ஏனோ விழிகளில் ஈரம் சுரந்தது.

கலங்கிய விழிகளோடு சம்யுக்தாவின் முகம் ஒருகணம் வந்துபோனது. அம்மாவை அழுத்த ஏறிட்டவள், "இனிமேலாவது புரிஞ்சு நடந்துக்கோம்மா" என்றாள்.

அங்கு நடந்து கொண்டிருந்ததைப் பார்த்துக் கொண்டிருந்த ராஜா முதல்முறையாக தங்கையின் வார்த்தைகளில் தலைகுனிந்தான்.

"எனக்கு உடனே மாப்பிள்ளை பார். இனிமேலும் நான் கல்யாணம் செய்துக்கலைனா அத்தானுக்கு என்னை பார்க்கும்போதெல்லாம் தர்மசங்கடமாயிருக்கும்."

அண்ணனை நோக்கினாள். "நீயும் அம்மா மாதிரி இல்லாம நல்ல பொண்ணா பார்த்து கல்யாணம் செய்துக்கோ. அம்மா பேச்சைக் கேட்காதே..." சொல்லிவிட்டு தன்னறை நோக்கி விரைந்தாள்.

சிந்தாமணி வாயடைத்துப் போனவளாய் மகனைப் பார்த்தாள். ராஜா எதுவுமே பேசாமல் அங்கிருந்து நகர்ந்தான்.

## பாகம் - 9

"கப்பலுக்கு அனுப்ப வேண்டிய பொருட்களை அனுப்பியாச்சா?"

"அனுப்பியாச்சு சார்."

ஸ்ரீராம் கேட்டுக்கொண்டே செல்வத்தோடு தன் அறையிலிருந்து வெளிவந்தவன் சம்யுக்தா அமர்ந்திருக்கும் இடம் நோக்கி குரல் கொடுத்தான்.

அவள் விரைந்து வந்தாள்.

"சரி செல்வம், மற்ற விவரங்களை நீங்க பாத்துக்கங்க. தேவையேற்பட்டால் போனில் கூப்பிடுங்க. எனக்கு சொந்த வேலை கொஞ்சம் இருக்கு."

"சரி சார்."

"சம்யு கொஞ்சம் வரமுடியுமா?"

அவள் எங்கே என்பதுபோல் நோக்க, அவன் பதில் கூறாமல் நடந்தான். இவளும் ஓடாத குறையாக பின்தொடர்ந்தாள்.

ஏதோ புரிந்தவனாக செல்வம் உள்ளுக்குள்ளே சிரித்துக் கொண்டான்.

மிதமான வேகத்தில் ஸ்ரீராம் காரை செலுத்திக் கொண்டிருந்தான். அவன் எதுவும் பேசவில்லை. அவளும் வெளியே பார்வையை செலுத்தியவாறு வந்தாலும், மனத்திற்குள் எதற்காக தன்னைக் கூப்பிட்டான் என்ற கேள்வி ஓடிக்கொண்டிருந்தது.

'ச்சே... இதென்ன சொந்த வேலைக்காக ஏன் கூப்பிடணும்? சொல்லும்போதே கேட்டிருக்க வேண்டியதுதானே. அப்ப விட்டுவிட்டு இப்ப எப்படி கேட்பது? ஒருவேளை உறவு என்பதால் அதிக உரிமை எடுத்துக் கொள்கிறானோ, எதற்கு கூப்பிட்டோமென சொல்லாமல் இப்படி அமைதியாய் வந்தால் எப்படி?' - ஓரக் கண்ணால் அவனை நோக்கினாள்.

அவன் வெகு சிரத்தையோடு சாலையில் கண்பதித்திருந்தான்.

சற்று கோபமும் எட்டிப் பார்த்தது. அடுத்த முறை இப்படி உரிமை எடுத்துக் கொள்ளுமாறு நடந்துகொண்டால் சொல்லிவிட வேண்டியதுதான். மனத்தில் உறுதி எடுத்துக் கொண்டாள்.

கார் மிகப்பெரிய தங்க நகைக்கடையின் முன் நின்றது. அவனோ ஏதும் பேசாமல் காரைத் தக்க இடத்தில் நிறுத்திவிட்டு வெளியேறியபோது இன்னும் கோபம் கூடியது. மௌனமாய்ப் பின்தொடர்ந்தாள்.

"வாங்க சார், வாங்க மேடம்" - வழவழக்கும் கண்ணாடிக் கதவைத் திறந்துவிட்டார் கடைக் காவலாளி. பெண்கள் கூட்டம் மிகுந்திருந்தது.

சிறிய செருமலோடு, அவளைப் பார்க்காமலேயே சொன்னான். "நண்பன் பெண்ணுக்குத் திருமணம். ஏதாவது நகை தேர்வு செய்யணும்."

"இதுக்கா நான்...?" மெல்லிய குரலில் கேட்டாள்.

"நகையைப் பற்றி பெண்களுக்குத்தானே தெரியும்." அவனும் உதட்டோரம் புன்னகையோடு சன்னமான

குரலில் சொன்னபோது அவளுக்குக் கோபம் தலைக்கேறியது.

'என்ன நினைத்திருக்கிறான்? முதலாளியென்றால் இத்தனை உரிமை எடுத்துக்கொள்ள வேண்டுமா என்ன?' - கோபத்தை மறைக்க குனிந்தவாறு கண்ணாடிக்குள் மினுமினுக்கும் நகையை நோக்கினாள்.

அதைவிட அங்கு பணிபுரியும் அறுபது வயது மதிக்கத்தக்க மனிதர் கூறியது கேட்டதும் இதயம் கோபத்தில் படபடத்தது.

"மேடம் உங்களை உங்க கணவர் அங்கே நகை பார்க்க கூப்பிடறார்." அதிர்ந்து நோக்கியபோது சற்று தூரம் நின்றிருந்த அவனும் இதைக் கேட்டிருந்தான்.

★ ★ ★

**வீ**ட்டுத் தொலைபேசி சத்தம் எழுப்ப, அடுக்களையிலிருந்த லெட்சுமி விரைந்து வந்தாள். அதற்குள் பார்த்திபன் எடுத்துவிட்டான்.

எதிர்முனையில் யாராக இருக்குமென அவன் பேசியதிலிருந்தே ஊகிக்க முடிந்தது.

"இத பாருங்க சார், இந்த வீட்டில் கல்யாணம் நடக்கப்போவதில்லை. சும்மா இங்கே பெண் இருக்கு, அங்கே பெண் இருக்குனு சொல்லும் வேலையெல்லாம் வெச்சுக்காதீங்க. வீட்டுப் பக்கமும் வராதீங்க." அனல் பறக்க வார்த்தைகளைக் கொட்டிவிட்டு வைத்தான்.

உடைந்துபோய் நின்ற தாயை ஒருமுறை பார்வையால் எரித்துவிட்டு வெளியேறினான். அவள் ஏக்கத்தோடு நின்றாள். அவளுக்கு இருந்த கொஞ்ச நம்பிக்கையும்

போனது. இப்போதெல்லாம் தாய்க்கும், மகனுக்கும் இடையே அதிகமாக பேச்சுவார்த்தை இல்லாமல் போனது. காலை அலுவலகம் கிளம்புபவன் இரவில் தாமதமாகத்தான் வீட்டிற்கு வருவான். அவளும் எவ்வளவுதான் பேசினாலும் ஒற்றைச் சொல்லில் மட்டுமே பதில் பேசுவான்.

மகனின் இத்தகைய செயலால் மனதளவில் உடைந்துபோனாள். மகனின் கலகலப்பான முகம், கன்னக் குழிவிழும் சிரிப்பு, குறும்பான செயல்கள் எதுவுமே இனி இல்லையோ என நினைக்கும்போதே கண்ணீர் பெருக்கெடுத்தது.

எல்லாமே தன்னால்தான் நடந்ததோ என நினைத்தபோது சத்தமாக குலுங்கி அழுதாள்.

★ ★ ★

சம்யுக்தா உறக்கம் வராமல் புரண்டு கொண்டிருந்தாள். உள்ளம் முழுதும், வாடைக்காற்றிலும் கூட உஷ்ணமாகியிருந்தது. இன்று முழுதும் ஸ்ரீராம் தன்னோடு நடந்துகொண்டது குறித்து ஒருவித கோபமோ, அல்லது எரிச்சலோ அல்லது இதுபோன்ற நிலைக்கு ஆளாகிவிட்டோமே என்ற ஆத்திரமோ அவளை ஆக்கிரமித்திருந்தது.

கூட்டம் மிகுந்திருந்த அந்தக் கடையில் அவசரத்தில் அவர் 'உங்கள் கணவர்' என்றே சொல்லியிருக்கலாம். ஆனால் அவரது காதிலும் நன்றாகவே கேட்டிருந்தது. அதுகுறித்து மன்னிப்பு கேட்டிருக்கலாம். அதைவிட மன்னிப்புக் கேட்பதற்கான அவசியமே இல்லாதது போன்ற தோரணை அல்லவா முகத்தில் தெரிந்தது.

அதன்பிறகு மறுபடியும் காரில் பிரயாணம்.

எரிச்சல்தான் வந்தது அவளுக்கு. சரி, அப்போதாவது அதைப்பற்றி பேசுவான் என நினைத்தவளுக்கு ஏமாற்றம்தான்! அவன் சாலைகளில் கண்பதித்தவாறு, "ரொம்ப நன்றி. அப்புறம் நகையெல்லாம் நன்றாக இருந்ததுதானே." யதார்த்தமாக கேட்டபோது அவள் ஓரப் பார்வையால் வெறித்தாள். அவனோ வெகு நிம்மதியாக காரை செலுத்திக் கொண்டிருந்தான்.

"என்ன? பதிலையே காணோம். பிடிக்கலையா?"

"எ... எனக்குப் பிடிக்க என்ன இருக்கு?" - என்றாள்.

"இல்ல... பெண்களின் ரசனை கிட்டத்தட்ட ஒன்றாகத்தானே இருக்கும். அதான் கேட்டேன்."

அவள் மௌனமாக இருந்தாள். அவன் விடவில்லை.

"சொல்லுங்க!"

சற்றே எரிச்சலுடன், "நன்றாகத்தான் இருக்கிறது" என்றாள்.

தன் பணபலத்தைக் காட்டுகிறான் போல. யாருக்கு நகை எடுத்துக் கொடுத்தால் எனக்கென்ன. மனம் கூச்சலிட்டது.

அப்போதிலிருந்து 'இப்போது' வரை அவள் சற்றே அந்நிகழ்வால் பாதிக்கப்பட்டிருந்தாள்.

மறுநாள் அவள் அலுவலகம் கிளம்ப மனமில்லாமல் கிளம்பினாள். மனம் முழுதுமே தீவிர யோசனை! கொஞ்ச நாட்கள் பார்க்க வேண்டும். பிடிக்காவிட்டால் வேறு வேலை தேட வேண்டியதுதான் எனத் தீர்மானித்தாள். ஆரம்பத்திலேயே இந்த வேலையை நிராகரித்திருக்கலாமோ எனத் தோன்றியது.

ஆனால் அன்று முழுதும் ஸ்ரீராம் பரபரப்பாக காணப்பட்டான். வேலை நிமித்தமாக அவளை அடிக்கடி கூப்பிடும்போதெல்லாம் அவள் மிகச் சுதாரிப்பாக இருந்தாள். தனக்கு எரிச்சலூட்டும் விதமாக நடந்துகொள்கிறானா எனத் தீவிரமாகக் கண்காணித்தாள்.

ஆனால் அவனோ அலுவலக வேலைகளில் சிரத்தையோடு ஈடுபட்டிருந்தான். அவளுக்கு அன்று மனம் வெகுநிம்மதியாக இருந்தது. அவனோடு சேர்ந்து இவளும் சற்றுத் தீவிரமாக வேலையில் ஈடுபட்டிருந்ததால் வழக்கமான நேரத்தைத் தாண்டியிருந்தது. அவன் சட்டென அவளை அழைத்து, “சம்யு... நீங்க கிளம்புங்க” என்றான். செல்வம் மட்டும் அவனோடு இருந்தான்.

பேருந்திலிருந்து தான் இறங்குமிடம் வந்ததும் இறங்கினாள் சம்யுக்தா. பலத்த மழை பெய்து கொண்டிருந்தது. மழைக்குப் பயந்து நிழற்குடைக்குள் தஞ்சம் புகுந்தாள். வானம் இருட்ட ஆரம்பித்திருந்தது. அங்கிருந்த ஒன்றிரண்டு பேரும் பேருந்தில் ஏறிவிட்டனர். அதிகமாக பெய்த மழையில் எதுவுமே கண்களுக்குத் தெரியவில்லை.

அங்கிருந்து இருபது நிமிட நடைக்குப் பிறகே கருணை இல்லத்தை அடைய முடியும். இதயம் படபடத்தது. புயல்காற்றோடு மழையின் சாரல் அவளை நனைத்தது. புடவை முந்தானையை எடுத்துப் போர்த்திக் கொண்டாள். அரைமணி நேரமாக அங்கு தான் மட்டுமே நிற்பது குறித்து பயம் உண்டானது. முதல்முறை பட்டண அனுபவம் இது அவளுக்கு. சொந்த ஊர் என்றால் பயமே இல்லை. எல்லோருமே தெரிந்தவர்கள். உதவிக்குக் கூப்பிடாமலேயே வந்து செய்யும் மனிதநேயமிக்கவர்கள்.

இங்கு அப்படியா? கலவரத்தோடு பார்த்தாள். சாலையில் ஆட்டோகூட செல்லவில்லை. மரியம்மைக்கு போன் செய்து, யாரையாவது துணைக்கு அனுப்பி வைக்கச் சொல்லலாம் என நினைத்தவள் போனை எடுத்தாள். அது சலனமே இல்லாமல் கிடந்தது. மேற்கொண்டு என்ன செய்வதென்று புரியாமல் நின்றாள்.

வெகு தூரத்திலிருந்து கண்காணித்துக் கொண்டிருந்த ஒருவன் அவ்வளவு மழையிலும் நனைந்துகொண்டே வந்து நின்றான்.

“எங்கே மேடம் போகணும்?” பற்களைக் காட்டினான்.

அவனது தோற்றமே இவளுக்கு பயத்தை ஏற்படுத்தியது. இனி இங்கு நிற்பது ஆபத்தென தோன்ற பலத்த மழையிலும் நடக்க ஆரம்பித்தாள். அவனும் பின்தொடர்ந்தான். வானம் நன்றாக இருட்டிவிட்டது. ஏதாவது ஆட்டோ வந்துவிடக் கூடாதா என்ற பதைப்போடு வேகமாக அடியெடுத்து வைத்தாள். ஐந்தாறு அடி இடைவெளியில் அவனும் அதே வேகத்தோடு பின்தொடர்ந்தான். அவன் அவளை நெருங்கும் அதே நேரத்தில், உரசிக்கொண்டு வழவழப்பான கார் நின்றது. கார் கண்ணாடி இறங்கியபோது உள்ளிருந்து உரக்க குரல் ஒலி கேட்டு, சட்டெனத் திரும்பினாள்.

“சம்யுக்தா... ம்... ஏறுங்க...”

சட்டென ஒதுங்கி நின்றான் பின்தொடர்ந்து வந்தவன். யோசிக்காமல் ஏறிக்கொண்டாள் அவள். மனமுழுக்க ஆக்கிரமித்திருந்த படபடப்பு குறையவில்லை. இதயம் சீரான நிலைக்கு வர ஒருசில நிமிடங்கள் ஆனது. முதன்முறையாய் ஒருவித மதிப்போடு ஸ்ரீராமை ஓரக்கண்ணால் பார்த்தாள்.

நன்றி சொல்ல பிரிந்த உதடுகள் ஏனோ இறுகின. ஆனால் அவனது கண்கள் சாலையிலேதான் இருந்தன.

"எங்கே போகணும்?" திரும்பாமல் கேட்டான். அவனது குரல் சற்று கடுமையாகவே இருந்தது. எதனால்? எனத் தெரியவில்லை.

"கருணை இல்லம்!" என்றவள் வழி சொன்னாள்.

அவன் அதற்குமேல் பேசவில்லை. அவளும் சாலையிலே கண் பதித்தாள். ஈரம் சொட்ட இருக்கையின் முன்புறத்தில் ஓரமாக அமர்ந்திருந்தாள். காரினுள் இருக்கும் குளிர்சாதனம் அவளை நடுங்க வைத்தது. முந்தானையை இன்னும் அழுத்தமாக போர்த்திக் கொண்டாள்.

ஓரக் கண்ணால் பார்த்தவன் குளிர்சாதனத்தை அணைத்துவிட்டு, "போன் எங்கே?" என்றான் அதே குரலில்.

"சார்ஜ் இல்லை."

அவன் பதில் பேசவில்லை.

சற்று நேரத்தில் கார் கருணை இல்லத்தை வந்தடைந்தது.

மரியம்மை நின்று கொண்டிருந்தார். மழையும் குறைந்திருந்தது.

"பயந்தே போனேன் சம்யு... உன் போன் என்னாச்சு? ஏன் இவ்வளவு நேரம்?" சொல்லிக்கொண்டே ஸ்ரீராமை உற்று நோக்கினார்.

"இவர்...?"

"முதலாளிம்மா..."

"அப்படியா?" மலர்ந்த முகத்தோடு அவரை வரவேற்றார்.

மரியாதை நிமித்தமாக அவனும் காரிலிருந்து வெளிவந்து வணங்கினான்.

மரியம்மை உள்ளே அழைத்தார்.

"இல்லை, பரவாயில்லை. இன்னொரு நாள் பார்க்கலாமே..."

"இல்லையில்லை. சம்யூ என்ன பேசாமல் நிற்கிறாய். உள்ளே கூப்பிடு..." அவர் சத்தமாக சொன்னபோதுதான் இதுவரை கூப்பிடாதது குறித்த வருத்தத்துடன், "வாங்க சார்" என்று தலைகுனிந்தாள். அவனும் அர்த்தம் நிறைந்த புன்னகையுடன் உள்ளே சென்றான்.

ஆசிரம அலுவலக அறைக்குள் நுழைந்தனர். அவனும் அவ்வறை முழுவதும் பார்வையைச் சுழலவிட்டான்.

"உட்காருங்க சார்... சம்யு, குடிக்க ஏதாவது கொண்டு வாயேன்" என்றபோது வேகமாக இடைமறித்தான்.

"பரவாயில்லை. அவங்க ஈரத்தோடு இருக்காங்க. முதலில் வேறு துணி மாற்றட்டும்." அவளைப் பார்க்காமல் சொன்னான்.

"அட ஆமாம். எனக்குத் தோன்றவேயில்லையே. போ சம்யு..." என்ற மரியம்மை தன் அறிமுகத்தோடு பேச்சை ஆரம்பித்தார்.

அறைக்குள்ளே வந்தவள் கண்ணாடியில் தன்னை ஒருமுறை பார்த்தாள். ஈரப்புடவை உடலோடு ஒட்டியிருந்தது. மெல்லத் தலைகுனிந்தாள்.

## பாகம் - 10

**10**திய உணவு குழந்தைகளுக்குப் பரிமாறப்பட்டது. குழந்தைகள் உரக்கக் குரலெழுப்பி பிரார்த்தனை செய்து கொண்டபின் அமர்ந்தனர். லெட்சுமி குழந்தைகள் ஆர்வத்தோடு சாப்பிடுவதை ஆனந்தத்தோடு பார்த்தாள்.

ஒவ்வொரு குழந்தையைப் பார்த்தபோதும் நெஞ்சிலே ஈரம் சுரந்தது.

"ரொம்ப நன்றிம்மா!" மரியம்மை லெட்சுமியைப் பார்த்துக் கூறினார்.

"நன்றி சொல்லாதீங்கம்மா. இதில் கிடைக்கும் சந்தோசத்துக்கு ஈடு எதுவுமே இல்லைம்மா. மனக்குறையெல்லாம் போனமாதிரி இருக்கு." நெகிழ்ந்து கூறினாள்.

"என்னம்மா விசேஷம்?"

"விசேஷம் ஏதுமில்லைம்மா. குழந்தைகளுக்கு வயிறார சாப்பாடு போடணும்னு தோன்றியதால வந்தேன்."

"ரொம்ப சந்தோசம்மா. ஆண்டவர் உங்க குறையைத் தீர்த்து வைப்பார்." மரியம்மை சொன்னதுமே அவளது கண்கள் குளமாகின.

லெட்சுமி கவலையில் பாதி ஆகியிருந்தாள். இருவரும் ஆசிரமத்தைச் சுற்றிப்பார்த்தவாறு நடந்தனர். அங்கே பூச்செடிகளுக்குத் தண்ணீர் ஊற்றிக் கொண்டிருந்த சம்யுக்தாவைப் பார்த்து பலத்த அதிர்ச்சிக்காளானாள் லெட்சுமி.

"சம்யுக்தா!..." அவள் அழைக்க திரும்பிய இளையவள் அதிர்ந்தாள்.

"அம்மா நீங்களா?" நீர் நிரம்பிய வாளியை வைத்துவிட்டு அவளை நோக்கி வந்தபோது கூனிக்குறுகிப் போனாள்.

"இன்னும் என்னை அம்மானு கூப்பிடறியே..." அவளது குரல் தழுதழுத்தது.

"ஏன் இப்படியெல்லாம் பேசறீங்கம்மா. நீங்க எப்படி இங்கே?"

"இன்று இவங்களுடைய சாப்பாடு சம்யு... உனக்குத் தெரியுமா இவங்களை!" - மரியம்மை கேட்க லெட்சுமி திணறினாள்.

"எனக்குத் தெரிஞ்சவங்கதான்மா..."

"சரி நீங்க பேசுங்க. நான் குழந்தைகளைக் கவனிக்கறேன்." நாகரிகம் கருதி அவ்விடம் விட்டு நகர்ந்தார்.

லெட்சுமி சம்யுக்தாவை ஏக்கம் வழிய பார்த்தாள். கைக்கு கிடைத்த பொக்கிஷத்தை நழுவ விட்டுட்டோமோ... உள்ளம் குடைந்தது.

"எப்படி இருக்கிறே சம்யு? நீ இங்கேதான் இருக்கியா?" சொன்னவள் கண்ணீர் வடித்தாள்.

"என்னம்மா ஏன் அழறீங்க?"

"ஒரு நல்ல மனிதரை கொன்னுட்டேனேம்மா..." உடல் குலுங்கி அழுதாள்.

"தயவு செய்து அழாதீங்கம்மா. என் அப்பாவுக்கு அவ்வளவுதான் விதி. மனத்தைக் குழப்பிக்காதீங்கம்மா..." கண்கள் கலங்க கூறிய அவளை நேராக நோக்கினாள் லெட்சுமி. குற்றமற்ற அவளது முகம் அவளை வதைத்தது.

"நீ எப்படியிருக்கே சம்யு..."

"அப்பா போனபிறகு யார் இருக்காங்கம்மா. அதான் இங்கே வந்துட்டேன்." - அவள் கூறியது கேட்டுத் துடித்துப் போனாள்.

"என்னை மன்னிப்பாயா சம்யு..."

"நீங்க என்ன தவறு செய்தீங்கம்மா. ஒரு தாயா உங்க ஆதங்கம் எல்லாம் நியாயமானதுதான்."

"இல்லைம்மா. அது அநியாயம்னு என் மகனே தீர்ப்பளித்து தண்டனையும் கொடுத்திட்டான் சம்யு." கண்ணீரோடு சொன்னவளை குழம்பிப்போய் பார்த்தாள் சம்யுக்தா.

"இனிமேல் கல்யாணம்ங்கிற பேச்சுக்கே இடமில்லைனு சொல்லிட்டான். என்னிடம் பேசுவதேயில்லை. எனக்கு சரியான தண்டனைதான் கொடுத்திருக்கான். ஆனால்... அவன் வாழ்க்கையை நினைத்தால்தான்..." மேற்கொண்டு பேச முடியாமல் விம்மினாள்.

சம்யுக்தா நிலைகுலைந்து போனாள்.

"என் மகன் வாழ்க்கையை நானே கெடுத்திட்டேன்மா..."

"கவலைப்படாதீங்கம்மா. காலம் மாறும்போது எல்லாம் மாறிடும். யாருடைய பிடிவாதமானாலும் அதுக்கு காலவரையறை இருக்கு. நமக்கு இதுதான்னு தீர்மானிக்கும் உரிமை நமக்கே இல்லை. கடவுள் உங்களுக்கு நிச்சயமா நல்ல பதில் சொல்வார். கலங்காதீங்கம்மா."

நிதானமாக அழுத்தி உச்சரித்த ஒவ்வொரு வார்த்தையும் அவள் மனப்புண்ணுக்கு மருந்தாகின.

சம்யுக்தாவை மீண்டும் நோக்கினாள்.

"ஒரு நாள் வீட்டுக்கு வாயேன்மா..." குரல் இப்போது பிசிறற்று நிம்மதி பரவியிருந்தது.

அவள் புன்னகைத்தாள்.

அன்று காலை நேரத்தோடு அலுவலகம் வந்திருந்தாள் சம்யுக்தா. முன்பு போல் பிரயாணக் களைப்பு இல்லை. பட்டணத்திலேயே தங்கும் வசதி. அரை மணி நேர பிரயாணம். அதிகச் சம்பளம். எளிதான வேலை என நிம்மதியாக இருந்தாலும் அப்பா இல்லாத குறை அவ்வப்போது வந்து இதயத்தை அழுத்தும்போது களைப்பாகி விடுவதுண்டு. இன்னும் சில பெண்களும் பணியிலிருந்தும் இவளது திறமைக்கும், அறிவுக்கும் ஏற்றாற்போல முக்கிய பொறுப்பும், தனி அறையும் கொடுக்கப்பட்டிருந்தது.

இன்று காலையிலிருந்தே பார்த்திபனின் தாயார் நினைவுதான் வந்தது. எத்தனை கம்பீரமாக இருந்தவர் இப்போது வாடி வதங்கி மனப்பாரத்தோடு பார்க்கவே

கஷ்டமாக இருந்தது. பார்த்திபன் இவ்வளவு பெரிய தண்டனை கொடுத்திருப்பது குறித்து பலத்த அதிர்ச்சியும், சற்றுக் கோபமும்கூட வந்தது. இனி என்னை நினைப்பதில்லை என்றால் தாயிடம் ஏன் இப்படி நடந்துகொள்ள வேண்டும்?

ஆனால் இதுபற்றி அவனிடம் பேசத் தயக்கமாயிருந்தது. இனி அவரது வாழ்க்கையில் நுழைய வேண்டாம் என்ற தீர்மானத்தோடு தனது வேலையில் கண் பதித்தாள். ஸ்ரீராம் அறைக்கு வேலை நிமித்தமாக சென்றவள் அவன் இன்னும் வராதது குறித்து ஆச்சரியத்துடன் செல்வத்திடம் கேட்டாள்.

"இன்று சார் முக்கிய வேலை கொடுத்திருக்கிறார். இன்னும் வரலையே!"

"கல்யாணத்துக்குப் போயிருக்கார்."

"என்ன?" ஆச்சரியத்துடன் பார்த்தாள். "இன்று சில முக்கியமான வேலைகளை குறிப்பெடுத்து வைக்கச் சொல்லி போனில் செய்தி அனுப்பியிருந்தார். ஆனால் கல்யாணத்துக்கு..."

கணினியிலிருந்து பார்வையை விலக்கிய செல்வம், "சாரால்தான் இந்த கல்யாணமே நடக்கிறது. கஷ்டப்படும் குடும்பத்துக்கு தன் செலவில் கல்யாணமே செய்து வைக்கிறார். அதனால கண்டிப்பா போயாகணும். மற்ற வேலைகளை என்னைப் பார்க்கச் சொல்லியிருக்கார்." சொல்லிவிட்டு மீண்டும் கண் பதித்தான்.

சற்றே யோசனையோடு திரும்பியவளை மீண்டும் அழைத்தான். "மேடம் இனிமேல் வழக்கமா கிளம்பும் நேரத்தைவிட ஒரு மணி நேரத்திற்கு முன்பே உங்களை கிளம்பச் சொல்லியிருக்கிறார்."

பதில் பேசாமல் வியப்போடு அவ்விடம் விட்டு நகர்ந்தாள். செல்வம் மீண்டும் ஏதோ புரிந்தவனாய் சிரித்துக் கொண்டான்.

தன்னிச்சையாகவே தனது இருக்கையில் அமர்ந்தவள் இன்னும் சிந்தனையிலிருந்து விடுபடவில்லை. ஏதேதோ கேள்விகள் மனத்தில் எழுந்தன.

அன்று அவ்வளவு நகைகள் வாங்கியது இதற்குத்தானா? ஒருகணம் அவனை அன்று தவறாக நினைத்தது குறித்து மனம் வருந்தவே செய்தது. ஒரு மணி நேரத்துக்கு முன்பே கிளம்பச் சொன்னதற்கான காரணம்? அன்று நடந்த சம்பவம் சட்டென ஞாபகம் வந்தது. அன்று மட்டும் அவன் வந்திருக்காவிட்டால்? - தலையை பலமாகக் குலுக்கிக் கொண்டாள்.

அந்த பலத்த மழையிலும் எவ்வளவு வேகமாக வந்தது அந்தக் கார். அதிலும் அவன் கட்டளையிடுவதுபோல் வண்டியில் அமரச் சொன்னதும் யோசிக்க அவசியமேயில்லாதது போல் வேகமாக ஏறி அமர்ந்ததை இப்போது நினைத்துப் பார்த்தாலும் தனக்கே ஆச்சரியம்தான். ஒருவேளை வேறு ஒரு சூழ்நிலையாக இருந்திருந்தால் தான் ஏறியிருக்கவே மாட்டோமோ! எது எப்படியோ! அதற்கு நன்றிகூட சொல்லாததுதான் சற்று மனத்தை நெருடிக்கொண்டிருந்தது. எதனால் தான் அவ்வாறு நடந்துகொண்டோமென நினைப்பதுமுண்டு. இரண்டு நாட்கள் கழித்து இனி நன்றி சொன்னால் அது நன்றாக இருக்குமா என்ன?

சிரித்துக் கொண்டாள்.

## பாகம் - 11

சிந்தாமணி தன் விழிகளை சுருக்கி பார்வையை கூர்மையாக்கி அந்தச் சிறியப் படத்தைப் பார்த்தாள். கரத்தால் தூக்கிப்பிடித்து வலப்புறமும், இடப்புறமுமாக அசைத்துப் பார்த்தாள்.

“நீ எத்தனை தடவை பார்த்தாலும், எந்தப் பக்கம் திருப்பிப் பார்த்தாலும் மாப்பிள்ளை முகம் அதே மாதிரிதான் இருக்கும்.” ராஜா அம்மாவிடம் சொன்னான். தாட்சாயிணி கலகலவெனச் சிரித்தாள். மகனை கோபமாக முறைத்தவள் மீண்டும் அப்படத்தைப் பார்த்தாள்.

“கல்யாணம் செய்துக்கப்போற தாட்சாயிணிகூட இத்தனை தடவை பார்க்கலை...”

“நிறுத்துடா. நான்தான்டா நல்லாப் பார்க்கணும். என் மகளோட அழகுக்கு ஏற்றவன் ஸ்ரீராம்தான்னு நினைச்சிருந்தேன். ம்... அதுல பாதியாவது இருக்க வேணாம். பார்க்கிறவங்க என்ன நினைப்பாங்க.”

“அம்மா... இந்த மாதிரி அத்தானை இழுத்துப் பேசாதே நிறுத்து. எனக்கு மாப்பிள்ளையைப் பிடிச்சிருக்கு, அவ்வளவுதான்.” சொல்லிவிட்டு சட்டென எழுந்து போனாள்.

“ஏன்டா நான் என்ன சொல்லிட்டேனு இப்படி கோபமா பேசறா?”

“விடும்மா... நீயும் அதுமாதிரி இனி பேசாதே. மாப்பிள்ளை அரசாங்க உத்தியோகம். கைநிறைய சம்பளம்.

பார்க்கவும் நல்லாவும் இருக்கார். அவங்க கேட்கும் வரதட்சணை செய்தால் கல்யாணத்துக்கு அவங்க ரெடி."

"என்னமோடா. தாட்சாயிணியை வேண்டாம்னு சொன்னாலும் பரவாயில்லை. நானே செய்து வெக்கிறேனு சொன்னதே பெரிய விஷயம்..." அங்கலாய்த்தவள், "ஸ்ரீராமுக்கு போன் செய்து விஷயத்தைச் சொல்லிடு" என்றாள்.

"அந்தப் போட்டோவைக் கொடும்மா. அப்பாவிடம் காட்டணும்" என்றவாறு அந்தப் படத்தைப் பிடுங்கிக்கொண்டு சென்றபோது முதன்முறையாக மகனின் செயலில் வித்தியாசத்தை உணர்ந்தாள்.

மரியம்மை அன்று உற்சாகமாகக் காணப்பட்டார். அன்று ஆண்டவரிடம் சிறப்பு வழிபாடும்கூட நடந்தது: அங்குப் பணிபுரியும் மற்ற சிலரும் அதேபோன்று காணப்பட்டனர்.

மாலை அலுவலகம் முடிந்து திரும்பி வந்த சம்யுக்தாவை மரியம்மை அலுவலக அறைக்கு அழைத்திருந்தார்.

சம்யுக்தாவைக் கண்டதுமே நாற்காலியிலிருந்து எழுந்துவந்து அவளைக் கட்டிப்பிடித்தார்.

"ரொம்ப சந்தோசம் மகளே!" அவரது முகம் பிரகாசமாக இருந்தது.

ஆச்சரியத்தோடு தானும் மகிழ்ந்தவள் காரணம் தெரியாமல் பார்த்தாள்.

"குழந்தைகள் தங்கும் கட்டடத்தை சீர்செய்ய பணவசதி இல்லைனு கவலைப்பட்டோம் இல்லையா.

அன்று மழையில் குழந்தைகள் ரொம்பவே கஷ்டப் பட்டுட்டாங்க. அதைப் பற்றி உன் முதலாளியிடம் யதார்த்தமாக அன்று சொன்னேன். இன்று அவரே நேரே வந்து பத்து லட்சம் உதவித்தொகை கொடுத்திருக்கார். அது மட்டுமில்லை, இன்னும் அவர்கள் படிப்பு சம்பந்தப்பட்ட எந்த உதவி வேண்டுமானாலும் செய்யறதா சொன்னார் சம்யு... நான் நினைத்துப் பார்க்கலை குழந்தை. கடவுள் அவரை ஆசீர்வதிப்பார். அவர் நலன் கருதி வழிபாடும் செய்தோம். உண்மையிலேயே அவருக்கு எவ்வளவு பெரிய மனசு. அவர் நல்லாயிருக்கணும் சம்யு..."

ஆனந்தத்தில் கண்கள் கலங்க அவர் சொன்னது கேட்டு ஆச்சரியத்தில் வாயடைத்துப் போய் நின்றாள்.

'அவர் இன்னும் ஏதேதோ பேசிக் கொண்டிருந்தார். அவள் அதே நிலையிலே தன் அறை நோக்கி நடந்தாள். தன்னிச்சையாகவே தனது புடவை முந்தானையை எடுத்துப் பார்த்தாள். மெல்ல தலைகுனிந்தாள். தன்னையுமறியாமல் அவளது கால்கள் பூந்தோட்டத்திற்குச் சென்றன. அவளது மன உணர்வுகளைப் பங்கிட்டுக் கொள்ளும் அழகிய பூச்செடிகள் செல்லமாய் அசைந்து அவளை வரவேற்றன.

இன்று நடந்த நிகழ்வு அவள் மனத்தை ஊடுருவி அழுத்தமாய் பதிந்திருந்தது.

**எ**திர்பாராத தருணம் அது! மின்தூக்கியில் தன்னோடு அவனும் வந்திருந்தான். அவள் சேலை முந்தானையோடு மின்தூக்கியின் கதவு அடைக்கப்படுவதைக் கண்டவன் நிலைதடுமாறிப் போனான். கணப்பொழுதில் சட்டென அவளது முந்தானையைப் பற்றி இழுத்தபோது தடுமாறி விழப்போனவளைத் தாங்கிப் பிடித்தான். இருவருமே

செய்வதறியாது அதே நிலையில் சில விநாடிகள் நோக்கிய போது முதல் ஆளாய் அதிலிருந்து மீட்டுக் கொண்டான். இவளைவிட அவனுக்குத்தான் மனப்பதைப்பு குறையாமலிருந்தது. அவன் எதுவுமே பேசவில்லை. நடந்தது குறித்து மன்னிப்பும் கேட்கவில்லை. இவளைக் காப்பாற்ற மேற்கொண்ட செயலேயானாலும் மன்னிப்பு கேட்டிருக்க வேண்டும்தான். இவளும் தன்னைக் காப்பாற்றியதற்காக நன்றி சொல்லவில்லை. இவளுக்கு எப்போது பதினைந்தாவது இருபதாவது மாடி வரும் என்றுதானிருந்தது. ஆனால் அவனோ கொஞ்சம்கூட தடுமாறவில்லை. உரிய இடம் வந்ததும் அவன் வெளியேறும்போது “இனிமேல் கவனமா இருங்க” என்று சொல்லிவிட்டு விரைந்தபோது ஒருகணம் தடுமாறிப் போனாள். ஆனால், முதன்முறையாக அவன் மீது அவளுக்கு கோபம் வரவில்லை.

அதன்பிறகு அலுவலக வேலையாக அவளோடு அவன் பேசும்போது அவன் கணினியிலேதான் விழிபதித்து பேசுவான். அவளுக்குத்தான் இந்த நேரம் நன்றி சொல்வதா வேண்டாமா எனக் குழப்பமே உண்டானது. ஏற்கெனவே ஒரு நன்றி பாக்கியிருக்கிறதே, ஆனால் ஏனோ நன்றி சொல்ல உதடுகள் பிரியவில்லை.

தன் செயல் குறித்து இப்போதுவரை ஆச்சரியம்தான். தன் மீது உரசிய ரோஜாப்பூவை மெல்லத் தடவினாள். அது புன்னகைத்தது.

மீண்டும் அன்றைய தினசரி வாழ்க்கை ஆரம்பமானது. அதன்பிறகு மின்தூக்கியில் அவள் கவனமாகவே நடந்துகொண்டாள். தன் செயல் குறித்து தனக்குள்ளேயே சிரித்துக் கொண்டாள்.

★ ★ ★

ஸ்ரீராம் அன்றும் அவளை அழைத்தான். செல்வத்திடம் மீண்டும் அதே வசனம்!

"சொந்த விஷயமா நாங்க கொஞ்சம்..."

அவன் முடிக்குமுன்பே இடைபுகுந்தான். "நான் பார்த்துக்கொள்கிறேன் சார். எதுவானாலும் போனில் கூப்பிடறேன் சார்." - புன்னகைத்தவாறு சொல்ல,

பதிலுக்கு புன்னகைத்துவிட்டு, "வாங்க சம்யுக்தா" என்று விரைந்தான். அவளும் பின்தொடர்ந்தாள்.

'இன்று என்ன விஷயமாயிருக்கும்? மீண்டும் ஒரு கல்யாணமா? நகையெடுக்கவா? எதுவாயிருந்தால் என்ன சொல்லியே அழைத்துப் போகலாமே!' - மனம் குடைந்தது.

அவன் சாலையிலே கண் பதித்தவாறு காரை செலுத்திக் கொண்டிருந்தான். ஆனால் அவள் நினைத்தது போலில்லாமல் பூங்காவில் காரை நிறுத்தினான்.

குழப்பத்துடன் இறங்கியவள் அவனைப் பார்த்தாள். அவன் அவளைப் பார்க்கவில்லை.

சுற்றிலும் ஒருமுறை கண்களை சுழலவிட்டாள். கண்ணுக்கு எட்டும் தூரம்வரை யாருமே இல்லை.

"இங்கே எதுக்கு?..." தயக்கத்துடன் கேட்டாள்.

"உன்னிடம் கொஞ்சம் தனியா பேசணும் அதுக்குத்தான்."

முதல்முறையாக அவன் உன்னிடம் என்று ஒற்றையாக தன்னை அழைத்தது குறித்து ஆச்சரியத்தோடு அவனை நோக்கினாள்.

அவனும் முதன்முறையாக அவளை நேராக நோக்கினான். வித்தியாசமான பார்வை. உள்ளத்தையே ஊடுருவும் சக்தி அந்தப் பார்வைக்கு இருந்தது. இதுவரை அவன் தன்னை நோக்காமலேயே பதிலளிக்கும் போதெல்லாம் எதற்காக என்று கோபம் வரும். இன்று! அந்த ஒரு கணம் தன் வாழ்க்கையிலேயே தான் கண்டிடாத தடுமாற்றம் அவளுக்கு அதுதான் முதல்முறை. அவன் விழிகளின் கூர்மையில் தோற்றுப் போனவளாய் தலைகவிழ்ந்தாள். அவன் இன்னும் பார்வையை விலக்கவில்லை.

"சம்யு... எனக்கு உன்னை பிடிச்சிருக்கு. உன்னைக் கல்யாணம் பண்ணிக்கனும்னு நினைக்கிறேன்..." சொன்ன நொடியில் அதிர்ச்சியில் படாரென நிமிர்ந்தாள்.

உஷ்ணமேயில்லாமல் அவளது உடல் வியர்த்துப் போனது. வாயடைத்துப் போய் சிலையாய் நின்றாள்.

அவன் நிறுத்தவில்லை.

"எனக்குத் தெரியும் சம்யு. நீ எதிர்பார்த்திருக்க மாட்டாய். ஆனால், என்னுடைய எதிர்பார்ப்பெல்லாம் நீ என் வாழ்க்கைத் துணையா இருக்கனும். அதுதான் என் விருப்பம். இதுவரையிலும் நான் பார்த்திடாத குணம் உன்னிடம் இருக்கு."

அவள் பேசத் திராணியற்று நின்றாள்.

"என் அம்மாவிடம் அன்பைவிட பணம்தான் அதிகமிருந்தது. ஆனால், அன்பு சின்ன வயதிலிருந்தே நான் கேட்கும்போது கிடைத்ததில்லை. வாழ்க்கையின் நிம்மதிக்கு பணம்தான் தேவைனு வாழ்ந்தவங்க என் அம்மா, அப்பா. என் அப்பா அவருடைய வாழ்க்கை

முடியும்போதுதான் தன் தவறை உணர ஆரம்பிச்சார். உறவுகளின் தேவையைப் புரிந்ததால்தான் கடைசியா அவர் தன் தங்கையைப் பற்றி என்னிடம் சொன்னார். நானும் முழுக்க முழுக்க அன்புக்காக மட்டும்தான் இங்கே வந்தேன். ஆனால், பணமும், சொத்தும் எனக்குப் பெரிதல்ல, நீங்கதான் வேணும்னு ஆணி அறைந்த மாதிரி சொல்லி, அவ்வளவு பெரிய சொத்தை தாராளமா தூக்கி கொடுத்திட்டு போனியே அந்த சம்பவம் என்னை ரொம்பவே பாதித்தது சம்யு."

அவனது ஒவ்வொரு வார்த்தையிலும் விக்கித்து நின்றாள்.

"உன்னைப் பார்த்தபோது பிரமிப்பா இருந்தது. உன் தைரியமும், குணமும் என்னை முதல்முறையா பாதித்தது. உன்னை மறுபடியும் பார்க்கமாட்டோமான்னு ஏங்கினேன். நீ ஊரைவிட்டே போறேனு சொன்னபோது உண்மையில் தவிச்சுப் போயிட்டேன் சம்யு..."

சன்னமான குரலில் அவன் கூறியபோது இதயம் படபடக்க அவனை ஏறிட்டாள்.

"மணிரத்தினம் மாமாவிடம் தனியாக சந்தித்து எல்லா விவரங்களையும் கேட்டுத் தெரிந்துகொண்டேன். அவரும் நீ எங்கே போனாயோனு மனம் நொந்து போயிட்டார். முதல்முறையா உன் மேலே எனக்கு அன்பு வந்தது. என் அதிர்ஷ்டம் நீ என் அலுவலகத்துக்கே வந்தாய். உன்னை விட்டுடக்கூடாதேனு உன் கோபத்தைத் தூண்டுவது போல பேசி உன்னை என் அலுவலகத்திலேயே தக்க வெச்சுகிட்டேன். என் வாழ்க்கையில் கல்யாணமென்ற வார்த்தையையே நான் நினைத்ததில்லை. வரப்போறவ என் பணத்தை மட்டுமே விரும்புபவளா இருப்பாளோனு பயம்.

அது மட்டுமில்லாம நான் பார்த்த எந்தப் பொண்ணும் என் வாழ்க்கைத் துணைக்குத் தகுதி இல்லாதவள்னு தோன்றியது. அதனால்தான் சிந்தாமணி அத்தை தாட்சாயிணியை எனக்குத் திருமணம் செய்துவைக்க நினைத்தபோதுகூட நான் மறுத்துட்டேன்."

அவளை பல உணர்வுகள் ஆக்கிரமித்திருந்தன. பேசத் தெரியாமலோ அல்லது சக்தியற்றோ வாயடைத்து நின்றாள்.

"உன்னைப் போல ஒரு துணை என் வாழ்க்கைக்குக் கிடைத்தால், நிச்சயமா நான் சந்தோசத்தை மட்டும்தான் அனுபவிப்பேன்." எங்கோ வெறித்த பார்வையை அவள் மீது செலுத்தி, "நீ கிடைப்பாயா சம்யு..." என்றபோது உருகிப்போனாள்.

வறண்ட வானத்தில் ஈரம் சுரந்திருந்தது. மேகக்கூட்டம் ஒன்று சேர்ந்தன. சிறியதாய் ஒரு மின்னல்! வானத்திலும், மனத்திலும்!

"தயவு செய்து பத்து வயது சம்பவத்தையும், நின்றுபோன உன் கல்யாணத்தையும் காரணம் காட்டி உன்னை நீயே ஏமாற்றிக்காதே சம்யு. அது எதுவுமே உண்மையில்லை. நான் உன்னை ஆழமா நேசிக்கிறேன். அது மட்டும்தான் உண்மை" என்றபோது அவளது விழிகள் கசியத் தொடங்கின, வானமும்தான்!

"நல்லா யோசித்து நல்ல முடிவா சொல் சம்யு. மழை வருது. நாம போகலாம்." சொல்லிவிட்டு காரை நோக்கி விரைந்தான்.

## பாகம் - 12

நள்ளிரவு பன்னிரண்டு மணி. உறக்கம் தழுவ மறுத்தது அவளை. 'பத்து வயது சம்பவத்தையும், நின்றுபோன உன் கல்யாணத்தையும் காரணம் காட்டி உன்னை நீயே ஏமாற்றிக்காதே சம்யு.'

மீண்டுமொருமுறை அவனது வார்த்தைகள் ஒலித்தன. மேஜை மீதிருந்த தண்ணீரை எடுத்துக் குடித்தாள். அவள் மனம் பலத்த தாக்குதலுக்கு ஆட்பட்டிருந்தது. ஆனால் வித்தியாசமாய் இத்தனை வருடங்களில் தோன்றாத உணர்வுக்கு ஆளாகியிருந்தாள்.

மெல்ல எழுந்து ஜன்னலருகே வந்து நின்றாள்.

எவ்வளவு பெரிய கோடீஸ்வரன்! பணத்தைப் போலவே குணமும் பெற்றிருக்கிறான்.

எவ்வளவு தாழ்மையாகப் பேசினான். கனவில்கூட நினைத்திடாத நிகழ்வு அது.

எவ்வளவு சோகங்கள், கஷ்டங்கள், இழப்புகள் இவற்றை மட்டுமே சந்தித்த தருணங்கள் எல்லாமே வரிசையாய் நினைவுக்கு வந்தன. இந்தப் பிறவியில் தனக்கு விதித்தது இதுதான் என வாழப் பழகியிருந்தாள். ஆனால், இன்று!

'நீ என் வாழ்க்கைத் துணையா கிடைத்தால் நான் வாழ்க்கை முழுதும் சந்தோசமடைவேன்' என்று அவர் சொன்ன அந்த கர்வமற்ற வார்த்தைகள் அவளைக் கவர்ந்திழுக்கவே செய்தன.

விழிகளை இறுக மூடிக்கொண்டாள்.

முடிந்துபோன வாழ்க்கை என முற்றுப்புள்ளி வைத்தபிறகு அது அழிக்கப்படுவதை எப்படி எடுத்துக் கொள்வது? ஏற்றுக்கொள்வதா? அல்லது ஒதுக்கிவிடுவதா?... உண்மையில் ஒதுக்கத் தைரியமில்லைதான் அவளுக்கு. ஏனெனில் அவனுக்குள்ளே ஏற்பட்ட உணர்வில் சிறிதளவேனும் தனக்குள்ளும் உண்டானதுதான் மறுக்க முடியாத உண்மை. ஆனால் அவன் அந்தஸ்து பயத்தைத்தான் ஏற்படுத்தியது. அது தேவையற்ற காரணம் என்பது இப்போது உறுதியாகப் புரிந்த பின்பும் மெலிதான பயம் ஒட்டியிருந்தது. அதுதான் சிந்தாமணி!

ஸ்ரீராம் யார்? சிந்தாமணியின் அண்ணன் மகனல்லவா? அதிலும் தன் மகளை அவன் நிராகரித்திருக்கிறான் என்றால் அது அவருக்கு ஏமாற்றம்தானே. யாராக இருந்தாலும் எளிதில் ஏற்றுக்கொள்ள முடியாது. அதிலும் சிந்தாமணி! அன்று அவருக்கேற்பட்ட அரண்மனை சொத்தின் ஏமாற்றம் தானே இத்தனை விரிசலுக்கு காரணம். இப்போதுதான் புகைச்சலே அடங்கியிருக்கிறது. இந்நிலையில் அவரது மகளைப் புறக்கணித்த ஸ்ரீராமைத் தான் மணந்தால்? நினைக்கவே பயமாயிருந்தது. அவர் அண்ணன் மகனோடு, எதிரியாக நினைக்கும் தான் இணைவதை பொறுத்துக் கொள்வாரா என்ன? அல்லது தனக்குத்தான் தைரியமிருக்கிறதா?

அந்த வாடைக்காற்றிலும் உஷ்ணம் பரவியது. இரவு முழுதும் குழப்பத்தில் உறங்காமல் படுக்கையில் புரண்டாள்.

ஸ்ரீராமும், செல்வமும் அலுவலகத்தில் முக்கியமான வேலையில் ஈடுபட்டிருந்தனர். சம்யுக்தா அறைக்குள்ளே வந்தாள். நிச்சயமாக வேலை காரணமாக அவள் வரவில்லை என்பது செல்வத்திற்கு நன்றாகவே புரிந்தது.

"சார், நான் பிறகு வர்றேன் சார்" என்று வெளியேறினான்.

ஸ்ரீராமின் விழிகள் சம்யுக்தாவின் மீது அழுத்தமாக பதிந்திருந்தன. அவளது விழிகளோ தாழ்ந்திருந்தன. மனத்தை திடப்படுத்திக்கொண்டு தாமதிக்காமல் பேசினாள்.

"இது சரியா வராது" என்றாள் மெல்லியக் குரலில்.

"ஏன்?" ஏமாற்றத்தோடு கேட்டான்.

"ஏன்னு தயவு செய்து கேட்காதீங்க. ஆனால், இது சரியா வராது."

அவனது செல்போன் ஒலிக்க, சத்தத்தை அடக்கிவிட்டு அவளை மீண்டும் பார்த்தான். பார்வை சற்றுக் கடுமையாகவே இருந்தது.

"காரணம் தேவை சம்யு. உன் தயக்கத்துக்கு என் பணம்தான் தடையா இருக்கிறதுனா சொல், இப்பவே எல்லாத்தையும் விட்டுட்டு வர்றேன். உன்னோடு வாழும் எளிமையான வாழ்க்கையே சந்தோசத்தைத் தரும்." உண்மையாகக் கூறிய அவனது வார்த்தைகளில் அவளுக்கு கண்ணீர் ததும்பியது. அவள் அவனுக்கு முதுகுப்புறம் காட்டித் திரும்பிக் கொண்டாள்.

துடிக்கும் உதடுகளை அழுத்தமாகக் கடித்துக் கொண்டவள், "தயவு செய்து வேறு எதுவும் கேட்காதீங்க."

"ஏன்?" - உரக்கக் குரலெழுப்பி கடுமையாக கேட்டான். வேகமாக எழுந்து அவள் முன்னே வந்து நின்றவன், "உனக்கு என்னைப் பிடிக்கலைனு சொல். இனிமேல் நான் இதைப்பற்றி பேசமாட்டேன். ஆனால் உனக்கு என்னைப் பிடிச்சிருக்கு. ஏன் இப்படி உன்னை நீயே ஏமாத்திக்கிறாய்?"

விழிகளை இறுக மூடியவள், "இனிமேல் இதுபற்றி பேசினால் நான் வேறு வேலை தேட வேண்டியிருக்கும்..." அழுத்தமாக அவள் சொன்ன நிமிடத்தில் மீண்டும் அவன் கரங்களில் இருக்கும் செல்போன் ஒலிக்க, ஆத்திரத்தில் தூக்கி எறிந்தான். விலை உயர்ந்த போன் சில்சில்லாய் சிதறின. அவளை ஒருமுறை பார்வையால் எரித்துவிட்டு அறையைவிட்டு வெளியேறினான்.

அவளது கண்களில் அருவி சிந்தியது.

**அ**தன் பிறகு, வெளியே போன அவன் அவள் விழிகளிலே தென்படவில்லை. அதுகுறித்து அவள் நிம்மதியடைந்தாள். ஏனெனில் அவனது அருகாமை தனது உறுதியைத் தளர்த்திவிடுமோ என பயந்திருந்தாள். மீண்டும் யதார்த்தத்திற்கு வர முடிவு செய்தாலும் இடையிடையே மனச்சஞ்சலங்கள் எழவே செய்தன.

இதற்குமுன் பார்த்திபன் தன்னிடம் இதேபோன்று கேட்டபோது அவளுக்குள் எந்த உணர்வும் இல்லாமல்தான் இருந்தது. அப்பாவுக்காக மட்டுமே சம்மதித்திருந்தாள். ஆனால், ஸ்ரீராம் அவளையுமறியாமல் அவளைக் கவர்ந்திருந்தான். ஆனால் இன்று உண்மையில் தன்னையே ஏமாற்றிக் கொண்டுதான் அவனைப் புறக்கணித்தாள்.

அன்றைய இரவுப் பொழுது நன்றாக உறங்கிப் போனாள். மறுநாள் வழக்கம்போல் அலுவலகம் சென்றாள். இன்று என்னவெல்லாம் அவரிடமிருந்து சந்திக்கப்போகிறோமோ என நினைத்தவள், ஏமாற்றமும், அதிர்ச்சியும் கிடைக்குமென நினைக்கவில்லை.

ஸ்ரீராம் நாற்காலியில் செல்வம் அமர்ந்திருப்பது கண்டு துணுக்குற்றாள். இவளைப் பார்த்தவன், மீண்டும் கணிணியில் கண்பதித்தான்.

அவனே ஏதாவது சொல்வானென்று நினைத்தவளுக்கு ஏமாற்றம்தான். திரும்பி தன் இருக்கைக்குச் சென்றவள் நேரமாக ஆக நிம்மதியிழந்து கொண்டிருந்தாள். செல்வத்திடம் கேட்டேவிட்டாள், "சார் எங்கே?"

இவளது குரலில் வித்தியாசத்தை உணர்ந்தவன், "சார் சிங்கப்பூர் போயிருக்கார்" என்றான்.

பலத்த இடி தாக்கியதுபோன்றே உணர்ந்தாள்.

"எ...என்ன திடீர்னு?"

"முக்கியமான வேலை. அதான் போயிருக்கார்" என்றான்.

கணிணியிலிருந்து பார்வையை விலக்கியவன், அவள் மன உணர்வுகளைப் புரிந்துகொண்டவனாய், பதில் பேசாமல் அவளைப் பார்த்தான்.

"இல்லை, என்னிடம் ஒரு முக்கிய வேலை கொடுத்திருந்தார். அதைப்பற்றி கேட்கணும்..." அவள் இழுத்தாள்.

'அப்படியா! சார் எதுவும் சொல்லவில்லை மேடம். எதுவாயிருந்தாலும் என்னிடம் சொல்லுங்க. நான் சாரிடம் போனில் பேசிக்கறேன்.'' என்றவனிடம், சரி என்று ஒப்புக்கு சில அலுவலக விஷயங்களைப் பற்றி பேசிவிட்டுச் சென்றான்.

“மேடம்...?”

திரும்பினாள்.

''சார் மாதிரி ஒருத்தர் கிடைக்க கொடுத்து வெச்சிருக்கணும் மேடம்.”

''என்ன?'' மெல்லிய அதிர்வோடு அவனை நோக்கினாள்.

''நமக்கு முதலாளியா கிடைக்க கொடுத்து வெச்சிருக்கணும்னு சொன்னேன்.'' அவன் அழுத்தி உச்சரித்தபோது “ம்...” என்று திரும்பினாள்.

செல்வத்தின் வார்த்தை அவள் செவிகளை விட்டு அகலவில்லை. மனபாரத்தோடு இருக்கையில் அமர்ந்தாள்.

“எல்லாத்தையும் தூக்கிப் போட்டுட்டு வர்றேன் சம்யு” - அவனது வார்த்தைகள் மீண்டும் ஒலித்தபோது வேதனையில் துவண்டு போனாள். நாட்கள் மெல்ல நடந்தன. செயற்கைத்தனமாக தனது அன்றாட வேலைகளில் ஈடுபட்டிருந்தாள். அவளது ஒவ்வொரு செயலிலும் அவனது முகமே ஞாபகமூட்டுவதாக இருந்தது. அவளிடையே ஏற்பட்டிருக்கும் மாற்றத்தை மரியம்மையும் கவனிக்கத் தவறவில்லை. இரவு முழுதும் அவள் உறக்கமில்லாமல் தவிப்பதும், சரியாகத் தன்னிடம் பேசாததும் அவரை யோசிக்க வைத்தன.

அன்று அவள் மனப்போராட்டத்தின் உச்சக்கட்டத்தில் இருந்தாள். கருணை இல்லத்தில் அமைந்திருக்கும் தேவாலயத்துக்குள் நுழைந்தாள். ஓர் ஓரமாக அமர்ந்தாள். அமைதி நிறைந்த ஆலயம் அவள் மனத்திற்கு தற்காலிக நிம்மதியைத் தந்தது. ஏசு ஆண்டவரின் கருணை விழிகளைப் பார்த்தவள், அதற்கு மேலும் அடக்க முடியாமல் சத்தமாக அழுதாள்.

'என் வாழ்க்கையில் நான் சந்தித்திடாத இழப்புகளா? அவற்றையே தாங்கிக்கொண்ட எனக்கு இனி இழப்பதற்கு என்ன இருக்கிறது? போகட்டும்! யார் எங்கே போனால் எனக்கென்ன?' வேதனையில் கரங்களுக்குள் முகம் புதைத்துக் குலுங்கினாள்.

மரியம்மை அவளைத் தொட்டபோது திடுக்கிட்டுப் பார்த்தாள். இவளது சத்தம் கேட்டு அங்கிருந்து வந்த மரியம்மை அன்புடன் ஏறிட்டார். அவரைக் கண்டதும் அவர் மீது சாய்ந்து குலுங்கினாள். மனவேதனை தீரும்வரை அழுதாள். அவள் அழுது முடிக்கும்வரை அவரும் அமைதியாய் காத்திருந்தார்.

சில விநாடிகள் கழித்து, அவரது முகத்தை ஏறிட்டவள், கண்ணீரைத் துடைத்துவிட்டு மௌனமாகத் தலைகவிழ்ந்தாள்.

"குழந்தை...! ஏதோ ஒரு போராட்டத்தை மனத்துக்குள் நடத்திட்டிருக்காய். முடிவெடுக்க முடியாமல் தவிக்கிறாய்னு எனக்குத் தெரிகிறது. ஆனால், என்னன்னு தெரியலை. உனக்குச் சொல்லத் தோன்றும்போது சொல். அழாதேம்மா. உன் மனப்போராட்டத்துக்கு கடவுள் நல்ல தீர்ப்பளிப்பார். குழம்பாதேம்மா."

அவரது அன்பான வார்த்தைகளில் சற்று அமைதியானாள்.

“ஏன்மா கடவுள் எனக்கு வேதனை மட்டுமே தரணும்? நான் அதுக்கு மட்டும்தான் பிறந்தேனா?”

“சோதனையும், வேதனையும் கடவுள் அவர் தேர்ந்தெடுத்தவருக்கே தருகிறார். ஏனெனில் அவற்றை சந்திக்கும்போதுதான் மனிதன் பக்குவப்படுகிறான். மனப்பக்குவம் படைத்தவனே வாழ்க்கையில் முழுமையைப் பெறுகிறான். வாழ்வின் இன்ப நிலையில் தடுமாறாமல் இருப்பதற்கே இந்த அனுபவம். நீ கடவுளால் ஆசீர்வதிக்கப்பட்டவள். உன் வாழ்வில் ஒளி வீசும் காலம் விரைவில் உன்னை வந்தடையும் மகளே! கர்த்தர் உன்னைக் காப்பாற்றுவார், நம்பிக்கையோடு இரும்மா...”

மரியம்மையின் நிதானமான ஒவ்வொரு வார்த்தையும் அவள் மனப்புண்ணுக்கு மருந்தாகின. புயல் வீசிக்கொண்டிருந்த மனம் இப்போது அமைதியானது.

அதன்பிறகு அவள் அந்த வறட்சியான வாழ்க்கையையும் ஏற்கப் பழகியிருந்தாள். ஒரு வாரம் கழிந்தது. அன்று...

நள்ளிரவு பன்னிரண்டு மணி! சம்யுக்தாவின் ஆழ்ந்த உறக்கத்தை போன் கலைத்தது. யோசித்தவாறு காதுக்கு கொடுத்தாள்.

“மேடம் செல்வம் பேசறேன். நாளை சார் சிங்கப்பூரிலிருந்து வர்றார்.” அவன் பதற்றமாக பேசினாலும் அந்த வார்த்தையிலும் ஒருகணம் தடுமாறிப் போனாள்.

"விமான நிலையம் போகணும். என் மனைவிக்கு பிரசவ வலி. மருத்துவமனையில் சேர்த்திருக்கிறேன். என்னால் போகமுடியாது. நீங்க போக முடியுமா?"

"என்ன? நானா?" அதிர்ந்தாள்.

"ஆமாம் மேடம். காரை எடுத்துட்டுப் போகணும். டிரைவர் வருவார். நீங்க போனீங்கனா எனக்கு நிம்மதியாயிருக்கும்.'

ஒருபுறம் சந்தோசமாகயிருந்தாலும் தயங்கினாள்.

அவன் யோசிக்கவிடவில்லை. "மேடம் போறீங்களா?"

"ம்..."

"நன்றி மேடம். நான் மற்ற விவரங்களை போனில் செய்தி அனுப்பறேன்" என்று வைத்துவிட்டான்.

மனதிலே தென்றல் வீசியது.

## பாகம் - 13

படபடக்கும் விழிகளோடும் சீரற்றுத் துடிக்கும் இதயத்தோடும் சென்னை விமான நிலையத்தில் நின்றுகொண்டிருந்தாள் சம்யுக்தா. வித்தியாசமாகவே அவள் உணர்ந்தாள். சிரமப்பட்டு ஒருவழியாய் மனத்தை திடப்படுத்திய பிறகு மீண்டும் ஒரு சோதனைக்கட்டம் வந்துவிடுமோ என்ற பயம் உள்ளுக்குள்ளே எழுந்தது. ஒருவேளை அவன் அன்று நடந்த சம்பவத்திற்குப் பிறகு இனி என் வாழ்க்கையிலேயே குறுக்கிடக்கூடாது என்று

நினைத்திருக்கலாம். அப்படி நினைத்திருந்தால் தனக்கு நிம்மதி என்ற எண்ணத்துடன் கூட்டத்தோடு கலக்காமல் ஓர் ஓரமாக நின்றாள்.

அவனுக்குத் தன் மீது கண்டிப்பாக கோபம் இருக்க வேண்டும். இல்லையென்றால் சொல்லாமல் ஏன் போகவேண்டும்? அலுவலக சம்பந்தமாகக்கூட தன்னிடம் பேசவில்லையென்றால் என்ன காரணம்? என்னை இதுபோன்ற நிலைக்குத் தள்ளித் தடுமாற வைக்கும் எண்ணமோ? எது எப்படியோ, எது குறித்தும் இனிக் குழம்பப் போவதில்லை. கற்பனையில்கூட நினைத்துப் பார்த்திடாத நிகழ்வுகளையே சந்தித்த தனக்கு இது ஒன்றும் பெரிதல்ல...

சம்யுக்தா மனம் பலவாறு சிந்தித்துக் கொண்டிருந்தது.

சொந்த பந்தங்கள், நட்பு வட்டாரங்கள் எனத் திரளாக அணிவகுத்து தத்தமது ஆட்களை வரவேற்றுக் கொண்டிருந்தனர். கட்டியணைத்துக் கொள்வதும், கைகுலுக்கலுமாய் வரவேற்பு நிகழ்ந்து கொண்டிருந்தது. அவளது விழிகள், வெளிவந்து கொண்டிருக்கும் கூட்டங்களில் ஸ்ரீராமைத் தேடிக் கொண்டிருந்தன.

அலைபாய்ந்த விழிகள் சட்டென நிலைகுத்தி நின்றன. அதோ வந்துவிட்டான். அவளது விழிகள் சன்னமான தடுமாற்றத்திற்கு ஆட்பட்டன. ஆனால், மறுகணமே சிறிய கலவரம் ஏற்பட்டது. ஸ்ரீராமின் கரத்தை கெட்டியாக இறுக்கிப் பிடித்தவாறு மெல்லிய ஆடையில் வந்துகொண்டிருக்கும் பெண் ஒரு சன்னமான அதிர்வை ஏற்படுத்தியிருந்தாள்.

அந்த நொடியில் அவளது முகமே கலவரமானது. இவ்வளவு நெருக்கமாக ஏதோ காதல் ஜோடி

போன்றல்லவா இருக்கிறது. தான் புறக்கணித்துவிட்ட கோபமாக இருந்தால்கூட ஒரு வாரத்தில் தேடிப்பிடிக்க முடியுமா என்ன? வெளிநாட்டில் இதெல்லாம் மிக எளிதான விஷயம்தான்!

அவனோ இவளைக் கண்டதுமே ஆச்சரியமாகப் பார்த்தான். சட்டென இவளைப் பார்த்துக் கேலியாகப் புன்னகைத்தான். "ஒரு வாரமாக சரியா தூக்கமில்லை போலிருக்கே" என்றான்.

"அப்படியெல்லாம் ஒன்றுமில்லை. சரியாதான் தூங்கினேன்." விழிகளைத் தாழ்த்தியவாறு வெடுக்கென சொன்னாள்.

"ரொம்ப நன்றி இவ்வளவு தூரம் வந்ததுக்கு."

"செல்வத்தால் முடியலை. அதான் நான் வந்தேன்." - அதே குரலில் சொன்னாள்.

அவளது கோபத்தை ரசித்தவாறே அவனும் விடாமல், "டிரைவரே போதும்... இருந்தாலும் நீங்க இவ்வளவு தூரம் வந்திருக்கீங்களே..." அழுத்திச் சொன்னபோது விழிகளை எங்கோ வெறித்தாள்.

"தாரா...! இவங்க சம்யுக்தா. நம்ம அலுவலகத்தில் பணிபுரியறாங்க."

சொன்னவன் அவளது முகமாற்றத்தைக் காண உற்று நோக்கினான்.

தாரா ஹலோ சொன்னாள்.

அவள் வணக்கம் என்று திரும்பிக் கொண்டாள்.

தாராவின் இறுக்கிய பிடி அதிகமாகிக் கொண்டே போகப்போக சம்யுக்தா பொறுமையிழந்தாள்.

ஸ்ரீராம் சற்று அவளது இறுக்கத்தினின்று தன்னை விடுவிக்க முயற்சித்துத் தோற்றுப் போனான்.

காரின் பின்புறக் கதவைத் திறந்த சம்யுக்தாவை அவள் அழைத்தாள்.

"நீங்க கொஞ்சம் முன்னே உட்காருங்க. நானும், ராமும் பின்னே உட்காரணும்..." என்றவள் அவள் பதிலுக்காகச் சற்றும் காத்திராமல் அவள் அமர்ந்தாள்.

முன்னிருக்கையில் அமைதியாக அமர்ந்துகொண்டாள் சம்யுக்தா. அவளது மனநிலையை அவனால் உணர முடிந்தது. தாராவின் ஒவ்வொரு வார்த்தைகளையும், கூர்ந்து கவனிக்கத் தவறவில்லை அவள்.

ராம் இது என்ன? ராம் அது என்ன? - என அவனது பெயரை நிமிடத்துக்கொருமுறை சொன்னாள்.

அவளுக்குச் சற்று இடைவெளி விட்டவாறு அமர்ந்திருந்த அவனும் அதற்கு விருப்பத்துடன் பதில் சொன்னான்.

"சென்னையை இப்பதான் முதல்முறையா பார்க்கிறேன் ராம். ரொம்ப சந்தோசமாயிருக்கு..." ஜன்னல் வழியே விழிகளை அகல விரித்து பார்வையைச் செலுத்தியவாறு உணர்ச்சிப் பெருக்கில் கூறினாள்.

சம்யுக்தாவுக்கு எப்போது அலுவலகம் வருமோ என்றிருந்தது.

"ராம்... நீ எங்கே தங்கியிருக்கிறாய்?"

"காலியாயிருக்கும் நண்பன் வீட்டில்."

"நானும் உன்னோடு தங்கிக்கட்டுமா. அப்பதான் பொழுதுபோகும்..."

சொன்ன நொடியிலே பலத்த அதிர்ச்சிக்காளானாள் சம்யுக்தா. இதயத்தின் துடிப்பே நின்றதுபோல் உணர்ந்தாள். அதைவிட ஸ்ரீராமின் பதிலுக்காக செவியை கூர்மையாகத் தீட்டிக் காத்திருந்தாள்.

அவளது நிலையை உணர்ந்த அவனும், மெல்லிய புன்னகையோடு... "உனக்குப் பொழுதுதானே போகணும், வா... என் அத்தை ஊருக்குப் போகலாம். உன்னைப் போலவே வாயைத் திறந்தால் மூடாமல் பேசும் தாட்சாயிணி இருக்காள்."

"ஓ... கல்யாணப் பெண்ணா?"

"ம்... நீ அங்கு தங்குவதுதான் நல்லது."

"தாராளமா போகலாமே..." என்றாள்.

சம்யுக்தாவின் இதயம் இப்போது சீராக இயங்க ஆரம்பித்திருந்தது.

அதன்பிறகு இரண்டு நாட்களாக ஸ்ரீராம், தாராவுடன் வெளியே சுற்றிப்பார்க்கப் போகும்போதெல்லாம் வேலையில் அவளுக்குக் கவனம் குறைந்தது. தன்னை வெறுப்பேற்றத்தான் அவளை அழைத்து வந்தானோ, உள்ளுக்குள்ளே குமைந்தவள் செல்வத்தின் அறை நோக்கி விரைந்தாள்.

"வாழ்த்துக்கள் சார். ஆண் குழந்தையாமே!"

அவன் நன்றி சொல்லி புன்னகைத்தான். இருவரும் அலுவலக சம்பந்தமான விஷயங்களை கலந்து பேசினார்கள்.

பேசி முடித்தவள், கேட்கலாமா, வேண்டாமா என மனத்திற்குள் குழம்பினாள். இவளது குழப்பத்தை அவனால் எளிதாக அறியமுடிந்தது. இவளே கேட்கட்டும் என்றிருந்தான்.

முடிவில் பொறுமையிழந்து கேட்டேவிட்டாள்.

"யார் அந்த தாரா?"

அவன் அமைதியாக ஏறிட்டான்.

"இ...இல்ல... ரொம்ப நெருக்கமா பேசுவதால் ஒருவேளை சாருடைய..." முடிக்க முடியாமல் இழுத்தாள்.

"வெளிநாட்டில் பிறந்து வளர்ந்தவங்களுக்கு இது ஒரு சாதாரண விஷயம் மேடம். சாருடைய அப்பாவின் நண்பர் மகள்தான் அந்த தாராவாம். கூடிய விரைவில் தாராவுக்கும், அவள் முறைப் பையனுக்கும் திருமணமாம். இந்தியாவை சுற்றிப்பார்க்க அந்தப் பெண் வந்திருக்கிறாள். நாளை அந்த முறைப்பையன் வந்ததும் இருவரின் அடுத்த சுற்றுலாத்தலம் டெல்லியாம்!" செய்தி வாசிப்பாளர் போன்று அவன் சொன்னபோது நிம்மதியுடன் புன்னகைத்தாள்.

அதன்பிறகு அவள் சுறுசுறுப்பாக வேலைகளைச் செய்தாள். தாரா கிளம்பியபிறகு சொல்ல முடியா இன்பத்தில் நீந்தினாள். தனது நடவடிக்கை குறித்து தனக்கே ஆச்சரியம்தான். மறுபுறம் தாட்சாயிணியின் திருமண வேலைகள் துரிதமாக நடந்தேறிக்

கொண்டிருந்தன. ஸ்ரீராம் இந்த கல்யாணத்தை நடத்த சந்தோசமாக லட்சங்களை செலவு செய்தான். சிந்தாமணி திரும்ப சந்தோசத்தைக் கிடைக்கப் பெற்றாள்.

அன்று! எதிர்பார்த்திடாத இன்ப அதிர்ச்சி சம்யுக்தாவுக்காகக் காத்திருந்தது.

கவனத்தோடு தன் வேலையைச் செய்து கொண்டிருந்த சம்யுக்தா, "அக்கா" என்ற அழைப்பில் திடுக்கிட்டுப் பார்த்தாள்.

அங்கே தாட்சாயிணி நின்று கொண்டிருந்தாள்.

தான் இங்கு பணிபுரிவது குறித்து என்றாவது அவர்களுக்குத் தெரியவந்தால் அதன் பின்விளைவுகள் என்னவாயிருக்கும் என்ற பயம் அவ்வப்போது வந்துகொண்டிருந்தது என்னவோ உண்மைதான். ஆனால், இப்படி திடீரென இதயமே நின்றுவிடுமளவு இன்ப அதிர்ச்சி கிடைக்குமென உண்மையில் எதிர்பார்க்க வில்லைதான்.

இனி அவர்களுக்கும், தனக்கும் எதுவுமில்லை என்று தீர்மானித்த பிறகு, உரிமையோடு அக்கா என்று தாட்சாயிணி அழைப்பாள் என கனவிலும் நினைத்ததில்லை.

எதிரே வந்தால்கூட கண்டுகொள்ளாமல் முகத்தைத் திருப்பிக்கொண்டு போனபோதெல்லாம் மனம் நொந்துபோவாள். அந்தக் காயத் தழும்புகள் இன்று மறைந்தே போயின.

அதிர்ச்சியில் இருக்கையை விட்டு எழுந்தாள். தாட்சாயிணி இவளருகே வந்தாள்.

இதயப் படபடப்பு அவளுக்கு அதிகமானது. தாட்சாயிணியின் அன்பேந்திய முகம் அவளை ஆனந்தத்தின் உச்சக்கட்டத்திற்குத் தள்ளியது. சரக்கென கண்ணீர் வழிந்தது. கண்ணீரோடு சேர்ந்து வழிந்த பாசத்தை உணர்ந்த இளையவள், இத்தனை காலங்களாகத் தவிக்கவிட்டது குறித்தோ, அல்லது தாங்கள் ஒதுங்கியிருந்தது குறித்தோ நடந்து கொண்டமைக்காக, வேதனையில் துவண்டு போனாள். ஊர் சொல்லும்போது நம்பாத உண்மையை, நேருக்கு நேராக அன்று பார்த்ததிலிருந்தே அதில் பாதிக்கப்பட்டிருந்தாள்.

பெற்றோரை இழந்து அநாதைபோல் வாழ்ந்து கொண்டிருக்கும் தமக்கையைப் பார்த்தபிறகு அவளுக்கும் கண்ணீர் பெருகியது.

“அக்கா...! அத்தான் நீங்க இங்கு இருக்கும் விஷயத்தைச் சொன்னார். உங்களை நினைத்து வேதனை ஒருபுறமிருந்தாலும், இங்கு பணிபுரிவது குறித்து அப்பாவுக்கு நிம்மதி. அப்பா ரொம்ப கவலைப்படறார். இதுக்கு முன்பு என்னோடு மட்டுமாவது பேசுவார். இப்போ யாரிடமும் பேசுவதில்லை.”

குரல் உடைந்து சொன்னவளை வேதனையோடு பார்த்தாள் சம்யுக்தா.

“தன் தம்பியை கடைசியா போய்ப் பார்க்கலையேனு நினைத்து உள்ளுக்குள்ளே புழுங்கிக் கொண்டிருக்கிறார். உயிர் இருக்கும்போது அதன் மதிப்பு தெரிவதில்லை. ஒரு இழப்புக்குப் பிறகுதான் புரிந்தது. அம்மா என்றுமே மாற மாட்டாங்கக்கா. ஆனால் எனக்கு உங்க உறவு வேணும்.”

பொறுமையாகவும், நிதானமாகவும் கூறியபோது வியந்துபோனாள் மூத்தவள்.

கைப்பையிலிருந்து திருமண அழைப்பிதழை எடுத்து அவளிடம் நீட்டினாள்.

"என் கல்யாணத்துக்கு நிச்சயமா வரணும். அம்மாவுக்குப் பயந்து வராம இருந்திடாதீங்கக்கா. நீங்க வந்தால் அப்பா ரொம்ப சந்தோசப்படுவார். ஒருவேளை நீங்க வரலைனா அப்பா குற்ற உணர்வில் ரொம்பவே நொந்து போயிடுவார்."

விழி கலங்க அவளது கரங்களைப் பிடித்துக்கொண்டு உண்மையான பாசத்தோடு கூறியபோது இன்ப வெள்ளத்தில் நீந்தினாள் சம்யுக்தா.

## பாகம் - 14

தவறுகளே மனிதனுக்குப் பாடம் கற்பிக்கிறது. ஒரு எலும்பேயில்லாத நாக்கு பகைக்கும், உறவுக்கும் காரணமாகிப் போகிறதே!

ஏதோ ஒரு வேகத்திலும், அசட்டு ஊக்கத்திலும் பேசிவிட்டாலும் அதற்காக ஒருநாள் உள்ளுக்குள்ளே வருந்துபவனே மனிதன். அவனுக்கிருக்கும் ஒரே கொள்கை பிடிவாதம். ஏனெனில் ஆறறிவு படைத்தவனாயிற்றே. விலங்குகளினின்று தன்னை வித்தியாசப்படுத்த இத்தனை உணர்வுகள்!

இம்மாதிரியான மனிதர்கள் மத்தியில் நல்வழி செல்லும் மனிதன் வாழ முடிகிறதா? தேடினாலும் கிடைக்காத பதில்! எத்தனை சுப்புரத்தினங்கள் அமைதியுடனே ஆங்காங்கே வாழ்ந்து கொண்டிருக்

கிறார்கள். அவர்களெல்லாம் அமோர்! அக்கிமோருக்கு மாறான குணம் படைத்த மேலோர் சூட்டும் பெயர்கள் 'பிழைக்கத் தெரியாதவர்', 'கோழை!'

அந்த வாழத் தெரியாதவர் வகுத்துவைத்த பாதையில்தான் சம்யுக்தாவும் செல்கிறாள். அதனால்தான் தனக்குரிய உடைமையை அவர்களிடம் தூக்கிக் கொடுத்துவிட்டு எங்கோ சென்றுவிட்டாள், என்று ஊர் பேசியது. பாவம்! வேறு வேலை ஏது? பொழுதுபோக வேண்டாமா அவர்களுக்கு.

உன் அப்பா எதைச் சாதித்துவிட்டார். நீ இப்படிச் செய்கிறாயே என்றும் அவள் ஊரைவிட்டுப் போகும்போது சொன்னார்கள். அவள் எதையுமே காதில் போட்டுக் கொள்ளவில்லை. என்றுமே நல்லவர்கள் நல்ல உதாரணமாக மட்டுமே இருக்க வேண்டும், மாறினால் அந்த வம்சத்தையே பாதித்துவிடும்.

சம்யுக்தா தனக்கென்று ஒரு வட்டமிட்டு வாழ்ந்து கொண்டிருந்தாள். ஸ்ரீராம் அவளை வெளியே கொண்டுவர முயற்சித்தான். அவள் மறுத்தாள். இருவரிடையேயும் இந்தப் போராட்டம் தொடர்ந்து கொண்டுதான் இருந்தது. ஆனால் அவளால் அவனை வெறுக்க முடியவில்லை. அவனுக்கு அவளை விட முடியவில்லை. இருவரிடையே நடந்துகொண்டிருக்கும் மனப்போராட்டத்தை இருவருமே அறிந்திருந்தனர் என்றாலும், அதைப்பற்றிப் பேச விரும்பவில்லை. ஆனால், அவனும் அவள் போக்கிலேயே சென்றுகொண்டிருந்தான்.

தாட்சாயிணி தன்னிடம் நடந்துகொண்டதைப் பற்றிய சந்தோசத்தை மரியம்மையிடம் பகிர்ந்து கொண்டாள் சம்யுக்தா. மரியம்மையும் சந்தோசப்பட்டார். ஆனால் திருமணத்திற்குப் போவதா வேண்டாமா என குழம்பிப்

போயிருந்தாள். மரியம்மை ஆறுதலாகப் பேசி அவளைப் போக சம்மதிக்க வைத்தார்.

★ ★ ★

**வ**சதியான இடத்து மாப்பிள்ளை, சொந்த ஊர் திருச்சி. வரதட்சணை எனக் கேட்கும் முன்பே ஸ்ரீராம் தயவில் அள்ளிக் கொடுத்தாள் சிந்தாமணி. அவனும் சந்தோசமாக செய்தான். இதுபோன்று சொந்தத்தின் விசேஷங்களில் அவன் கலந்துகொள்வது இதுவே முதல்முறை. நட்புவட்டாரங்களின் விசேஷங்களுக்குச் சென்றிருந்தாலும், இந்த விழாவின் வித்தியாசத்தை உணர்ந்திருந்தான். அவனிடம் சம்யுக்தா வருவாளா என்ற எதிர்பார்ப்பும் இருக்கத்தான் செய்தது.

திருமணம் சொந்த ஊரில் உள்ள தற்போது புதிதாகக் கட்டித் திறப்புவிழா செய்யப்பட்ட மிகப்பெரிய திருமண மண்டபத்தில் நடைபெற இருந்தது. பெருமைக்காக சிந்தாமணி எடுத்த முடிவு இது. பணத்தைக் கொட்டிக் கொண்டிருக்கும் சம்பந்தமென்பதால் மாப்பிள்ளை வீட்டார் சொன்னதற்கெல்லாம் தலையாட்டினார்கள். ஊரெல்லாம் அழைத்தாயிற்று. சிந்தாமணி பூரித்துப் போனாள். நகைக்கடையும், புடவைக்கடையும் வீட்டுக்கே வந்தன. ஊர் முழுதும் இந்தத் திருமணம் பற்றியப் பேச்சாகத்தான் இருந்தது. ஆனால்...

நிமிடத்தில் எல்லாமே முடிந்துபோகுமென யாருமே நினைக்கவில்லை. திருமணத்திற்கு சரியாக மூன்று நாட்களே உள்ள நிலையில், மாப்பிள்ளையின் தந்தை மாரடைப்பால் தாக்கப்பட்டு, வாத நோய்க்கு ஆளாகிப்போனார். எல்லோருமே ஆடிப்போனார்கள். மாப்பிள்ளையின் தாயார் வாயிலும், வயிற்றிலும் அடித்துக்கொண்டு அழுதாள்.

"அந்தப் பொண்ணுடைய ராசி இப்படி ஆக்கிடுச்சே. காலெடுத்து வைக்கும் முன்பே இந்த கதிக்கு ஆளாயாச்சு. இனி அவள் வந்த பிறகு என்னவெல்லாம் ஆகுமோ?" - அங்கேயும் ஒரு சிந்தாமணி இருந்தாள். மாப்பிள்ளை தாயார் இதைக்கேட்டு அதிர்ந்து போனாள். அவளிருந்த நிலை அதை நம்ப வைத்தது. தன் மகன் திருமணத்தைவிட தன் தாலி பாக்கியமே பெரிதாகப்பட திருமணத்தை நிறுத்தத் துணிந்தாள். தலையாட்டும் மகன் கிடைத்தது அவளுக்கு சாதகமாகிப்போனது.

தகவலறிந்து சிந்தாமணி குடும்பம் சென்றது. மாப்பிள்ளை தாயார் கூறியது கேட்டு சிந்தாமணி புலம்பினாள். துடித்தாள். இது நியாயமா? என ஒப்பாரி பாடினாள்.

"உங்க பொண்ணு வருமுன்பே என் கணவருக்கு இந்த நிலை என்றால் வந்த பிறகு? எனக்குத் தைரியமில்லைம்மா" என்று தீர்மானமாக மறுத்தபோது, கலங்கிப்போய் நின்றாள் சிந்தாமணி. ஸ்ரீராம் மாப்பிள்ளையிடம் பேசிப் பார்த்தான். அவன் அம்மா பிள்ளையாக இருந்ததால் எல்லாமே தோற்றுப்போனது.

அதன்பிறகு தாட்சாயிணியே இதுபற்றி அவர்களிடம் யாரும் பேசவேண்டாம் எனத் தீர்மானமாகக் கூறி அனைவரின் வாயை அடைத்தாள்.

ஆனால் இதற்கு வழிதான் என்ன? இன்னும் மூன்று நாட்களில் திருமணம்! திருமணம் நின்றுவிட்டதென்று ஊரெல்லாம் சொல்வதா? சிந்தாமணி துடித்துப் போனாள். ஊர் என்னவெல்லாம் பேசுமோ என நினைக்கும்போதே உடல்முழுதும் வெப்பமேறியது. அடுத்து தன் மகளின் நிலை?

“அய்யோ... நான் என்ன செய்வேன். என் பெண்ணுக்கா இந்த நிலை?” அக்கம்பக்கமறியாமல் வீட்டுக்குள்ளேயே அழுதாள். மணிரத்தினம் கலங்கிப் போனார். ஆனால், அதைவிட தன் தம்பியும் இதே நிலைக்கு ஆட்பட்டபோது எவ்வளவு துடித்திருப்பாரென நினைத்தபோது மார்பை ஓங்கி குத்திக்கொண்டு குலுங்கினார்.

மூலையிலே முடங்கிக் கிடக்கும் சிந்தாமணி முன் வந்து நின்றார். முப்பது வருடங்களாக அடக்கி வைத்திருந்த ஆத்திரங்கள், வெறுப்புகள் யாவுமே அனலாய் விழிகளில் வெளிப்பட்டபோது, அந்த பார்வையில் அதிர்ந்து போனாள் சிந்தாமணி. அவரது ஆவேசம் உடலில் வெளிப்பட்டது. இத்தனை காலங்களில் தான் கண்டிடாத கோபத்தை இன்று கணவரிடம் கண்டபோது நிலை தடுமாறிப் போனாள். அவரை அப்படிக் கண்டபோது பயந்தே போனாள். கலங்கிய விழிகளோடு, தாட்சாயிணியும், அதிர்ந்து போனவனாய் ராஜாவும் தந்தையை ஒருவித மிரட்சியோடு பார்த்தனர்.

“வினை விதைத்தவன் வினையறுப்பான்” - பற்களைக் கடித்துக்கொண்டு உரக்கக் கூறிய வார்த்தையில் ஓங்கி அறை வாங்கியது போலத் திடுக்கிட்டுப் பார்த்தாள் சிந்தாமணி.

அவரது விழிகள் சினத்தால் சிவந்து வெறித்திருந்தன.

“எந்த வார்த்தையால் நீ சம்யுக்தாவின் வாழ்க்கையையே கெடுத்தாயோ, அதே வார்த்தையை உன்னிடமும் ஒருத்தி கேட்டேவிட்டாள். உன் குணத்தால் என் பொண்ணு வாழ்க்கை பாழாயிடுச்சே... ச்சீ... நீயும் ஒரு மனுஷிதானா?”

ஆவேசக் குரலோடு அவர் சொன்ன விஷயத்தைக் கேட்ட பிள்ளைகள் அதிர்ந்துபோய் நின்றனர்.

"உன் வயிற்றில் பிறந்த பாவத்துக்கு அவள் நல்லா அனுபவிக்கட்டும்." சொல்லிவிட்டு விரைந்தார்.

"இல்ல... இல்ல... என் பொண்ணை அப்படி ஒரு நிலைக்குப் போகவிடமாட்டேன்... மாட்டேன்..."

கண்ணீரும், ஆவேசமுமாய் சிந்தாமணி கத்தினாள். இப்போதே என் அண்ணன் மகனைக் கூப்பிடறேன். அவன் என்னைக் கைவிடமாட்டான்.

தலைவிரி கோலத்தோடு புலம்பிக்கொண்டே போனை எடுக்கச் சென்றாள்.

தாட்சாயிணி ஓடிவந்து போனைப் பிடுங்கிவிட்டு அவளைப் பார்வையால் எரித்தாள். அவளது விழிகளில் அருவி வழிந்தது.

"அத்தானிடம் பேசப் போறியாம்மா...." தழுதழுக்கும் குரலோடு கேட்டவளிடம், "ஆமாம்" என கண்ணீரோடு தலையசைத்தாள்.

"வேண்டாம்மா... தயவு செய்து அவரிடம் கேட்டு அவர் நிம்மதியையும் கெடுத்துவிடாதே."

அதிர்ந்துபோய் மகளைப் பார்த்தாள்.

"என் மீது அவருக்கு எந்தவித எண்ணமும் இல்லைனு சொன்ன பிறகு, நீ கேட்டு ஒரு நிர்ப்பந்தத்துக்காக சம்மதிப்பதை நான் விரும்பவில்லை. கல்யாணம் நின்றால் என்னம்மா? என்ன... இந்தப் பெண் ராசி கெட்டவள்னு ஊர் பேசும். எனக்கு இனிமேல் கல்யாணமே நடக்காது.

அவ்வளவுதானே. பரவாயில்லை விடு. அதனால் என்ன? ஏன் சம்யுக்தா அக்கா இல்லையா் என்ன?"

விக்கித்துப்போய் மகளைப் பார்த்தாள் சிந்தாமணி.

"ஆனால் நல்லா கேட்டுக்கோ.. அத்தானிடம் இதுபற்றி பேசினேனு தெரிஞ்சது என்னை உயிரோடு பார்க்க முடியாது."

விரல் காட்டி எச்சரித்துவிட்டு கண்ணீரோடு தன்னறை நோக்கி ஓடிய தங்கையை இடிந்துபோய்ப் பார்த்தான் ராஜா.

சிந்தாமணி உலகமே இருண்டுவிட்டதுபோல் உணர்ந்தாள்.

## பாகம் - 15

சம்யுக்தா கலங்கிப்போனாள். ஸ்ரீராமிடமிருந்து செய்தியை அறிந்துகொண்டதிலிருந்தே செய்வதறியாது நிலைகுலைந்து போனாள். அன்று முழுவதுமே உறக்கமில்லாமல் தவித்தாள்.

தாட்சாயிணியின் நிலையை எளிதாக உணர முடிந்தது. அதைவிட தன் பெரியப்பாவின் நிலை? படுக்கையில் புரண்டு கொண்டிருந்தவள் படாரென எழுந்தமர்ந்தாள். அருகேயிருந்த தண்ணீர் பாட்டிலை எடுத்துக் குடித்தாள்.

ஊரெல்லாம் சொன்ன பிறகு குறித்த தேதியில் திருமணம் முடிந்தாக வேண்டும். எப்படி? உடல் முழுதும் வியர்த்துப் போனது. கண்ணீர் கன்னத்தை நனைத்தது.

இது ஒருத்தரால் மட்டுமே நடக்கும். உள்ளத்தின் ஓரத்தில் ஒதுங்கியிருக்கும் அவளது நினைவுகளை பொசுக்கத் துணிந்தாள்.

சோதனையைச் சந்திக்க தான் மட்டும் போதாதா. மீண்டும் ஒருத்தியா? வேண்டாம். ஸ்ரீராமால் மட்டுமே அவளுக்கு வாழ்க்கை தர முடியும். ஒருவேளை அவர்களே இதுபற்றி இவரிடம் கேட்டிருந்தால் கூட நிச்சயம் இவர் நிராகரித்திருப்பார் என உறுதியாக நம்பினாள்.

ஏமாற்றமென்பது தனக்கு ஒன்றும் புதிதல்ல... என மனத்தைக் கல்லாக்கிக் கொண்டு ஸ்ரீராமிடம் பேசிவிடத் துணிந்தாள்.

மறுநாளே அவனிடம் பேசினாள்.

பொங்கிய விழிகளோடு, சிரமப்பட்டு தன் உள்ளத்து உணர்வுகளைப் பொசுக்கிவிட்டு அவனை ஏறிட்டாள்.

அவளது பார்வையில் வழிந்த அர்த்தம் புரியவில்லை அவனுக்கு. உலர்ந்த விழிகளை ஈரப்படுத்தியவள், "உங்க ஒருவரால் மட்டும்தான் இந்தப் பிரச்சினையைத் தீர்த்துவைக்க முடியும்" என்றாள்.

"என்ன? புரியலை?" - அழுத்தமாகக் கேட்டான்.

"தாட்சாயிணி உங்க அத்தை பெண். உங்களால் மட்டும்தான் அவளுக்கு வாழ்க்கைக் கொடுக்க முடியும்." - விழிகளைத் தாழ்த்தி மெல்லிய குரலில் கூறி முடித்தாள்.

பதில் வராமலிருக்க, மெல்ல விழிகளை உயர்த்திப் பார்த்தபோது அதிர்ந்தாள்.

கோபத்தால் அவனது விழிகள் சிவந்திருந்தன. அவளை நன்றாக நோக்கினான்.

"எப்படி? நான் வாழ்க்கை தரணும்?..." குரலின் இறுக்கத்தில் சற்று பயந்தே போனாள்.

"என் வாழ்க்கையைத் தீர்மானிக்க நீ யார்? தாட்சாயிணி வாழ்க்கை பற்றி எனக்கும் கவலையிருக்கு. மேற்கொண்டு என்ன செய்யலாம்னு யோசிக்காமல் இல்லை. என் மனத்தைப் பற்றித் தெரிந்தும் என்னிடமே கேட்கிறாயே உன்னைப் பாராட்டனும்..." சொன்னவன் தனக்கு முதுகுப்புறம் காட்டி நிற்கும் அவளது கரத்தைப் பற்றி கோபத்தில் திருப்பினான்.

அதிர்ந்து போனாள்.

"எங்கே உன் மனத்தைத் தொட்டுச் சொல். நான் உன் இதயத்தில் இல்லைனு?" - நேருக்கு நேராக கோபத்தோடு வீசிய பார்வையால் தன்னை உற்று நோக்கி கேட்டபோது வார்த்தை வராமல் திணறினாள்.

"எனக்குத் தெரியும். உன் மனத்தில் நான் இருக்கேன். ஆனால் என்ன காரணத்தாலோ மறைக்கிறாய். சொல்லவும் மாட்டாய். வேண்டாம். சொல்லாதே... கடைசிவரை இப்படியே இரு."

அழுத்தமாக உரக்கக் கூறியபோது, மேற்கொண்டு அங்கு நிற்க முடியாமல் அழுதுகொண்டே அவ்வறையை விட்டு ஓடினாள்.

கோபம் குறையாமல் அங்கேயே அவன் நின்றான்.

சிந்தாமணி வீட்டுக்குள்ளேயே புழுங்கிக் கிடந்தாள். வீதி மக்களின் ஏளனப் பேச்சைக் கேட்கும் சக்தியில்லையே

என உள்ளுக்குள்ளேயே புலம்பித் தவித்தாள். இன்னும் இரண்டு நாட்களில் கல்யாணம். தலைவிரி கோலத்தோடு சிந்தாமணி, ஏமாற்றத்தைச் சுமந்துகொண்டு தாட்சாயிணி, குற்றவுணர்வோடு மணிரத்தினம், பதில் தெரியாமல் விழிக்கும் ராஜா எல்லோருமே பலமாக தாக்கப்பட்டு விட்டுக்குள்ளேயே வழி தெரியாமல் கிடந்தனர்.

★ ★ ★

**ச**ரக்கென வழிந்த கண்ணீரை அழுத்தித் துடைத்துவிட்டு பார்வையை கார் ஜன்னலுக்கு வெளியே செலுத்தினாள் சம்யுக்தா. யார் செய்த பாவத்துக்கு யாரோ பலியாகும் கொடுமையை அவள் ஏற்றுக்கொள்ள முடியாமல் தவித்தாள்.

பிள்ளைகளுக்கு சொத்து சேர்க்காவிட்டாலும் பாவங்கள் சேர்த்து வைக்கக் கூடாது என அப்பா அடிக்கடி சொல்வார்.

ஒரு கணம் தாட்சாயிணி அன்று தன்னிடம் பாசத்தோடு பேசிய வார்த்தைகள் நினைவுக்கு வந்தபோது மீண்டும் கண்ணீர் வடிந்தது.

மரியம்மையிடம் தான் வாங்கிவந்த விலாசத்தை எடுத்து மீண்டும் ஒருமுறை வாசித்தாள். மரங்களையும், தோப்புகளையும் கடந்த பிறகு அவள் வரவேண்டிய காலனியை அடைந்தாள்.

டிரைவரை கொஞ்சம் நிறுத்தச் சொன்னாள். அந்தக் காரைக் கடந்து செல்லும் ஒருவரை அழைத்து அந்த விலாசத்தைச் சொல்லி வழி கேட்டாள். அவர் சொன்னார்.

மனமுழுதும் ஆக்கிரமித்திருந்த பதைப்பு இன்னும் அதிகமானது. வியர்த்த முகத்தைத் தன் முந்தானையால் துடைத்துவிட்டு, கம்பிக் கதவைத் திறந்து உள்ளே சென்றாள். வாசலின் ஓரத்தில் கட்டப்பட்டிருந்த நாய் இவளைப் பார்த்துக் குரைத்தது. சற்றே பயத்துடன் வீட்டு அழைப்பு மணியை அழுத்தினாள். நாய் குரைக்கும் சத்தமும், அழைப்புமணி சத்தமும் ஒன்றாகக் கேட்க, கதவு திறக்கப்பட்டது. அங்கே லெட்சுமி நின்றிருந்தாள்.

சம்யுக்தாவைக் கண்டதும் உண்மையிலேயே மகிழ்ச்சியடைந்தாள். அவள் கரத்தைப் பிடித்துக்கொண்டு உள்ளே அழைத்துப் போனாள்.

"ஒரு வார்த்தை பார்த்திபனுக்கு போனிலாவது சொல்லியிருக்கக் கூடாதா? எப்படிம்மா விலாசம் தெரிஞ்சது." - சந்தோசம் குறையாமல் கேட்டாள்.

சற்றே தயக்கத்தோடு, "உங்க விலாசம் ஆசிரமத்தில் இருந்ததும்மா" என்றாள்.

"அட ஆமாம்! சரி இரு. நான் குடிக்க ஏதாவது கொண்டுவர்றேன்." வேகமாக உள்ளே ஓடினாள். அன்று விடுமுறை என்பதால் பார்த்திபனும் வீட்டில் இருப்பான் என நினைத்தவள் ஏமாறவில்லை. பேச்சு சத்தம் கேட்டு அறையைவிட்டு வெளியே வந்தவன், இவளைப் பார்த்ததுமே அதிர்ந்தான்.

"சம்யுக்தா நீயா?" அதிர்ச்சி குறையாமல் கேட்டான்.

அவளது கலைந்த கேசமும், வாடிய முகமும் சிவந்து வீங்கிய விழிகளும் அவனைக் குழம்ப வைத்தன.

நிச்சயமாக அவளின் வருகை ஏதோ ஒரு காரணத்தை முன்னிட்டது என உறுதியாகத் தெரிந்தது.

"என்ன விஷயம் சம்யுக்தா?"

அம்மா காபியோடு வந்த நின்றாள்.

கலங்கிய விழிகளோடு அவனை ஏறிட்டவள், "உங்களிடம் ஒரு உதவி கேட்டு வந்திருக்கேன்" என்றாள்.

"காத்திருக்கேன் சம்யுக்தா. நீ ஒரு போன் செய்திருந்தால் நானே வந்திருப்பேனே. நீ இவ்வளவு தூரம் வந்திருக்க வேண்டாமே."

"நான் கேட்கப்போகும் உதவி அப்படி."

லெட்சுமி மகனைப் பார்த்தாள். அவன் புரியாமல் விழித்தான்.

"தாட்சாயிணிக்கு இரண்டு நாட்களில் கல்யாணம்."

அவன் பதில் பேசாமல் அவளைப் பார்த்தான்.

"அந்தக் கல்யாணம் இப்போ நின்று போயிடுச்சு..."

அவன் அதிர்ந்தான். அதே சமயம் அவளின் அடுத்த வார்த்தை என்னவாகயிருக்கும் என யோசித்தான்.

"எங்க குடும்பத்தின் மானமே உங்க கையில்தான் சார் இருக்கு."

அழுத்தி உச்சரித்த அவளது வார்த்தையில் சிலையானான்.

லெட்சுமியினருகே சென்று அவள் கரங்களைப் பிடித்துக்கொண்டு கேவினாள். அவளது கண்ணீரில் லெட்சுமி உருகினாள்.

"அம்மா.. நீங்க சொல்லுங்கம்மா. சிந்தாமணியம்மா போல தாட்சாயிணி இல்லைம்மா. ரொம்ப நல்ல பொண்ணும்மா. கண்டிப்பா உங்களுக்கு ஒரு நல்ல மருமகளா இருப்பாம்மா."

கண்ணீரோடு கூறியதும் அவளும் கண் கலங்கினாள். பதில் பேசாமல் தலைகுனிந்தவளைப் பாவமாகப் பார்த்தாள். அவளது பதிலுக்காகக் காத்திருந்தாள்.

"ஏற்கெனவே நான் செய்த தவறு போதும்மா. இதில் நான் சொல்ல என்ன இருக்கு. அவனுக்கு கல்யாணம்னு ஒன்று நடந்தால் அதுவே போதும். இனி முடிவெடுக்கும் உரிமை எனக்கு இல்லை..."

தழுதழுக்கும் குரலில் சொல்லிவிட்டு மகனை நோக்கினாள்.

அவன் இன்னும் அதே நிலையில்தான் இருந்தான். எதை நோக்கிப் போகிறது தன் வாழ்க்கை? உணர்ச்சியற்ற பொம்மை போல் நின்றான்.

"ஒரு பெண்ணுடைய கல்யாணம் நின்றால், பெத்தவங்கள எந்த அளவு பாதிக்கும்னு எனக்குத் தெரியும். என் அப்பா நிலை என் பெரியப்பாவுக்கு வந்துடக்கூடாது சார்..." எனக் குலுங்கிய அவளைத் தேற்ற சக்தியின்றி விக்கித்து நின்றான்.

அவளுக்கு உதவுவது தன் பாக்கியம் என நினைத்ததுண்டு. ஆனால், இப்போது அவள் கொண்டு

வந்திருக்கும் இடியை எப்படித் தாங்கிக்கொள்ள முடியும்? எப்படி உதவியை செய்ய முடியும்?

அவளது கண்ணீரில் அவன் கலங்கிப்போய் நின்றான்.

"உன் நிலை புரியுது சம்யுக்தா. ஆனால்..."

"வேண்டாம் சார்..." அவசரமாக இடைபுகுந்தவள், "முடியாதுனு சொல்லிடாதீங்க சார்... உங்களைத்தான் நான் நம்பியிருக்கேன்" என்றபோது அவன் திணறிப்போனான்.

"அந்தக் குடும்பத்துக்கு நீ ஏன் சம்யுக்தா இவ்வளவு கஷ்டப்படணும்? நீ இன்று இந்த நிலைமையில் இருப்பதற்குக் காரணமே அந்த சிந்தாமணிதான்."

"எனக்கு அந்தம்மா கண்ணுக்குத் தெரியலை. தாட்சாயிணியும், அவள் அப்பாவும்தான் தெரியறாங்க. ஏதோ என் வாழ்க்கையில் விதி விளையாடிடுச்சு. ஒரு குடும்பத்தின் கௌரவமே உங்க கையில்தான் சார் இருக்கு."

சட்டென கரம்கூப்பி அவனை நோக்கியபோது கலங்கிப் போனான்.

"ஏற்கெனவே நான் பாவியாக நிற்கிறேன். மேற்கொண்டு கரம் கூப்பி என்னைப் பாவியாக்கிடாதே. உன்னைப் பார்த்தால் எனக்குப் பெருமையா இருக்கு சம்யுக்தா. இந்த நிலையிலும் மற்றவர்களுக்காக கலங்கும் உன்னை நினைத்தால் பிரமிப்பா இருக்கு..." அவனும் கலங்கினான். அவளது விசும்பலில் மனம் நொந்தான். அவனது தகர்த்தெடுக்க முடியாத வைராக்கியத்தை அவள் கண் ரீர் கரைத்துக் கொண்டிருந்தது.

மாசற்ற இவள் இன்று என்னிடமே கையேந்தி நிற்கிறாளே. ஏன் இந்தச் சோதனை. ஆர்ப்பரித்துக் கொண்டிருக்கும் சிந்தனையில் அவன் மனம் அலைமோதியது. அவள் விடும் கண்ணீரில்கூட உயர்ந்து நின்றாள். பதிலேதும் பேசமுடியாது 'பொத்'தென நாற்காலியில் அமர்ந்தான். லெட்சுமி'யின் இதயம் அதிவேகமாகத் துடித்தது. மகனின் பதிலில்தான் இத்தனை காலம் தான் அவனுக்காக வாழ்ந்த வாழ்க்கையின் அர்த்தமே இருக்கிறது. அவனுக்கு ஒரு துணை வேண்டும். அதுதான் அவளது பிரார்த்தனை. சம்யுக்தா அவனது விடைக்காகக் கடவுளை பதைப்போடு வேண்டி நின்றாள்.

சில நிமிடங்கள் அங்கு பெருத்த அமைதி நிலவியது. அவன் அவளை மெல்ல நோக்கினான். அவள் பரிதவிப்போடு பார்த்தாள். அந்தப் பார்வையில் பெருமளவு பாதிக்கப்பட்டவனாய் எழுந்தான்.

"உன் அப்பாவின் மரணத்துக்கு நானும் ஒரு காரணமாயிட்டேன். ஒவ்வொரு நாளும் இதுக்கு என்ன பரிகாரம் செய்யப்போகிறேனு தெரியாமல் தவிச்சிட்டிருந்தேன். இன்றும் உன் அப்பாவின் முகத்தை என்னால் மறக்கமுடியலை சம்யுக்தா." - குரல் உடைந்து ஒலிக்க லெட்சுமி மகனைப் பார்த்துக் கலங்கிப் போனாள்.

"நாங்க செய்த பாவத்துக்கு என்ன செய்தாலும் உன் அப்பா திரும்பக் கிடைக்கப் போவதில்லை. இனிமேல் கல்யாணம் என்ற வார்த்தைக்கே இடமில்லைனு தீர்மானித்து எனக்கு நானே தண்டனையா ஏற்று வாழ்ந்திட்டிருக்கேன்."

அம்மாவை பார்வையில் எரித்தான். அவள் கண் கலங்கினாள்.

நீண்டதொரு பெருமூச்சை வெளியிட்டவாறு சம்யுக்தாவை நோக்கினான்.

"நான் செய்த பாவத்துக்கு, உன் கோரிக்கைக்கு சம்மதிப்பதுதான் சிறந்த பரிகாரம்னா..."

அவனது அடுத்த வார்த்தைக்காக, பெண்களிருவருமே இதயப் படைப்போடு கார்த்திருந்தனர்.

"நான் சம்மதிக்கிறேன் சம்யுக்தா - முழுக்க முழுக்க உனக்காக மட்டும்!"

சந்தோசத்தில் திணறிப் போனாள். அவனை நன்றி கூறி வணங்கினாள். ஓடிச்சென்று லெட்சுமியைக் கட்டிக்கொண்டு ஆனந்தத்தில் கண்ணீர் சிந்தினாள். லெட்சுமியும் அதே நிலையில் இருந்தாள்.

"உனக்குத்தான் நன்றி சொல்லணும் சம்யுக்தா. உன் தங்கை வாழ்க்கைக்கு மட்டுமில்லை, என் பையன் வாழ்க்கைக்கும் நீ ஒளி கொடுத்திட்டேம்மா. நான் வணங்கிய தெய்வம் என்னைக் கைவிடவில்லை." ஆனந்தக் கண்ணீரில் மூழ்கிப் போனாள்.

## பாகம் - 16

**சி**றிது காலம் பட்டுமெத்தையில் புரண்டு கொண்டிருந்த சிந்தாமணி தரையிலே வெறித்த நிலையில் படுத்திருந்தாள். அந்த வீடே அமைதியாயிருந்தது.

"ஐயா...!" வாசலில் யாரோ அழைக்கும் குரல் கேட்டு ராஜா வெளியே வந்தான். கல்யாண சமையல்காரர் நின்று கொண்டிருந்தார்.

ராஜாவின் கவலை தோய்ந்த முகத்தை அவர் உற்று நோக்கி, “என்ன சார் வீட்டில் கல்யாணக் களையே இல்லை...” என்றார்.

சிந்தாமணி செவிகளில் வாங்கியவாறே சலனமற்றுக் கிடந்தாள்.

சலிப்போடு அவரிடம், “என்ன விஷயம்?” என்றான்.

“கொஞ்சம் முன்பணம் வேணும்...” இழுத்தார்.

இனி மறைத்து என்ன பலன். எல்லோரிடமும் சொல்லிவிடுவதே நல்லது எனத் தீர்மானித்த அதே சமயம், சத்தத்தோடு கார் வந்து நின்றது. ஸ்ரீராம், லெட்சுமி, பார்த்திபன் மூவரும் வெளிவர ஆச்சரியமாய்ப் பார்த்தான்.

லெட்சுமியின் கையிலிருந்த தாம்பூலத்தட்டைப் பார்த்து ஏதோ புரிந்தவனாய் சந்தோசத்தில் தடுமாறிப் போனான்.

“அம்மா...!” உரக்கக் குரல் கொடுத்தவாறு உள்ளே ஓடினான்.

தாட்சாயிணியின் வறண்ட வாழ்க்கை சட்டென பசுமை வீசுமென யாருமே நினைக்கவில்லை. அங்கே பாதிக்கப்பட்ட எல்லா உள்ளங்களும் உருக்கத்தோடு ஒன்றுசேர்ந்திருந்தன. இன்பம் கிடைத்துவிட்டால் ஆரவாரமின்றி அனுபவிக்கும் பக்குவத்தை, இப்படி சில சோதனைகளாலேதானே கொண்டுவர முடியும். அதற்குத்தான் கடவுள் சோதனைகளாக வீசுகிறானோ. முடிவில் பக்குவநிலைக்கு வரும்போது தூய உள்ளத்தையும், உயர்ந்த குணத்தையும் இன்பத்தோடு கொடுக்கத்தான் செய்கிறான்.

ராசி, சகுனம் பார்த்த லெட்சுமியும், மன்னிக்கும் மனமில்லாத மணிரத்தினமும், விலைமதிப்பில்லாத அப்பழுக்கற்ற உயர்ந்த உள்ளங்களை நோகடித்து மனம் திருந்தி நிற்கின்றனர்.

ராசி பார்த்து நிறுத்திய கல்யாணத்தை, இப்போது ராசி பார்க்காமலேயே முன்வந்து நடத்தும் பக்குவம் பெற்றிருந்தாள். மகனுக்காக என்றாலும் மனமுவந்தே எல்லாம் செய்தாள்.

சொத்தே பெரிது என்று தானும் ஓர் ஓரத்தில் நினைத்ததாலேயே மனைவிக்கு அடங்கிப்போன மணிரத்தினம், மனிதர்களே பெரிது என உணர்ந்திருந்தார். எல்லாமே சம்யுக்தாவின் விட்டுக்கொடுக்கும் குணத்தால்! அவள்தான் பார்த்திபன் சம்மதத்திற்குக் காரணம் என அறிந்தபோது எல்லோருமே உண்மையில் அதிர்ந்து போய்க் கண்ணீர் விட்டனர், சிந்தாமணியைத் தவிர!

எளிதாக குற்றத்தை உணர்ந்துகொள்ளுமளவு இளகிய மனம் படைத்தவளல்லவே. எளிதில் இடிக்க முடியாத பாறாங்கல்லாயிற்றே அவள் மனம்.

எல்லோருமே சம்யுக்தாவின் துதி பாடினாலும், தன் மகளின் வாழ்க்கை ஒளி வீசப்போவதை மட்டுமே அவள் கருத்தில் கொண்டிருந்தாள். அவளது எண்ணமெல்லாம் அடுத்து நடக்க வேண்டியது என்ன என்பதுதான்.

எல்லோருமே ஒன்றாகக் கூடி முடிவெடுத்தனர். ஒரு பலத்த தாக்குதலுக்குப் பிறகு ஏற்பட்ட சந்தோசம் எல்லோர் முகத்திலும் தெளிவை ஏற்படுத்தியிருக்கிறது. "நாளை மறுநாள் கல்யாணம். மாப்பிள்ளை தவிர எதுவும் மாறவில்லை" என்றபோது!

மாபெரும் சக்தியோடும், உணர்ச்சியின் உச்சக்கட்டத்தோடும், முதல் முறையாக சபையிலே ஒரு கணவன் என்கிற ஸ்தானத்தை ஊர்ஜிதப்படுத்தும் விதமாக உரக்கப் பேசினார் மணிரத்தினம்.

"கல்யாணம் அரண்மனை வீட்டில்தான் நடக்கணும். அதுதான் எங்க பரம்பரைக்குக் கௌரவம்" - இடியாய் முழங்கினார்.

அனைவரும் அதிர்ந்தனர் என்றால் சிந்தாமணி கணவரின் அத்தகைய செயலில் விக்கித்துப் பார்த்தாள். மறுகணமே, படாரென அனல் கொதிக்கும் பார்வையை வீசினார் மணிரத்தினம். வெப்பம் தாங்காமல் சுருண்டு போனாள். இத்தனை வருட காலத்தில் அன்றுதான் முதன்முறையாக பயந்து போனாள்.

"இதில் எனக்கு மிகப்பெரிய திருப்தி. சுப்புரத்தினம் அய்யாவின் மனம் நிம்மதியடையும் சார். நல்ல முடிவு" என்று சந்தோசமாக உரக்கப் பேசி மணிரத்தினத்தின் கோபத்தை அடக்கினான் பார்த்திபன்.

ராஜாவும் மேற்கொண்டு தாமதிக்காமல், "சரி, அப்ப இன்றே ஊர்மக்களிடம் கல்யாணம் அரண்மனை வீட்டில் நடக்கப்போவதாக சொல்லிடறேன்" என்றான்.

ஸ்ரீராம் புன்னகையோடு பார்த்திபன் கையைப் பிடித்துக் குலுக்கிவிட்டு, "வாழ்த்துகள் மாப்பிள்ளை" என்றவன், ராஜா பக்கம் திரும்பி, "ராஜா...! எவ்வளவு செலவானாலும் பரவாயில்லை. எத்தனை ஆட்களை வேலைக்கு நியமித்தாலும் பரவாயில்லை. அரண்மனை உடனே சுத்தம் செய்தாகணும்" என்று சொல்ல புதுத்தெம்போடு ராஜா எழுந்தான்.

பார்த்திபனும், தாட்சாயிணியும் தன் நண்பர்கள் அனைவருக்கும் போன் மூலம் அழைப்பு விடுக்க ஆரம்பித்தனர்.

எல்லாம் தன் கட்டுப்பாட்டை மீறிப் போய்விட்ட அதிர்ச்சியில் சிந்தாமணி சிலையாய் அமர்ந்திருந்தாள்.

மணிரத்தினம் கலங்கிய விழிகளோடு, போனை எடுத்து சம்யுக்தாவின் எண்களை அழுத்தத் தொடங்கினார்.

★ ★ ★

**அ**ழகிய நிலவொளியில் கம்பீரமாக ஒருவித பிரகாசத்தோடு காட்சியளித்தது அரண்மனை வீடு. ஏதோ ஒருவித ஏக்க உணர்வு அரண்மனைக்குள்ளும் இருந்ததோ என்னவோ இன்று வெகு நிம்மதியாகத் தோற்றமளித்தது. அதிலும் நேற்றும், இன்றும் எண்ணற்ற வேலையாட்களின் கடும் உழைப்பால் சுத்தம் செய்யப்பட்டு அலங்காரம் செய்யப்பட்டபோது, நரசிம்மர் காலத்திலிருந்த பொலிவைத் திரும்பப் பெற்றிருந்தது. ஊரே பிரமிப்போடு பார்த்தது. அழகாய் மிளிரும் அவ்வீட்டை, மக்கள் கூட்டம் கூட்டமாக வந்து வாசலில் நின்று வேடிக்கை பார்த்தனர். நல்ல உள்ளங்களுக்கு சந்தோசமும், மாறான உள்ளங்களுக்கு சற்று பொறாமையும் இருக்கத்தான் செய்தது. இனி அந்த அரண்மனையின் வாழ்வு அவ்வளவுதான் எனத் தீர்மானித்தவர்களுக்கு வியப்புதான்.

அரண்மனையின் முகப்புப் பகுதியில் இருக்கும் மிகப் பெரிய தூண்களே அதிக அளவு அலங்காரத்தைச் சுமந்திருந்தன. அரண்மனையின் அகன்ற கொல்லைப் பகுதியில், பசியுற்றோர்க்கு அன்னமிடுவதற்காகவே சிறப்பாக அமைக்கப்பட்டிருந்த சமையல் கூடத்தின்

அடுப்பு இத்தனை வருடங்களுக்குப் பிறகு எரிய ஆரம்பித்திருந்தது.

வேலையாட்களின் சலசலப்பும், குழந்தைகளின் கலகலப்பும், மங்கையர்களின் சிரிப்பு சத்தமும் அரண்மனையை நிறைத்திருக்க கல்யாணக் களையோடு பிரகாசித்தது.

குவித்து வைத்திருக்கும் பூக்களைத் தொடுத்துக் கொண்டே சில பெண்கள் பொழுதுபோகாது அசைபோட்டுக் கொண்டிருந்தனர்.

"இளையவர் பொண்ணு இந்த அரண்மனையை மூத்தவரிடம் கொடுத்துட்டு ஊரைவிட்டுப் போயிடுச்சு பாவம்... ம்... நல்லவங்களுக்கு எங்கே காலம் இருக்கு."

"ம்... பாவம் பெண்பிள்ளை. அதுக்கு கல்யாணம் செய்துவைக்க யார் இருக்கா?" - குரலைத் தாழ்த்திப் பேசிக் கொண்டது பெண்கள் கூட்டம்.

"பார்த்துப் பேசுங்க. அந்த சிந்தாமணி காதில் கேட்டால் நம்ம நிலைமை அவ்வளவுதான்!" - எல்லோருமே பேச்சை நிறுத்திவிட்டு வேலையைத் தொடர்ந்தனர். ஆனால், ஊர் முழுதும் அந்தப் பேச்சு தொடர்ந்து கொண்டுதானிருந்தது.

கண்ணீர் மல்க, அரண்மனை வீட்டைப் பார்த்து திகைத்து நின்றாள் சம்யுக்தா. அப்பாவின் முகம் தெரிந்தது அவளுக்கு. வாசலில் நின்றவள், அடியெடுத்து வைத்து உள்ளே செல்லத் தயங்கினாள்.

மணிரத்தினத்தின் அழைப்பு அவளை உருகச் செய்தது என்றாலும் சிந்தாமணி இதை எப்படி பொறுத்துக்

கொள்வாள் என்ற பயமும் இருந்தது. மணிரத்தினம் இவளைப் பார்த்ததும் உள்ளம் உருக, உள்ளே அழைத்தார். தாட்சாயிணி ஓடிவந்து கட்டிக்கொண்டு அவளை அழைத்துக் கொண்டு சென்றாள். பார்த்திபன், லெட்சுமி, ராஜா என அந்தக் கூட்டமே அவளை வரவேற்றபோது சிந்தாமணி மட்டும் எங்கோ வெறித்தவாறு அமர்ந்திருந்தாள். அவளது குணம் எல்லோரும் அறிந்திருந்ததால் யாருமே பொருட்படுத்தவில்லை. என்றாலும் சம்யுக்தா எச்சில் விழுங்கிக்கொண்டு மனப் பதைப்போடு அவளை ஓரக்கண்ணால் பார்த்தாள். அதுவரை அங்கு அமர்ந்திருந்தவள் விருட்டென எழுந்து சென்றாள்.

முதன் முறையாக ராஜா தங்கையிடம் பேசினான்.

“எப்படியிருக்கேம்மா?”

ஆனந்தக் கண்ணீரோடு, “நல்லாயிருக்கேண்ணா” என்றாள்.

முதன்முறையாக தன்னை அண்ணா என அழைத்தபோது விழிகள் கசிந்தன.

தாட்சாயிணி அவனை உற்று நோக்கினாள்.

“அக்கா! நீங்க அண்ணன்னு சொன்னதும், உருகிப்போயிடுச்சு. ஏன்னா நான் ஒரு நாள்கூட அப்படி கூப்பிட்டதே இல்லையே...”

அவள் சொல்ல எல்லோருமே கலகலவென சிரித்தனர்.. சம்யுக்தா அந்தச் சிரிப்பு மழையில் நனைந்து போனாள். அவளது விழிகள் எங்கோ தேடின. எல்லோரும் இங்கிருக்க ஸ்ரீராம் மட்டும் காணவில்லை.

ஏனோ மனம் முழுதாக நிம்மதியடையவில்லை. அவன் இவள் மீது கடுங்கோபத்தோடு இருக்கிறான் எனத் தெரிந்தது.

"பாப்பா...!" பலத்த குரல் கேட்டுத் திரும்பினாள். முத்தம்மாள் சந்தோசத்தில் கட்டிக் கொண்டாள்.

"என்னை மறந்துட்டியா பாப்பா." உண்மையான கண்ணீரில் உருகிப்போனாள்.

"உனக்கும் ஒரு நல்ல வாழ்க்கை கிடைச்சுட்டால் ஐயா ஆத்மா ரொம்ப நிம்மதியாயிருக்கும் பாப்பா."

அவளது தழுதழுக்கும் குரலில் கலங்கிப் போனாள்.

தாட்சாயிணியின் தோழிகள் வர சம்யுக்தாவை அழைத்துக் கொண்டு அறைக்குள்ளே சென்றாள்.

## பாகம் - 17

எல்லோருமே உற்சாகத்தோடு காணப்பட்டபோதும், ஸ்ரீராம் மட்டும் வித்தியாசமாகக் காணப்பட்டான். அவனது உணர்வுகளைப் புரிந்திருந்த பார்த்திபன் சம்யுக்தாவிடம் தனியாகப் பேசினான்.

"நான் அதிகமா உரிமை எடுத்துக்கறேனு நினைக்காதே. உன்மேல் அக்கறை உள்ள ஒரு நலம் விரும்பியா சொல்றேன் சம்யுக்தா... தயவு செய்து உனக்கென்று ஒரு வாழ்க்கையைத் தேடிக்கோ."

சம்யுக்தா மௌனமாக தரையில் விழி பதித்திருந்தாள்.

"ஸ்ரீராம் உன்னை விரும்புவது எனக்குத் தெரியும்" என்றபோது படாரென நிமிர்ந்தாள்.

"உன் மனத்திலும் அப்படி ஓர் எண்ணம் இருந்தால் தயவு செய்து அதைத் தெரியப்படுத்திடு." - திடீரென இவன் இதுபற்றி பேசுவானென அவள் எதிர்பார்க்கவில்லைதான்.

என்ன சொல்வது? பதில் தேடினாள்.

"தயவு செய்து உன்னை நீயே ஏமாத்திக்காதே..." அவன் விடவில்லை.

"எனக்கு அப்படி எந்த எண்ணமும் இல்லை..." பொய் வார்த்தைகளை உதிர்த்த உதடுகளைக் கடித்துக்கொண்டு கண் கலங்கினாள்.

அவளை உற்று நோக்கியவன், "உனக்கு பொய் பேசத் தெரியாது சம்யுக்தா. முயற்சிக்க வேண்டாம். கண்கள் உண்மையைச் சொல்லிவிடும்."

"அலுவலகத்தில் இருந்தால் என்னைப் பார்க்க நேரிடும்னு அந்த வேலையை நிறுத்திய நீ, ஏன் ஸ்ரீராம் அலுவலகத்தில் மட்டும் வேலை பார்க்கணும்?"

அதிர்ந்து போனாள்.

"உங்களிடம் பட்ட கடனை அடைக்க எனக்கு வேலை தேவை." சொல்லிவிட்டு எங்கோ வெறித்தாள்.

"அவசியமில்லை சம்யுக்தா. நான் எவ்வளவு சொல்லியும் கேட்காம ஸ்ரீராம் என்னிடம் அந்தத் தொகையை கொடுத்தாச்சு..." உறைந்துபோய் அவனைப் பார்த்தாள்.

"ஸ்ரீராம் ஒரு வாரத்தில் சிங்கப்பூர் போறார். அலுவலகத்தை என் பொறுப்பில் விட்டிருக்கிறார். அவர் மனப்பாரத்தோடு இருப்பது எனக்கு வருத்தமாயிருக்கு சம்யுக்தா. அவரைப்போல் ஒருவர் உன் வாழ்க்கைத் துணையா வந்தால், சந்தோசப்படும் முதல் ஆள் நான்தான்."

உருகிய உள்ளத்தை இறுக்கிக் கொண்டவளாய், "தயவு செய்து இதுபற்றி இனிமேல் பேச வேண்டாம். என்னை மன்னிச்சிடுங்க சார்." சொல்லிவிட்டு விரைந்தாள்.

அவன் வருத்தத்தோடு அங்கேயே நின்றான்.

★ ★ ★

**நா**ளை காலை திருமணம். எல்லோருமே உறங்க ஆரம்பித்திருந்தனர்.

சம்யுக்தாவின் கண்ணீர்த் துளிகள் வரிசையாய் உதிர்ந்து கொண்டிருந்தன.

"உன்னோடு வாழும் எளிமையான வாழ்க்கை போதும் சம்யு" என்ற உள்ளார்ந்த வார்த்தை மீண்டும் ஒலித்தபோது நிம்மதியிழந்தாள்.

"ஒரு வாரத்தில் சிங்கப்பூர் போறார்..." என்ற வார்த்தை மட்டும் செவிகளில் ஒலித்துக் கொண்டே யிருந்தது. உள்ளம் உடைந்து போயிருந்தது. அவனது மனநிலை இப்போது என்னவாயிருக்குமென நிச்சயமாக உணர முடிந்தது.

மெல்ல எழுந்து அறையைவிட்டு வெளியே வந்தாள். அரண்மனைக் கூடம் அமைதியாயிருந்தது. அங்கேதான் திருமணம். மணமேடை அலங்காரம் முடித்த அலுப்பில்

வேலையாட்கள் மேடைக்குக் கீழே அயர்ந்து உறங்கிக் கொண்டிருந்தனர்.

ஒரு கணம் அப்பாவின் நினைவு வந்தது. அப்பாவின் கனவு நினைவுக்கு வந்தபோது மனம் பாரமாகிப் போனது. உறக்கம் வரவில்லை. மொட்டை மாடி நோக்கி நடந்தாள்.

அங்கே நிலவிலே சோகம் நிறைந்த விழிகளைப் பதித்துக் கொண்டு ஸ்ரீராம் நின்றிருந்தான். இவளது மெலிதான கொலுசொலியில் நினைவு கலைந்து திரும்பியபோது அவனைப் பார்த்து அதிர்ந்தாள்.

இந்தச் சூழலில் அவனைப் பார்ப்பாளென நினைக்கவில்லை. அவனைக் கண்டதுமே உள்ளம் பதைத்தது. இதயத்தின் ஓசை நன்றாகக் கேட்டது. அதைவிட அவன் தன்னை கூர்மையான விழிகளால் வெறித்தபோது பயந்தே போனாள்.

மெல்ல தலைகுனிந்து திரும்பிய கணம், அவன் கோபத்தோடு, "நில்!" என்றான்.

அதிர்ந்துபோய் பார்த்தாள்.

"பாவம் நீ! நான் உன் நிம்மதியைக் கெடுக்கிறேன் இல்லையா? நீ போக வேண்டாம். நானே போறேன். இந்த நாட்டை விட்டே போறேன். நீ நிம்மதியா இரு. ஆனால் என்னை நிராகரிப்பதற்கான காரணத்தை மட்டும் சொல்லிடு."

அவனது வார்த்தைகளில் உடைந்து போனாள்.

அதுவரையிலும் அவளுக்குள்ளே இருந்த உறுதி கலைந்தது. கண்ணீரோடு குலுங்கினாள்.

அவளது கண்ணீரில் அவனது விழிகளும் கலங்கின.

ஆனாலும் அவன் விடுவதாயில்லை.

"சொல், எனக்குத் தெரிந்தாகணும்." கோபம் கொப்பளிக்கும் அவனது கேள்வியால் திணறிப் போனாள்.

அவள் அழுது முடிக்கும்வரை காத்திருந்தான். அவளும் கண்ணீரைத் துடைத்துவிட்டு, பளிச்சென சிரிக்கும் நிலவை நோக்கினாள்.

"சிந்தாமணியம்மாவின் அண்ணன் மகன் நீங்க."

"அதுக்கென்ன?" புரியாமல் கேட்டான்.

நீண்ட பெருமூச்சோடு நிலவிலிருந்து பார்வையை விலக்காமல் சொன்னாள்.

"தாட்சாயிணியை மறுத்த நீங்க, அவங்களுக்குப் பிடிக்காத என்னை கல்யாணம் செய்வதை எப்படித் தாங்கிப்பாங்க. தவறே செய்யாமல் எதிரியானவங்க நாங்க. அவங்களுக்குப் பிடிக்காதுனு தெரிந்தும் என்னால் எப்படி சம்மதிக்க முடியும்?"

"அவங்களுக்கு ஏன் பிடிக்கணும்?" அவளை உற்று நோக்கியவன் கேட்டான்.

"அவங்களுக்குத்தான் பிடிக்கணும். என் நிலை உங்களுக்குப் புரியாது."

"நீ பேசுவது எனக்கு வியப்பா இருக்கு. நம்ம கல்யாணத்தை முடிவு செய்ய நமக்கு பெற்றோர் இல்லை. நாம யாரோட சம்மதத்தையும் பெறணும்னு அவசியமில்லையே. தவிர தாட்சாயிணிக்குதான் கல்யாணம் நடக்கப்போகிறதே..."

“அவங்க மனதைக் கஷ்டப்படுத்திட்டு, உங்களைக் கல்யாணம் செய்துகொள்ளும் தைரியம் எனக்கில்லை.”

அவளது கலங்கிய விழிகளும், தழுதழுக்கும் குரலும் அவனுக்கு பரிதாபத்தையே ஏற்படுத்தின.

“என்னோடு சிங்கப்பூர் வந்தபிறகு எல்லாமே சாதாரணமா தெரியும் சம்யு...” நிதானமாகக் கூறினான்.

“வெளிநாட்டில் பிறந்து வளர்ந்த உங்களுக்கு என் மனதைப் புரிந்துகொள்ள முடியாது...”

அவனது கண்கள் கோபத்தால் சிவந்தன. “உன்னைப் பார்த்தால் பெருமையா இருந்தது. ஆனா இப்போ எரிச்சலா வருது...”

சீறிவிட்டு படிகளை நோக்கி விரைந்தான்.

படிகளில் நின்று கொண்டிருந்த மணிரத்தினத்தைப் பார்த்தவன் தலைகுனிந்தவாறு மௌனமாக படிகளிலிருந்து இறங்கினான்.

சம்யுக்தா கரங்களிலே முகம்புதைத்து கேவினாள்.

அதுவரை மொட்டைமாடியில் உள்ள அறை ஜன்னலின் வழியே பார்த்துக் கொண்டிருந்த ஒரு ஜோடி விழிகள் வெறித்திருந்தன.

அதையறியாத சம்யுக்தா இன்னும் அழுது கொண்டிருந்தாள்.

அவள் தோளை யாரோ தொட்டபோது திடுக்கிட்டுத் திரும்பினாள். மணிரத்தினம் நின்றிருந்தார்.



எல்லாமே அறிந்திருக்கிறாரென அவரைப் பார்த்தபோதே தெரிந்துபோனது.

நீர் நிரம்பிய விழிகளோடு அவரை ஏறிட்டாள்.

"பெரியப்பா..."

"அழாதேம்மா... உன் கண்ணீர் நியாயத்துக்காக சிந்தலாம். அர்த்தமில்லாமல் சிந்தக்கூடாதம்மா."

கண்ணீர் நின்றுபோனது. பெரியப்பாவின் அருகாமை அவளது தந்தையை ஞாபகப்படுத்தியது.

"ஸ்ரீராம்தான் உனக்குச் சரியானவன். கடவுள் போட்ட முடிச்சும்மா. அதனாலதான் எங்கிருந்தோ அவனை இங்கு இழுத்து வந்துள்ளது. என் தம்பி செய்த புண்ணியத்தால், உனக்கு இந்த மாதிரி ஒரு வாழ்க்கை கிடைக்கப் போகுது, ஒதுங்கிப் போகாதேம்மா..."

பெரியப்பாவின் விழிகளை நோக்கினாள்.

"இழந்த வாழ்க்கை திரும்ப கிடைக்காதம்மா..." சொல்லிவிட்டுக் கண் கலங்கினார்.

"நீ யாரைக் கல்யாணம் செய்தாலும் சிந்தாமணிக்குப் பிடிக்காது. தவறறிந்து திருந்துபவன் மனிதன். ஆனால், அவள் எந்த ஜென்மத்திலும் திருந்தமாட்டாள். அவளுக்காக உன் வாழ்க்கையை இழந்திடாதே. அவளாலேயே முப்பது வருடகால வாழ்க்கையை இழந்துட்டேன். இப்ப அந்த வாழ்க்கை நினைத்தாலும் கிடைக்காது. இனி என் தம்பியை நான் பார்க்கவே முடியாதும்மா..." சொல்லிக்கொண்டே சத்தமாக குலுங்கி அழுதபோது சிலையாய் நின்றாள்.

"கோழைத்தனத்தால் நான் இழந்த மாதிரி நீயும் இழந்துடாதே சம்யு..."

அத்தனை காலம் அடக்கி வைத்திருந்த உள்ளக் குமுறல்கள் வார்த்தைகளாய் வெளிவந்தபோது வாயடைத்துப் போய் நின்றாள்.

"போயிடும்மா. ஸ்ரீராமோடு சிங்கப்பூர் போயிடு. சிந்தாமணி கண்ணிலே படாமல் போயிடு. நிம்மதியா இரும்மா."

"பெரியப்பா..." அதிர்ந்து நோக்கினாள்.

"நீங்களே இப்படிச் சொல்லலாமா? நான் என்ன அநாதையா பெரியப்பா... சிந்தாமணியம்மா மேல் பயத்தால் நான் மறுக்கலை. அவங்க மேல் உள்ள மதிப்பால் மறுக்கிறேன். யார் மனமும் இரும்பு கிடையாது. சிந்தாமணியம்மாவும் ஒரு தாய்தானே. அவங்களுக்குள்ளும் பாசம் இல்லாமலா இருக்கும்?

"எனக்கு ஸ்ரீராமை பிடிச்சிருக்கு. ஆனால், சிந்தாமணியம்மா சொல்லணும். அவங்க மனதார வாழ்த்தணும். அவங்க எனக்குத் தாயா இருந்து கல்யாணம் செய்து வைக்கணும். நானா அவரோடு போவதற்கும், நீங்க எனக்குத் திருமணம் செய்து வாழ்த்தி அனுப்பி வைப்பதற்கும் வித்தியாசமில்லையா? என் அப்பா அவங்களை அம்மாவாதான் நினைச்சிருக்காங்க. தன் கடைசிக் காலத்தில் ஒரு வார்த்தை பேசிட மாட்டோமானு ஏங்கியிருக்காங்க. நீங்க எல்லாரும் என்னை ஏற்றுக்கொண்ட மாதிரி அவங்களும் என்னை ஏற்றுக்கொள்ள வேண்டும்னு நான் கடவுளை வணங்கிட்டிருக்கேன். அவங்க பாசம் நிறைந்த பார்வை

ஒன்று போதும் பெரியப்பா. நான் ரொம்ப சந்தோசப்படுவேன்.'' உறுதியாகச் சொன்னபோது மணிரத்தினம் அவளை அழுத்தமாக ஏறிட்டார்.

"அவள் சொல்லிதான் உனக்குக் கல்யாணம் நடக்கும்னு நினைச்சா இந்தக் கல்யாணமே நடக்காது...'' அழுத்தி உச்சரித்துவிட்டு மௌனமாக நடந்தார்.

இன்னும் அந்த விழிகள் அதே நிலையில் பார்த்துக் கொண்டிருந்தன.

## பாகம் - 18

**வி**டிந்தது! ஆனால் தன் வாழ்வின் விடியலுக்காகக் காத்திருக்கும் ஸ்ரீராம் எவ்வித உணர்வுக்கும் ஆட்படவில்லை. முதலில் தயாராகி ஒருவித விரக்தியோடு கூடத்திலே இருக்கும் நாற்காலியில் அமர்ந்திருந்தான். பார்த்திபன் தன் தோழர்களுடனும், தாட்சாயிணி தன் தோழிகளுடனும் அலங்காரத்துக்குத் தயாராகிக் கொண்டிருந்தனர்.

ஸ்ரீராமின் அதே நிலைபோன்றுதான் சம்யுக்தாவும் இருந்தாள். இருவருமே ஒருவரையொருவர் நேரே சந்திப்பதை தவிர்க்க முயன்றனர். ஆனால், ஒருவர் அறியாமல் மற்றொருவர் பார்த்துக் கொள்ளவும் தவறவில்லை.

கூட்டம் கொஞ்சம் கொஞ்சமாக நுழைய ஆரம்பித்திருந்தது. பசேல் என இருபுறமடைக்கப்பட்ட வாழையின் மணமும், பன்னீர் சந்தனமும், மேலும்

கல்யாணத்தை மெருகூட்டியிருந்தன. கற்கண்டை சுவைத்துக்கொண்டே உள்ளே நுழைந்த கூட்டம் அரண்மனை அலங்காரத்தை பிரமிப்போடு பார்த்தவாறு அமர்ந்தது. திருமணம் செய்துவைக்கவிருக்கும் குருக்கள் இருவரும் வந்தாயிற்று. பட்டுப்புடவை சரசரக்க, அணிகலன்கள் மினுமினுக்க, மலர்களின் மணத்தோடு மங்கையர் கூட்டம் கலகலத்தது.

"பெண் வீட்டார் யாராவது வந்து குத்துவிளக்கு ஏற்றி வைங்கோ..." குருக்கள் பலமாக குரல் கொடுத்தவாறே தனது வேலையை ஆரம்பித்தார்.

"ஏம்மா... நீ கல்யாண வீடுதானேம்மா. நீ வந்து ஏற்றி வையேன்மா."

சம்யுக்தாவைச் சொன்னபோது தயங்கியவாறு நின்றாள். அவர் இன்னும் நன்றாகவே அழைக்க, ராசியில்லாத தான் ஏற்றி வைப்பதை சிந்தாமணி பார்த்தால் என்ன நடக்குமென்ற பயத்துடனே வந்தாள்.

பயத்தோடே விளக்கேற்றி முடித்த மறுகணம் இடியாய் இறக்கினாள் சிந்தாமணி.

"நில்லுடி..."

எல்லோருமே அதிர்ந்தனர். ஸ்ரீராம் சற்றே கோபத்தோடு சிந்தாமணியைப் பார்த்தான்.

சம்யுக்தா ஆடிப்போனாள். இவ்வளவு பெரிய கூட்டத்தில் தான் எப்படியெல்லாம் அவமானப்படுத்தப் படுவோமோ என நினைத்தபோது வியர்த்துப் போனது.

"யாரடி நீ? எங்கேயிருந்தடி வந்தாய்?"

அவள் குரலில் வழிந்த ஆவேசம் மணிரத்தினம், லெட்சுமி, ஸ்ரீராம் உள்பட எல்லோரையும் அதிரவைத்தது. ஆனால், மறுகணமே எல்லோருமே அதிசயிக்குமாறு தழுதழுக்கும் குரலில், இதுவரை தனக்குப் பிறவியிலேயே இல்லாத சாந்தமான முகத்தோடு அவளருகே நடந்து வந்தவள், "எப்படியடி வந்தாய்?..." என்று விழிகசிய கூறினாள்.

கனவிலும் எதிர்பார்த்திடாத அவளது அத்தகைய செயலால் விழி கலங்க நம்ப முடியாமல் நின்றாள் சம்யுக்தா.

"தியாகத்தில் உன் அப்பாவையும் மிஞ்சிட்டியேடி..." உதடுகள் துடிக்க கண்ணீரோடு சொன்னபோது அவளும் கண்ணீரோடு ஏறிட்டாள்.

"பணம் மட்டும் வாழ்க்கை இல்லைனு உன் குணத்தால் நிரூபிச்சிட்டுப் போயிட்டியேடி. எல்லாத்தையும் கொடுத்திட்டு நீங்க மட்டும்தான் வேணும்னு சொன்ன உன் முன்பு கூனி குறுகி நிக்கிறேன்டி."

கண்ணீரோடு குலுங்கினாள்.

மணிரத்தினம் விழி கலங்க நம்ப முடியாமல் அருகே வந்தார்.

எல்லோருமே மேடை நாடகத்தைப் பார்க்கும் பார்வையாளராக அமர்ந்திருந்தனர்.

"எத்தனை முறை உன்னை நான் வேதனைப் படுத்தியிருக்கேன். அதையெல்லாம் எப்படி மறந்து போனாய்..." கண்ணீரோடு அவளை உலுக்கினாள். இளையவள் சத்தமாக விம்மினாள்.

"உன் வாழ்க்கையைக் கெடுத்த பாவியடி நான். என் பொண்ணுனு நினைக்காம, உன் குடும்பம்னு நினைச்சு போராடி இந்த குல கௌரவத்தையே காப்பாத்தி இப்படி அமைதியா நிக்கறியே நீதாண்டி என் குல தெய்வம்..." - கையெடுத்து வணங்கி உரக்கக் குரலெழுப்பி ஒவென கரைந்தபோது எல்லோருமே கலங்கிப் போனார்கள்.

அவளது கூப்பிய கரங்களைப் பிடித்துக்கொண்டு சத்தமாக கேவினாள்.

"பிடிவாதம்! உண்மையை ஒப்புக்கொள்ள முடியாமல் நான் போட்டுக்கொண்ட திரை அது! நான் மட்டும் அன்று பிடிவாதமா இல்லைனா இன்று ஒரு உயிர் போயிருக்காதேடி. உன் அப்பாவின் பாசத்துக்கு முன் நான் தூசு... இன்னும் உன் மனசை வேதனைப்படுத்தி உன்னை ஒதுக்கினால் நான் மனுஷியே இல்லை சம்யு...

"முப்பது வருஷமா என் பேச்சுக்கு மதிப்புக் கொடுத்து எனக்கு அடங்கி, என்னை மீறி ஒரு வார்த்தை பேசாத என் கணவர், நான் திருந்தாத ஜென்மம்னு பட்டம் கொடுத்திட்டார். நான் பெத்து வளர்த்த பிள்ளைகளே என்னை மீறிப் போன பிறகு என்னை மதித்து என்னுடைய பாசத்துக்காக மட்டுமே ஏங்கி நிற்கிறாயே, உன்னை என் வயித்தில சுமக்கலையேனு வருத்தப் படறேண்டி சம்யு..."

"பெரியம்மா..." கண்ணீரில் குலுங்கி கைக்கூப்பி வணங்கியவளை இறுகக் கட்டிக் கொண்டு கேவினாள்.

சிந்தாமணி சட்டென விலகியவள், "என்னடி பெரியம்மா... அன்று ஏதோ சொன்னாயே உங்களை என் அம்மானு நினைக்கறேனு... அம்மானு கூப்பிடுடி..."

சொன்னபோது உள்ளமுருக ஆனந்தக் கண்ணீரோடு "அ...ம்...மா..." என்றாள். உண்மையிலேயே அந்த வார்த்தையில் உருகியவளாய் கண்ணீரைத் துடைத்துக் கொண்டு அவளை நோக்கினாள்.

அரண்மனையே எதிரொலிக்குமாறு தெளிவாக பலத்த குரலில், "மூத்தவ நீ இருக்கும்போது, இளையவளுக்கு எப்படிடி கல்யாணம் செய்து வைப்பேன்." சொல்லிவிட்டு அவள் கரத்தைப் பற்றி இழுத்துக்கொண்டு ஸ்ரீராமருகே வந்து நின்றாள். உறுதியான பார்வையோடு அவனை நோக்கியவள், சட்டென அவன் கரத்தோடு அவள் கரத்தை சேர்த்து வைத்தாள்.

"என் அண்ணன் பையனுக்கு உன்னைவிட நல்ல பொண்ணு எங்கேயும் கிடைக்கமாட்டாள்."

சம்யுக்தா அரண்மனையே அதிருமாறு உள்ளத்து உணர்வுகளையெல்லாம் கண்ணீராய் வெளியிட்டவாறு சத்தமாய் குலுங்கினாள். ஸ்ரீராம் திகைத்துப் போய் நின்றான்.

"இப்ப சொல்றேன் சம்யு... நீ நல்லாயிருப்பேம்மா..."

கண்கள் கலங்க அழுத்திச் சொன்னபோது எல்லோருமே கலங்கிப் போனார்கள்.

அந்த ஒரு வார்த்தைக்காகவே காத்திருந்த அவளது செவிகள் குளிர்ந்து விழிகள் மூடி ஆனந்தமாய்க் கண்ணீர் சிந்தினாள்.

"அந்த மேடையில் முதலில் உட்காரும் உரிமை உனக்குத்தான் இருக்கு... போ... அறையில் புதுத்துணி

எடுத்து வெச்சிருக்கேன். இரண்டு பேரும் மாத்திட்டு வந்து உட்காருங்க..."

தீர்மானமான குரலில் கூறிவிட்டு கணவனைக் கண்ணீரோடு நோக்கியபோது, அவர் பெருமிதத்தோடு அவளைப் பார்த்தார்.

ஸ்ரீராம், சம்யுக்தா இருவருமே பலத்த அதிர்ச்சியில் செய்வதறியாது நின்றனர்.

முத்தம்மாள் ஓடிவந்து சம்யுக்தாவையும், ராஜா ஸ்ரீராமையும் இழுத்துக்கொண்டு அறைக்குள்ளே சென்று தாழிட்டனர்.

அந்த அரங்கமே இன்னும் பிரகாசித்தது. வந்திருந்த அத்தனை மக்களும் உண்மையிலேயே ஆனந்தப் பெருக்கோடு அமர்ந்திருந்தனர். எதிர்பாராத இந்தத் திருப்பம் எல்லோர் மனத்தையும் நிறைத்திருந்தது.

சிந்தாமணி மனநிறைவோடு அங்கே நின்றிருந்தாள்.

எல்லோருமே மணமக்களுக்காகக் காத்திருந்தனர். சொர்க்கத்திலே நிச்சயிக்கப்பட்ட இவர்களது திருமணம் எல்லோர் முன்னிலையிலும் வெகு நிறைவாக நடந்தேறியது.

ஒரே மேடையில் இரு கல்யாணமும் சிறப்பாக நடந்தது. அனைத்து நல்ல உள்ளங்களின் ஆசியையும் பெற்றது.

பார்த்திபன் ஸ்ரீராமை சந்தோசத்தோடு கட்டிக்கொண்டு சுற்றினான். ஸ்ரீராம் புன்னகையோடு

ஓரக்கண்ணால் சம்யுக்தாவைப் பார்த்தான். அவள் நாணத்தோடு தலைகவிழ்ந்தாள்.

சம்யுக்தா, பெரியப்பா, பெரியம்மாவை வணங்கச் சென்றபோது தடுத்து நிறுத்திய சிந்தாமணி, அவளை நோக்கி, "நீங்க ஆசீர்வாதம் வாங்க வேண்டியவங்க நாங்க இல்லை... வாங்க..." சொல்லிக்கொண்டே நடந்தாள். அவளைத் தொடர்ந்தனர்.

படாரென அறைக்கதவைத் திறந்தபோது தெய்வீகத் தன்மையுடன் புன்னகையோடு வீற்றிருக்கும் சுப்புரத்தினத்தின் மிகப்பெரிய நிழற்படத்தைக் கண்டதுமே ஓடிச்சென்று வணங்கியவாறு அழுதாள் சம்யுக்தா.

மணிரத்தினத்தைப் பார்த்து கண்கலங்கிக் கேட்டாள்.

"அப்பா படம்..."

"இது அவன் வீடுதானேம்மா..." உருக்கத்தோடு கூறியபோது நெகிழ்ந்து போனாள்.

"இனி உனக்குத்தான்மா சொந்தம்." உண்மையாகக் கூறினாள் சிந்தாமணி.

உருக்கத்தோடு பார்த்த சம்யுக்தா, நான்தான் ஏற்கெனவே சொல்லிட்டேனேம்மா... இது அண்ணனுக்குத்தான்னு! தவிர நான்தான் சிங்கப்பூர் போயிடுவேனே" - நாணத்தோடு சொல்லிவிட்டு ஸ்ரீராமை ஓரக்கண்ணால் பார்த்தாள். அவன் புன்னகைத்தான்.

எல்லோருமே வணங்கிவிட்டுச் சென்றபின் அவள் மட்டும் அப்பாவின் விழிகளை நோக்கினாள். அர்த்தம் பொதிந்த பார்வை அது. ஏக்கம் சுமந்திருந்த விழிகளில்

ஒருவித நிம்மதி தென்பட்டதை உணர்ந்தபோது மெலிதாக விசும்பினாள்.

"அப்பா... உங்க கனவு நிறைவேறிடுச்சுப்பா..."

கண்ணீரோடு நின்றவளை அவன் ஆதரவோடு அணைத்துக் கொண்டான்.

அப்பாவின் ஆத்மா அவர்களை ஆசீர்வதித்தது.

இனி அவர்கள் வாழ்வில் வசந்தம் மட்டுமே!

*நிறைந்தது!*

★ ★ ★

# குறிப்புகள்